# சிந்தனை அலைகள்

## ம.பொ.சிவஞானம்

மேகலை பதிப்பகம்

சி. ஐ. டி. நகர் : : சென்னை-35.

முதற் பதிப்பு : ஏப்ரல் 1964
மேகலை வெளியீடு : 3
உரிமை ஆசிரியர்க்கே.

விலை ரூ. 3 - 50

—விற்பனை உரிமை—

மெர்க்குரி புத்தகக்
கம்பெனி

313, ராஜ வீதி
கோயமுத்தூர்-1.

புரோகிரசிவ் பிரிண்டர்ஸ்,
சென்னை-1.

## மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் வழங்கிய

# சிறப்புரை

இக் கட்டுரைத் தொகுப்பில் எல்லாவித தலைப்புகளும் அடங்கியிருக்கின்றன. இலக்கியம், அரசியல், சமயம், மற்றும் பலதரப்பட்ட சுவைமிக்க கட்டுரைகளைத் தொகுப்பு வாரியாகப் பிரித்துக் கொணர்ந்திருக்கின்றனர்.

முதன்முதலில் வள்ளுவரைப் பற்றிய கட்டுரை. எதையும் ஆரம்பிக்குமுன் 'ஓம்' என்று ஆரம்பிப்பதுபோல வள்ளுவருடன் ஆரம்பித்திருப்பது புதுமையும் வள்ளுவருக்கு நாம் செலுத்தும் அன்பையும் மரியாதையையும் காட்டுகிறது. குறள் 'வான் புகழ் கொண்டது' என்று பாரதியாரை மேற்கோள் காட்டியிருக்கிறார் ஆசிரியர். மிகவும் பொருத்தமாகும். வள்ளுவரையும் அவர் தெய்வ நம்பிக்கையையும் அதில் சர்ச்சை செய்திருக்கிறார். சுவையுடன் மிளிர்கிறது.

இளங்கோ அடிகளைப் பற்றிய கட்டுரையும் இடம் பெற்றிருக்கிறது. ம. பொ. சி.யாருக்கு மிகவும் பிடித்தமான காப்பியம் சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தில் அவருக்கு உள்ள ஈடுபாடு தமிழ் மக்கள் அனைவரும் அறிவர். எனவே, அவருடைய சிலப்பதிகாரத்தைப் பற்றிய கட்டுரையைக் குறித்து நான் அதிகம் கூறத் தேவையில்லை. கட்டுரை தான் சிறியது; ஆனால் சுவை அதிகம்.

கம்பரைப்பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார். கம்பராமாயணத்தைப் பற்றி முணுமுணுப்பவர்களுக் கெல்லாம் இது ஒரு சவால் என்றுதான் கூறவேண்டும். 'காப்பிய உலகில் கம்பனுக்குள்ள இடம் தனியானது' என்று கட்டுரையை ஆரம்பித்திருப்பது கட்டுரைக்கு சிகரம் வைத்தாற் போலிருக்கிறது.

டாக்டர் உ. வே. சா. ஐயரின் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்: "ஐயரவர்கள் தமிழகம் எங்கணும் சிதறிக் கிடந்த இலக்கிய ஏடுகளைத் தேடிப் பிடித்தார். அவற்றில்

செல்லரித்துக் கிடந்த பகுதிகளையெல்லாம் சீராக்கினார்.'' இது மிகவும் உண்மை.

ஆசிரியருக்கு உள்ள தெய்வ நெறியை அவர் வாயிலாகவே கூறுகிறார்: "நடுநிலைமையோடு ஆராய்ந்து நல்லவற்றைக் கொள்ளுங்கள். அல்லவற்றைத் தள்ளுங்கள். தமிழகம் வாழையடி வாழையாகக் கடைப்பிடித்து வந்த தெய்வ நெறியில், ஒழுக்க வாழ்வில் காலூன்றி நிற்க வேண்டும். இதுவே என் பிரார்த்தனை.'' அதே சமயத்தில், "திருநீறு இடுபவன்தான் சைவன் என்றோ—திருமண் இடுபவன்தான் வைணவன் என்றோ—வைதீகம் பேசுவது காலம் மாறுதலைக் கவனியாத கண்மூடித் தனமாகும்'' என்று அவர் கூறுவது தெய்வ நெறியில் அவருடைய முற்போக்கு வாதத்தையும் காட்டுகிறது.

எதுகை-மோனை அதிகம் இக் கட்டுரைகளில் காணவில்லை. எதுகை-மோனை வைத்துப் பேசுவதாலோ, எழுதுவதாலோ அழகு, சுவை பெற்றுவிடாது என்பது என் கருத்து. ராஜாஜி அடிக்கடி கூறுவதுபோல, சிறு சிறு வாக்கியங்களாக எல்லோருக்கும் மனதில் பதியும்படியாக எழுத வேண்டும். இவ்வாசிரியரின் கட்டுரை யெங்கும் சிறு சிறு வாக்கியங்கள்; சிறந்த கருத்துக்கள். அவர் பேனா தங்கு தடையின்றி ஓடியிருப்பதைக் கோவையான கருத்துக்களிலிருந்து காண முடிகிறது.

மேலும் திருமுருகாற்றுப்படை, மாணிக்கவாசகர் பாடல்கள், திருப்பாவை-திருவெம்பாவை, வள்ளலார், பாரதியார் பாடல்கள் இவைகளிலிருந்து நிறைய மேற்கோள் காட்டி எழுதியிருப்பது குறிப்பிடத் தக்கது. இதிலிருந்து தமிழ்க் காப்பியங்களில் ஆசிரியருக்கு உள்ள ஆழ்ந்த அன்பையும் பற்றுதலையும் தெரிய முடிகிறது.

கடைசியாக மேகலை பதிப்பகத்தினர் கட்டுரைகளைத் தொகுப்பு வாரியாகப் பிரித்து 'சிந்தனை அலைகள்' என்ற தலைப்பின்கீழ் கொணர்ந்திருப்பது பாராட்டுதற் குரியதாகும். இது சிந்தனையைத் தூண்டும் ஒரு சிறந்த தொகுப்பு. தமிழ் அன்பர்கள் இதைப் படித்து பெரிதும் இன்புறுவர் என்பதில் ஐயமில்லை.

—சி. சுப்பிரமணியம்.

இந்நூல், 'செங்கோல்' வார இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பாகும். தொடர்ச்சியாக எழுதப்பட்ட—ஒரே கொள்கையை மையமாகக் கொண்ட ஒரு நூல் மதிப்பிற்குரியதுதான்.

ஆயினும், பல்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு விஷயங்களைப் பற்றி வெளியிடப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு சுவை தருவதாகும். ஆம்; மலர் மாலையில் கதம்பத்திற்கு உரிய மதிப்பு, தொகுப்பு நூலுக்கும் உண்டு.

இந்த நூலை வெளியிட மேகலை பதிப்பகத்தார் முன்வந்தது குறித்து அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதிப்பக உரிமையாளர் திரு. சீனி. விசுவநாதன், என்பால் மிகுந்த அன்பும்—மதிப்பும் உடையவர். அது காரணமாகவே, இந்தத் தொகுப்பு நூலை வெளியிட முன்வந்தார் என்றும் சொல்லுவேன்.

தமிழ் மக்களுடைய பேராதரவு அவருக்குக் கிடைப்பதாகுக.

[illegible]

தமிழகத்தின் தலைசிறந்த தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் இலக்கிய உலகிலும், அரசியல் உலகிலும் தமக்கென ஓர் தனியிடத்தைப் பெற்றுள்ளார் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அன்னார் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலக்கியம், அரசியல், சமயம், சமூகம்—போன்ற பொருள்கள் பற்றி மேடைகளில் பேசியும், தமது 'செங்கோல்' இதழ்களில் எழுதியும் வந்த கட்டுரைகளை ஒன்றாக இணைத்து 'சிந்தனை அலைகள்' என்ற பெயரில் நூலாக வெளியிடுகின்றோம்.

இந் நூலைச் 'சிந்தனை அலைகள்' என்று குறிப்பிடுவதைவிட 'தமிழ் அலைகள்' என்றும், 'தமிழர் அலைகள்' என்றும் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். காரணம், நம்முடைய பண்பாடு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கடவுள் வழிபாடு, கடவுள் நம்பிக்கை, கடமை உணர்ச்சி, தேசீயப் போராட்ட வரலாறு—முதலான கருத்துக்கள் இந்த அலைகளில் பிரதிபலிக்கக் காண்கிறோம். இந்த அலைகள் எல்லோருடைய மனத்திலேயும் எண்ணத்திலேயும் சிந்தனையை எழுப்பும் என்பது உறுதி.

இந் நூலைப் பள்ளி மாணவர்கள் படிக்கலாம்; இளைஞர்கள் படிக்கலாம்; பெரியவர்கள் படிக்க

லாம் ; மதவாதிகள் படிக்கலாம் ; சீர்திருத்தவாதிகள் படிக்கலாம் ; இலக்கிய ரசிகர்கள் படிக்கலாம்; அரசியல்வாதிகள் படிக்கலாம். ஆக, எல்லோரும் படித்து இன்புறத்தக்க வகையிலே இந்த ' சிந்தனை அலைகள் ' அமைந்திருக்கின்றது.

" ம. பொ. சி. அவர்களிடத்தில் அன்பு, பண்பு, தெய்வ பக்தி எல்லாமிருக்கின்றன. அவற்றோடு, இலக்கியத்தைச் சுவைக்கும் தன்மையும் இருக்கிறது. இலக்கியச் சுவை என்று சொன்னால் மட்டும் போதாது. இலக்கியக் காதல் என்றே சொல்ல வேண்டும். அத்துடன் அரசியலும் இருக்கிறது.

சிலருக்கு அரசியல் தெரியும் ; இலக்கியம் தெரியாது. தெய்வ பக்தி அவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. பலருக்கு இலக்கியம் மட்டும் தெரிந்திருக்கும்; அரசியல் தெரியாது. இன்னும் சிலரிடம் அன்பு இருக்கும். ஆனால், அவர்களுக்கு அரசியலோ—இலக்கியமோ தெரியாது. நமது ம. பொ. சி. அவர்களிடத்திலே அன்பு, பண்பு, அரசியல், இலக்கியம், தெய்வ பக்தி எல்லாமிருக்கின்றன "

என்று அறிவுலக சக்கரவர்த்தி ராஜாஜி அவர்கள் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

ராஜாஜி புகன்ற சொல்லோவியத்தின் உண்மையை இந்நூலின் கட்டுரைகளைப் படிப்போர் நன்கு உணர்வார்கள். தலைவர் ம. பொ. சி.

அரசியலோடு இலக்கியம் பயின்றவர். இலக்கிய நெறியில் அரசியலை வளர்ப்பவர். அவருடைய அரசியல் எழுத்திலேயும் — பேச்சிலேயும் இலக்கிய மணம் கமழக் காணலாம். 'சொல்லுக்குச் சொல்லழகு' என்பார்களே, அந்தச் சொல்லின் அழகை—ஆழத்தை—அழுத்தத்தை ம. பொ. சி. அவர்களின் எழுத்துக்களிலே காணலாம்.

தலைவரவர்களின் நூலை வெளியிடுவதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறோம். தமிழகத்தின் எந்தவொரு பிரச்னையிலும் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழும்தலைவர் ம.பொ.சி. அவர்கள் இந்நூலை வெளியிடும் வாய்ப்பை எமக்குத் தந்தமைக்குப் பதிப்பகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூல் அழகிய முறையில் அமைவதற்கு ஒத்துழைத்த நண்பர்களுக்கும், வழக்கம்போல் எமது பதிப்பக நூலின் விற்பனைப் பொறுப்பை ஏற்கும் மெர்க்குரி எஸ். எஸ். கே. அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

—**சீனி. விசுவநாதன்**

# உள்ளே.....

## முதற் பகுதி

## இலக்கியம்

வான்புகழ் வள்ளுவர்
சிலம்பீந்த செல்வர்
காப்பிய உலகில் கம்பன்
சங்கத் தமிழ் வளர்த்த சாமிநாதையர்
மகாகவி பாரதி

## இரண்டாம் பகுதி

## அரசியல்

கட்டபொம்மனிலிருந்து
ஜான்ஸிராணி வரை
மானங்காத்த பாண்டியன்
வீரர் வேலுத்தம்பி
ஐந்தெழுத்துக்கு அஞ்சலி செய்வோம்
உலகம் போற்றும் உத்தமர்
செக்கிழுத்த செம்மல்
வீரவிளக்கு வ. வே. சு. ஐயர்
தொழுநோயிலும் தொண்டு செய்த சிவா
நாவலர் சத்தியமூர்த்தி
வீரன் வாஞ்சுவின் வரலாறு

## மூன்ரும் பகுதி

### சமயம்—சமூகம்

என் பிரார்த்தனை
சர்வ சமய உறவு
கலையும் கடவுளும்
வாழ்க வள்ளலார் புகழ்
சமரச நெறி புகன்ற ஞான பண்டிதர்
புனிதர் ஏசுபெருமான்
பாவை இலக்கியம்
மணிவாசகத் தேன்

## நான்காம் பகுதி

### பல்சுவை

தமிழர் கலாச்சாரம்
இளமையும் கடமையும்
அறமும் அரசியலும்
கலையும் வாழ்வும்
தொழிலாளர் சிந்தனைக்கு

★


இலக்கியம்

# வான்புகழ் வள்ளுவர்



திருவள்ளுவர் மதப் புலவர் அல்லர்; மக்கள் புலவர். அதனாற்றான், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப் பெருமிதத்தோடு பாடினார் பாரதியார். மண்ணுக்கு மலை வரம்பாக இருக்கலாம்; கடல் அரணாக அமையலாம். வானம் அத்தகைய வரம்பு எதுவும் இல்லாத பெருவெளி யன்றோ! திருக்குறள் உலகப் புகழ் பெற்றது என்பதை உணர்த்தவே 'வான்புகழ்' என்று சொன்னார் பாரதியார்.

பண்டிதர்கள் மட்டுமே வள்ளுவன் குறளைப் படித்து அதைப் போற்றிய காலம் ஒன்றிருந்தது. பாரதி தோன்றி, 'வான்புகழ் கொண்ட வள்ளுவன்' என்றும், 'யாமறிந்த புலவரிலே வள்ளுவன்போல்........ பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்றும் கூறிய பின்னர்தான் பாமரரும் பாட்டாளிகளும் வள்ளுவன் குறளிலே உள்ளம் செலுத்தினர். ஆம்; திருக்குறளைப் பண்டிதருக்கும் பாமரருக்கும் பொது உடைமையாக்கிய பெருமை பாரதிக்கே உரிமை.

திருமுருகாற்றுப்படையில், ஞானியருக்கு இலக்கணம் கூறிய நக்கீரர், 'யாவதும் கற்றோர் அறியா அறிவினர்' என்றும், 'கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்' என்றும் கூறியுள்ளார். "'எல்லாம் கற்று விட்டோம்' என்று இறுமாந்திருப்போருக்கும் மேம்பட்ட அறிவினர்; கற்றோர்கள் எல்லாம் 'இன்னார்

சொல்லியபடி' என்று தம்மைச் சான்ருகக் கொள்ளும் தலைமையர்" என்பதே நக்கீரர் பாடிய வரிகளின் பொருள்.

திருமுருகாற்றுப்படை கூறும் இந்த இலக்கணத் திற்கு முற்றிலும் பொருத்தமானவர் திருவள்ளுவர். அறிஞர்களிலே பேரறிஞர் வள்ளுவர். புலவர்களிலே பெரும்புலவர் குறளாசிரியர். உலகப் பேரறிஞர்களிலே அவர் தனியிடத்தை வகிக்கிருர்.

திருக்குறள் ஒரு தமிழரால் எழுதப்பட்டது; தமிழ் மொழியிலே எழுதப்பட்டது. இந்த உண்மைகள் இது வரை மறுக்கப்படவில்லை. ஆனல், தமிழருக்காக மட்டுமே எழுதப்பட்டதன்று. மனித குலம் முழுவ தற்குமே—ஏன்? உயிர்க்குலம் அனைத்துக்குமே பயன் படத்தக்க வகையில் குறட்பாக்களை இயற்றினர் வள்ளுவர்.

ஆனல், திருக்குறளை வேங்கடத்துக்கு வடக்கே உள்ள இந்திய மக்களுக்கு நாம் அறிவிக்கவில்லை. கிழக்கிலும் மேற்கிலுமுள்ள அயல் நாட்டவருக்கும் குறள் நெறியை நாம் போதிக்கவில்லை. வடக்கு மொழி யினரும் மேற்கு மொழியினரும் தாங்களாகவே தேடி வந்து திருக்குறளைத் தங்களுக்கும் உரிமை யாக்கிக் கொண்டனர்.

திருவள்ளுவர் தெய்வ நம்பிக்கை உடையவர். அந்த நம்பிக்கையிலே ஊன்றி நின்று, பிறருக்கும் அதனைப் போதித்தவர். 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரமொன்றே இதற்குச் சான்று பகரும். 'கடவுள் வாழ்த்து' உள்ளிட்ட பாயிரம் முழுவதும் வள்ளுவர் பாடியதன்று என்கின்றனர் சிலர். தேச பக்தியில் எனக்கு வழிகாட்டியாக விளங்கி வரும் வ. உ. சி. யும் இதனையே வற்புறுத்துகின்ருர். வ. உ. சி. தெய்வ நம்பிக்கைக்கு எதிராகக் 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தை மறுக்கவில்லை. அறத்துப்

பாலுக்குள்ளே 'மெய்யுணர்தல்' என்ற தலைப்பில் வரும் அதிகாரம் முழுவதும் கடவுள் உண்மையை வலியுறுத்துவதாயிருக்க, 'கடவுள் வாழ்த்து' என ஒரு தனி அதிகாரத்தை வள்ளுவர் பாடியிருப்பாரா? 'கூறியது கூறல்' என்ற குற்றத்தை வள்ளுவர் போன்ற பெரும்புலவர் செய்திருக்க முடியுமா? இவை வ. உ. சி. யின் கேள்விகள்.

வேறு சிலர், தெய்வ நம்பிக்கையை எதிர்க்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் 'பாயிரம் வள்ளுவர் பாடியதன்று' என்கின்றனர். அன்னாரின் குறும்பு மதி, 'ஆதிபகவன்' என்பதை, 'ஆதி பகலவன்' என்றும் திருத்துகின்றது! பாவம், பாயிரத்தை மறுத்துவிட்டால், நாத்திகப் பாலைவனத்தில் வள்ளுவரை நிறுத்தி விடலாம் என்று அவர்கள் நம்புகின்றனர். பாயிரத்தையே அகற்றினாலும், முப்பாலுக்குள்ளே எத்துணை எத்துணையோ இடங்களில் தெய்வ உண்மையை வலியுறுத்தி யிருக்கிறார் வள்ளுவர். 'குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்ற குறள், பாயிரத்தில் இல்லை; பொருட் பாலில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறளிலே தமக்குள்ள தெய்வ நம்பிக்கையை ஐயத்திற் கிடமின்றி வெளிப்படுத்தி விட்டார் ஆசிரியர் வள்ளுவர். வெறும் நம்பிக்கையை மட்டுமா? கடமையைச் செய்ய முற்பட்டவரிடம் தெய்வம் கருணை காட்டும் என்பதையும் தெளிவுபடுத்தி யிருக்கிறார்.

சீதேவி—மூதேவி போன்ற சிறு தெய்வங்களையும் திருக்குறளில் காணலாம்.

தெய்வ உண்மையை மறுப்பவர்கள், அதைத் தங்கள் கூற்றாகவே கூறத் துணிவுவேண்டும்.

திருக்குறள் அமைப்பை நோக்கினால், முதலில் அறம், இடையில் அரசியல், இறுதியில் இல்லறம்—என

அமைந்திருக்கக் காணலாம். அறத்தின் வழிதான் அரசியல்; அறத்தையும் அரசியலையும் சார்ந்ததுதான் இல்வாழ்க்கை. இந்த மூன்றும் பிரிக்க முடியாமல் பிணைந்திருப்பவை. அந்தப் பிணைப்புதான் வள்ளுவர் கண்ட இலட்சிய சமுதாயம்.

அசோக சாம்ராஜ்யம், மௌரிய சாம்ராஜ்யம், சோழ சாம்ராஜ்யம் எனப் பல சாம்ராஜ்யங்களை வரலாற்றில் படிக்கிறோம். அந்தச் சாம்ராஜ்யங்கள் எல்லாம் நிலைத்து, நீடித்து வாழவில்லை. அமைத்தவர் தலைமுறையில் அல்லது அவரது பிள்ளை தலைமுறையில் வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் அழிந்து போயின. காரணம், அந்தச் சாம்ராஜ்யங்கள் அன்பு வழியில் அமைக்கப்படாததே. உலகனைத்தும் ஒரே ஆட்சியின்கீழ் வந்துவிடவேண்டும் என்ற எண்ணம் குற்றமுடையதன்று. அது நல்ல கொள்கையே. அந்த எண்ணத்தின் பேரில்தான் சாம்ராஜ்யங்களைக் காண முயன்றார்கள் சக்கரவர்த்திகள். ஆனால், அன்புக்குப் புறம்பாகச் சென்றதுதான் அவர்கள் செய்த ஒரே குற்றம்.

திருவள்ளுவரும் உலக சாம்ராஜ்யம் காண விழைகின்றார். 'உலகனைத்தும் ஒரு குடைக்கீழ் வர வேண்டும்' என விரும்புகின்றார்; வரமுடியுமென்றும் நம்புகின்றார் அதை அன்புவழியில் நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அவர் விதிக்கும் ஒரே நிபந்தனை. பகையையும் நட்பாகக் கொள்ளும் பண்புடைய மன்னன் எவனோ அவன் குடைக்கீழ் உலகம் வந்துவிடும் என்கின்றார் வள்ளுவர்.

கௌடல்யரின் அர்த்த சாத்திரம், அரசுக்குரிய அங்கங்கள் ஏழு என்கின்றது. திருக்குறள் பொருட்பால், ஆறு அங்கங்களையே அரசனுக்கு உரிமையாக்குகின்றது. ஆம்; படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறும் குறள் கூறும் அங்கங்கள். இந்த

ஆறையும் ஒப்புக்கொண்டு, ‘பகை’ என்ற ஒன்றையும் சேர்த்து, ‘அரசுக்குரிய அங்கங்கள் ஏழு’ என்கின்றார் கௌடல்யர்.

வள்ளுவரின் கண்ணோட்டத்தில், ‘பகை’ ஒரு தனிப்பொருளன்று. நட்பு நலிந்த இடத்தில்தான் பகை தோன்றுகின்றது. ‘இருள்’ என்ற ஒன்று தனிப் பொருளன்று. ஒளி இல்லாத நிலைதான் இருள். ஒளி தோன்றியவிடத்து இருள் அழிந்து போகின்றது. அது போன்றே, நட்பு காக்கப்படுமானால், பகை தோன்றுவது எங்ஙனம்! பகையையும் நட்பாக்கிக் கொள்ளும் பண்பைப் போதித்த வள்ளுவர், பகையை அரசுக்குரிய அங்கமாக்கவில்லை.

திருவள்ளுவர் தோன்றுவதற்கு முன்பு, பரத்தையர் நட்பு பாவமாகக் கருதப்படவில்லை. பத்தினியை மறந்து பரத்தையோடு கூடித் தலைவன் அனுபவித்த இன்பத்தைத் தானே அகநானூற்றிலும், கலித்தொகையிலும் அதிகம் காண்கிறோம். அவர்தம் போற்றா ஒழுக்கம், விரும்பிப் படிக்கத்தக்க இலக்கியமாகவே மாறிவிட்டது!

நல்ல வேளையாக, பரத்தையர் நட்பை அழுத்தமாகக் கண்டித்தார் வள்ளுவர். நானறிந்தவரை இந்தக் கொள்கையை முதன் முதலாக வெளியிட்டவர் வள்ளுவர்தான்!

குடிப்பது குற்றம் என்று முதலில் கூறிய பெருமையும் திருக்குறளுக்கே உண்டு. ‘கள்ளுண்ணாமை’ என்ற அதிகாரம் பிறப்பதற்கு முன்பு ஊராளும் காவலனும் குடித்தான். தான் மட்டும் தனியாக அல்லாமல், புலவர் பெருமக்களோடு கூடிக் குடித்தான்.

ஔவை பெருமாட்டியாரே பாடுகின்றார்: “மன்னர் பெரும! கள் அதிகமாக இருந்தால் எங்களோடு சேர்ந்து நீயும் குடிப்பாய்; குறைவாக இருந்தால்

அதைப் புலவர்களாகிய எங்களுக்கே அளித்து நாங்கள் குடித்து மகிழ்வதைக் கண்டு நீ மகிழ்ச்சி அடைவாய்'' என்று. இந்தக் கருத்தை, 'சிறிய கள் பெறினே எமக்கீயும் மன்னே; பெரிய கள் பெறினே தானுண்ணும் மன்னே' என்ற வரிகளில் தெரிவிக்கின்றார். பழங்கால மன்னர்களையோ, ஒளவை மூதாட்டி போன்ற புலவர் பெருமக்களையோ நான் குறைத்துக் கூறவில்லை. அவர்கள் காலத்து மக்களின் வாழ்க்கையையே கூறுகின்றேன்.

திருவள்ளுவர் குடிப்பழக்கத்தை அறவே வெறுத்தார். கள்ளுண்ணாமையைப் போதித்தார்.

திருவள்ளுவருக்குப் பின் தோன்றிய புலவர்கள் குறள் பாதையில் சென்று, தங்கள் கொள்கையைப் பிரசாரம் செய்தனர். மதுவிலக்குக்கு வழிகாட்டியவர் வள்ளுவரே!





# சிலம்பீந்த செல்வர்

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் திரு நாள் நாடெங்கும் கொண்டாடப்படுகின்றது. இந்த நிலையில் இளங்கோ விழாவைக் கொண்டாடுவதற் கான காரணத்தையும், அவருடைய காப்பியத்தைக் காணுவதற்கான கண்ணோட்டத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஏதோ சம்பிரதாய மாகவோ, நம்முடைய தமிழ்ப் பற்றுக்கு விளம்பரம் தேடவோ விழாக் கொண்டாடிப் பயனில்லை.

இளங்கோவடிகளுக்கு ஏன் விழாக் கொண்டாடு கிறோம் ? அவர், சேர நாட்டின் இளவரசர்—கண்ண கிக்குக் கோயில் கட்டிய மன்னர் செங்குட்டுவனின் தம்பி என்பதற்காகவா ? இல்லை. இது, மன்னர்கள் ஆட்சி மறைந்து, மக்கள் ஆட்சி மலர்ந்துள்ள காலம். எனவே இந்தக் காலத்தில், அரசர்களுக்கும், இளவர சர்களுக்கும் விழா நடத்தத் தேவையில்லை.

மற்று, இளங்கோ மாபெரும் புலவர் என்பதற் காகவா அவருக்கு விழாக் கொண்டாடுகிறோம் ?

அதுவுமில்லை. கவிதை புனைவதில், காலத்தின் துணைகொண்டு இளங்கோவையும் வென்றுவிட்டார் கம்பர். ஆகவே, வெறும் புலமைத் திறனுக்காக மட்டும், இளங்கோவுக்கு விழாக் கொண்டாட நாம் எண்ணவில்லை.

சேர நாட்டுப் புலவர், 'சிலப்பதிகாரம்' என்ற மாபெரும் காப்பியத்தைச் செய்தார் என்பதற்காக அவருக்கு விழாக் கொண்டாடுகிறோமா ?

அதுவும் ஒரு காரணம்தான். ஆனால், அதற்காக மட்டுமன்று.

பின் எதற்காக, பிறந்த நாளோ, மறைந்த நாளோ தெரிந்திராத நிலையில், ஏதோ ஒரு நாளில் இளங்கோ வைக் கொண்டாடத் துடிக்கிறோம் ?

இளங்கோவைக் கொண்டாடுவதற்கான காரணம் ஒன்றன்று ; ஒரு நூறுக்கும் மேற்பட்டவை.

ஆயினும், அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு கூறுவோம் :

இளங்கோவடிகள், இமயவரம்பன் சேரலாதனின் இளைய மகனவார். அதன் காரணமாக சேர நாட்டின் சிம்மாசனம் அவருக்கே உரித்தானதென்றான், அர சவை நிமித்திகன். ஆனால், மூத்தவன் செங்குட்டுவ னிருக்க இளையவனாகிய தான் முடிசூட்டிக்கொள்வது தகுதியன்று எனக் கூறி, துறவு நெறி நின்றார் இளங்கோ.

ஆம் ; புவியரசைத் துறந்து கவியரசராக மாறினார். அதன் காரணமாக, சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தை இயற்றித் தமிழன்னைக்குக் காணிக்கை யாக்கினார்.

பதவி வெறி பிடித்தலையும் இன்றைய தமிழகத்தின் அரசியல் வாதிகளுக்கு—'மூத்தவனிருக்க, இளையவன் ஆள்வது முறையன்று' எனக் கூறி, அரசை அண்ண னுக்கே தந்த இளங்கோவடிகள் சரியான வழிகாட்டி யாவார்.

இன்றைய தமிழகத்தில், இலக்கிய ஞானம் படைத்த புலவர்களில், பெரும்பாலோருக்கு அரசியல்

ஞானமும் ஆர்வமும் இல்லை. அப்படியே, அரசியல் தலைவர்கள்—அமைச்சர்கள் என்போர் பலருக்கு இலக்கிய ஞானமில்லை. புலமையும் புவியாளும் திறமையும் ஒருங்கே படைத்திருந்த இளங்கோவடிகள், இன்றைய புலவர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றார்.

இந்நாளில் சாதி ஒழிப்பும், சமய ஒற்றுமையும் வாயளவில் பேசப்படுகிறது. ஆனால், எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி, உளத்தே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்ற மனத்தராய் ஒருவருமில்லை.

சுயசாதிக்கு உழைப்பதாகச் சொல்லிக் கொண்டு, பிற சாதிமீது பகைமையை வளர்ப்பதையே பார்த்து வருகிறோம். கடவுளை அடைவதற்குச் சாதனமாகப் பயன்பட வேண்டிய மதம் கலகத்தை வளர்க்கும் கருவியாகப் பயன்பட்டு வருவதைக் கண்டு வருகிறோம். இந்நிலையில், சாதி வெறி தொலைய—சமய வேற்றுமைகள் அழிய சிலப்பதிகாரம் ஒன்றுதான் வழிகாட்டுகின்றது.

இளங்கோவடிகள், மத வேற்றுமையை மறந்தும் பாராட்டியவரல்லர். 'ஆய்ச்சியர் குரவை'யுள் வைணவத்தையும், குன்றக் குரவையுள் சைவத்தையும், சாரணர் மூலம் பௌத்தத்தையும், கவுந்தியடிகள் வாயிலாக சமணத்தையும் சமமாக வைத்துப் போற்றிப் புகழ்கின்றார், சிலப்பதிகாரக் காப்பியத்திலே!

சேக்கிழார், சைவத்தை மட்டுமே வளர்க்கப் பெரிய புராணம் இயற்றி யருளினார்.

சாத்தனார் என்னும் புலவர், பௌத்த சமயத்தை வளர்ப்பதற்கென்றே மணிமேகலையை யாத்தார்.

திருத்தக்க தேவர், சமணத்தை வாழ்விப்பதற்காகவே சிந்தாமணிக் காப்பியத்தைச் செய்தருளினார்.

இளங்கோவடிகள் ஒருவர்தான், எம்மதமும் சம்மத மெனக்கொண்டு, எல்லா மதங்களையும், ஒருசேரப் பாடினுர். அந்த வகையில் தற்காலச் சமயவாதிகளுக் கெல்லாம் பொறுமை போதிக்கும் பேராசிரியராக விளங்குகின்ருர் இளங்கோவடிகள்.

பண்டைத் தமிழகம், மொழிவழி ஒரே நாடு; மக்கள் மனவழியும் அப்படித்தான். ஆனுல், மன்னர் களின் மரபுப்படி—சேர, சோழ, பாண்டிய நாடுகளென மூன்ருகப் பிரிந்து கிடந்தது தமிழகம். இந்த மூன்றினை யும் ஒன்ருகப் பிணைத்து, தமிழகத்தை ஒரே நாடாகச் செய்த முதற் கவிஞர் இளங்கோவடிகள்தான்.

புகார், மதுரை, வஞ்சி—என மூன்று தலைநகரங் களை உடைய முழுத் தமிழ் நாடாக நமது தாயகத்தை அமைத்துக் காட்டியிருக்கிருர் ஆசிரியர் இளங்கோ.

சிலப்பதிகாரத் தலைவியாகிய கண்ணகி, சோழ மண்டலத்தில் பிறந்து, பாண்டி மண்டலத்தில் புரட்சி செய்து, சேர மண்டலத்தில் தெய்வநிலை பெற்றுக் கோயில் கொள்கிருள். ஆம்; பத்தினி கண்ணகி, மண் மகளறியாத வண்ணச் சீரடி பெற்றவள். தன் திருவடி நோவ சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றிலும் யாத்திரை செய்தாள்.

தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமென்றும், தெற்கெல்லைகுமரிஎன்றும் இளங்கோவுக்கு முன்பிருந்த புலவர்களும் கூறியிருந்தனர். ஆயினும், தெற்கெல்லை யைக் குமரித்தெய்வமும் வடக்கெல்லையைத் திருமாலும் காப்பதாகக் கற்பனை செய்த முதற்புலவர் இளங்கோ வடிகள்தான். சிலப்பதிகாரத்திற்கு முன்புள்ள இலக்கி யங்களில் வேங்கடம், குமரி என்ற சொற்களே பயன் படுத்தப்பட்டிருக்கும். இளங்கோவடிகள் "நெடியோன் குன்றம்—தொடியோள் பௌவம்" எனத் தெய்வங் களின் பெயரால் நமது தாயகத்தின் எல்லைகளைக் குறிப்பிட்டார்.

தமிழ் நிலம் சுருங்கி விடக் கூடாது என்பதில் இளங்கோவடிகள் அக்கறை கொண்டிருந்தார். "லெமூரியாக் கண்டம்" என்னும் தமிழ்ப்பகுதி கடலால் விழுங்கப்பட்ட செய்தியைக் கூறுமிடத்து "கொடுங் கடல் கொண்டது" என்று தமது நெஞ்சக் குமுறலை வெளிப்படுத்துகின்றார் இளங்கோவடிகள்.

தமிழகத்தின் எல்லைப் போராட்டத்திற்கு உணர்ச்சி யூட்டிய பெருமை கவிஞர் இளங்கோவடிகளுக்கே உரிமை. இவ்வளவு சிறப்புக்களையும் மக்களுக்கு நினைவூட்டவே இளங்கோவுக்கு ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் சித்திரா பௌர்ணமியில் விழா எடுக்கிறோம்.

தமிழரிடையே இன உணர்ச்சியும் இலக்கிய அறிவும் வளர்வதற்கு இளங்கோ விழா பயன் படுவதாக!





# காப்பிய உலகில் கம்பன்

காப்பிய உலகில் கம்பனுக்குள்ள இடம் தனி யானது. அவனுக்குரிய சிறப்போடு போட்டியிட அவனுக்கு முன்னும் பின்னும் வேறு யாரும் தோன்ற வில்லை. இனியும் தோன்றுவது அரிது.

கம்பன், கவிஞர்களிலே சக்கரவர்த்தி! பாமர மக்களிடையே இலக்கிய ஞானத்தை ஏற்படுத்திய பெருமை கம்பனுக்கே உரிமை. வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே கலாச்சார ஒற்றுமை ஏற்படுவதற்குக் கம்பன் செய்துள்ள தொண்டு போல, வேறு எந்தப் புலவரும் செய்ததில்லை. ஆம்; கம்பன் இயற்றிய இராமாயணம், வடக்கையும் தெற்கையும் பிணைக்கும் பாலமாக அமைந்திருக்கின்றது. அத ஞற்ருன், வடக்கின் தொடர்பிலிருந்து தெற்கைப் பிரிக்க விரும்புவோர் இந்தப் பாலத்தை உடைக்கும் நாசவேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கம்ப ராமாயணம் தோன்றுவதற்கு முன்பு, சிலப் பதிகாரம்—மணிமேகலை—சிந்தாமணி போன்ற காப்பி யங்கள் தமிழில் இருந்தன. அந்தக் காப்பியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புடையது தான். என்ருலும், அவை பண்டிதப் பெருமக்களுக்குப் பயன்பட்டனவேயன்றி, பாமர மக்களுக்குப் பயன் படுவனவாக இல்லை.

என்னுடைய சிந்தை கவர்ந்த சிலப்பதிகாரம் காப்பிய உலகில் இன்றைக்குங்கூட தனிச்சிறப் புடையதுதான். தமிழகத்தின் செல்வச் செழிப்பை,

தமிழினத்தின் கலை வாழ்வை விரித்துக் கூறும் சரித் திரமாகவும் விளங்குகிறது சிலப்பதிகாரம். இந்த வகையில் அதற்கு இணையான இன்னொரு காப்பியம் இதுவரை தோன்றவில்லை என்றாலும், அது இசைப் பாக்களால் எழுதப்படவில்லை. ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை போன்ற தனிப்பாடல்களை நீக்கி விட்டால், காப்பியம் முழுதும் அகவற் பாவினாலேயே அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். சிலப்பதிகாரக் கதையை நோக்கினாலும் ஒரு சின்னஞ் சிறு கட்டிடம் போன்றதுதான்.

ஆகவே, தமிழ் நாட்டு மக்களின் இலக்கியப் பெரும் பசிக்கு சிலப்பதிகாரம் போதுமான உணவாக இல்லை.

சாத்தனார் இயற்றிய மணிமேகலையோ, பௌத்த மத வளர்ச்சிக்குப் பிரசாரம் செய்வதற்கென்றே எழுதப்பட்டதாகும். அதுவும் கதையளவில் சிறிய கட்டிடந்தான்.

வடக்கே நிகழ்ந்த பல குட்டிக் கதைகளின் ஒட்டு வேலையில் உருவானதுதான் மணிமேகலை. அதோடு தமிழ் நாட்டு மக்களின் பண்புக்கும், பழக்க வழக்கங் களுக்கும் ஒட்டியதாகவும் இல்லை. அதனால், மணி மேகலைக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லாமல் போய் விட்டது.

திருத்தக்க தேவர் இயற்றிய சிந்தாமணி, கதை யைப் பொறுத்தவரையில் சிலப்பதிகாரத்தையும், மணி மேகலையையும் விடப் பெரிய காப்பியந்தான். சிந்தை கவரும் சந்தங்களால் எழுதப்பட்டதுதான். விருத்தப் பாவால் காப்பியம் செய்வதில் கம்பனுக்கும் வழிகாட்டி யாக விளங்குகின்றார் சிந்தாமணி ஆசிரியர். ஆயினும், கதையின் போக்கு பாமரமக்களின் உள்ளங்களைக் கவருவதாக அமையவில்லை. அதில் காணப்படும் பண்புகளும் பழக்க வழக்கங்களுங்கூட தமிழருடைய

வாழ்க்கையோடு பொருந்தாதவை. தமிழகத்துக்குப் புறச் சமயமான சமண மதப் பிரசாரத்திற்கென்றே எழுதப்பட்டது. இந்தக் காரணங்களால் சிந்தாமணியும் செந்தமிழ் நாட்டாரின் சிந்தையைக் கவரவில்லை. உள் நாட்டுச் சைவ—வைணவ சமயங்களோடு நடைபெற்ற போரில் சமண சமயம் தோற்று விட்டது. அது காரண மாகவும் கம்பனுக்கு முன்னேயே சிந்தாமணி தமிழ ரிடையே செல்வாக்கிழந்து விட்டது.

ஏன் ?—மக்களிடையே மத வேற்றுமை மறைந்து, மொழிப்பற்று மிகுந்து, பாமரர்களிடையேயும் இலக்கிய ஞானம் வளர்ந்து வரும் இந்த நாளில் கூட, சிந்தாமணி யும் மணிமேகலையும் செல்வாக்குப் பெற முடியவில்லை என்றால், கம்பன் காலத்தைப் பற்றிக் கேட்பானேன்! இப்படி, தமிழில் தோன்றிய பழங்காப்பியங்கள், கதை யளவில் சிறியவையாயும், அகவற் பாவால் மட்டுமே அமைக்கப்பட்டவையாயும், புறச் சமயங்களைப் போதிப் பவையாயும், தமிழ் மக்களின் வாழ்க்கையோடு பொருந்தாப் பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் திணிப்பவையாயும் இருந்தனவாதலால், சாதாரண மக்களிடையே அவை செல்வாக்குப் பெறவில்லை. புலவர்களின் இலக்கியப் பெரும்பசிக்கும் அவை போதுமானவையாக இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் கம்பன் தோன்றி இராமாயணக் காப்பியத்தை எழுதினான். பருவத்தே பொழியும் மழைபோல இருந்தது கம்பனுடைய காப்பியப் பணி.

கம்பனுக்கு முன்பே இராமாயணக் கதை தமிழ கத்தில் பரவி இருந்தது. கம்பன் காலத்தில், தமிழ் மக்களுக்கு அது பழங் கதையாகவும் இருந்தது. ஆம்; சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி ஆகிய காப்பியங்கள் சொல்லும் கதைகள் தோன்றுவதற்கு முன்பே இராமாயணக் கதை தமிழகத்தில் செல்வாக்கு

பெற்று விட்டது. பழைய தமிழ் இலக்கியங்களிலும் இராமாயணக் கதை பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. இளங்கோவடிகள் போன்ற புலவர்களும் தாங்கள் இயற்றிய காப்பியங்களில் இராமாயணத் தைப் பற்றிய குறிப்புகளைச் சேர்த்திருக்கின்றனர்.

இப்படி, தமிழ் மக்களின் மனங்களி லெல்லாம் புகுந்து, பண்டைத் தமிழ் இலக்கியங்களி லெல்லாம் நுழைந்து அங்கு இங்கு எனுதபடி பாரதநாடு எங்கணும் பரவிக் கிடந்த இராமனுடைய புகழைத்தான் கம்பன் காப்பியமாக்கினுன்.

ஆம்; தமிழ்க் கவிஞர்களில் இராமனைப் பற்றிப் பாடிய முதற்கவிஞன் கம்பனல்லன். இதை அறியாத பெரியவர்கள் சிலர், இராமனைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியது கம்பன்தான் என நம்புகின்றனர். இராமனை உத்தமப்புருடனுக, உயர் குணத் தலைவனுக, உள்ளத்தில் வைத்து வழிபடும் தெய்வமாக தமிழர் எண்ணுவது குற்றம் என்ருல், அந்தக் குற்றத்தைச் செய்தவன் கம்பன் மட்டுமல்ல; புறநானூற்றுப் புலவர், அகநானூற்றுக் கவிஞர், இளங்கோவடிகள் ஆகியோரும் குற்றவாளிகள்தாம். அவர்களை யெல்லாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த இக்காலப்பெரியவர்கள் துணிவார்களா? துணிந்தால், புலவர் உலகம் பொறுக்குமா?

"கம்பனுடைய புலமையைப் போற்றுகிருேம்; அவன் தமிழுக்குச் செய்த தொண்டுக்குத் துதி பாடு கிருேம்; காப்பிய உலகில் அவனுக்குள்ள தனிச் சிறப் புக்குத் தலை வணங்குகிருேம். ஆனுல், வடமொழிக் காப்பியத்தை மொழி பெயர்த்துக் கொடுத்த குற் றத்தை நாங்கள் மன்னிக்க முடியாது. கவி உலகச் சக்கரவர்த்தியான கம்பன், இளங்கோவையும் சாத்தனு ரையும் போன்று சொந்தமாக ஒரு காப்பியம் செய் திருக்கக் கூடாதா?" என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொள்கின்றனர் அறிஞர்களுள் ஒரு சிலர்.

கம்பன்மட்டு மல்லாமல், அவனுக்கு முன் தோன்றிய புலவர்கள் பலரும் வடமொழிக் காப்பியங் களை முதலாகக் கொண்டு தமிழில் வழிநூல் செய்திருக் கின்றனர். சிந்தாமணி, பெருங்கதை போன்ற காப்பியங்கள் தமிழில் தோன்றிய வழிநூற்களேயன்றி, முதல் நூற்கள் அல்ல.

நூற்களை மூவகையாகப் பிரித்தனர் இலக்கணப் புலவர்கள். அவற்றிற்கு முதல்-வழி-சார்பு எனப் பெயர் கொடுத்தனர். 'முன்னோன் கண்ட முடிபு ஒருங்கொத்து, பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி, மரபை அழிக்காமல் இயற்றப் படுவதே வழிநூல்' என்று வழி நூலுக்கு வரம்புகள் அமைத்தனர். வழி நூல் செய்யுங்கால், முதல் நூலிலிருந்து கருத்துக்களை மட்டுமன்றி, சொற்களையும் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கினர். 'முன்னோர் மொழிபொருளே யன்றி, அவர் சொல்லும் பொன்னேபோல் போற்றப்படும்' என்ற இலக்கணச் சூத்திரமே இதற்குச் சான்று, பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வதற் கென்றே தனியாக இலக்கணமும் அமைத்தனர். இது ஒன்றே பிறமொழி இலக்கியங்களைத் தமிழில் இயற்றுவது குற்றமல்ல என்பதைத் தெளிவுபடுத்தும்.

கம்பன் இராமாயணத்தைத் தமிழில் எழுதாமலிருந் தாலும், வேறு எந்தத் தமிழ்ப் புலவனேனும் எழுதித் தான் இருப்பான். கம்பனேனும் தமிழ்ப் பண்பு வழி— மூலக் கதையை, அதிலுள்ள கருத்துக்களைப் பெரு மளவுக்குத் திருத்தி அமைத்தான். மற்றவர்கள் இயற்றி யிருந்தால் மூலக் கதையைத் திருத்தாமல் அப்படியே மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கலாம். இதற்கு வில்லிபாரதம் சான்றாகும்.

கம்ப ராமாயணத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் வால்மீகி ராமாயணத்தை ஒருமுறையேனும் படித்து விடவேண்டும். அப்பொழுதுதான் தமிழ்ப் பண்பாட்டை

வளர்ப்பதில், பிற இனத்தவர் பண்பாடுகளின் தாக்குதல்களிலிருந்து தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதில் கம்பனுக்கிருந்த அக்கறையை நாம் நன்கு தெரிந்து கொள்ளமுடியும். வால்மீகியைப் படித்து விட்டுக் கம்ப ராமாயணத்தைப் படித்தால் அது மூலநூலோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்குக் கதைப் போக்கையும் சம்பவங்களையும் மாற்றி யமைத்திருக்கிருன் கம்பன்.

கம்ப ராமாயணம் தோன்ரும லிருந்திருந்தால், வட ஆரியர் பண்புவழி இயற்றப்பட்ட வால்மீகி ராமாயணத்தை ஒட்டியே தமிழ் நாட்டில் இராம கதை பரப்பப்பட்டிருக்கும். வடமொழிப் புலமை நிறைந்த பௌராணிகர் மூலம் வால்மீகி ராமாயணச் செய்திகள் தமிழ்ப் பண்புவழி திருத்தப்படாமலே மக்களுடைய செவிவழியே அவர்களுடைய சிந்தைக்கு விருந்தாகியிருக்கும். அதன் மூலம் தமிழ்ப் பண்பாடு திருந்தி விடக் கூடிய அல்லது அழிந்து போகக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கும். அந்த அபாயத்திலிருந்து தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் காப்பாற்றினுனே, அதற்காகவா கம்பனை ஏசுவது?

கம்பன், இராமாயணத்தைத் தமிழில் எழுதப் புகுந்த போதும் அவனுக்குப் பெரும் எதிர்ப்பு இருந்தது. 'தேவபாஷை'யில்—வடமொழியில் எழுதப்பட்ட இராம கதையை மனித பாஷையான தமிழில் எழுதக் கூடாது என்று சிலர் எதிர்த்தனர் போலும்! வால்மீகி ராமாயணத்தை துளசிதாசர் இந்தியில் எழுதியபோதும் அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டதாம். அவையடக்கத்தில்,

"வையம் என்னை இகழவும் மாசு எனக்கு
எய்தவும் இது இயம்புவது யாதெனில்"

என்று கேள்வி போட்டுக் கொண்டு,

"பொய்யில் கேள்விப் புலமையி னேன் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே"

என்று பதிலளித்து, எதிர்த்தவர்களைத் திருப்திப் படுத்த முனைந்திருக்கிறான் கம்பன்.

தாம் இராமாயணத்தை இயற்றப்புகுந்ததால், தேவ மொழியின் சிறப்பும், தெய்வமாக் கவியான வால்மீகியின் பெருமையும் அதிகரிக்குமேயன்றிக் குறைந்து விடாது என்று சமாதானம் கூறுகின்றான். கம்பன் பிற்காலத்தில் ஆரியப் பகைவர்களிடமிருந்து தமக்கு எதிர்ப்பு ஏற்படும் என்பதை முன்கூட்டியே யூகித்துத் தான் இந்த அவையடக்கச் செய்யுளை எழுதினான் என்று சிலர் கூறுகின்றனர். இது வம்பு மொழியேயன்றி வாய்மையுரையன்று.

வால்மீகி ராமாயணத்தைக் கம்பன் தமிழில் செய்ததை வரவேற்போர்கூட, 'இராமனைத் தெய்வமாக்கியது சரியல்ல' என்று வாதிக்கின்றனர். அயோத்திச் சக்கரவர்த்தியின் மைந்தனான இராமனைத் திருமாலாகக் கற்பனை செய்த முதற்புலவன் கம்பன் தான் என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் கம்பனுக்குச் சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர். அவர் எழுதிய கண்ணகிக் காப்பியத்திலேயே இராமன் திருமாலின் அவதாரமாகக் கூறப்படுகின்றான். 'ஆய்ச்சியர் குரவை'யுள்,

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகை முடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாதசெவியென்ன செவியே"

என்ற பாடலில், தம்பி இலக்குமணனுடன் வனம்புகுந்த இராமன், மூவுலகையும் இரண்டடியால் அளந்த திருமாலே எனக் கூறுகின்றார் இளங்கோ. இளங்கோவடிகள் காலத்தில் முல்லை நிலத்து மக்கள், இராமனைத்

திருமாலின் அவதாரமாகக் கருதி, அவனையே தங்கள் வழிபடுவதற்குரிய தெய்வமாகவும் கொண்டிருந்தனர். தமது காலத்தில் நாட்டில் நிலவிய இந்த உண்மையைத் தான் சிலப்பதிகார ஏட்டில் சேர்த்திருக்கிருர் இளங்கோ வடிகள்.

ஆய்ச்சியர் குரவை முழுவதுமே இளங்கோ இயற்றியதல்ல வென்றும், பிற்காலத்தில் யாராலோ எழுதப்பட்ட அந்தப் பாடல் சிலப்பதிகாரத்தில் புகுத்தப் பட்டிருக்கவேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர், 'ஆய்ச்சியர் குரவை' இடைச் சேர்க்கை என்று கொண்டாலும், அசல் கதையின் ஒரு பகுதியாக உள்ள 'ஊர்காண் காதை'யை இளங்கோவடிகள் இயற்றியதல்ல வென்று யாரும் சொல்லிவிட முடியாது. அப்படி யாரும் சொல்லவும் இல்லை. அந்தக் காதையில்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றே"

என்னும் வரிகள், சிந்தை வருந்திய கோவலனுக்கு ஆறுதல் கூறி கவுந்தியடிகள் தெரிவித்த செய்தி யாகும். இங்கும், காதலி சீதையுடன் கானகம் புகுந்த இராமன், பிரமனை ஈன்ற திருமால் ஆவான் என்ற கருத்தே தெரிவிக்கப்படுகிறது. இதைத் தெரிவிக்கும் கவுந்தியடிகள் சமணத்துறவி என்பதையும் மறந்து விடக் கூடாது.

"அயோத்தி இராமன் சரித்திர நாயகன் அல்லன். அவன் வால்மீகியின் கற்பனையில் தோன்றிய காப்பிய நாயகன்தான். அவனைத் தெய்வமாகச் செய்ததும் கவிஞனின் கைச்சரக்குத்தான்" என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன். அப்படி ஒப்புக் கொள்வ தால் இராமனுடைய சிறப்பு குறைந்துவிடவில்லை. தெய்வத்திற்குத் தலைமை தந்து காப்பியம் எழுதுவது

கவிஞர்களின் மரபு. அந்த மரபுப்படி வால்மீகியும், அவருக்குப்பின் வந்த கவிஞர்களும் இராமாயணக் காப்பியத்தின் தலைவனைச் சரித்திர நாயகனாகவும், திருமாலின் அவதாரமாகவும் கற்பனை செய்திருக்கலாம். 'இது, தமிழ்ப் பண்புக்கு இழுக்கல்லவா?' என்று கேட்டால், 'இல்லை' என்றே நான் பதில் கூறுவேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற குறட்பா, மனிதர்களைத் தெய்வமாக எண்ணி வழிபடும் நெறியை வரவேற்கின்றது. ஆம்; 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாக இருக்கவேண்டும்' என்ற நிபந்தனையுடன்!

இராமன், வையத்துள் வாழும் நெறி தெரிந்து வாழ்ந்தவன்! மற்றவர்களுடைய வாழ்வுக்காகத் தனது சுகவாழ்வைத் தியாகம் புரிந்தவன்; உயர் குணங்களைக் கடைப் பிடிப்பதில் தனக்கு இணை தானே எனத் திகழ்ந்தவன். அதனால்தான், அவனைத் தெய்வமாக எண்ணி வழிபட்டனர் தமிழர்.

"இராமன், உயர் குணத் தலைவனாக இருக்கலாம்; ஒழுக்க சீலனாகவும் இருக்கலாம். ஆனால், வட நாட்டவனாகிய அவனைத் தமிழ் நாட்டார் வழிபடுவது குற்றமல்லவா?" என்று கேட்கின்றனர் சிலர். ஒழுக்கமும் உயர் குணமும் ஒரு இனத்துக்கே சொந்தமல்ல. உத்தம சீலர்கள் எந்த இனத்தில் பிறந்தாலும், எந்த நிலத்தில் வாழ்ந்தாலும் மனிதகுலம் முழுவதுமே அவர்களை வாழ்த்தி வணங்கக் கடமைப் பட்டிருக்கிறது. அரசு முறைக்கு எல்லை இருக்கலாம். பொருளாதார உரிமைகளுக்கு வரம்பிருக்கலாம். ஆனால், கலாச்சார உறவுக்கு, கடவுள் நெறிக்கு வரம்பு கிடையாது.

இந்தியாவில் பிறந்த புத்தரைத் தெய்வாம்சமுடையவராகக் கருதி, அவர் வழித் தோன்றிய புத்த

மதத்தை ஏற்று, அவற்றின் வழியே வாழ்வு நடத்து கின்றன சீனம், ஜப்பான், இலங்கை, பர்மா ஆகிய அயல் நாடுகள். இதை ஆட்சேபிப்பார் அந்த நாடு களில் ஒருவரும் இல்லை.

அப்படியே, அரபு நாட்டில் பிறந்த முகம்மது நபி யவர்கள், உலக நாடுகளில் உள்ள இசுலாமியர் அனைவருக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றார். அவர் வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல; மறைந்துவிட்ட பின்னரும் !

இன்னும் ஜெருசலேத்து ஏசுநாதர், உலகத்தி லுள்ள எல்லா நாடுகளிலும் மதிக்கத்தக்க மகான் ஆகிவிட்டார். அதை ஆட்சேபித்துக் குரல் கொடுப் போர் அகில உலகிலும் ஒரு ஆள்கூட இல்லை.

ஏன் ?—'வட இந்திய இராமனைத் தென்னிந்தியர் வழிபடுவதா ?' என்று கேட்போர்கூட, 'ஆரோக்கிய சாமி' என்னும் தமிழன் ஜெருசலேத்து 'ஏசு'வை வழி படுவதை ஆட்சேபிப்பதில்லை. 'அப்துல் காதர்' எனப் பெயர் தாங்கிய தமிழர் அரபு நாட்டு முகம்மது நபி யைப் போற்றிப் புகழ்வதை எதிர்ப்பதில்லை.

அரபு நாட்டு நபியை—ஜெருசலேத்து ஏசுவைத் தமிழர் வழிபடுவது தவறில்லையானால், வட இந்தியா தந்த இராமனை வழிபடுவது மட்டும் எப்படித் தவருகும் ?

உண்மையில், எந்த மதத்திடமும் விசுவாச மில்லாதவர்கள்தான்—'தெய்வம்' என்ற ஒன்றை நம்பாதவர்கள்தான் இராமனைக் கடவுளாக ஏற்க மறுக் கின்றனர். தங்களை நாத்திகர்கள் என்று சொல்லிக் கொண்டு இராமர் வழிபாட்டை எதிர்க்க அவர் களுக்குத் துணிவில்லை. அதனுற்றான், 'தமிழர்' என்ற இன உணர்ச்சியிலே மறைந்து கொண்டு, மத உணர்ச்சியை—தெய்வ நம்பிக்கையைத் தாக்கு கின்றனர். இந்தச் சூழ்ச்சியை அறியாமல், மத

நம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் உடையவர்கள் கூட தமிழ் இன உணர்ச்சி காரணமாக இராமாயண எதிர்ப்பில் அரைகுறையாக ஆர்வம் காட்டுகின்றனர்.

'வட நாட்டான்' என்பதற்காக இராமனைத் தெய்வ மாக ஏற்க மறுப்பவர்கள், தமிழருக்கே உரிய தனித் தெய்வம் எனப்படும் முருகனையேனும் வழிபடுகிறார் களா?—இல்லையே.

ஆரிய இனத்தவள் என்பதற்காகச் சீதையின் கற்பைப் போற்றாதவர்கள், தமிழ் இனத்தவள் என்பதற் காகக் கண்ணகியையேனும் பாராட்டுகிறார்களா?—இல்லையே!

வட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட காப்பியம் என்பதற்காக இராமாயணத்தை எதிர்ப்ப வர்கள், தமிழில் தோன்றிய முதற் காப்பியமான சிலப்பதிகாரத்திற்கேனும் சிறப்புச் செய்கிறார்களா?—இல்லையே!

'காப்பியம்' என்பது, நடந்ததை நடந்தபடியே கூறும் சரித்திர நூலாக இருக்க முடியாது. காப்பியப் புலவனும், கண்டதை, கேட்டதைத் தொகுத்துத் தரும் பத்திரிகை நிருபராகவோ, சரித்திரப் பேராசிரிய ராகவோ இருப்பது சாத்தியமில்லை.

உண்மையில், நடந்த சரித்திரச் சம்பவங்களைத் தொகுத்து, நடக்க வேண்டுமென்று தான் விரும்பும் நல்ல நெறிகளையும் அதோடு சேர்த்து, நடக்கவே முடியாத அற்புதங்களையும் அவற்றோடு கலந்து கவிஞன் இயற்றும் ஒரு நூலுக்குத்தான் 'காப்பியம்' என்று பெயர். 'நிகழாத சம்பவங்களை, நிகழவே முடியாத அற்புதங்களைக் காப்பியத்தில் சேர்க்காவிட் டால் என்ன?' என்று கேட்கலாம். இதைவிட, "இந்த உலகத்தில் காப்பியங்களும், கவிஞர்களும் இல்லாமல்

தொலேந்தால்தான் என்ன?" என்று கேட்பதை என்னல் புரிந்து கொள்ள முடியும்.

ஆம்; 'காப்பியம் வேண்டும்; கலே வேண்டும்; ஆனல், கற்பனே கூடாது' என்று கூறுவது கலே உள்ளம் இல்லாதவர்களின் பேச்சாகும்.

நிகழ முடியாத—அற்புதங்கள் கலவாத கதையை—காப்பியத்தை மக்கள் ஆனந்தமாக அனுபவிக்க முடியாது. மக்கள் ரசிக்க முடியாத எந்த வொரு காப்பியமும் நெடுங் காலத்திற்கு நிலேத்திருக்கவும் முடியாது.

நிகழாத சம்பவங்களும், நிகழ முடியாத அற்புதங் களும் அதிக அளவுக்குக் கலந்திருப்பதால்தான் கம்ப ராமாயணம் சாகாவரம் பெற்றுவிட்டது. 'கற்பனே'க்குப் 'பொய்' என்று பொருள் கூறுகின்றனர் சிலர். பிறருக்குத் தீமை பயக்கும் கற்பனேக்குத்தான் 'பொய்' என்று பெயர் வைக்க முடியும். எவருக்கும் தீமை பயக்காத, எல்லோருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுந்த கற்பனேயைப் பொய் என்று சொல்ல முடியாது.

"பொய்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறுர்.

இந்தக் குறள் நெறியை ஒட்டித்தான் கவிஞர் களின் கற்பனேகளேயும், காப்பியங்களில் வரும் அற்புதங்களேயும் உண்மை நிகழ்ச்சிகளே என்று நம்பும் வழக்கம் மக்களிடையே தோன்றியிருக்க வேண்டும். நல்வழிப்படாத ஒருவனே அருகே அழைத்து 'அப்பா நீ நல்லவனுக வாழ்வாயாக' என்று உபதேசம் செய்தால், 'அப்படி வாழ என்னல் முடியுமா?' என்று கேட்பான். 'உன் அப்பன், உன் பாட்டன் இன்ன இன்ன நல்ல குணங்களுடன் வாழ்ந்து போனுர்கள்"

என்று சொன்னால், தானும் அப்படியே வாழ்ந்து, தன் குடும்பத்தின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுவான்.

இதையொட்டித்தான் இந்த நாட்டிற்கு அல்லது நாட்டு மக்களுக்கு என்ன என்ன நல்ல குணங்கள் தேவையென்று நம் கவிஞர்கள் கருதினார்களோ, அந்த அந்த நல்ல குணங்கள் முற்கால மக்களிடையே இருந்தன என்று எழுதி வைத்தார்கள்.

இனி, இராமனிடம் இருந்த நல்ல குணங்களைக் காண்போம் :

அரியாசனத்தில் அமர்ந்து குடி மக்கள்மீது அதிகாரம் செலுத்த விரும்புவது மன்னர் பரம்பரையினர் சுபாவம். அதுவும், முறையாக—உரிமைபற்றிவரும் அரச பதவியை விரும்பி ஏற்பது மனித தருமமுங்கூட.

ஆனால், இந்தச் சுபாவத்திற்கும், தருமத்திற்கும் விலக்காக விளங்குகிறான் இராமன்.

முதுமை காரணமாகவும், அரச மரபின் முறையையொட்டியும், புவியாளும் பொறுப்பைத் தனது புதல்வனிடம் ஒப்புவிக்க விரும்புகிறான் தயரதன். விரும்பியதோடன்றி, மைந்தன் இராமனை அழைத்து அரச பொறுப்பை ஏற்குமாறு வேண்டுகோளும் விடுகின்றான்.

ஆனால், அரச பதவி வலிய வந்து அடைவது குறித்து இராமன் ஆனந்தப்படவில்லை. பதவியை ஏற்க மறுத்துத் தந்தையின் ஆணையை மீறவும் இல்லை. 'கடமை பற்றிப் புவியாளும் பொறுப்பை ஏற்கிறேன்' என்று இராமன் வாய் திறந்து மொழியவும் இல்லை.

ஆம்; எதிர்பாராத விதத்தில் தரணியாளும் பொறுப்பைத் தந்தை தயரதன் தனது தலையில் சுமத்துவதை நினைந்து மவுனமாகி விட்டான் மன்னர் மன்னனின் மைந்தன்.

ஆகவே, இராமனின் சார்பில் அவனது மனநிலை குறித்துக் கம்பன் நம்மோடு பேசுகின்றான் ;

" தாதை அப்பரிசுரை செயத் தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன்இதுஎன்று உணர்ந்தும்
யாது கொற்றவன் ஏவியது அது செயலன்றோ
நீதி யெற்கென நினைந்தும் பணிதலு நின்றான்."

இவ்வாறு, பாராளும் பதவியில் பற்றுக்கொள்ளாத உத்தம புத்திரனான இராமனைத் தமிழர் வழிபடுவதில் தவறென்ன ?

ஒருகால், தனது மனத்திலுள்ள பதவி ஆசையை இராமன் மவுனத்தில் மறைத்துக்கொண் டான் என்று இக் காலப் பெரியோர்கள் பேசலாம்.

இது தவறு. தந்தை தயரதன் வழங்கிய சக்கர வர்த்திப் பதவியை மாற்றாந்தாய் கைகேயி ஒரே நாளில் பறித்து விடுகிறாள். பதவியைப் பறித்ததோடு பயங் கரம் நிறைந்த கானகத்திற்கும் செல்லுமாறு கட்டளை யிடுகிறாள். அந்த நிலையிலும் இராமன் நெஞ்சம் குமுறவில்லை ; நிலைகுலைந்து புலம்பவில்லை.

" ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்
தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு
பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணிய நதிகளாடி
ஏழிரண்டு ஆண்டில் வாவென்று ஏவினன் அரசன் "

என்று, தயரதனைக் காணவந்த இராமனை அரண்மனை வாயிலிலேயே தடுத்து நிறுத்திக் கூறுகின்றாள் கைகேயி.

மனிதப் பண்புகள் முற்றும் நிறைந்த பெருமகனாக இருப்பினும் இந்த இடத்தில் எவனும் மனம் திடுக்கிட் டிருப்பான். சிற்றன்னையின்மீது சீறியிருக்கவும் கூடும். ஆனால், இராமன் கூறியது தென்ன ?

"மன்னவன் பணியன்ருகின் உம்பணி மறுப்பேனு?"

என்று கூறியதோடு-மேலும்,

"என் பின்னவன் பெற்றசெல்வம் அடியனென் பெற்றதன்றோ?"

என்று, அதிகார வெறிபிடித்த கைகேயி கூறிய அரச பதவியில் தனக்குள்ள பற்றற்ற தன்மையையும், தம்பி யின்பால் தான்கொண்ட அன்பையும் வெளிப்படுத்து கிருன் இராமன்.

"நாடாளும் பொறுப்பு உன் தம்பி பரதனுக்கு. பதினுன்கு வருடம் காடாளும் பொறுப்பே உனக்கு" என்று கைகேயி இராமனிடம் கூறியபோது அவன் திருமுகம் எப்படி இருந்தது என்பதை, "அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா!" என்ற வரியில் படம் பிடித்துக் காட்டுகின்ருன் கம்பன். ஆம்; பதவியை இழந்த இராமனின் முகப்பொலிவு செந் தாமரை மலரினை ஒத்தது என்று கம்பன் கூறவில்லை. செந்தாமரை மலரினையும் வென்றது என்றே கூறு கின்ருன். இதிலுள்ள சிறப்பு சிந்திக்கத்தக்கதாம்.

இன்னும் இராமனுடைய சீரிய குணங்களைப் பல நூருக, ஏன்—பல்லாயிரமாகச் சொல்லிக்கொண்டே போகலாம். தந்தையின்பால் பக்தி, தம்பியர்பால் அன்பு, காதலியின்பால் கடமை, பிரஜைகளிடம் கருணை, அன்னையிடம் பணிவு—என மனிதனுக்குரிய சகல குணங்களையும் குறைவறப் பெற்றவன் இராமன். இதற்கெல்லாம் மேலாக இயற்கையின் படைப்பு களாகிய பறப்பன, நடப்பன, ஊர்வன ஆகிய எல்லா ஜீவராசிகளையும் சமமாக நினைத்து அவற்றிடம் கருணை யும் அன்பும் காட்டி வாழ்ந்தான் சக்கரவர்த்தித் திரு மகன். இழிகுலத்துக் குகனையும், வானர வர்க்கத்துச் சுக்கிரீவனையும், பகைவனுடன் பிறந்த வீடணனையும் தம்பியராகக் கொண்டு வாழ்ந்த தன்மை இராம னுடைய வாழ்வில் நாம் காணும் உண்மை.

இராமனிடமுள்ள இந்த நல்ல குணங்களை யெல்லாம் மறந்து, காலத்தாலும்—வாழ்ந்த நிலத்தாலும் ஏற்பட்ட பழக்க வழக்கங்களைக் குற்றங்களாகக் கற்பனைசெய்து, இராமனைக் குறைகூறுவது ஒழுக்கமுடையார் செயலன்று.

இராமாயணக் கதைப்போக்கு எப்படியிருப்பினும், சம்பவங்கள் சரித்திரத்தோடு பொருந்தினாலும் பொருந்தாவிடினும், பாத்திரங்களின் பண்புகளை நாம் ஏற்றாலும் மறுத்தாலும், அந்தக் காப்பியத்தின் கருப்பொருளாக விளங்கும் ஒன்றை மட்டும் தமிழர் உணர்ந்து கொண்டால், அதுபோதும்.

இராமாயணக் காப்பியத்தின் கருப்பொருள் யாது? ஆண் கற்புதான் என்று கூறலாம். இராமன் காலத்தில் 'ஒருத்திக்கு ஒருத்தன்' என்ற நியதி சமூகத்தின் சட்டமாக இருந்தது. ஆனால், 'ஒருத்தனுக்கு ஒருத்தி' என்ற நியாயம் சம்பிரதாயமாகக்கூட இருக்கவில்லை. அதிலும், மன்னர் பெருமான்கள் பல பெண்களை மணந்தும் மணக்காமலும் மனைவியராக்கிக் கொள்வது மரபாக இருந்தது. அந்தக் கொடுமைக்கு எதிராக, ஒருத்திக்கு ஒருத்தன் என்பதுபோல, ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற நியாயத்தைச் சமூகத்தின் சட்டமாக்குவதற்கு என்று எழுதப்பட்டதுதான் இராமாயணம்.

அயோத்தி மன்னன் தயரதனுக்கு, மணந்து கொண்ட மனைவியர் மூவர்தான். அதுவே, குற்றமாகப்படுகிறது வால்மீகிக்கு. அதனால், தயரதன் பல்லாயிரம் மனைவியரைப் படைத்திருந்ததாகக் கற்பனை செய்தார் வால்மீகி. ஆம்; பலதார மணத்தின் கொடுமையை உலகத்துக்கு உணர்த்தவே இந்தக் கற்பனை.

பல்லாயிரம் மனைவியரைப் பெற்றிருந்த தயரதனின் மைந்தனான இராமன், ஏகபத்தினி விரதன்.

தந்தைக்கும் மகனுக்கும் கற்பிலே எவ்வளவு தலைகீழான மாற்றம் !

பெண்களை அடிமை கொண்ட இனத்தின் ஏகப் பிரதிநிதி தயரதன். பெண்ணினத்திற்கு விடுதலை கொடுத்த புதுயுகத்தின் முதல் பிரதிநிதி இராமன். இதுவே இராமாயணத்தின் மூல சித்தாந்தம்.

இதன்படிப் பார்த்தால், வால்மீகியும், அவனுக்குப் பின் தோன்றிய கம்பனும் சீர்திருத்தக் கொள்கையின் சிகரங்களாக விளங்குகின்றனர். அவர்கள் யாத்த இராமாயணம் பெண்ணினத்தின் விடுதலைப் புரட்சிக்கு வித்தென்று கூறலாம்.

ஆனுல், காலமெல்லாம் சீர்திருத்தம் பேசிவரும் பெரியார்கள் இராமாயணத்தின் கருப்பொருளாக விளங்கும் இந்தச் சீர்திருத்தத்தை ஏனோ உணர்ந்து கொள்ளவில்லை ?

வால்மீகி ராமாயணத்தை அப்படியே மொழி பெயர்க்காமல், அதிலுள்ள சிலவற்றை எடுத்தும், இல்லாத சிலவற்றைச் சேர்த்தும் கம்பன் புதிய இராமாயணம் செய்ததும் பாராட்டத் தக்கதே.



# சங்கத் தமிழ் வளர்த்த சாமிநாதையர்

டாக்டர் உ. வே. சாமிநாதையரின் நூறாவதாண்டு நிறைவு விழாவைத் தமிழகம் வெகு சிறப்பாகக் கொண்டாடியது. ஐயர், நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினார். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மறைந்தார். இடையில் எண்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தார். இறந்த நாளை மறந்து பிறந்த நாளையே கொண்டாடுகின்றனர் மக்கள். ஆம்; ஐயர் இறவாத புகழ் பெற்றவரல்லவா!

டாக்டர் சாமிநாதையர் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் வளர்ச்சிக்குப் பணி புரிந்தார். அவர் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவதற்கென்றே பிறந்தவர். அதனாற்றான், இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளைத் தந்தார் போலும்! அவரைப் போன்று, அறுபதாண்டுகள் இடைவிடாமல் தமிழுக்குப் பணி புரிந்த வேறொருவரைத் தமிழகம் கண்டதில்லை.

ஐயர் பிறந்த காலத்தில் ஆங்கில சாம்ராஜ்யத்துக்குத் தமிழ் மக்கள் அடிமைப்பட்டிருந்தனர். அதன் விளைவாகத் தமிழ் மொழியும் ஆங்கில மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. தமிழ் படித்தவர்களுக்கு மதிப்பில்லை. ஏன்? தமிழையே மதிப்பாரில்லை. 'அறிவு' படைத்தோரெல்லாம், ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்தனர். அந்தச் சூழ்நிலையில்தான் தமிழின் மதிப்பை உயர்த்தப் பாடுபட்டுத் தாமும் மாண்பு பெற்றார் சாமிநாதையர். ஆங்கில அரசாங்கம் அவருக்கு 'மகா மகோபாத்தியாயா' என்று பட்டம் தந்து

பாராட்டியது. ஆங்கில வளர்ச்சிக்கென்றே அமைந்துள்ள சென்னைப் பல்கலைக் கழகமும் 'டாக்டர்' பட்டம் தந்து கௌரவித்தது.

ஐயரவர்கள் பிறந்த காலத்தில் புராண இலக்கியங்களே மக்களால் போற்றப்பட்டு வந்தன. சங்க இலக்கியங்களைப் பற்றிச் சாதாரண மக்கள் அறிய மாட்டார்கள். அவை விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பண்டிதப் பெரு மக்களுக்கே ஏகபோக உரிமையாக இருந்தன. ஆனால், ஐயர் தோன்றி, சங்க இலக்கியங்களைச் சமூகத்தின் பொதுவுடைமை ஆக்கினார்.

தமிழ் ஐம்பெரும் காப்பியங்களுள் குண்டலகேசி, வளையாபதி என்ற இரண்டும் அழிந்தே போயின. எஞ்சியிருந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்ற மூன்றும் அழியுந் தருவாயிலிருந்தன. அந்த நிலையில் சாமிநாதையர் அந்த முப்பெருங் காப்பியங்களுக்கு அழியா வரம் தந்தார். அதுபோன்றே பத்துப் பாட்டு என்ற சங்க இலக்கியத்திற்கும் சாகா வரம் தந்தார். மற்றும் எட்டுத் தொகையில் ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், புறநானூறு ஆகியவற்றையும் காலனிடமிருந்து காப்பாற்றினார்.

சங்க இலக்கியங்கள் பண்டிதர்களின் மனைகளிலும் பண்டாரங்களின் மடங்களிலும் சிறைப்பட்டுக் கிடந்தன. அவற்றிற்கு விடுதலை தந்தார் சாமிநாதையர். ஆம்; ஆதியில் மன்னர்கள் வளர்த்த அருந்தமிழ் இடைக் காலத்தில் மடங்களிலே மறைந்து கிடந்தது. அவற்றை மக்கள் மடியிலே தவழ விட்ட பெருமை மகா மகோபாத்தியாயருக்கே உரிமை.

சங்க இலக்கியங்கள் மக்கள் கண்களிலிருந்து மறைந்து போன காரணத்தால், புராண இலக்கியங்களே எங்கும் போற்றப்பட்டு வந்தன. ஏன்?—தமிழ் இனத்தவரின் வரலாற்றை மறைக்கும் திரையாகவும் புராணங்கள் பயன்பட்டு வந்தன. அந்தத் திரையை

விலக்கிச் சங்க இலக்கியங்களை மக்களுடைய கண்களுக்குக் காட்சிப்படுத்தி, கருத்துக்கு விருந்தாக வைத்தார் சாமிநாதையர். அதன் விளைவாக, தமிழ் இலக்கிய உலகிலே ஒரு மகத்தான புரட்சி ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இன்று புராண இலக்கியங்களை விட, சங்க கால இலக்கியங்களுக்கே மக்கள் மதிப்புத் தருகின்றனர். இந்த மாறுதலுக்கே காரணமானவர் சாமிநாதையர் என்பதை யாரே மறுக்க முடியும்!

ஐயரவர்கள் தமிழகம் எங்கணும் சிதறிக் கிடந்த இலக்கிய ஏடுகளைத் தேடிப் பிடித்தார். அவற்றில் செல்லரித்துக் கிடந்த பகுதிகளை யெல்லாம் சீராக்கினார். பண்டிதரேயன்றிப் பாமர மக்களும் அவற்றைப் படித்துப் பயன்பெறும் வண்ணம் அச்சிட்டு உதவினார். அதோடு, ஆராய்ச்சியாளருக்குப் பயன்படக்கூடிய குறிப்புக்களை யெல்லாம் குவித்து வைத்தார். இவ்வளவையும் ஒரு தனி மனிதராகவே செய்திருக்கிறார் என்பதை நினைக்கும்போது வியப்படைகின்றோம்.

டாக்டர் ஐயர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். வைதீகப் பிராமணர் குடியில் பிறந்தவர். என்றாலும், சமணக் காப்பியமாகிய சிந்தாமணியையும், பௌத்த இலக்கியமாகிய மணிமேகலையையும் காப்பாற்றிக் கொடுத்தார்.

ஐயர் காலத்திலும் ஆரியர்—திராவிடர் வேற்றுமைக்குத் தூபமிடும் வாதங்களும் வழக்குகளும் நாட்டில் நிலவியிருந்தன. என்றாலும், ஐயர் அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவராக விளங்கினார். சொந்தத்தில் அவருடைய சமயக் கோட்பாடு எதுவாயினும், இலக்கியப் பணியில் அதற்கு இடம் கொடுத்தாரில்லை. பண்டைத் தமிழரின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் புறநானூற்றையும், தமிழகத்தின் பல்கலைக் களஞ்சியமான சிலப்பதிகாரத்தையும் ஐயர் புனருத்தாரணம் செய்யவில்லையானால் தமிழருடைய தனிப் பெருமை

களும், பண்பாட்டுச் சிறப்புக்களும் மறைந்தே போயிருக்கும்.

தமிழர் தனி இனமென்றும், தமிழருடைய கலாச்சாரம் தனிச் சிறப்புடையது என்றும் நாம் பெருமை பேசுகிறோமே, இவை யெல்லாம் ஐயரின் உழைப்பால் கிடைத்த உரிமைகளே.

ஐயர் செய்ந்நன்றி மறவா சிந்தையாளர். தமக்குத் தமிழ் போதித்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் அவர் வைத்திருந்த அன்பும் மதிப்பும் அளவிட முடியாதவை. "மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்" என்ற பெயரில் ஐயர் எழுதியுள்ள நூல், அவருடைய குரு பக்திக்குச் சான்றாக விளங்குகின்றது. வகுப்புவாதச் சுழலில் சிக்கி அல்லலுறும் தமிழகத்துக்கு அந்நூல் ஒரு வழிகாட்டி.

டாக்டர் சாமிநாதையரின் நூற்றாண்டு விழா தமிழினத்தின் பெருமைக்குச் சான்றாகும். சாதி, சமய பேதமின்றித் தமிழர் ஒவ்வொருவரும் ஐயரின் தமிழ்ப் பணியைப் போற்றிப் புகழக் கடமைப்பட்டிருக்கின்றனர். பாரதியார் தமிழ் மக்களின் உள்ளத்திலே புரட்சியைக் கண்டார். அவர் காலத்தில் வாழ்ந்திருந்த டாக்டர் சாமிநாதையர் தமிழ் இலக்கியத் துறையிலே புரட்சியைத் தோற்றுவித்தார். அவருடைய சேவை இல்லையானால், தமிழ் மறுமலர்ச்சியே இல்லை எனலாம்.

சிவனார், காலனுடைய பாசக் கயிற்றிலிருந்து மார்க்கண்டேயனை மீட்டதாகப் புராணம் கூறும். அது கற்பனையாக இருக்கலாம். ஆனால், ஐயரவர்கள் கறையானின் நாச வேலையிலிருந்து கன்னித் தமிழ் இலக்கியங்களைக் காப்பாற்றிய சம்பவம் கற்பனையல்ல; மக்கள் கண்ணெதிரே கண்ட காட்சி.

★

# மகாகவி  பாரதி

இன்று பாரெங்கும் பரவி வாழ்கின்ற—தாய்மொழியில் உண்மையாகவே பற்றுக்கொண்டுள்ள—தமிழ் மக்களெல்லாம் பாரதியின் நினைவு நாளைக் கொண்டாடுகின்றனர்.

கவி பாரதிக்குப் பிறகு, தமிழில், ஒரு புதிய சகாப்தமே தோன்றிவிட்டது. அதன் பெயர், பாரதி சகாப்தம் என்று சொன்னாலும் பொருந்தும். விரும்பாதவர், 'மக்கள் மொழி சகாப்தம்', 'ஜனநாயக வழி சகாப்தம்' என்றெல்லாம் சொல்லிக் கொள்ளலாம். தவறில்லை.

பாரதி ஒரு தனி மனிதர் மட்டுமல்லர். வாழையடி வாழையாகத் தோன்றி வந்த தமிழ் மொழிக் கவிஞர்களின் வாரிசு. தமிழ் அன்னையின் தவப் புதல்வர்; தமிழ்ப் புலமைக்கு ஓர் புதிய சக்தி; காலத்தை வென்று, விதியை விரட்டியடித்து, ஆட்சியாளர் போட்ட தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து தமிழுக்கு வாழ்வளித்த வள்ளல். மடங்களிலே அடைக்கலம் புகுந்த தமிழ் மொழியை, கவிதையை, காப்பியங்களை மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவந்த மகா கவி.

இத்துணைச் சிறப்புக்களும், உற்சாகத்தால் நாம் கூறும் புகழ்மொழி அன்று; வரலாறு காட்டும் சித்திரம்.

பாரதி, பிறப்பால் தமிழர். அதனால், தமிழர் எல்லோரும், "எங்கள் பாரதி" என்று பெருமையோடு

கூறிக்கொள்ள உரிமை பெற்றிருக்கின்றனர். ஆயினும், பாரதி ஓர் இலட்சியவாதி. வெறும் புலமையால் மட்டுமல்லாமல், புரட்சிகரமான இலட்சியங்களின் மூலமாகவே, அவர் தமிழ் மக்களை அணுகுகிறார்.

கம்பரை எல்லோருமே புகழலாம்; போற்றலாம். காரணம், அவர் எப்போதோ நடந்து முடிந்த இராம—இராவண யுத்தக் கதையைக் காப்பியமாக்கினார். அந்தக் காப்பிய விருட்சத்திலே, இலைமறை காயெனத் தனது இலட்சியங்களைப் புகுத்தி வைத்தார். அதனால், எல்லோருமே கம்பரோடு உறவுகொள்ள முடிகிறது. இளங்கோவடிகள் காப்பியம், அவர் காலத்தில் நிகழ்ந்த ஒரு புரட்சியின் சித்திரம். அந்தச் சித்திர கூடத்திலே, ஆங்காங்கே தமது இலட்சியச் செய்திகளையும் சேர்த்திருக்கிறார் இளங்கோ.

வள்ளுவப் பெருந்தகையார், எல்லாக் காலத்திற்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய நீதிகளைப் போதித்தார். நெறிகளை வலியுறுத்தினார். அவருடைய இலட்சியச் சித்திரமான திருக்குறளிலே 'பகை'யைக் காண்கிறோம். ஆனால், பகைவர்களைக் காண முடியவில்லை! கொடுங்கோலைக் கூறினார் வள்ளுவர். ஆனால், கொடுங்கோலர்களின் பெயரைக் கூறவில்லை!

சுரண்டல் கொடுமையைச் சாடினார். ஆனால், சுரண்டிப் பிழைக்கும் கொடியோர் இன்னார் என்று கூறவில்லை. இந்தக் காரணங்களால் கம்பர், இளங்கோ, வள்ளுவர் விழாக்களிலே எல்லோரும் கலப்பது இயற்கை.

ஆனால், பாரதியின் நிலைமை அதுவன்று.

அந்த மகாகவி, இந்தத் தலைமுறையில் இப்போது வாழுகின்ற நம்மோடு சேர்ந்து வாழ்ந்தவர். நாம் போற்றுகின்ற தேசபக்தர்களிலே அவரும் ஒருவர். நாம் தூற்றுகின்ற தேசத் துரோகிகளை, அவரும் தூற்றி

ஞர். பெயரைச் சொல்லி, ஊரைச் சொல்லித் தேசத் துரோகக் கட்சி இதுவெனக் காட்டித் தூற்றினர். தூற்றுமாறு நம்மையும் தூண்டினர். பாரதி, தமிழை வாழ்த்தினர் ; அது வாழ்வதற்கு வழிகோலினர்.

புரட்சிப் பாதையிலே, புதுமைத் துறைகளிலே, பொதுமக்கள் மடியிலே தமிழைத் தவழ விட்டார். அந்த வகையில், தமிழ் மொழியின் வரலாற்றில் தனி யிடம் பெற்றுவிட்டார் பாரதி.

தமிழைப் பண்டிதர்களின் தனி உடைமையாகக் கருதுவோர், இலக்கணம் என்னும் கூட்டுக்குள்ளே— இருட் சிறையினுள்ளே அடைத்துத் தமிழை வளர்க்க விரும்பும் புலவர்கள் பாரதியைப் போற்ருமலிருக்க லாம். "அவரும் ஒரு புலவரா ?"—என்று தூற்றவும் செய்யலாம்.

ஆனல், "வெள்ளம் போல் கலைப்பெருக்கும், கவிப் பெருக்கும், மேவுமாயின், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வர்" என்ற முற்போக்குக் கொள்கையுடைய புலவர்கள் பாரதி யைப் போற்றுகின்றனர். அவன் வகுத்த பாதையிலே சென்று தமிழுக்குப் பணிபுரிவதைப் பெருமையாகக் கருதுகின்றனர்.

சுப்பிரமணிய பாரதி மனிதனை மனிதன் துன் புறுத்துவதை வெறுத்தார். ஒரு மனிதனை துன்புறுத்து வதைப் பார்த்துக்கொண்டே, இன்னெரு மனிதன் இன்புறுவதை வெறுத்துப் பாடினர். 'கருவிலே உற்ற திரு' என்ற மூடநம்பிக்கையை அந்த மகாகவி வெறுத் தார். 'ஏழை' என்றும் 'செல்வர்' என்றும் பேத மின்றி, எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று வாழும் இன்ப நிலையையே அவர் விரும்பினர். அதனல், பொருளாதாரப் புரட்சிப் பாதையில் அணி வகுத்துச் செல்லும் 'சோஷலிஸ்டுகள்' பாரதி எங்கள் கவி என்று பேசுவதைப் பார்க்கிருேம்.

பாரதி, தமிழன் என்ற உணர்ச்சி பெற்றவர். அதற்குப் பிறகுதான் இந்தியன் என்ற எண்ணமுடைய வர். ஏன்? தமிழன், இந்தியன் என்ற இரண்டு உணர்ச்சிகளேயும் இணைத்து வாழப் பயின்றவர். அந்த கலப்புணர்ச்சியைத் தமிழர் எல்லோருக்கும் அளிக்க முயன்றவர். தமிழர் என்ற இன உணர்ச்சியை ஏற்காதவர். இந்தியன் என்ற சமுதாய உணர்ச்சி கொள்ள முடியாதவர், பாரதிக்கு உறவினத்தாரல்லர்; புறவினத்தார்.

பாரதி மதவாதி. தெய்வ நம்பிக்கையுடைய ஆத்திகர். தத்துவப்படி, பாரதி பரிபூரண வேதாந்தி என்ருலும், வேதாந்த, சித்தாந்த தத்துவங்களிடையே சமரசம் கண்டவர். இரண்டு நிலேகளேயும், ஒன்றை ஒன்று அடுத்துள்ள படிகளாக எண்ணியவர்.

பாரதி பிறப்பால் இந்து. இந்துவாக வாழ்வதிலே பெருமை கொண்டவர். வேத, ஆகம நூற்கள் கூறும் அடிப்படை அறங்களிலே அழுத்தமான நம்பிக்கை உடையவர். ஆனுல், மதத்தின் பெயராலும், வேத ஆகமங்களின் பெயராலும் வளர்க்கப்பட்டுள்ள மூட நம்பிக்கைகளேக் கட்டோடு வெறுத்தவர்.

பல்வேறு மதங்களிடையே ஒற்றுமை காண அவர் உள்ளம் துடித்தது.

"மனிதா! நீயே தெய்வமென்றுணர்" என்று போதித்தார்.

"செத்த பிறகு வீடுபேறு கிடைக்கும்" என்று சொல்லும் சித்தாந்தத்தை மறுத்தார். 'வானகம் இங்கு வந்திடல் வேண்டும்' என்று கூறி, இந்தப் பிரபஞ்சத்திற்கு அப்பால் இன்பம் தரும் உலகம் என இன்னென்றில்லே என்றும் கூறினுர். ஆனுல், பல்வேறு மதங்கள் கூறும், வெவ்வேறு நிலேகளே அவர் மதித்தார். ஒவ்வொரு மதத்தவராகவும் தன்னேப் பாவித்துக்

கொண்டு அந்தந்த மதத்தவரின் சிறப்புக்களைப் பாடினார். அந்த வகையில், வேதாந்த தத்துவத்தின் வரம்பையும் கடந்து, பல்வேறு தத்துவங்களுடன் உறவு கொண்டார். ஆம்; பாரதியின் உள்ளம் கடல் போன்றது.

ஒரு மகாகவிக்கு இருக்கவேண்டிய விசாலமான உள்ளமும், பரந்த நோக்கமும், தீட்சண்யப் பார்வையும், தெளிந்த மதியும், இலட்சியப் பற்றும், "எல்லாவற்றிலும் தான்; தன்னிலே எல்லாம்"— என்ற உயர் நிலையும் பாரதியிடம் இருந்தன.

அதனாற்றான், அந்தப் பெருமகனை மகாகவி என்கிறோம்.

இப்படிப்பட்ட சிறப்புக்களெல்லாம் பொருந்திய மகா கவிஞனைப் பெற்றெடுத்ததற்காகத் தமிழர் பெருமை யடையலாம். ஆனால், வெறும் புலமைக்காக மட்டும் பாரதியைப் போற்றிப் பயனில்லை. அந்தப் புலமையிலே பொதிந்திருக்கும் பொருள்களிலே மனஞ் செலுத்த வேண்டும்.

பாரதி இலட்சியத்திற்காக வாழ்ந்தார். அதற்காகவே பாடுபட்டு வறுமை எய்தினார். 'பைத்தியம்' என்ற பட்டமும் பெற்றார். அப்படிப்பட்ட மகாகவியை இலட்சிய ரீதியாக அணுக வேண்டும்.

அவர் கனவு கண்ட இலட்சியங்களை நனவாக்கப் பாடுபடுவோம் என்று விரதம் கொள்ளவேண்டும். அதற்கு மாறாக, புலமைக்காக மட்டுமே பாரதியைப் போற்றுவது, அவரது ஆன்மாவுக்குச் செய்யும் துன்பமாகும்.

பாரதி வெள்ளையரிடமிருந்து விடுதலை பெறுவது ஒன்று மட்டுமே 'சுதந்திரம்' என்று கருதியவரல்லர். அப்படிக் கருதுவது, மூடத்தனம் என்ற கொள்கை உடையவர். 'விடுதலை' 'விடுதலை' 'விடுதலை' என்று

துவங்கும் பாடலில் 'விடுதலை யாருக்கு ?' என்ற வினா விற்கும் விடையளிக்கிறார். பறையருக்கு விடுதலை; தீயருக்கு விடுதலை; மறவருக்கு விடுதலை; குறவருக்கு விடுதலை என்றெல்லாம் விளக்கம் தருகிறார். ஆம்; சமுதாயத்தின் அடித்தளத்தில்—சாதிகளில் சிக்கி அல்லலுறும் மக்களினுடைய விடுதலையையே, சுதந் திர விருட்சத்தின் வேராகக் கருதினார். சமூக சீர் திருத்தம், தாய்மொழி வளர்ச்சி, பொருளாதாரப் புரட்சி, மொழிவாரி இனங்களின் சுதந்திர அரசுகளைக் கொண்ட சோஷலிச இந்தியக் குடியரசு—இவை பாரதி காண விரும்பிய காட்சிகள்.

மதவாதி, பாரதியின் தெய்வ நம்பிக்கையில் பாரதியை மட்டும் காண்பதும், பொதுவுடைமையை விரும்புவோர், சமதர்மம் காட்டும் பாரதியை மட்டும் சகாவாகக் கொள்வதும், சமூக சீர்திருத்தவாதிகள், மூடநம்பிக்கையை வெறுத்த பாரதியிடம் நட்புக் கொள்வதும்—இவர்கள் பாரதியிடம் தாங்கள் ஏற்றுக் கொண்டதுபோக, மற்ற இலட்சியங்களுக்கு எதிராக இயக்கம் நடத்துவதும், பிறவிக் குருடர்கள் யானை யைக் கண்டது போலாகும்.

பாரதியை முழு வடிவத்தில் கண்டு மகிழவேண் டும். அவர் கண்ட கனவுகளை எல்லாம் நனவாக்கக் கங்கணம்கட்டிக் கொள்ளவேண்டும்.




அரசியல்

# கட்டபொம்மனிலிருந்து ஜான்ஸிராணிவரை



இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு—மே மாதம் 10-ஆம் தேதி இந்தியாவின் வட ப்குதியில் புரட்சித் தீ மூண்டது. வானளாவச் சுடர்விட்டெரிந்தது. ஆம்; பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை அந்தத் தீயில் போட்டுச் சுட்டுப் பொசுக்கத் திட்டமிட்டனர் தேச பக்தர்கள்.

அந்த நாளில், பிரிட்டிஷ் பாராளும் மன்றத்திற்குக் கட்டுப்பட்ட சட்ட ரீதியான ஆட்சி இந்தியாவில் இல்லை. வாணிகம் செய்யும் நோக்கத்துடன் இந்தியாவில் நுழைந்த கிழக்கிந்தியக் கம்பெனி வெள்ளையர் கூட்டமே ஆதிக்கம் செலுத்தியது. கம்பெனியின் ஆதிக்கம் குமரி முதல் இமயம் வரை அகன்றிருந்தது. ஆனால், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க்களம் ஒரு லட்சம் சதுர மைல் அளவிலேயே சுருங்கி யிருந்தது. கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்த வெள்ளை சோல்ஜர்கள் நாற்பதினாயிரம் பேர்தான். அவர்களுக்கு எதிராக விடுதலை ஆவேசம் கொண்டு போரில் குதித்த தேச பக்தர்களின் எண்ணிக்கையோ பல லட்சம் எனலாம். அவர்களின் செல்வாக்குக்குட்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் நான்கு கோடியாகும். புரட்சி நடைபெற்ற காலம் ஓராண்டுக்கு மேலில்லை. புரட்சி வெற்றி பெறவுமில்லை. வீழ்ச்சியே கண்டது.

ஆயினும், 1857 இல் நடைபெற்ற அந்தச் சுதந்திரப் புரட்சியின் நினைப்பு இன்றளவும் இந்திய மக்களின் இதயங்களை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறது.

புரட்சிக்குக் காரணம், ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்களின் இரும்புக் கரங்களிலிருந்து இந்திய நாட்டை விடுவிப்பதே யாகும். ஒரு நூற்றுண்டுக்கு முன்பு நடந்த அந்தப் புரட்சியில், கோடிக்கணக்கான மக்கள்—லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய சிப்பாய்கள்—கணக்கற்ற சிற்றரசர்கள்—ஆகிய அத்துணை பேரும் பங்கு கொண்டனர். அவர்களுக்கெல்லாம் ஏகத் தலைவனுய், வழிகாட்டி அழைத்துச் செல்லும் தளபதியாய், அடிமை இருளைக் கிழித்து ஒளி கொடுக்கும் சூரியனுய் விளங்கினுன் மொகலாயச் சக்கரவர்த்தி. நாடு அன்றிருந்த நிலைமையில் சாதாரண மக்களிலே ஒருவன் புரட்சிக்குத் தலைமை தாங்கும் நிலையில்லை. உட்பகை, புறப்பகையிலிருந்து மண்ணையும் மக்களையும் காக்க வேண்டிய பொறுப்பு மன்னர்களிடமும், மன்னர் மன்னனிடமுமே இருந்தது.

அதனுல், நானுசாகிப் போன்ற அரசர்களும் ஜான்ஸி ராணி போன்ற அரசிகளும் தத்தம் சமஸ்தானங்களில் புரட்சிக்குத் தலைமை தாங்கினர். இந்தத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினுன் மொகலாயப் பேரரசன். அந்நாளிலும் இந்துக்களிடையேயும் முசுலிம்களிடையேயும் பரஸ்பரம் சந்தேகங்களும், சச்சரவுகளும் நிலவியிருந்தன. அவற்றைப் பயன்படுத்தி ஆங்கில சாம்ராஜ்ய மாளிகைக்கு அஸ்திவாரமிட எண்ணியது கிழக்கிந்தியக் கம்பெனிக் கூட்டம். ஆனுல், இந்து-முசுலிம் மதங்களைச் சார்ந்த தேசபக்த மாவீரர்கள் தங்களிடையே நிலவி வந்த வேற்றுமைகளை விடுதலை வேள்வித் தீயில் போட்டுப் பொசுக்கினர்.

இந்து சிற்றரசர்கள், 'மொகலாயப் பேரரசனே எங்கள் தலைவன்—விடுதலைப் போரின் தளபதி' என்று பிரகடனம் செய்தனர்.

" அவசிய மேற்பட்டால், அரியாசனத்தை வேறு எந்த இந்துவிடமும் ஒப்புவித்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் வெற்றி தேடத் தயங்கமாட்டேன் " என தியாக முழக்கம் செய்தான் மொகலாய மன்னன். முசுலிம்களிடையே நிலவி வந்த பசு வதையை நிறுத்துமாறும் ஆணை பிறப்பித்தான்.

கான்பூர் நானு சாகிப், தனது சமஸ்தான தேசீயக் கொடியில் இசுலாமியர் வணங்கும் பிறைச் சந்திரனைப் பொறித்தான். கடிதப் போக்கு வரத்துக்களை உருது மொழியிலேயே நடத்தத் தொடங்கினுன்.

இந்தச் சம்பவங்களினுல் இந்து-முசுலிம் அரசர் களிடையேயும் மக்களிடையேயும் ஐக்கியம் வலுத் தது. அதன் எதிரொலியாக ஆங்கில ஏகாதிபத்திய மாளிகையின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டது.

என்றுமில்லாத ஒற்றுமைத் தென்றல் இந்திய விடுதலைப் போர்க்களத்தில் வீசியது!

இத்தனையும், புரட்சியின் மத்தியிலே நடைபெற்ற ஆக்கவேலைகள்-ஐக்கியப் பணிகள்.

1857 இல் நடந்த விடுதலைப் புரட்சியை 'இந்திய சிப்பாய்களின் மதவெறி காரணமாக ஏற்பட்ட கலகம்' என்றனர் ஆங்கில சரித்திராசிரியர்கள்.

அப்படித்தானே தமிழகத்து மாவீரன்—விடுதலைப் போருக்கு வித்தூன்றிய தளபதி—கட்டபொம்மனையும் 'கொள்ளைக்காரன்' என்று எழுதிவைத்தனர் வெள்ளை சாதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள்!

தமிழரசுக் கழகம் தோன்றி, " கட்டபொம்மன் கொள்ளைக்காரன் அல்லன்; தூக்குமேடையில் நின்று இந்திய விடுதலைப் போருக்குத் துவக்க விழா நடத்திய மாவீரன் " என்ற உண்மையை உலகறியச் செய்தது.

அதுபோலவே, விடுதலை வீரர் சவர்க்கார் அவர்கள், " 1857இல் நிகழ்ந்த புரட்சி, சிப்பாய்கள்

செய்த கலகமல்ல; விடுதலை ஆர்வம் கொண்ட மக்கள் நடத்திய மாபெரும் புரட்சி" என்பதைத் தக்க சான்று களுடன் எழுதி, எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார்.

விடுதலைப் புரட்சியில் மங்கையர் குலத்தின் பெருமையை உயர்த்தும்வகையில் வீரப் போர் புரிந்தாள் ஜான்ஸி ராணி என்ற இளமங்கை. வயது இருபத்து மூன்றுதான்! என்றாலும், வாள் வீச்சில் ஆணுலகத்தையும் அதிசயிக்க வைத்தாள், அந்த அரச மாதேவி. ஆண்வேடந்தாங்கிப் போர்புரிந்து, கையில் பிடித்த வாளை நழுவவிடாமல் மண்ணில் சாய்ந்து மாண்டாள் அம்மாதரசி. 'அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றமாகும்' என்ற உண்மையை, பாண்டி மன்னனின் ஆட்சியை அழித்து, அவன் ஆண்ட தலை நகரை எரித்து நிலைநாட்டினாள் கண்ணகி. அவளைப் போன்று, அன்னையர் நாட்டை அடிமைப்படுத்த முயன்ற அன்னியர் ஆட்சியைத் தொலைக்கும் கூற்ற மென விளங்கினாள் வட நாட்டுக் கண்ணகியான ஜான்ஸிராணி.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்த இந்திய சமுதாயம் சமயச்சார்புடைய அரசியலைக் கொண்டது. அரசியல் வேறு, சமயம் வேறு—என்று பிரித்துப் பார்க்கத் தெரியாதவர்கள், அதை நெஞ்சாலும் நினையாதவர்கள் அந்நாளைய மன்னர்களும் மக்களும்.

போதாக் குறைக்கு, இந்தியர்களை அடிமைப் படுத்த முயன்ற ஆங்கிலேயர்கள், அந்த அநீதிக்குத் தங்கள் கிறித்தவ மதத்தை ஆயுதமாகப் பயன்படுத்தினர். இந்து, முசுலிம், சீக்கியர் ஆகிய எல்லோரை யுமே கிறித்தவர்களாக்கிவிட முயன்றனர்; ஆக்கி விடவும் முடியும் என்று கனவு கண்டனர். இந்தியர் எல்லோரையும் கிறித்தவர்களாக மாற்றிவிட்டால், ஆங்கில சாம்ராஜ்யம் காருள்ளளவும் கடல் நீர்

உள்ளளவும் இந்திய மண்ணில் நிலைத்திருக்குமென்றும் நம்பினர்.

எப்பொழுதுமே, எதிலுமே வெறி பிடித்துவிட்டால் விவேகம் குறைந்து விடும். அதுபோல, மண்வெறி பிடித்து விட்டதால் ஆங்கிலேயர்களுக்கு அறிவு வேலை செய்யவில்லை. உண்மையிலேயே இந்து-முசுலிம்-சீக்கியர்களின் மத உணர்ச்சியைத் தாக்காமலிருந் திருந்தால், 1857இல் நடைபெற்ற விடுதலைப்போர் இன்னும் கொஞ்சம் பின்னே தோன்றி யிருக்கக்கூடும். இந்திய விடுதலை வீரர்கள் அரசியலில் விடுதலைபெறத் துடித்தது போலவே, தங்கள் மத சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்ளத் துடித்தனர்.

இந்திய சிப்பாய்கள் உபயோகித்த துப்பாக்கித் தோட்டாக்களில் மாட்டுக் கொழுப்பைத் தடவிக் கொடுத்தனராம் ஆங்கில ராணுவ அதிகாரிகள். இந்தச் சம்பவமும் எரிந்து கொண்டிருந்த இதயங் களிலே எண்ணெய் வார்த்தது போலாயிற்று.

விடுதலைப்போர் துவங்கு முன்பு கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் செய்த அநீதிகள் கொஞ்ச மல்ல. தங்கள் விருப்பப்படி எல்லாம் ஆட மறுத்த அரசர்களை எல்லாம் சூழ்ச்சி செய்து அரியாசனத்தி லிருந்து இறக்கினர். மக்கள் இல்லாத மன்னர்கள் அயலார் பிள்ளைகளை வாரிசாக எடுப்பது வழக்கம். ஆனல், ஆங்கிலக் கம்பெனி அதிகாரிகள் வாரிசு எடுக்கும் வழக்கத்திற்குத் தடை விதித்தனர். வாரிசு இல்லாத ராஜ்யங்களைத் தங்களுடைய விருப்பம் போல் வேண்டியவர்களுக் கெல்லாம் தானம் வழங்கினர்.

அரசர்களின் ஆளுகைக்குட்பட்ட கிராமங்களை அவர்களுடைய அனுமதியைப் பெறுமலே ஆக்ர மித்துக் கொண்டனர். சிற்றரசர்களின் சக்திக்கு மீறியதான கப்பம் விதித்து, அதைக் கத்தி முனையில்

வசூலிக்கத் திட்டமிட்டனர். நிலச்சுவான்தார்களுக்குச் சுமக்க முடியாத வகையில் வரிவிதித்து, அதைக் கட்டவில்லை என்று காரணங்காட்டி, விளை நிலங்களைக் கைப்பற்றினர்.

அற்ப சொற்ப குற்றங்களுக்காகச் சாதாரண மக்களுக்கெல்லாம் சவுக்கடி தண்டனைகள் வழங்கினர். சம்பள விகிதத்தில் ஆங்கில சோல்ஜர்களுக்கும் இந்திய சிப்பாய்களுக்கும் வேற்றுமை காட்டினர். கிறித்தவ மதத்திற்கு மாறின சிப்பாய்களுக்கு மட்டுமே உத்தியோக உயர்வு வழங்கினர்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் தாங்க மாட்டாமல், குமுறி கோபாவேசம் கொண்டு மக்கள் நடத்திய புரட்சிதான் 1857 இல் நிகழ்ந்த விடுதலைப் போர்!

ஆங்கிலேயர் நிகழ்த்திய கொடுமைகளுக் கெல்லாம் சிகரமாக அமைந்தது அயோத்தி நவாபைப் பதவியிலிருந்து அகற்றி, அவரது ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட சம்பவம். அதுவரை மக்களிடையே சிதறிக்கிடந்த போராட்ட சக்திகள், இந்தச் சம்பவத்தால் ஒன்றுபட்டு வெள்ளை ஏகாதிபத்தியத்தை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் ஒழித்துக்கட்டும் விடுதலைப் புரட்சியாக உருவெடுத்தன!

அந்த நாள் - மே 10 ஆகும்!

புரட்சி நடைபெற்ற பன்னிரண்டு மாதங்களில் ஆங்கிலேயர்களால் கொல்லப்பட்ட இந்திய சிப்பாய்களின் எண்ணிக்கை சுமார் முப்பதாயிரம்! ஆயுதந் தாங்கிப் போராடி மாண்ட சாதாரண மக்கள், ஆங்கிலேயர்களால் துப்பாக்கி முனையிலும், தூக்கு மேடையிலும் கொல்லப் பட்டவர்கள் ஆகிய எல்லோரையும் சேர்த்துப் பார்த்தால், விடுதலைப் புரட்சியில் மாண்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டதாகும்.

போரில் பிரதான பங்குகொண்ட மொழிவழி இனத்தவர் மராத்தியரும், பஞ்சாபியரும், ராஜபுத்திரர்களு மாவர். மக்களை மதவழிப் பிரித்து விடுதலைப் புரட்சிக்கு வெடிவைக்க வெள்ளையர்கள் ஆரம்பத்தில் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை. ஆனால், இறுதியில் விடுதலைப் போரிலிருந்து சீக்கியர்களைப் பிரித்து, ஏனைய இந்திய சகோதரர்களுக்கு எதிராக அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்ச்சியில் கிழக்கிந்தியக் கம்பெனியார் வெற்றி பெற்று விட்டனர். அதன் விளைவாக விடுதலைப்போர், இறுதி வெற்றிக்கு அடித்தளம் போட்டு விட்டு, தற்காலிகமாகத் தோல்வியடைந்தது.

வடக்கே நிகழ்ந்த இந்தப் புரட்சிக்கும் மூலப் புரட்சி ஒன்றுண்டு. வித்தின்றி எதுவும் விளைவதில்லை; காரணமின்றி எந்தக் காரியமும் நிகழ்வதில்லை.

அப்படியே, சிப்பாய்களை முதுகெலும்பாகக் கொண்டு வட இந்தியாவின் பெரும் பகுதியில் நிகழ்ந்த விடுதலைப் புரட்சிக்குத் தெற்கே நிகழ்ந்த பாளையக்காரர் போராட்டம் தான் ஒத்திகையாக இருந்தது. 1792 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வரி செலுத்த மறுத்து வந்தனர் வீரபாண்டியக் கட்ட பொம்மன் முன்னோர்!

அவர்களைப் பின்பற்றி வீரபாண்டியக் கட்டபொம்மனும் வெள்ளையர்களுக்கு வரி செலுத்த மறுத்து வீரப்போர் புரிந்து தூக்கிலிடப்பட்டு மாண்டான்.

அதற்குப் பத்து மாதங்களுக்குப் பிறகு கட்ட பொம்மன் தம்பி ஊமைத்துரையும், பாஞ்சாலங்குறிச்சி வீரர்களும் பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்து விடுதலைபெற்று, பல மாதங்கள்வரை வெள்ளையரை எதிர்த்துப் போர்புரிந்து வந்தனர். இறுதியில் போர் தோல்வி யுற்றதால் சில மாதங்கள் ஊமைத்துரை தலை மறைவாகத் திரிந்தான்.

மீண்டும் சிவகங்கை மருது சகோதரர்கள் ஊமைத்துரையுடன் சேர்ந்து கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போர்புரிந்து வந்தனர். அது, முன்னைய போராட்டங்களைவிடக் கடுமையாக இருந்தது. மிகப்பெரிய நிலப்பரப்பில் போர் நிகழ்ந்தது; அதுவும் தோல்வியுற்று ஊமைத்துரையும் மருது சகோதரர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

அது முடிந்து சில மாதங்களுக்குப் பிறகு, வேலூரிலே சிப்பாய்கள் ராணுவக் கட்டுப்பாட்டை மீறி, விடுதலை ஆர்வங் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். ஆரம்ப நிலையிலேயே அந்தப் புரட்சியை அழித்து விட்டனர் ஆங்கிலேயர். அத்துடன், தென்னாட்டில் ஆயுதப் போர் அடங்கி விட்டது.

ஆனால், தெற்கே அடங்கிய விடுதலைப் புயல் மேற்குக் கடற்கரையோரமாக வடக்கே சென்று 1857இல் தனது சுயரூபத்தைக் காட்டியது.

மாகாண மனமின்றி, ஆதிக்க வெறியின்றி இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்தால், இந்திய விடுதலைப் போரை இரண்டு விதமாகப் பிரிக்கத் தோன்றும்.

முதலாவது, காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்பு அங்குமிங்குமாக விட்டு விட்டு நடைபெற்ற ஆயுதப் புரட்சிகள்.

இரண்டாவது, காங்கிரஸ் மகாசபை தோன்றிய பிறகு அதன் தலைமையை ஏற்று இடைவிடாது இந்திய மக்கள் நடத்தி வந்த அகிம்சைக் கிளர்ச்சிகள்.

அந்தப் புரட்சிகளில்—கிளர்ச்சிகளில் மாண்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

★



# மானங்காத்த பாண்டியன்

வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவு நாள், ஆண்டுதோறும் அக்டோபர் 16இல் நாடெங்கும் கொண்டாடப் படுகின்றது. கட்டபொம்மன் வாழ்ந்த காலத்தில், அரசியல் கட்சிகளில்லை. அதனால், அவன் இன்று நிலவும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் சொந்தமானவன் அல்லன். ஆனால், யாருக்கெல்லாம் சுதந்திர உணர்ச்சி உண்டோ, அவர்களெல்லாம் கட்டபொம்மன்மீது சொந்தம் கொண்டாட உரிமை பெற்றிருக்கின்றனர்.

வீரரைக் கொண்டாடாத நாட்டிலே மேலும் மேலும் வீரர்கள் பிறக்கமாட்டார்கள் என்பது பாரதியின் வாக்கு. அதனால், தமிழகத்தில் மேலும் மேலும் வீரர்கள் தோன்ற வேண்டும் என்ற காரணத்திற்காகத் தான் வீர பாண்டியனுக்கு விழா எடுக்கிறோம். 18 ஆம் நூற்றாண்டு தமிழ் இனத்தின் வீரத்திற்கு—விடுதலை ஆர்வத்திற்கு அறைகூவல் விடுத்து விட்டது. ஆம்; அந்த நூற்றாண்டில்தான், பரங்கிக் கொள்ளைக் கூட்டம் படையெடுத்தது தமிழகத்தின்மீது! கண்ணாடியும் சீப்பும் காட்டி நமது கண்ணைப் பறிக்க முயன்றது. மண்ணாண்ட ஆற்காடு நவாபிற்குக் கடன்கொடுத்து, நம் அன்னையர் நாட்டை அடகுப் பொருளாகப் பெற்றது.

ஆங்கிலேயர் தமிழகத்தில் நுழைந்த காலத்தில், வேங்கடத்திற்குத் தெற்கேயுள்ள தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி இல்லை. அம் மூவேந்தரில் ஒரு

வேந்தர் பரம்பரையும் உயிரோடு இல்லை. நம் இன்பத் தமிழகத்தைக் கூறு போட்டுக் கொண்டு எவனெவனே ஆண்டான். தமிழகத்தின் ஒரு பகுதியில், நாயக்க மன்னர் ஆட்சி; பிறிதொரு பகுதியில், மராத்தியர் ஆட்சி; அத்தனைபேர் மீதும் ஆற்காடு நவாப் ஆதிக்கம்! அந்த ஆதிக்கத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்த வந்தது ஆங்கிலேய வணிகக் கூட்டம். அந்தக் கூட்டத்துக்கும் போட்டியாகப் புகுந்தன, டச்சு-பிரஞ்சு வணிகக் கூட்டங்கள்! இப்படி விஜயநகர-மராத்திய-மொகலாய - ஆங்கிலேய - டச்சு - பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கூட்டங்களின் வேட்டைக்காடாக விளங்கியது பதினெட்டாம் நூற்றுண்டிலிருந்த தமிழகம். வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சாலங் குறிச்சியின் மன்னனுக முடிசூட்டிக் கொண்ட காலத்தில், மொகலாய வல்லரசின் இறுதிச் சின்னமாக விளங்கிய ஆற்காட்டு நவாப், பாஞ்சாலங் குறிச்சிப் பாளையத்தின்பால் மேலாதிக்கம் பெற்றிருந்தான். பின்னர், அந்த மேலாதிக்கத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனிக்கு சொற்பப் பணத்திற்கு அடகுவைத்து விட்டான் ஆற்காட்டு நவாப். அந்த அடகுப்பொருளைத் தம்முடையதாகவே செய்து கொண்டது ஆங்கில வணிகக் கூட்டம்.

வீரபாண்டியன், தன் பாளையத்தின் மீது மேலாதிக்கம் பெற்றிருந்த ஆற்காட்டு நவாப்—அவன் மீது ஆதிக்கம் பெற்றிருந்த ஆங்கிலக் கம்பெனியார் ஆகிய இரு சாராருக்குமே கப்பம்கட்ட மறுத்தான். அதே காலத்தில், வடஇந்தியாவின் மீதும் அரசியல் ரீதியான ஆதிக்கம் பெற்றிருந்தது ஆங்கிலக் கம்பெனி! ஆம்; எதிர்ப்பாரின்றி வளர்ந்தது இங்கிலீஷ் ஏகாதிபத்தியம் வடக்கே! அங்கு ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டது 1857 இல் ஆகும். தெற்கே பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தில் ஆங்கிலேயருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது, ஆங்கிலேயப் பேரரசு அமைந்த

நாளிலேயே! ஆம்; 1782 ஆம் ஆண்டில், ஆற்காடு நவாபுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, ஏகாதிபத்திய விஷ விருட்சத்திற்கு வித்து விழுந்தது தமிழ் நிலத்தில்! அப்போதே கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் போர்முரசு கொட்டினுன் கட்ட பொம்மன்!

இஃது, இந்தியாவின் சரித்திரத்தில் மாவீரன் கட்ட பொம்மனுக்குள்ள தனிச் சிறப்பு! பாரதமே பணிந்து விட்ட காலத்தில் ஒருவன் பணிந்துபோக மறுத்தானென்றுல், அது தனிச் சிறப்புதானே!

நமது வீரபாண்டியக் கட்டபொம்மன் மற்ருெரு வகையிலும் தனிச் சிறப்புப் பெற்றவன்! அஃது எப்படி என்பதைக் கொஞ்சம் விரிவாக ஆராய்வோம்.

இந்தியப் பெருநிலம், தெற்கே இந்துமகா சமுத்திரம்; கிழக்கே வங்காள குடாக் கடல்; மேற்கே அரபிக் கடல்; வடக்கே இமயப் பெருமலை - ஆக நாற்புறத்திலும் சக்திவாய்ந்த இயற்கை அரண்களைப் பெற்றிருக்கிறது. ஆம்; முப்புறமும் விரிகடல், ஒரு புறம் வியன்பேர் இமயமலை. இன்று மட்டுமன்று; தொன்று தொட்டே!

கடற்படைகள் தோன்ருத காலத்தில், தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய முப்புறங்களிலிருந்தும் பாரதத்தின் மீது படையெடுப்பாரிலர். அதனுல் அந்த மூன்று புறங்களும் பாதுகாப்பாக இருந்தன. வடக்கே அத்தகைய பாதுகாப்பு இல்லை.

இமயமலை பெரியதாயினும் கணவாய்கள் பல உண்டு. அந்த "வாய்கள்" வழியாகப் பரதேசப்படைகள் வந்தவண்ணம் இருந்தன பாரதத்தின்மீது! அத்தகைய படையெடுப்பு ஏற்பட்டபோதெல்லாம், அதனை எதிர்த்துப் போராடினர் வடக்கே உள்ள மக்கள். அவர்கள் போராடிய காலம் ஓராண்டு,

ஈராண்டல்ல; பத்து நூற்றுண்டுகள்! ஆம்; ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம்! பரதேசிகளாக வந்த ஆக்ரமிப்புக்காரர்கள், இந்த நாட்டிலேயே தங்கி, சுதேசிகளாக மாறிவிட்ட பின்னரும், அவர்களை எதிர்த்துப் போராடினர் வடஇந்தியப் பூர்வ குடியினர். அந்தப் போரில், பிணங்கள் மலையெனக் குவிந்தன; செந்நீர் ஆறெனப் பெருகி ஓடியது. அவர்கள் அத்தகைய எதிர்ப்புகாட்டிப் படையெடுத்தவர்கள் தென் கோடிவரை நடைபோடாமல் தடுத்துத் தடுத்துப் போரிட்டில்லையானுல், தெற்கும் அழிந்திருக்கும். அவர் கள் போராட்டத்தால்தான் வேங்கடத்திற்குத் தெற்கே அமைதி நிலவியது. வடக்கே கொலை வளர்ந்த காலத் தில் நாம் இங்கு கலைவளர்த்தோம்; கவிதைகளையும் காப் பியங்களையும் கடவுளர் கோவில்களையும் படைத்தோம். அந்த வகையில் வடபுலத்தார் காட்டிய வீரத்தினை நாம் வாழ்த்தவேண்டும். அவர்கள் செய்த தியாகம் அவர்களே எதிர்பாராதவகையில் நமக்கு அமைதி யான வாழ்வைத் தந்தது. இது, வரலாறு கூறும் வாய்மை.

பிற்காலத்தில் கடற்படைகள் தோன்றிய பிறகு அந்நியர் படையெடுப்பு தெற்கில்தான் துவங்கியது. அந்தக் காலத்தில் ஹைதரும், திப்புசுல்தானும், ஆங்கிலேயரை எதிர்த்திருக்கலாம். அந்த எதிர்ப்புப் போர், பழைய ஏகாதிபத்தியம் புதிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது போலத்தான். மக்கள் வழிப்பட்ட சுதந்திர உணர்ச்சியைப் பிரதிபலித்து ஆங்கிலேய அரசை எதிர்த்து முதல் முழக்கம் செய்தவன் நமது கட்டபொம் மனே! அந்த வகையிலும் சரித்திரத்தில் தனிச் சிறப்பு பெற்றவன் கட்டபொம்மன்.

வெள்ளையர் ஆற்றலின் முன்னே, வீரபாண்டியன் வீழ்ந்துபடக் காரணம், வீர மின்மையன்று—

சகோதர பாளையக்காரர்கள் செய்த துரோகம்;

மறவர் வழிப்பட்ட பாளேயங்கள்-கம்பளத்தார் வழிப் பட்ட பாளேயங்கள் என்ற இரு பிரிவினரிடையே நிலேத் திருந்த பாரம்பர்ய வேற்றுமை;

குடிமக்களிடையே அரசியல் ஆர்வமின்மை;

இதற்கெல்லாம் மேலாக, ஆங்கிலேயரிடம் பீரங்கி கள், துப்பாக்கிகள் போன்ற நவீன கருவிகள் இருந்தமை;

தமிழகத்தார் முன் எப்போதும் கண்டறியாத வகை யில் மிகக் கட்டுப்பாடான முறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்த ஆங்கில ராணுவத்தின் அசுரத்தனம்;

இத்தியாதி காரணங்களால் பாஞ்சாலங் குறிச்சிப் பாளேயம் பரங்கியர் தாக்குதலால் வீழ்ச்சியுற்றது. அன்று, எட்டயபுரம் சமஸ்தானம் கட்டபொம்மனேப் பிடித்துக் கொடுக்கவில்லேயானுல், பாரதத்தின் சரித்திரம் வேறுதிக்கில் திரும்பியிருக்கும். அதனுற் ருன், ஆங்கில சரித்திர ஆசிரியர்கள் தென்னுட்டின் "ஜிப்ரால்டர்" என்று வருணிக்கிருர்கள் பாஞ்சாலங் குறிச்சியை!

கவிமணி தேசிக விநாயகனுர் பாடியதுபோல, கட்டபொம்மன் தமிழ் இனத்தின் மானங்காத்த பாண்டியன்! மானமுள்ள தமிழன், அவனே மறக்க முடியுமா? அவனுடைய வீரச் சரித்திரத்தை மாசு படுத்துவாருண்டேல், அவரை மன்னிக்க முடியுமா?

தமிழகத்தின் வரலாற்றில் வடவாரியரை வென்ற சேரன் செங்குட்டுவன், தமிழர் சாம்ராஜ்யம் கண்ட ராஜராஜசோழன் ஆகிய இருபெரும் தமிழ் வேந்தர் களே யடுத்து, மூன்ருவது சிறப்பிடத்தைக் கைப்பற்று கிருன் கட்டபொம்மன். இதனே மறுப்பாருண்டா? உண்டேல், அவரை மதிப்பாருண்டா?—இல்லே. பதினெட்டாம் நூற்ருண்டில் ஒரு கட்டபொம்மன்

தமிழகத்தின் வரலாற்றில் இடம் பெற்றில்லையானல், தமிழருடைய மானம் கப்பலேறியிருக்கும்!

வடக்கு வழியாகப் பகைவர் படையெடுத்தபோது, பல நூற்றுண்டுகள் நாங்கள் எதிர்த்துப் போரிட்டோம்; அதன்மூலம் தெற்கிலுள்ளவர்கள் அமைதியான வாழ்க்கை நடத்த வாய்ப்பளித்தோம். ஆனல், பரங்கியர் தெற்கின் வழியாகப் பாரதத்தில் புகுந்த போது அவர்களை எதிர்த்துப் போராட ஒரு தமிழன் முன்வரவில்லையே—என்று வடவர் கேலிபேசியிருக்க மாட்டார்களா?

ஆங்கிலேயர், கட்டபொம்மனிடம் கேட்டதெல்லாம், ஆண்டுக்கொருமுறை வரிப்பணந்தானே! அரசுரிமை யல்லவே! "ஆண்டாண்டுதோறும் வரிப் பணம் வேண்டாம். எங்கள் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக ஒருமுறை சொற்பப் பணம் கொடுத்தாலும் போதும்" என்று கூடக் கெஞ்சினர்களே! அதற்கு இணங்கியிருந்தால், பாஞ்சாலங் குறிச்சி அழிந்திருக்காதே! கப்பங்கட்ட இணங்கியதால்தானே புதுக்கோட்டை அரசு தப்பிப் பிழைத்தது. எட்டயபுரம் சமஸ்தானம் உயிர்ப்பிச்சை பெற்றது. அந்த மன்னர்களைப்போல், கட்டபொம்மனும் கப்பம் கட்டச் சம்மதித்திருந்தால், தமிழர் மானம் என்னவாகி இருக்கும்?

அந்த அவமானத்திலிருந்து தமிழகத்தை மீட்ட தனி வீரன்—தலைத்தமிழன், வீரபாண்டியக் கட்ட பொம்மன். அந்த மானங்காத்த பாண்டியன் பெயரை மறவாமல் மனத்தில் வைத்து என்றென்றும் வாழ்த்துவோமாக!

★



# வீரன் வேலுத்தம்பி

மொகலாயர்களும், ஆங்கிலேயர்களும் பாரதத்தைக் கட்டியாண்ட காலத்தில் தேசப்பற்றுள்ள—அஞ்சா நெஞ்சம் படைத்த பாரத வீரர்கள் அனுபவித்த துன்பங்கள் எவ்வளவு என்று கணக்கிடவும் கூடுமோ? அதுமட்டுமல்ல; சொந்த சமுதாயத்தில் உடன் பிறந்த சகோதரர்கள் ஐந்தாம் படைகளாக நின்று செய்த சதி வேலைகள் எத்துணை எத்துணையோ? இந்தியாவில் வியாபாரத்திற்கென்று வந்த வெள்ளையர்கள் கேரளத்தின் சிற்றரசர்களைத் தந்திரமாக வசப்படுத்தினார்கள். கேரளத்தில் உயிர்களையும் பொருள்களையும் நாசப்படுத்தி, அங்குள்ள மக்களிடத்தில் மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள். மனிதத் தன்மையற்ற கர்னல் மெக்காலே திருவிதாங்கூரின் ரெஸிடண்டாக வந்ததும் அந்நாட்டைச் சக்தியற்றதாக ஆக்க முயற்சித்தார். அன்று திருவிதாங்கூரில் அரசராயிருந்த ஸ்ரீ பாலராம வர்மா இச் சதிகாரர்களின் நயவஞ்சகத் தன்மையை அறியாதவராய் இருந்தார். அந்தக் காலத்தில் திருவிதாங்கூரில் நடைபெற்ற அட்டூழியங்களுக்கும் கலவரங்களுக்கும் மூலகாரணம் மெக்காலேயின் சதித்திட்டங்களே.

கி. பி. 1801 இல் ஸ்ரீ வேலுத்தம்பி "தளவாய்" பதவி ஏற்கும்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் நிலைமை படுமோசமாக இருந்தது. நாஞ்சில் நாட்டில் சாதாரணக் குடும்பத்தில் தோன்றிய வேலுத்தம்பி, நாட்டு மக்களின் மதிப்பிற்கும் அன்பிற்கும் பாத்திர

மானுர். அதனுற்ருன், திருவிதாங்கூர் மன்னர் அவருக்குத் தளவாய் பதவியை அளித்தார். அவர் சுதந்திரமான முறையிலும் தருமத்தின் அடிப்படையிலும் தளவாய் வேலையைச் செய்து வந்தார். நாடு பூராவும் யாத்திரைசெய்து அவ்வப்பொழுது மக்களுடைய க்ஷேம நலன்களை விசாரித்து உதவிவந்தார். வெள்ளையரின் சூழ்ச்சியால் நேர்ந்த கடன்களை எல்லாம் தீர்த்தார். நெறி தவறியவர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் அவர் எமனுகத் தென்பட்டார். நன்னெறியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களுக்குத் தருமவானுகத் திகழ்ந்தார். மக்களிடத்திலிருந்த கவலைகளையும் பேடித்தனத்தையும் நீக்கினுர். ராஜ்யத்தில் செழிப்பும் சமாதானமும் ஓங்கும்படி செய்தார்.

சாம்ராஜ்ய வெறிபூண்ட வெள்ளையர்களுக்குத் தளவாயின் வீரச் செயல்கள் பிடிக்கவில்லை. அதனுல் தளவாய்க்கும் மெக்காலேக்கும் தகராறுகள் ஏற்பட்டன. தளவாய் புத்திசாதுர்யமான முறையில் இந்தக் கலவரத்தை அடக்கினுர். கிழக்கிந்தியக் கம்பெனிக்கே இது ஓர் அபகீர்த்தியாகத் தென்பட்டது. இத்தருணத்தில் 8 லட்சம் ரூபாய் கப்பம் கட்டவேண்டும் என்று மெக்காலே தெரிவித்தார். நாடு மேலும் கடனுல் பாதிக்கப்பட்டது. அச்சமயத்தில் மக்கள் வறுமையால் வாடியதால் தளவாய் கப்பம்கட்ட மறுத்துவிட்டார். மெக்காலே இவ்விஷயத்தைச் சென்னை கவர்னருக்கும், கவர்னர் ஜெனரலுக்கும் அறிவித்தார். தங்கள் ஆட்சிக்கு இடையூறுகள் செய்த தளவாயைப் பதவியிலிருந்து விரட்ட வேண்டுமென்று மகாராஜாவினிடம் கவர்னரைக் கொண்டு உத்தரவு அனுப்பினுர்.

ஆனுல், தளவாயின் தேசபற்றை நன்கறிந்திருந்த மகாராஜா அதற்குப்பதில் ஒன்றும் கூறவில்லை. மெக்காலேயின் விருப்பப்படி வெள்ளையர் சேனை திருவிதாங்கூரின்மேல் படையெடுக்க வந்ததை

அறிந்த தளவாய் கொச்சியிலுள்ள ரெஸிடண்டின் அரண்மனையை ஆக்ரமித்தார். ஆனுல், ரெஸிடண்ட் அங்குள்ள கல்லறையில் மறைந்திருந்து உயிர்தப்பி ஓடினுர். தளவாய் படைக்கும் வெள்ளையர் படைக்கும் போர் மூண்டது.

இத்தருணத்தில் மகாராஷ்டிரர்கள், பிரெஞ்சு அதிகாரிகள், பாலியத்தச்சன் என்ற ஓர் சிற்றரசன் முதலியவர்கள் வேலுத்தம்பிக்கு உதவியாகப் போராடினுர்கள். எனினும், நாலு திக்குகளிலுமிருந்து வந்த ஆங்கிலச் சேனையின்முன் இந்தச் சிறு சேனை என்ன செய்யமுடியும்? வேலுத்தம்பி தனிமையில் போராடிக் கொண்டிருந்தார். பாலியத்தச்சன் என்ற சிற்றரசன் ஆங்கிலேயருக்கு அடிபணிந்தான். மற்றவர்கள் தோற்று ஓடிவிட்டார்கள்.

ஆனுல், வீரன் வேலுத்தம்பி சிறிதும் தளரவில்லை. 1808 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி அவர் நிகழ்த்திய "குண்டறைப் பிரகடனம்" என்ற வீர உரை மீண்டும் மக்களைப் போருக்கு வீறிட்டெழச் செய்தது. தளவாயின் தீவிர தேசபக்திக்கு இச் செயல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தளவாயின் வீரர்கள், உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாரானுர்கள். மீண்டும் தளவாய் வெள்ளையர்பேரில் போர் தொடுத்தார். வெள்ளையரின் படைபலம் கூடுதலாக இருந்ததால் தளவாயின் வீரர்களில் பலர் ஆண்மையோடு போரிட்டு வீரசுவர்க்கம் எய்தினுர்கள். வெள்ளையர் படைகள், வழியில் கண்ட கண்ட இடங்களில் கொள்ளையும் கொலையும் செய்துகொண்டே முன்னேறித் திருவனந்தபுரத்தைக் கைப்பற்றின. மன்னனும் அடிபணிந்து விட்டான். ஆனுல், வீரர் வேலுத்தம்பி வெள்ளையர்கள் கையில் சிக்காமல் மண்ணடி என்ற இடத்திலுள்ள பகவதி அம்மன் கோயிலில் அடைக்கலம் புகுந்தார்.

இதை அறிந்த வெள்ளையர் சேனை, தளவாயின் வீர சகாக்களையும் சகோதரனையும் கொடூரமான முறையில் கொலை செய்து விட்டு, தளவாயின் உயிரைப் போக்க எண்ணி பகவதியம்மன் கோயிலை முற்றுகையிட்டது. அதையறிந்த வேலுத்தம்பி, தன் கையாலேயே கட்டாரி கொண்டு தன்னை மாய்த்துக் கொண்டார். புன்முறுவலோடும் தாய்நாட்டிற்குக் கடமை ஆற்றி விட்ட நிம்மதியோடும் வெட்டுண்டு கிடந்த தளவாயின் உடலைக் கண்டனர் வெள்ளையர். வீர சிங்கத்தை ஒத்த தளவாய் உயிர் விடும்போது, 'எனது தாய் நாடு, எனது தாய் நாடு' என்று கூறிக் கொண்டே வீர சுவர்க்கம் அடைந்தார். வெறி பிடித்த வெள்ளையர்கள் அந்தச் சடலத்தையும் சும்மா விடாமல் கழுவிலேற்றிப் பேயாட்டம் ஆடினர்.





# ஐந்தெழுத்துக்கு அஞ்சலி செய்வோம்

ஆகஸ்டு முதல் நாள், லோகமான்ய பாலகங்காதர திலகர் இம் மண்ணுலகிலிருந்து மறைந்த நாளாகும். திலகர், தமிழரல்லர்; மராத்தியர். ஆனால், தமிழகத்தோடு அவருக்கிருந்த தொடர்புகள், நன்றியுள்ள தமிழர் மறக்க முடியாதவை.

லோகமான்ய திலகர், தமிழகத்தையும் அங்கமாகக் கொண்ட பாரதத்தின் விடுதலைக்குப் பாடுபட்டவர். அந்த வகையில் தமிழ் இனத்தவரின் தலைவராய்—தளபதியாய்—விளங்கினார் ஒரு காலத்தில்.

லோகமான்ய திலகர், வெறும் கிளர்ச்சிக்காரரல்லர்; பெரும் புரட்சிக்காரர். ஆம்; தமது "கேசரி" என்ற மராத்தி இதழில் எழுதிய ஒரு கட்டுரைக்காகக் கடுந் தண்டனை பெற்றவர். 'தண்டனை' என்றால், ஒரு மாதம்—ஆறு மாதம் அல்ல; ஒரு வருடம் இரண்டு வருடமும் அல்ல. ஆறு வருடத் தண்டனை! அதை அனுபவித்த இடம் இந்தியச் சிறையன்று – பர்மிய நாட்டிலுள்ள மாண்டலே சிறைச்சாலை!

பாலகங்காதர திலகர், கொலை - கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களைத் திட்டமிட்டுச் செய்யத் தூண்டிய பயங்கரவாதி யல்லர்; ஆனால், விடுதலைப் போராட்டத்தின் சூழ்நிலையில் வீறுகொண்ட காளையர் கூட்டம், இங்கும் அங்குமாக வெள்ளையர்களைப் பலி கொண்டால்—பழிக்குப் பழி கண்டால்—அது குறித்துப் பதறியவரல்லர். ஆம்; அகிம்சை அவருக்கு மதமன்று! அதனால், 'போர்' எனில் தோள் தட்டும் மறவர் கூட்டம்—விழித்த கண் வேல்கண் டிமைப்பின் அது

வீரத்துக்கு இழுக்கு என்றெண்ணும் தமிழர் கூட்டம்—திலகர் பெருமானைத் தளபதியாகக் கொண்டது.

பாரதம், மொழிவழியே பல மாநிலங்களைக் கொண்டிருப்பினும், தமிழகம்—மராத்தி — வங்காளம் ஆகிய மூன்று மாநிலங்களில் எல்லையற்ற செல்வாக்கு பெற்றிருந்தார் திலகர் பெருமான். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார், 'தென்னாட்டுத் திலகர்' என்று பட்டம் பெறுமளவுக்கு, திலகரின் வலதுகைச் சீடராக விளங்கினார். மற்று, கவியரசர் பாரதி, சுப்பிரமணிய சிவா முதலியோர் திலகரையே தேசத் தளபதியாய்—தெய்வமாய்—குருவாய் கருதிப் பின்பற்றினர்.

லோகமான்யர், மதிநலத்தோடு, மன வளமும் படைத்தவர்! அவருடைய இதயம், கருணையின் பிறப்பிடம்! அவர்தம் மதி, ஒளியின் உறைவிடம்! அவரது மார்பு, வீரத்தின் விளைநிலம்! அவருடைய நா, கலைமகளின் முரசு! இத்தனை நலமும் பெற்ற பெருந் தலைவர், இந்நாளைய அரசியலில் எவருமே இல்லை எனலாம். ஆம்; லோகமான்யர் கட்சித் தலைவரல்லர்; தேசத் தலைவர்.

தென்னகத்துப் புலவரெல்லாம் திருக்குறளுக்கு உரை காண்பதில் போட்டியிடுவது வழக்கமாகி விட்டது. அத்துறையில், அரசியல் தலைவர்களும் பங்கு கொள்ளும் வழக்கம்—வாய்ப்பு இப்போதுதான் ஏற்பட்டு வருகிறது.

அதுபோல, வடக்கில் தோன்றிய ஞானியரும் அரசியல் மேதையரும் பகவத் கீதைக்குப் புத்துரை காண்பதிலே போட்டியிடுவது வழக்கம். அதன்படியே பாரதப் போர்க்களத்தில் தோன்றிய கீதைக்கு மாண்டலே சிறைக்களத்திலே வாழ்ந்தபோது புத்துரை கண்டார் திலகர். அதற்கு—"கீதா ரகசியம்" எனப் பெயர் தந்தார்.

லோகமான்யர், அறிவிலே மேதாவிகளிலெல்லாம் சிறந்த மேதாவி. ஆனல், அடக்கத்திலே எளியவர். தேச பக்தர் சிதம்பரனர் திலகரின் இல்லத்தில் தங்கிய போதெல்லாம் அவருக்குத் தேவையான உதவிகளேப் பணியாட்கள் மூலமாகவன்றி, தானே முன்னின்று செய்து வ. உ. சி. யின் உள்ளத்தைக் கொள்ளே கொள்வாராம். இதனேக் கப்பலோட்டிய தமிழர் எத்துணே எத்துணேயோ கூட்டங்களில் எடுத்துச் சொன்னதுண்டு. லோகமான்யரிடம் வ. உ. சி.க்கு இருந்த பக்தியை வருணிக்குமிடத்து, "திலக மகரிஷி யின் கதைபாடும்போது சிதம்பரம் பிள்ளே வந்து சுதி போடும்" என்கிருர், நாமக்கல் கவிஞர்.

இந்நாளேய அரசியலில் 'ஒழுக்கம்' என்பது 'மூட நம்பிக்கை'யாகி விட்டது! அந்நாளேய நிலேமை வேறு. இன்றைக்கு ஒருவரைத் தலேவராக ஏற்றுப் போற்றிப் புகழ்வது; நாளேயே அவரைக் கைவிட்டு, அவரை வெறுக்கும் மற்ருெரு தலேவரை ஏற்றித் துதிப்பது— என்ற நிலே திலகர் கால அரசியலில் இல்லே. அன்று தலேவருக்கும் தொண்டர்களுக்குமிருந்த தொடர்பு, கற்புடைய மனேவிக்கும் கணவனுக்குமுள்ள தெய்வீக உறவு போன்றதாகும்.

1918 ஆம் ஆண்டில் பாரதத்தின் அரசியலில் மகத்தானதொரு மாறுதல் ஏற்பட்டது. திலகருடைய நம்பிக்கைக்கும் நடைமுறைத் திட்டங்களுக்கும் முரண் பட்டவராகக் காந்தியடிகள் காங்கிரசில் புகுந்தார். "உன் ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத் தையும் காட்டு" என்ற ஏசுவின் நெறியை அரசியலில் புகுத்த முனேந்தார் அடிகளார். "உன் இடது கன்னத் தில் அடித்தவனே, அவனது வலது கன்னத்தில் அடி" என்ற கொள்கையுடையவர் திலகர். அதனுல், பழந் தலேவரான திலகருக்கும் புதிய தலேவராகத் தோன்றிய காந்தியடிகளுக்கும் வெளிப்படையாகக் கருத்துப் போர் நிகழ்ந்தது. காலன் குறுக்கிட்டு அவர்களுடைய

போரை முடித்து, திலகரின் உயிரைக் குடித்து விட்டான். காந்தியடிகளுக்குத் திலகரிடம் எல்லையற்ற மதிப்பு இருந்தும், திலகரின் சீடர்கள் காந்தியடிகளின் தலைமையை ஏற்க மறுத்து விட்டார்கள். காரணம், புதிய தலைவரிடம் கொண்ட பகைமையன்று ; பழைய தலைவரிடம் கொண்டிருந்த பக்தி!

அடிக்கடிச் சட்டையை மாற்றிக் கொள்வதுபோல, அடிக்கடி கணவனை மாற்றிக் கொள்ள மாட்டாள் கற்புடைய பெண். அதுபோல, அரசியலில் கற்பு நெறியைக் கடைப் பிடிப்பவர்கள் அடிக்கடித் தலைவர்களை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். திலகர் பெருமானின் சீடர்களுடைய நிலையும் இதுதான்.

திலகர் மாண்ட அதே ஆண்டில், புதிய தலைமையை ஏற்க இயலாதவராய்க் காங்கிரசில் இருந்து விலகினார் சிதம்பரனார். ஆனால், வேறு அரசியல் கட்சியில் சேரவில்லை. ஒரே கட்சிக்குள் தலைவரை மாற்றிக் கொள்வதையே ஒழுக்கக் கேடாகக் கருதியவர், கட்சி மாற விரும்புவாரா? அதுவும், விடுதலைப் போருக்கு விரோதிகளாக இருந்த நீதிக் கட்சியில் சேர நினைப்பாரா?

கவியரசர் பாரதியார், காந்தியடிகளின் தலைமை நாட்டுக்கு நலம் பயக்குமென நம்பி "வாழ்க நீ, எம்மான்" என்று வாழ்த்தினார். ஆனால், அவர்கூடத் தம் இதயத்தை, திலகர் ஒருவருக்கே கோயிலாக்கினார்.

மராத்தி நாட்டில் கபர்தே என்ற மாவீரர் திலகரின் சீடர்களில் தலை சிறந்து விளங்கினார். அவரும் அவர் போன்ற எண்ணற்றோரும் அரசியலிலிருந்தே விலகினர்—கணவனைப் பிரிந்த இளம்பெண், சிற்றின்ப வாழ்வையே துறந்து விடுவதுபோல! பாரதத்து அரசியலிலே திலகர் பெருமானின் மறைவோடு ஒரு சகாப்தம்—திலகர் சகாப்தம் முடிந்தது. பின்னர், புது சகாப்தம் தோன்றியது. அதன் பெயர் காந்தி

சகாப்தம்! அதுவும் முடிந்தது 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதியுடன்!

கவிஞர் பெருமான் பாரதி, திலகர் பெருமானையும் அவரது ஒழுக்க வாழ்வையும் தியாகத் திருமேனியையும் தம் கவிதைத் திறத்தால் ஓவியம் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

"வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே!
வீழ்க கொடுங்கோன்மை வீழ்க! வீழ்கவே!!"

என்று உணர்ச்சி கொண்டு பாடுகிறார். ஆம்; திலகரின் திருநாமம், செங்கோலின் சின்னமாகப் படுகிறது பாரதிக்கு. அதனை வாழ்த்தும் வேகத்தில் கொடுங்கோன்மை நினைவுக்கு வந்து, 'வீழ்க' என்ற அமங்கலச் சொல்லால் ஆவேசம் கொண்டு கூவுகிறார்:

"துன்ப மென்னும் கடலைக் கடக்கும்
தோணி அவன் பெயர்
சோர்வு என்னும் பேயை ஓட்டும்
சூழ்ச்சி அவன் பெயர்
அன்பெனுந்தேன் ஊறித் ததும்பும்
புதுமலர் அவன் பெயர்
ஆண்மை என்னும் பொருளைக் காட்டும்
அறிகுறி அவன் பெயர்"

என்ற வரிகளில், திலகரைத் தெய்வமாகவே கருதி அவருடைய திருநாமத்தின் புகழ்பாடுகிறார் பாரதி.

சைவப் பெருமக்கள், "நமசிவாய" எனும் ஐந்தெழுத்து மந்திரம், வீடு பேறு தரும் அருள் படைத்த தென்பர். அதுபோல, "லோக மான்ய" என்ற ஐந்தெழுத்துப் பெயரும் விடுதலை வாழ்வுதரும் ஆற்றல் படைத்த தென்கிறார் மகாகவி பாரதி. இதனை,

"ஐந்தெழுத்தினைச் சைவர் மொழிதல் போல்
அன்பொடோதும் பெயருடை ஆரியன்"

என்ற வரிகளால் அறிகிறோம்.

உலகை ஒரு மங்கையாகவும், அவள் திருமுக மாகப் பாரதத்தையும், அந்தத் திருமுகத்தின் நெற்றி யாகத் தென்னகத்தையும், அந்த நெற்றியின் பொட் டாகத் தமிழ் நாட்டையும், அந்தப் பொட்டின் மண மாகத் தமிழையும் கற்பனை செய்து கவி பாடினார் 'மனோன்மணியம்' சுந்தரனார்.

பாரதியோ, பாரதத்தை ஒரு மங்கையாகக் கற்பனை செய்து, அவள் நெற்றியிலே மராத்தியர் பக்தியோடு வைத்த "திலக" மாக லோகமான்ய திலகரைக் காட்சிப் படுத்துகிறார்.

"வீரமிக்க மராட்டியர் ஆதர
மேவிப் பாரததேவி திருநுதல்
ஆரவைத்த திலகம் எனத் திகழ்
ஐயன் நல்லிசைப் பால கங்காதரன்"

என்பது பாரதியின் கவிச் சித்திரம்.

ஆத்திகரானோர், சிந்தை தூய்மை பெறுவதற்குத் தெய்வத்தின் பெயர் சொல்லி வந்திப்பது வழக்கம். ஆத்திகராக இருந்தும், விடுதலை வெறி பிடித்த காரணத் தால் அந்த விடுதலைக்கு வழிகாட்டும் தெய்வமாகத் திலகரை நினைத்தால்,

"சேரலர்க்கு நினைக்கவும் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
சீரடிக் கமலத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே"

என, இரு கண்களையும் மூடிச் சிரந்தாழ்த்திக் கரம் குவித்து, தன் சிந்தையைத் திலகருடைய கோயி லாக்கி வந்தனை செய்து வழிபடுகிறார் பாரதி. சுருக்க

மாகச் சொன்னுல், ராஜ வாழ்த்துப் பாடிக்கொண் டிருந்த பழைய காங்கிரசை, தேச வாழ்த்துப் பாட வைத்தவர் திலகர்.

பணம் படைத்த சீமான்களின் பாசறையாக இருந்த காங்கிரசை, பாட்டாளிகளின் தாய்ச் சபை யாகச் செய்தவர் திலகர்.

பட்டம் பதவிகளுக்கு மனுப்போடும் உத்தியோக விரும்பிகளின் கூடாரமாக இருந்த காங்கிரசை, தியாகிகளின் திருச்சபை யாக்கினுர் திலகர்.

அச்சம்—சுயநலம் — சாதி ஆணவம் — ஆங்கில மோகம் ஆகிய இழி குணங்களின் இருப்பிடமாக இருந்த காங்கிரசை, வீரம் — தியாகம்—சமத்துவம் — தாய் மொழிப் பற்று ஆகிய நற்குணங்கள் பயிராகும் பண்ணை யாக்கினுர் திலகர்.

அந்தப் பெருமானின்—பெருந் தலைவனின்—மாவீரத் தளபதியின்—மாமேதையின் தெய்வ மணங் கமழும் மனம் படைத்த தூயோனின் நினைவு நாளைக் கொண்டாடுவோமாக!

நன்றியுள்ள தமிழர்களான நாம் அந்தத் தியாகியின் ஆவிக்கு அஞ்சலி செலுத்துவோமாக!



# உலகம் போற்றும் உத்தமர்



அக்டோபர் 2-ஆம் நாள் மனித குலத்தின் மாணிக்கம் மகாத்மா காந்தி பிறந்த நாளாகும். அந்தப் புனிதர் பிறந்த புண்ணிய நாள், பாரதம் முழுதும் பக்தியோடு கொண்டாடப்படுகிறது. தமிழகமும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர் பிறந்த வினாடியில் உலகில் எத்துணையோ பேர்கள் பிறந்திருக்கக் கூடும். ஆனால், அவரெல்லாம் மகாத்மா ஆகிவிடவில்லை. ஆகிவிடவும் முடியாது.

வேங்கடத்துக்கு வடக்கே உள்ளவர்கள் அப்பெருமானை வெறும் மானிடராக—காபா காந்தி பெற்றெடுத்த கரம் சந்திர மோகனதாஸ் காந்தியாக—மதித்தபோது, அவரை "மகாத்மா"வாக எண்ணி வழிபட்ட பெருமை தமிழகத்துக்கே உரிமை.

ஆம்; "பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசந் தன்னை, வாழ்விக்க வந்த காந்தி" என்று கூறி, அடிகளாரின் ஆற்றலை அளந்து காட்டியதோடு, "மகாத்மா நீ வாழ்க, வாழ்க" என்றும் பாடினார் பாரதியார்.

காந்தியடிகள், தாம் பிறந்த நேரத்தின்—லக்கினத்தின் சிறப்பால் 'மகாத்மா' ஆனவரல்லர். அப்படி ஒரு நம்பிக்கை மனித சமுதாயத்திடையே நிலவி வருவதை நாம் மறுத்துக் கூறவில்லை. ஆயினும், மனிதன் முயன்றால், மகாத்மா ஆக முடியும் என்ற நம்பிக்கை நிலைபெற வேண்டும். லக்கின நம்பிக்கை சுய முயற்சிக்குத் துணை புரியாது.

காந்தியடிகள் அடிமை நாட்டில் பிறந்தார். அது காரணமாக, ஒரு மாபெரும் சமுதாயத்திற்கு விடுதலே தேடும் பொறுப்பை மேற்கொண்டார். கதிரவன் மறையாத ஒரு மாபெரும் வல்லரசைப் பாரதத்தி லிருந்து வெளியேற்றி வெற்றி கண்டார்.

காந்தியடிகள், வைதிகத் தாய்க்கு மகனுகப் பிறந்தார். அந்தத் தாயின் சொற்படி நடப்பதையே புனிதக் கடமை எனக் கொண்டார்.

தெய்வ நம்பிக்கையுடைய குடியில் தோன்றினுர். குடிப்பெருமைக்கேற்ப, தம் வாழ்நாள் முழுவதும் தெய்வத்திடம் சரணடைந்து கிடந்தார்.

காந்தியடிகள், பிறரை அடக்கி அவர்மீது ஆதிக்கம் செலுத்த ஆசைப்படவில்லே. அப்படியும் ஒரு நிலே இருப்பதை மகாத்மா அறிவார். அந்த நிலேயை எய்தவும் அவருக்கு வாய்ப்பு நேர்ந்தது. ஆம்; அவர் நினேத்திருந்தால், 1947 ஆகஸ்டு 15ந்தில், பாரதக் குடியரசின் தலேவராக வந்திருக்க முடியும். அதனே மனத்தாலும் நினேயாமல், தம் ஐம்புலன்களேயும் அடக்கி, அவற்றின்மீது ஆதிக்கம் செலுத்தி, தன்னேத்தான் ஆள விரும்பினுர். அதிலே அவர் மகத்தான வெற்றி கண்டார்.

திருமால் எடுத்த அவதாரங்கள் பத்தென்பர் இதிகாச வாதிகள். அத்துணே அவதாரங்களிலும் துட்டர்களேத் தண்டிக்க திருமால் வன்முறையையே கையாண்டார். அவதாரந்தோறும் திருமால் வெற்றி பெற்றிருப்பினும், அசுரர்களும் யுகந்தோறும் தோன்றிக் கொண்டே யிருந்தனர். ஆம்; அசுர குணத்தை வேரோடு அழித்தொழிக்க வன்முறைப் பயன்பட வில்லே. அதை அறிந்தே திருமால் என்னும் காக்குந் தெய்வம் மனிதவடிவில் மோகனதாஸ் காந்தியாகத்

தோன்றியது. அறவழியில், அன்பு நெறியில் அசுரத் தனத்தை ஒழிக்க அவதரித்தது. அந்தச் சக்திக்குத் தான் மோகனதாஸ் காந்தி என்று பெயர்.

இத்துணைச் சூழ்நிலைகளும் சேர்ந்தே மோகனதாஸ் காந்தியை மனித குலத்தின் 'மகாத்மா' ஆக்கின. இந்தச் சூழ்நிலை, காந்தி பிறந்த விநாடியில் உலகில் தோன்றிய வேறெவருக்கும் இருக்கவில்லை.

காந்தியடிகள் அடிமை நாட்டில் பிறந்து, சுதந்திர நாட்டில் மறைந்தார். ஆம்; அடிமை இருளில் பிறந்து, சுதந்திர ஒளியில் மறைந்தார்.

பலாத்காரத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சமுதாயத்தில் தோன்றி, அகிம்சையிலே பற்றுக் கொண்ட சமுதாயத்தை உருவாக்கி மறைந்தார்.

பல நூற்றாண்டுகளாக மதவெறி நர்த்தனமாடிய நாட்டில் தோன்றி, தம் உயிரைத் தியாகம் செய்ததன் மூலம் மதவெறியின் கொடுமையை மக்கள் உணரும் படி செய்துவிட்டு மறைந்தார்.

இப்படி, அண்ணல் காந்தி நிகழ்த்திய அற்புதங்கள் அளவில. காந்தியடிகளின் சாதனைகளைக் கவி பாட, அவற்றைத் தொகுத்துக் காப்பியமாக உருவாக்க, மற்றொரு கம்பன்தான் பிறக்க வேண்டும்.

காந்தியடிகளின் சாதனைகளிலெல்லாம் சிறந்தது, அவர் 'காந்தியம்' என்ற சமுதாயச் சித்தாந்த மொன்றைத் தந்ததாகும். காந்தியடிகளைக் கொன்ற கோட்சேயால்கூட காந்தியத்தைக் கொல்ல முடியவில்லை.

காந்தி அடிகள், தெய்வம் நமக்குத் தந்த பரிசு. "காந்தி" என்ற மருத்துவர் மறைந்துவிட்டார். ஆனால், அவர் தந்த 'காந்தியம்' என்ற மருந்து இருக்கிறது. சமுதாயத்தைப் பிடித்துள்ள அத்துணைப்

பிணிகளையும் அகற்றத் தக்க அருமருந்தாகும் காந்தியம்.

* * *

காந்தியடிகள் பிறந்த விழா வாரத்தைத் தேசிய ஒருமைப்பாடு வாரமாகக் கொண்டாடுகின்றனர் மக்கள்.

காந்தியப் பார்வையில், 'ஒருமைப்பாடு' என்பது பாரத தேசத்தைப் பற்றிய தனிச் சித்தாந்த மன்று. காந்தியம் உயிர்க்குல மனைத்துக்கும் பொது வான சித்தாந்தம். அதன் அம்சமான ஒருமைப் பாட்டுணர்வும்; உயிர்க்குலமனைத்திற்கும் பொதுவான தாகவே கருதப்பட வேண்டும். ஆகவே, காந்தி வாரம் உலக ஒருமைப்பாடு தோன்றும் வகையில் கொண் டாடப்பட வேண்டும்.

அதற்கு உதவி புரியும் வகையில்தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு வாரமாகக் காந்தி விழாவைக் கொண்டாடுகிறோம்.

சாதி வேற்றுமையும் வெறியும் அழிந்தால்,

மத வேற்றுமைகளும் வெறிகளும் தொலைந்தால்,

மொழிவழிப்பட்ட ஆதிக்கம் மறைந்தால்,

மாநிலத்திற்கு மாநிலம் நிலவிவரும் ஏற்றத்தாழ்வு அகன்றால்,

மனிதனை மனிதன் ஏய்த்துப் பிழைக்கும் இடர்ப் பாடு ஒழிந்தால்,

ஆங்கில மொழியின் ஆதிக்கம் அடியோடு விலகினால்,

சுரண்டுவோர்—சுரண்டப்படுவோர் என்ற அடிப் படையில் வளர்ந்துவிட்ட வர்க்க வேறுபாடு மாய்ந்தால்,

அந்தக் கணமே பாரதத்தில் தேசிய ஒருமைப்பாடு தோன்றி, பாரத மக்கள் எல்லாம் ஓரினமாக, ஒற்றைக்

குலமாக ஒன்றுபட்டு வாழும் நிலை பிறக்கும். 'ஒருமைப் பாடு' என்பது, தனிச் சரக்கன்று. பல சரக்குகளின் கூட்டுப் பண்டமே.

சகல சாதியினரும் சமமாகப் பாவிக்கப்பட்டு—சம நிலையில் வாழ வாய்ப்புக் கிடைத்தால்,

சகல மதத்தினரும்—'ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள், உலகம் இன்பக் கேணி' என்ற உணர்வு பெற்றால்,

பாரதத்திலுள்ள எல்லா மொழிகளும் சம உரிமை பெற்றால்,

மொழிவாரித் தேசிய இனம் ஒவ்வொன்றும் தத்தம் தாயகத்தில் பரிபூரண அரசுரிமை பெற்றால்,

மத்திய அரசானது சம அந்தஸ்துடைய மாநிலங்கள் தம் விருப்பத்தின்பேரில் தாமே விட்டுக் கொடுத்த அதிகாரங்களைக் கொண்ட சமஷ்டி அரசாக மாற்றப்பட்டால்,

மனிதனை மனிதன் சுரண்டாமல், இனத்தை இனம் ஏய்க்காமல், மதத்தை மதம் வெறுக்காமல், மாநிலத்தை மாநிலம் ஒடுக்காமல், சோஷலிச சித்தாந்த வழிச் சமதர்மம் ஓங்குமானால்,

அந்தக் கணத்தே நம் பாரதத் திருநாடு தேசிய ஒருமைப்பாடு காணும். ஆம்; சுண்ணும்பும் மஞ்சளும் கலந்தவிடத்தே செந்நிறம் தோன்றுகின்றது. அது போன்று சுதந்திரம், சமத்துவம், சமதர்மம், அறம், அன்பு, கருணை, கடமை—ஆகிய பண்புகள் கலந்ததே காந்திய வழிப்பட்ட தேசிய ஒருமைப்பாடு. இதனை, ஒருமைப்பாடு காணும் நோக்குடன் காந்தி விழாக் கொண்டாடும் நண்பர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

பிறவிக் குருடர்கள் யானையைக் கண்டதுபோல ஒருமைப்பாட்டினைக் காண விரும்புவது நகைப்புக்கிடமான விஷயமாகும். ஒருமைப்பாட்டினை எதிர்ப்பாட்டு முறையிலல்லாமல், உடன்பாட்டு முறையில் அணுகவேண்டும். அதன் வழிக் காணும் ஒருமைப்பாடுதான் நிலையானது; நெறியானது.

சோஷலிசத்தில் நம்பிக்கையற்று, 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்றபடி தற்போதைய முதலாளித்துவ சமுதாய நிலையே நீடிக்க வேண்டுமென விரும்புவது தேசிய ஒருமைப்பாட்டிற்கு விரோதமானதாகும். கேவலம் உத்தியோகங்களுக்காக ஒரு சாதி மீது தன் சாதி ஆதிக்கம் செலுத்துவதை விரும்புவது ஒருமைப்பாட்டிற்கு எதிரானதாகும். ஒரு சாதியின் ஆதிக்கத்தை அழிக்க வேண்டும் என்ற உணர்வுடன் சாதிப் பகைமையை நிரந்தரமாக்கி, அதன் வழிப் பதவி வேட்டை யாடுவதும் ஒருமைப்பாட்டிற்கு உதவி புரிவதாகாது.

அதுபோலவே, சாதிப் பாகுபாட்டின் அடிப்படையில் கல்விச் சலுகைகள் வழங்குவதோ, உத்தியோகங்களை வினியோகிப்பதோ, சட்டசபை, பாராளுமன்றம், மந்திரி சபைப்பதவிகளைப் பங்கிட்டுக் கொடுப்பதோ தேசிய ஒருமைப்பாட்டைக் கொல்வதாகும்.

கேவலம், தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்பதற்காக, வாக்காளர்களைச் சாதிவழிப் பகை முகாம்களாகப் பிரிப்பதும், அவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதும், பொய் வாக்குப் போடத் தூண்டுவதும், எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர் மீது பழி சுமத்திப் பொய்க் குற்றங்கள் சாட்டுவதும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு செய்பவைகளாகும்.

சுருங்கச் சொன்னால், தியாக உணர்வும், சேவா மனப் பான்மையும், சகோதர உணர்ச்சியும்,

உலகனைத்தும் ஒன்று என்ற சர்வதேச உணர்வும் மக்களிடையே வளர்க்கப்பட வேண்டும். அப்போது தான் தேசிய ஒருமைப்பாடு காண முடியும். அதுதான் காந்தியடிகளுடைய போதனையுமாகும்.

துரதிருஷ்டவசமாக, தேசிய ஒருமைப்பாடு காணத் துடிப்பவர்கள் வட்டாரத்திலேயே அதனை அடைவதற்கான வழிமுறைகளில் தெளிவிருப்பதாகத் தெரியவில்லை. ஒருமைப்பாட்டினை விரும்பும் கட்சிகள்—தலைவர்கள், முதலில் தாங்கள் ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும். ஒருமைப்பாட்டைக் குலைக்க விரும்புவோர் கேவலம் கட்சி வளர்ச்சிக்காகவே அந்தத் தீமையைச் செய்யத் துணிந்திருக்கின்றனர். ஒருமைப்பாட்டினை விரும்புவோரும் உள்ளூர தத்தம் கட்சி வளர்ச்சியையே பெரிதாகக் கருதினால், ' அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள் ' என்றுதான் சொல்லவேண்டும்.

காந்தியின் பெயரால், காந்தியத் தத்துவத்தின் பெயரால், தேசிய ஒருமைப்பாட்டிற்குப் பணி புரிய முன்வரும் ஒருவர், முதலில் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். தன்னை சாதி, சமய, கட்சி, தன்னல வெறிகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். அடுத்து, தான் சார்ந்துள்ள கட்சியையும் தூய்மைப்படுத்த முயலவேண்டும். அதன் பிறகே மக்களை அணுகி, அவர்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்க்க முயலவேண்டும். "இதெல்லாம் சாத்தியமா ?" என்று கேட்கலாம். ஏன் சாத்தியமாகாது? சாத்தியம் ஆகாதென்றால், பிரிவினைச் சக்திகளைப் புறங்கண்டு, தேசிய ஒருமைப்பாட்டினைக் காண்பதும் சாத்தியமில்லைதான்.

சோர்வை நீக்கி, சுயநலத்தை விடுத்து, கட்சி வளர்க்கும் உள்நோக்கை ஒழித்து நாட்டின் நலத்திற்

காகவே கட்சி எனக் கருதி, காந்தியடிகள் பிறந்த விழா வாரத்தில் தேசிய ஒருமைப்பாட்டுப் பணியில் ஈடுபடுவோமாக.

என்ன விலே கொடுத்தேனும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். ஒன்று பட்ட இந்தியாவை அழிக்கும் சக்தி இந்த உலகத்தில் இல்லே. அதுபோல, பல நாடுகளாக இந்தியா பிளவு படுமானுல், அவற்றைக் காக்கும் சக்தியும் உலகத்தில் இல்லே. இந்த உண்மையை வீடுதோறும் சென்று கதவிடித்துச் சொல்ல வேண்டும். தமிழர் ஒவ்வொரு வருடைய மனக்கதவையும் திறந்து அதற்குள்ளே இந்தச் செய்தியைச் சேர்க்க வேண்டும்.





# செக்கிழுத்த செம்மல்



“குற்றவாளியின் எலும்புக்கூடும் இராஜத்துரோகமானது. அவருடைய பேச்சைக் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்றெழும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்.”

“குற்றவாளி கப்பலோட்டியது வெள்ளையர்களை இந்நாட்டைவிட்டு ஓட்டுவதற்கே யாகும். ஆகவே, இரண்டு ஜன்ம தண்டனை விதிக்கிறேன். இரண்டையும் ஒன்றன்பின் ஒன்ருக அனுபவிக்க வேண்டுமென்றும் உத்தரவிடுகின்றேன்.”

இது, வ. உ. சி. மீது நடைபெற்ற ராஜத் துவேஷ வழக்கில் வெள்ளை நீதிபதி பின்ஹே என்பவர் அளித்த தீர்ப்பு. ஆம்; சிதம்பரனாரின் நாக்கும் நெஞ்சும் மட்டுமல்லாமல், அவரது எலும்புக்கூடு முழுவதுமே இராஜத் துரோகமானது என்ருர் ஆங்கில நீதிபதி. இது, சிதம்பரனாரின் தேசபக்திக்கு—அவருடைய நெஞ்சுரத்திற்குப் பகை இனத்தார் வழங்கிய பாராட்டுரை எனலாம்.

எலும்புக்கூடும் தேசத்துரோகமானது—எவ்வளவு பொருள் பொதிந்த பாராட்டு!

இப்படி, நீதிபதி பின்ஹே நெஞ்சங் குமுறி, நீதிக்குரிய வரம்பை மீறித் தண்டனை அளித்தார். அண்ணல் வ. உ. சி. யின் உடலுக்கு ஆண்டவன் அளித்தது ஒரு ஜன்மம். உயிர் போனபிறகு அது வேறு உடலைத் தேடிக் கொள்ளும். ஆனல், நீதிபதி பின்ஹே, செம்மல் சிதம்பரனுருக்கு இரண்டு ஜன்ம

தண்டனை கொடுத்தார். சட்டப்படி, நீதிமன்றத் தண்டனை முறைப்படி, 'ஒரு ஜன்மத்திற்கு இருபது ஆண்டுகள் சிறைவாசம்' என்பது கணக்கு. "இரண்டு ஜன்ம தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும்" என்று நீதிபதி சொல்லியிருந்தால் இருபது ஆண்டுகளில் சிதம்பரனார் சிறையிலிருந்து விடுதலை பெறமுடியும். ஆனால், தேசபக்தியையே அழித்துவிட முனைந்த ஆங்கில நீதிபதி, இரண்டு ஜன்ம தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நாற்பது ஆண்டுகள் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். இன்று நினைத்தாலும் நமது நெஞ்சம் திடுக்கிடுகின்றது. ஆம்; சிதம்பரனார் முப்பது வயது இளைஞர். வழக்கறிஞர் தொழில் புரிந்த அறிஞர்; தமிழ் இலக்கியங்களில் தெளிந்த ஞானமுடைய புலவர். சித்தாந்த, வேதாந்த சாத்திரங்களைக் கற்றறிந்த ஞானி; பல இலட்சக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகக் கொண்ட சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளர்; லோகமான்ய பாலகங்காதர திலகரின் ஆருயிர்த் தோழர்; செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவ்வளவு சிறப்புக்களுடைய சிதம்பரனாருக்குத் தான் இரண்டு ஜன்ம தண்டனை!

திருடும் கொலையும் புரிந்த கிரிமினல் குற்றவாளிகளோடு சிறைவாசம். இந்த அநீதிகளுக்கு அவரை உட்படுத்தியவன் அன்னியனான ஆங்கிலேயன்.

இவ்வளவு பெருந்தண்டனைபெற சிதம்பரனார் செய்த குற்றம் என்ன? இதோ பட்டியல்:

வங்கப் பிரிவினையை எதிர்த்தார்,

சுதேசிக்கப்பல் கம்பெனியைத் துவக்கினார்,

சுதேசிப் பண்டக சாலையை அமைத்தார்,

"வந்தே மாதரம்" என்று கோஷித்தார்—மக்களையும் கோஷிக்கும்படித் தூண்டினார்,

ராஜத் துவேஷியான சுப்பிரமணிய சிவா பேசிய கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்,

ஆர்வி மில் தொழிலாளர்களுக்கெனத் தனிச் சங்கம் அமைத்தார்,

ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களைத் தூண்டினார்,

இந்தியாவை இந்தியரே ஆளவேண்டும் என்று பேசினார்,

இத்துணைக் குற்றங்களுக்குமாகச் சேர்த்து அவருக்கு விதிக்கப்பட்டது இரண்டு ஜன்ம தண்டனை. இதற்கு மேல் தண்டனை விதிக்கச் சட்டத்தில் இடமில்லாததால், அத்துடன் ஆறுதலடைந்தார் ஆங்கில நீதிபதி.

சிதம்பரனார், மேலே தந்த பட்டியலின்படி 'குற்றங்கள்' புரிந்தது, அதற்காகக் கொடுந்தண்டனை பெற்றது 1908 ஆம் ஆண்டில்.

ஆம்; அன்று அவர் காங்கிரஸ்காரர். அதிலும் மிதவாதப் போக்குடைய காங்கிரஸ் வாதிகளை எதிர்க்கும் தீவிர காங்கிரஸ் வாதி.

1908 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில்—சிறப்பாக, தூத்துக்குடியில் வ. உ. சி. யின் வாக்குதான் சட்டம். தலைவர், குரு, தெய்வம் எல்லாம் அவராகவே விளங்கினார், தூத்துக்குடி மக்களின் கண்களுக்கு. அந்த நிலை கண்டு அஞ்சித்தான் ஆட்சி அவரைச் சிறையில் தள்ளியது.

அரசாங்க அதிகாரிகளின் கண்களுக்கு வ. உ. சி. ஒரு கலகக்காரர்.

ஆர்வி மில் முதலாளிகளின் பார்வைக்கு வ. உ. சி ஒரு புரட்சிக்காரர்.

ஆங்கில நீதிபதியின் அறிவுக்கு வ. உ. சி. ஒரு ராஜத்துவேஷி.

சிறைச்சாலை அதிகாரிகளின் திருவுள்ளத்திற்கு செக்கிழுப்பதற்குத் தகுதியுடைய கிரிமினல் கைதி!

ஆனால், தமிழ் மக்களின் கண்களுக்கோ, வ. உ. சி. கதி மோட்சமளிக்கும் தெய்வம்.

இது, 1908ஆம் ஆண்டில் ஒவ்வொரு தேசபக்தரும் வாழ்ந்த சூழ்நிலை.

சிதம்பரனார், சிறையில் செக்கு தள்ளினார்; கல்லுடைத்தார். அந்தக் கஷ்டங்களின் இடையில் கன்னித் தமிழிலே கவிதைகளும் எழுதினார். ஆம்; அன்றைய தமிழகத்தின் தலைவர்களுக்குத் தமிழிலே தக்க புலமையுண்டு.

சிதம்பரனார் சிறைப்பட்டதை யடுத்து கொம்பற்ற கொடிபோல் சுதேசிக் கப்பல் கம்பெனி வீழ்ச்சியுற்றது.

சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையைக் குறைக்க அவரது நண்பர்கள் அப்பீல் செய்தனர். ஐகோர்ட் ஆப்பீலில் நாற்பது வருடதண்டனை பன்னிரண்டு ஆண்டுகளாகக் குறைந்தது. மேலும், இங்கிலாந்து பிரிவி கவுன்சிலுக்குச் செய்த அப்பீலில் ஆறு ஆண்டுகளாகச் சுருங்கியது. சிறைச்சாலைச் சட்டப்படி கழிவு நாட்கள் போக, மொத்தம் நாலரை ஆண்டுகள் சிறையிலிருந்தார் சிதம்பரனார்.

பின் சிறையிலிருந்து வெளிப்பட்டார். ஆனால், வக்கீல் தொழில் செய்ய முடியாமல் சன்னத்தைப் பறித்தது சாம்ராஜ்யம். உற்றார், உறவினர், காங்கிரஸ்காரர்கள் உள்பட எல்லோரும் அவரைக் கைவிட்டனர். பார்த்தபோதும் பேசப் பயந்தனர். காரணம், அவர் ராஜத் துவேஷி!

பிரபுவாகப் பிறந்து, தேசபக்தி காரணமாக வறுமையில் மாண்டார் வ. உ. சி.

15 MAR 1969

# வீர விளக்கு  வ.வே.சு. ஐயர்

வரலாற்றை உருவாக்குகின்றனர் சிலர். அதனை உருப்போட்டுப் பிழைக்கின்றனர் பலர். வரலாற்றை உருவாக்குவோர் அந்தப் பணியில் தங்கள் வாழ்க்கை நலன்களையே அழித்துக் கொள்கின்றனர். வரலாற்றை உருப்போடுவோர் அதன் வாயிலாகத் தங்கள் வாழ்க்கை நலன்களை வளர்த்துக் கொள்கின்றனர். வ. வே. சு. ஐயர், நாட்டின் வரலாற்றை நல்லவிதமாக உருவாக்கிய பெரியார்களுள் ஒருவர். அவரைப் போன்றவர்கள் பல தலைமுறைகளுக்கு ஒரு முறையே தோன்றுகின்றனர். அந்தவகையில் தாம் வாழ்ந்த தலைமுறையில், தமிழகத்தின்—பாரதத்தின் வரலாற்றை உருவாக்கிய பெரியார் சிலருள் தலைசிறந்தவராக விளங்குகிறார் வ. வே. சு. ஐயர்.

1907ஆம் ஆண்டிலிருந்து காந்தியடிகள் இந்திய விடுதலைப்போரின் தலைமையை ஏற்கும் வரை, இந்தியாவின் விடுதலை வீரர்கள் இரண்டு முகாம்களாகப் பிரிந்திருந்தனர். ஒரு முகாமினர், பொதுமக்களைத் தூண்டி, அவர்களுடைய துணைகொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர் நடத்தினர். அந்த முகாமின் அகில இந்தியத் தலைவராக லோகமான்ய திலகர் விளங்கினார். தென் தமிழ்நாட்டுத் தலைவராக—திலகர் பெருமானின் சீடராக வ. உ. சி. விளங்கினார்.

மற்றொரு முகாமினர், ஒரு சில இளைஞர்களுக்குக் கொலைக் கருவிகளைப் பயன்படுத்தப் பயிற்சி அளித்து, கொல்லப்படுவதற்கும் துணிவு தந்து, அவர்களைக் கொண்டு பயங்கரப் புரட்சியை ஏற்படுத்தி, சாம்ராஜ்யத்திற்குச் சமாதி கட்ட முனைந்தனர். அந்த

முகாமின் அகில இந்தியத் தலைவராக வீர சவர்க்கார் விளங்கினார். அவரின் சீடராகத் தமிழ் நாட்டின் தளபதியாக வ. வே. சு. ஐயர் விளங்கினார்.

பயங்கரப் புரட்சியில் நம்பிக்கை கொண்ட விடுதலை வீரர்கள், தங்கள் பாசறையைப் பரங்கி சாம்ராஜ்யத்தின் தலைநகரான லண்டனில் அமைத்துக் கொண்டனர். இந்தியாவில் இருந்து கொண்டு புரட்சி நடத்தப் பயந்து அல்ல. அந்நாளில், இந்தியாவில் தேச பக்தி உடைய இந்தியர்களுக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ளவோ, சுடுவதற்குப் பயிற்சி பெறவோ அரசாங்கம் அனுமதி வழங்குவதில்லை. லண்டனில் அனுமதி கிடைத்தது.

ஆம்; சாம்ராஜ்யத்திற்கு அடிமைப்பட்டிருந்த இந்திய நாட்டில் அந்தச் சாம்ராஜ்யத்தின் விரோதிகளுக்கு வழங்கப்படாத உரிமைகள் சாம்ராஜ்யத் தலைநகரில் வழங்கப்பட்டன. காரணம், ஆங்கில நாட்டின் செங்கோன்மை — ஜனநாயகம் பாதுகாக்கப் படவேண்டும் என்ற உணர்ச்சிதான். பயங்கரப் புரட்சியாளர்கள் தங்கள் முகாமை லண்டனில் அமைத்துக் கொண்டதற்கான மற்றொரு காரணம், அங்கும் தங்கள் மீது அடக்குமுறைக் கணை ஏவப்பட்டால், அண்டையிலுள்ள பிரெஞ்சு நாட்டில் அடைக்கலம் புகுவதற்கு வாய்ப்பு இருந்ததாகும்.

லண்டனில், வீர சவர்க்காரின் சீடனாக இருந்த மதன்லால் திங்கரா என்ற இளைஞன், சர். ஜான் வில்லி என்ற ஆங்கிலேயனைச் சுட்டுக் கொன்றான். தமிழகத்தில் வ. வே. சு. ஐயரின் சீடராக இருந்த வாஞ்சுநாதன், திருநெல்வேலிக் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றான். வாஞ்சுநாதன் ஆஷ் துரையைக் கொல்வதற்கான ஒரே காரணம், அந்த ஆங்கிலேயன் வ. உ. சிதம்பரனார் இரண்டு ஜென்ம தண்டனை பெறவும், சிறையில் செக்கு இழுக்கவும் காரணமாக இருந்தான்

என்பதுதான். அந்நாளைய தேச பக்தர்களின் தூய உள்ளத்திற்கு—அஞ்சா நெஞ்சினுக்கு—தன்னலமற்ற உணர்வினுக்கு வாஞ்சுநாதன் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவான். சங்க காலத் தமிழர் பெற்றிருந்த வீரமும் நாட்டுப்பற்றும் முற்றிலும் செத்து விடவில்லை என்பதனைச் செயலில் காட்டிய பெருமை வ. வே. சு. ஐயர், வாஞ்சுநாதன் போன்ற வீரர்களுக்கே உரியதாகும்.

வீர சவர்க்கார், வ. வே. சு. ஐயர் ஆகிய பெரு மக்கள் துவங்கிய பயங்கரப் புரட்சி, காந்தியடிகள் அரசியலில் புகுந்த பிறகு தானுகவே பிசுபிசுத்துச் சரித்திரத்தில் சில ஏடுகளைப் பெற்றதோடு முடிந்து விட்டது. ஆனுல், வ. வே. சு. ஐயர், பயங்கரப் புரட்சி முற்றுப் பெற்ற பிறகு, காந்தியடிகள் தலைமையில் துவங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ஐக்கியப் பட்டு விட்டார். காரணம், தோல்வி உணர்ச்சி யன்று. கால மாறுதல்தான். காந்தியடிகள் தோன்றுவதற்கு முன்பு அரசியலோடு அகிம்சை பிணைந்திருக்கவில்லை.

அரசியலில் ஈடுபட்டவர்கட்கு ஆதர்ச சக்திகள் பிரெஞ்சுக் குடியரசுப் புரட்சியும் அமெரிக்க விடுதலைப் போராட்டமுமாக இருந்தன. அந்த இரு நாடுகளின் மக்கள் கடைப்பிடித்த பலாத்கார நடைமுறைகளி லேயே நாட்டமும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர் நம் நாட்டு விடுதலை வீரர்கள். இந்தியாவின் வரலாற் றில்—அரசியல் வாழ்வில் ஒரு புதுமை நிகழ்த்திய பெருமை காந்தியடிகளுக்கே உரியது. அவருடைய சத்தியத்தில் நம்பிக்கை கொண்ட—அகிம்சையில் அழுத்தமான பற்றுடைய ஒத்துழையாமை இயக்கம் வ. வே. சு. ஐயர் போன்ற வீரர்களின் மனத்தைக் கவர்ந்தது. நாமக்கல் கவிஞர் பிற்காலத்தில் பாடியது போல "வீரம் என்பது கொலையல்ல; வெற்றியும் அதனுல் நிலையல்ல" என்பதை உணர்ந்தார் வ. வே. சு. ஐயர்.

வீர சவர்க்கார் தோற்றுவித்த பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்த பயங்கரப் புரட்சி, காந்தியடிகள் தோற்றுவித்த அகிம்சையில் பற்றுடைய அறப்போர் ஆகிய இரண்டினோடும் தொடர்பு கொண்டு அனுபவம் பெற்றார் ஐயர். எப்படியோ பாரதம் பரங்கியரை வெளியேற்றி விடுதலை பெற்றது. வீரச் செயல்களால் பெற்ற விடுதலையை வீரர்களால்தான் காப்பாற்ற முடியும். கோழைகளுக்கு அந்தச் சக்தி இல்லை. மேலும் மேலும் வீரர்களைத் தோற்றுவிக்கத்தான் வ. வே. சு. ஐயர், கப்பலோட்டிய தமிழர் போன்ற வீரர்களின் நினைவு நாட்களைக் கொண்டாடுகிறோம்.

"தேச பக்தி" என்பது, ஒரு புதிய மதமாகக் கருதப்படல் வேண்டும். ஆழ்வார்கள்—நாயன்மார்களைப்போல, தேச பக்தர்களை—தியாகிகளை நமது வணக்கத்துக்குரிய பெரியார்களாகக் கருதி அவர்களை மறவாது அஞ்சலி செலுத்த வேண்டும். இது என் கொள்கை. அப்போதுதான் குறுகிய சாதி உணர்ச்சிகளை, தன்னலப் பற்றுக்களை விட்டொழித்து வீரப் பண்பை—தியாக உணர்வை நம் மனங்களிலே வளர்த்துக் கொள்ள முடியும். தேச பக்தியோடு நில்லாமல் உலகத்தோடு உறவு கொள்ளவும் நாம் பயிற்சி பெறல் வேண்டும். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பதே சங்க காலந் தொட்டுத் தமிழன் குறிக்கோளாக இருந்து வருகின்றது.

தேச பக்தர்களிலே — இந்தியாவில் தோன்றி, இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட அத்தனை பேர்களிடமும் நமக்கு மதிப்பும் மரியாதையும் இருக்க வேண்டும். ஆனால், தமிழ் நாட்டில் தோன்றிய தேச பக்தர்களை—தியாகிகளை நாம் தனிப்பட்ட அன்போடும் மரியாதையோடும் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இது குறுகிய உணர்ச்சியன்று; வீட்டிடம் விசுவாசம் காட்டாதவன், வீதியிலுள்ளோரிடம் அன்பு செலுத்துவதாகவோ, அதற்கு மேல் தான் வாழும் சிற்றூரில்

பற்று கொண்டிருப்பதாகவோ, நாடு முழுவதையும் நேசிப்பதாகவோ சொன்னால், அதனை நான் நம்ப மாட்டேன். அதுபோல, தமிழகத்தின்பால் வைத்துள்ள பற்றுதலை அடிப்படையாகக் கொண்டுதான் பாரதத்தின்பால் கொள்ள வேண்டிய பக்தி உருவாக முடியும்.

வ. வே. சு. ஐயர், தம்மைப் பெற்றெடுத்த தமிழ் நாட்டிடம்—தாம் பேசுகின்ற தமிழ் மொழியிடம், தாம் அன்றாடம் பழகுகின்ற தமிழ் மக்களிடம் தனிப்பட்ட முறையில் அன்பு செலுத்தினார். அதே நேரத்தில், பாரத நாட்டிடமும் குறைவற்ற பக்தி கொண்டிருந்தார். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் முரண்பட்ட சக்திகளல்ல. இந்த உண்மையை வ. வே. சு. ஐயரின் வரலாறே நமக்கு உணர்த்தி வைக்கும். மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலும் நிலை பெறுவதற்கு வ. வே. சு. ஐயரின் வரலாறு நமக்கு வழிகாட்டுமாக!



# தொழுநோயிலும் தொண்டு செய்த சிவா

கடந்த இருநூறு ஆண்டுகளில், மூன்று மாவீரர்கள் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் முதன்மை பெறுகிறுர்கள். ஆம்; மொகலாய—ஆங்கிலேய சாம்ராஜ்யங்களே எதிர்த்த மாவீரர்களின் பட்டியலிலேதான். அம்மூவரில், தேசிங்கு ராஜன் மொகலாயப் பேரரசை எதிர்த்தான். மற்றிருவரான வீரபாண்டியக் கட்டபொம்மனும், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனரும் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்புரிந்தனர். இவ்விருவரில் முன்னவன் அரசனுக இருந்தாஞதலால் ஆயுத மேந்திப் போர் புரிந்தான். பின்னவர், அடிமைக் குடிமக்களில் ஒருவராக இருந்தாராதலால், அறவழியில் போர் புரிந்தார்.

தேசிங்கு ராஜனேப் போற்றுவோர், அவனுக்குத் துணையாக இருந்த மகமத்கானேப் புகழாமல் இருக்க முடியாது.

வீரபாண்டியக் கட்டபொம்மனேப் புகழ்வோர், அவனுடைய அருமைத் தம்பி—'வாய் பேசாத இடத்தில் வாள் பேசும்' என்ற உண்மையைப் பரங்கியருக்கு உணர்த்திய—ஊமைத்துரையைப் புகழாமல் இருக்க முடியாது.

அதேபோல், கப்பலோட்டிய சிதம்பரனரை - அவர் ஆற்றிய அருஞ் செயலேப் போற்றிப் புகழ்வோர், அம் மாவீரருக்கு வலக் கரமாக இருந்த தியாகி சுப்பிரமண்ய சிவாவை மறக்க முடியாது.

சிதம்பரனுர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் குறி பார்த்த "துப்பாக்கி" என்ருல், அதனுள்ளே "தோட்டா"வாக இருந்து செயல்பட்டார், சிவனுர். சிதம்பரனுர் தூத்துக்குடியில் புரட்சி நடத்திய காலத்தில் அரசியலிலே சாதி வெறி ஆதிக்கம் கொள்ள வில்லே. அந்தணர்—அந்தணரல்லாதார் என்ற போராட்டம் பிறக்கவில்லே. அதனுல், அந்தணரான சுப்பிரமணிய சிவமும், வேளாளரான சிதம்பரனுரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளேகளாக—இரட்டையராக வாழ்ந்தனர்.

ஆம்; அவர்களிருவரும் ஒரே சாதி—தேசபக்த சாதி!

ஒரு தாய்வயிற்றுப் பிள்ளேகள்; அந்தத் தாய், பாரதத் தாய்!

சிதம்பரனுர்—சிவனுர்மட்டுமல்ல; பாரதம் முழுவதும் பரவிக்கிடந்த தேசபக்தர் அனேவரும் இந்தப் பண்பிலே தோய்ந்து கிடந்தனர், விடுதலேப் போர் நடந்த காலத்திலே.

சுப்பிரமணிய சிவா, மெட்ரிகுலேஷன் படித்துத் தேறியவர். அதோடு படிப்பை முடித்து, பாரதத்தின் விடுதலேப் போரில் பங்கு கொண்டார்.

சுப்பிரமணிய சிவா, அந்தணர் குலத்தின் வழக்கத்திற்கு மாருக, அரும்பு மீசையை அழகாக வளர்த்தார். அதனுல், 'அக்ரஹாரம்' அவரை வெறுத்தது.

சிவம், அரசியலில் ஆங்கில ஆட்சிக்கு எதிரியாக இருந்தார். அது காரணமாக, திருவனந்தபுரம் ஆட்சி, அவரைச் சமஸ்தானத்திலிருந்தே வெளியேற்றியது!

ஆம்; சிவம் வத்தலகுண்டில் பிறந்தாலும், அவர் வளர்ந்ததும் வாழ்ந்ததும் திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் தான்!

அந்தணரான சிவம், இளமையிலே குஸ்தி, சிலம்பம் போன்ற க்ஷத்திரியர்க்குரிய வீரக்கலேகளேப்

பயின்றார். ஆரோக்கிய பலத்தோடு ஆன்ம பலமும் பெற சுவாமி சுதானந்தர் என்பவரை அணுகி, யோக சாதனங்களைப் பயின்று ஞானமார்க்கத்தைச் சார்ந்தார்.

இத்தனையும் இருபதாம் வயதிலேயே!

திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப் பட்டவுடன், கோவை - இராமநாதபுரம் - மதுரை மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து ஆங்கில ஆட்சிக்கு எதிராகச் சுதந்திரச் சங்கநாதம் எழுப்பினார். அந்த நாளில், பாரதம் முழுவதிலும் சுதேசி இயக்கம், பரதேசப் பொருள் பகிஷ்காரம் நடைபெற்றன.

சுதேசிப் பொருள்களை ஆதரிப்பதும், விதேசப் பொருள்களைப் பகிஷ்கரிப்பதும் தேசபக்தியின் சின்னங்களாக விளங்கின. வடக்கே வங்காளத்தில் 'பாரிஸால்' என்ற பகுதியும், தெற்கே பாண்டி நாட்டில் 'தூத்துக்குடி'ப் பகுதியும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களின் கோட்டைகளாக விளங்கின. வடக்கே திலகரும் தெற்கே சிதம்பரனாரும் தளபதிகளாகத் திகழ்ந்தனர். இருவரும் குருவும் சீடருமாவர்.

இங்ஙிலையில், சுப்பிரமணிய சிவம், 3-2-1908 இல் தூத்துக்குடியை அடைந்து, சிதம்பரனாரின் சீடரானார்.

சிவா தூத்துக்குடியை அடையு முன்னரே-1906 அக்டோபரிலேயே - சுதேசிக் கப்பல் கம்பெனியைத் துவக்கி விட்டார் சிதம்பரனார். அக் கம்பெனியின் சார்பாக 'காலியா', 'லாவோ' என்ற இரு வர்த்தகக் கப்பல்கள் தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் போக்கு வரத்துச் செய்தன! 'கறுப்பர்கள்' கப்பலோட்டுவது கண்டு 'வெளுப்பர்கள்' வியந்தனர். அடிமைப்பட்ட தமிழன், ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் ஓட்டுவதா? என்று அங்கலாய்த்தனர். இதன் விளைவாக பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கும் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கும் வங்காளக் குடாக் கடலில் "போர்" மூண்டது! தூத்துக்குடிப் பொது

மக்கள் சுதேசி கம்பெனிக்குத் துணைபுரிந்தனர். ஆங்கில அதிகார வர்க்கம், பிரிட்டிஷ் கம்பெனிக்குத் துணையாக இருந்தது.

இப்படிப் போர் மூண்ட நேரத்தில், பஞ்சுப் பொதீயில் தீப்புகுந்ததுபோல் சுப்பிரமணிய சிவம் தூத்துக்குடியில் பிரவேசித்தார்.

வந்த நாள் தொட்டு ஐந்துவார காலம் தொடர்ந்து தூத்துக்குடியில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் சிவம். 3-2-1908 முதல் 11-3-1908 வரை, சிவம் சிம்மகர்ஜனை புரிந்தார்.

தூத்துக்குடி கடற்கரையில் மட்டுமின்றி, வீதி தோறும் கூட்டங்கள்! கருப்புச்சாமி கோயில், மாகாளியம்மன் கோயில் போன்ற இந்துக் கோயில்கள் தோறும் கூட்டங்கள்! வண்டிப் பேட்டை, தர்மசங்கம் போன்ற பொதுநிலையங்கள் தோறும் கூட்டங்கள்!

பல கூட்டங்களில் வ. உ. சி. யும் கலந்துகொண்டு பேசுவார். எல்லாக் கூட்டங்களிலும் சிவம் சங்கநாதம் புரிவார்.

அவ்வளவுதான்!

தூத்துக்குடியில் வெள்ளை முதலாளிகள் நடத்தி வந்த கோரல் மில்லில் வேலை நிறுத்தம் நிகழ்ந்தது, 22-2-1908 இல்.

சிவா, சிதம்பரனரின் விருந்தாளி. கப்பலோட்டிய தமிழரின் இல்லம், தேசபக்தர்கள் உண்டு, உறங்கி உலாவுகின்ற சத்திரம் அந்நாளில்!

வேலை நிறுத்தம் தொழிலாளருக்கும் அவர்தம் தலைவர்களான சிதம்பரனர்—சிவா ஆகியோருக்கும் வெற்றியாக முடிந்தது. இருந்தாலும், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியில் பிடித்த ஏகாதிபத்திய எதிர்ப்புத் தீயானது, ஆங்கிலேய முதலாளிகளின் ஆலையில்

பற்றி, பின் அதிகாரக் கோட்டையையும் தீண்டிக் கொழுந்து விட்டெரிந்தது!

இந்நிலையில், 9-3-1908 இல் வங்க நாவலரான விபின சந்திரபாலர் சிறையிலிருந்து விடுதலையான விழா, தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் நடைபெற்றது. அந்தக் கொண்டாட்டக் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடாதென்று 'தேசபக்த' 'இரட்டை'யருக்குத் தடை விதித்தார் கலெக்டர் விஞ்ச்.

தடையைத் தகர்த்தெறிந்து, திருநெல்வேலிக் கூட்டத்தில் பேசினர் 'இரட்டையர்'. அந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகக் கொண்டு, 12—3—1908 இல் சிதம்பரனாரோடு சேர்த்து சிவாவையும் சிறைபிடித்தது ஆங்கிலப் பேரரசு. மறுநாள் திருநெல்வேலி முழுதும் கடையடைப்பு நடந்தது. எங்கும் நாசவேலையும், அராஜகமும் நர்த்தனமாடின.

சிதம்பரனாரும் சிவாவும் தென் பாண்டிப் பகுதியில் புரட்சி நடத்திய காலத்தில், எஞ்சிய தமிழகம் முழுவதும் உறக்கத்தில் கிடந்தது. ஆம்; கட்டபொம்மன் வாழ்ந்த தென் பாண்டிப்பதி, தனித்து நின்றே பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்துப் போராடியது.

திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. பின்ஹே முன், "இரட்டையர்" வழக்கு விசாரணைக்கு வந்தது.

"தீர்ப்பு" என்ற பெயரால், ஏகாதிபத்தியப் பாதுகாப்புப் புராணத்தில் 'பழிவாங்கும் படலத்'தைப் படித்தார் நீதிபதி பின்ஹே!

'ராஜத் துரோகி' சிவனாருக்கு இடந்தந்த 'பாவ'த்துக்காகச் சிதம்பரனாருக்கு ஒரு ஜன்ம தண்டனை!

இது ஒன்றே பேசும், சிவனாரின் வீர வரலாற்றை!

சிவனூர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் பொன்னேடுகளிற் பதிக்கத் தக்கதாகும். அதிலே, குறள் மணம் கமழ்ந்தது.

'சிவா, சிதம்பரம் பிள்ளையின் கையில் அகப்பட்ட கோல்' என்றூர் நீதிபதி பின்ஹே.

சிவனூர் தமது வாக்குமூலத்தில் கூறிய சமாதானத்தை நீதிபதி பின்ஹே ஏற்கவில்லை. எப்படி ஏற்பார்? "நான் ஏகாதிபத்தியத்தின் எதிரிதான்" என்று சிவனூர் பறையறைந்து விட்டாரே!

சிவாவுக்கு நீதிபதி பின்ஹே 10 வருடக் கடுங் காவல் தண்டனை தந்து, அதனை அந்தமான் தீவிலே அனுபவிக்க வேண்டுமென்றூர். கலங்கவில்லை காஷாய சந்நியாசி!

தான் தண்டிக்கப்பட்டதை மறந்து தன் குருநாத ருக்கு 40 ஆண்டுகள் தண்டனை அளிக்கப்பெற்றதற் காக விம்மினூர்; வேதனைப்பட்டார்.

தண்டனைபெற்ற கைதியாகக் கோர்ட்டிலிருந்து வெளிவரும்போது, "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டது என்பதையே காட்டு கின்றது, சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை" என்று கூறினூராம்.

உயர்நீதிமன்றத்திற்குச் செய்து கொள்ளப்பட்ட அப்பீலில் சுப்பிரமணிய சிவாவின் தண்டனை ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பெற்றது.

இளமைக்குரிய எழிலோடு சிறை புகுந்த அவரது உடல், தொழுநோய் பிடித்த கோலத்தில், வெளியே வந்தது. சிறையில் கம்பளிமயிர் வெட்டும் தொழில் கொடுத்தார்கள் அதிகாரிகள். அந்தத் தொழில் சிவனூ ருக்குத் தந்த பரிசு, இல்லை—சிவனூரின் அகத்தே சுடர்

விட்டெரிந்த தேசபக்திக் கனல்தான், புறத்தே தொழு நோயாகக் காட்சி யளித்தது !

சிறை வாழ்க்கையைப் பொன்னேபோல் பயன் படுத்தினர் அப்புண்ணியர் ! வேதாந்த நூற்களைப் படித்து ஜீரணித்து, தமிழில் நூற்கள் இயற்றினர். அவற்றில் தலையாயது 'சச்சிதானந்த சிவம்' என்ற நூல்.

சிவா, தாய்மொழியாகிய தமிழிலே மட்டுமன்றி, சமஸ்கிருதம்—ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றவர். தமிழ்மொழியில் கவிதைபுனையும் ஆற்றல் பெற்றிருந்தார். உரைநடையும் செய்யுளு மாக சுமார் முப்பது நூற்கள் எழுதினர்.

தேசிங்கு, சிவாஜி முதலிய வீரர்களின் நாடகங் களைத் தமிழிலே எழுதி நடிக்கச் செய்துள்ளார்.

1911 இல் சிறை மீண்ட பிறகும் திரும்பத் திரும்ப ராஜத் துவேஷச் சொற்பொழிவுகளுக்காக வழக்குகள் தொடுத்து, அத்தொழு நோயாளருக்குத் தொல்லை கொடுத்து வந்தது அரசாங்கம். இந்த அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாகி வந்த காலகட்டத்திலேயே, தமது மனைவியைத் தலைமை நிர்வாகியாகக்கொண்டு, 'ஞானபாநு', 'பிரபஞ்சமித்திரன்', 'இந்திய தேசாந்திரி' என்ற பத்திரிகைகளைத் தமிழில் நடத்தலானர். அரசியல் விடுதலை வேறு—ஆன்ம விடுதலை வேறு என்று கருதாமல், இரு துறைகளிலும் ஏக காலத்தில் பணிபுரிந்து வந்தார் சிவம்.

பாரதியாரின் பாடல்களைப் பாடுவதிலே, அவற்றை நாடெங்கும் பரப்புவதிலே அவருக்குத் தனி மகிழ்ச்சி. தமிழின்பால் தணியாக் காதல் கொண்டவரல்லவா ?

திருவல்லிக்கேணி கடற்கரைக்குத் 'திலகர் கட்டம்' என்ற பெயர் வைத்த பெருமை சிவாவுக்கே உரிமை !

ஆங்கிலேயரை எதிர்த்து விடுதலைக்குப் போரிட்ட காலத்தில், மொழிவழிப்பட்ட இனஉணர்ச்சி பாரத மக்களிடை தலை தூக்கவில்லை. ‘எல்லோரும் இந்தியர்’ என்ற தேசீய உணர்ச்சியே யாவரிடத்திலும் நிறைந்திருந்தது. அந்தக் காலத்திற்கு அது சரி. அதனுல், சுப்பிரமணிய சிவஞரின் எண்ணம், பேச்சு, எழுத்து எல்லாம் இந்தியாவைப் பற்றியதும், இந்து சமயத்தைப் பற்றியதுமாகவே இருந்தன.

பாரதமாதாவின் கோயில்கள் பாரதநாடு முழுதும்-ஊர்தோறும்—அமைய வேண்டும் என்று சிவாவின் தேசீய உள்ளம் விரும்பியது. இறுதிக் காலத்தில், தாம் வாழ்ந்த பாப்பாரப்பட்டியில் கோயில் அமைக்க நிலம் வாங்கினுர். 1923 இல் தேசபந்து தாசரைக்கொண்டு அடிக்கல் நாட்டினுர். ஆனுல், கட்டிடம் எழும்பு முன்னரே, காலன் அவரை விழுங்கி விட்டான்.

உயர்தரக் குடும்பத்தில் பிறந்து, உயர்தரக் கல்வி கற்றும், உத்தியோகத்தை நாடாத உத்தமர்!

குடும்பப் பற்றைத் துறந்து துறவியான பின்னரும், தேசப்பற்றைத் துறக்க முடியாத தேசபக்தர்!

உயர் குலத்தில் பிறந்தும், சாதிவேற்றுமையறியாத சமரசவாதி!

தொழுநோயால் தொல்லையுற்றபோதும், தேசத்தொண்டினைக் கைவிடாத கர்மவீரர்!

சிவம், பிறப்பால் தமிழர். வாழ்ந்த காலத்தால் காங்கிரஸ்காரர். கொண்ட கொள்கையால் தேசீயவாதி. அடைந்த இன்னல்களால், இணையற்ற தியாகி. அவரது வரலாறு, ஒரு தனி நூல்.

தமிழினமே! ஆங்கிலப் பேரரசின் பிடியிலிருந்து உன்னை விடுவிக்கப் பாடுபட்ட வீரத் தமிழனை—சுப்பிரமணிய சிவத்தை மறக்காதே!

★

# நாவலர் சத்தியமூர்த்தி



ஆகஸ்டு பத்தொன்பதில் நாவலர் சத்தியமூர்த்தியின் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது.

சத்தியமூர்த்தி தமிழகத்தில் பிறந்தவராயினும், பாரதம் முழுவதிலும் அவருடைய புகழொளி வீசியிருந்தது. மத்திய சட்ட சபையில் அங்கம் வகித்த காலத்தில் அவருக்கு இணையாகப் பேசும் ஆற்றல் வேறு எவருக்கும் இருந்ததில்லை. அத்தகைய அகில இந்தியத் தலைவரின் பிறந்த நாளைத் தமிழகம் கொண்டாடுகின்றது.

தலைவர் சத்தியமூர்த்தி அப்பழுக்கற்ற, குறை சொல்ல முடியாத தேசீய ஒருமைப் பாட்டுணர்ச்சி உடையவர். இமயம் முதல் குமரி வரையுள்ள பாரதம் முழுவதையும் தம் தாய்நாடாக நினைத்தவர். அதன் விடுதலைக்காக நடந்த போரில் மனத்தாலும், மெய்யாலும், வாக்காலும் பணி புரிந்தவர்.

ஆயினும் 'தமிழர்' என்ற இன உணர்ச்சி யுடையவர். இன்றைய காங்கிரஸ்காரர்களுக்கு மொழிவழி இன உணர்ச்சி வேம்பாகி விட்டது. நாவலர் சத்தியமூர்த்திக்கோ அது கரும்பாக இனித்தது.

ஆந்திரர்கள், அவர் வாழ்ந்த காலத்திலேயே "மதராஸ் மனதே" எனக் கூச்சலிட்டனர். அதற்கு வெற்றிதேடச் சென்னை மாவட்டத்திற்கென போட்டி காங்கிரஸ் ஒன்றையும் அமைத்தனர். அந்த நாளில் நாவலர் சத்தியமூர்த்தி ஆந்திரர்களை மிகக் கடுமை

யாக எதிர்த்தார். 'சென்னை தமிழருடையதே' என முழங்கினர். ஒரு சமயம் சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப்துரை மகனர் தலைநகர் பற்றிய சிக்கல் பற்றி சத்தியமூர்த்தியை அழைத்துப் பேசினர். "சென்னை நகரம் ஆந்திரருக்கும் தமிழருக்கும் கூட்டு நகரமாகட்டும்" என்று கூறினர். நாவலர் சத்திய மூர்த்தி "ஆந்திர அரசுக்குச் சென்னையில் இடமளித் தால் இரத்த ஆறு ஓடுவது திண்ணம்" என்று திட்ட வட்டமாகத் தெரிவித்து விட்டுத் திரும்பினர்.

சத்தியமூர்த்தி ஆங்கிலத்தை முதன் மொழி யாகவும், சமஸ்கிருதத்தை இரண்டாவது மொழி யாகவும் ஏற்று இளமையிலே கல்வி கற்ருர். அதனுல் தமிழிலே அவர் போதிய அளவு ஞானம் பெறவில்லை. ஆயினும் சொந்த முயற்சியால் இலக்கியங்களைப் பயின்று தமிழிலும் நன்ருகப் பேசும் ஆற்றலைப் பெற் றிருந்தார். அவர் காலத்தில் அவரினும் திறமையாகத் தமிழில் பேசும் பெருந்தலைவர் காங்கிரசில் இருந்த தில்லை. அவ்வளவு ஆற்றல் இருந்தும், தமது பேச்சு குறைபாடின்றி நாளிதழ்களில் வெளிவரவேண்டு மென்ற ஆர்வத்தால், படித்த மக்கள் மிகுந்திருக்கும் கூட்டங்களில் மட்டும் ஆங்கிலத்தில் பேச முயல்வார். அந்நாளில் 'நாளிதழ்கள்' என்ருலே, ஆங்கில ஏடுகள் தாம் நினைவுக்கு வரும். அதனுல், நாளிதழ்களை நினைந்துகொண்டு முதலில் சிறிது நேரம் ஆங்கிலத்தில் பேசி விட்டு, பின்னர் தமிழில் பேச விரும்புவார். மக்கள் "தமிழில் பேசுங்கள்—தமிழில் பேசுங்கள்" என்று கூச்சலிடுவர். அப்பொழுதும் அடக்கத்துடன் வேண்டுகோள் விடுத்து, விரைவில் ஆங்கிலப் பேச்சை முடித்துக்கொண்டு தமிழில் பேசத் தொடங்குவார்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிகளிலோ, காங்கிரஸ் மகாசபைகளிலோ நாவலர் சத்தியமூர்த்தி யின் பேச்சுக்கு அந்நாளில் தனி மதிப்புண்டு. ஒரு சமயம் 1930—1931 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற

சட்ட மறுப்புப் போராட்டத்தைப் பற்றிக் காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அ. இ. கா. கூட்டத்தில் ஒரு அறிக்கை கொடுத்தார். அதில் "தென்னிந்தியாவில் சட்டமறுப்புப் போராட்டம் அவ்வளவு வேகமாக நடை பெறவில்லை" என்ற வாசகத்தைச் சேர்த்து, கமிட்டிக் கூட்டத்தில் அதைத் தாமே படித்தார் பண்டித நேரு. அதைக் கேட்டு நாவலர் சத்தியமூர்த்தி அடங்காக் கடுங்கோபம் கொண்டார். வில்லிலிருந்து புறப்படும் அம்பு போன்று துள்ளி யெழுந்து, "தென்னாட்டில் வெள்ளிப் பணங்களை எங்களுக்கு அள்ளிக்கொடுக்க டாட்டாக்களும் பிர்லாக்களும் இல்லை. ஆயினும் எங்கள் சக்திக் கேற்ப நாங்களும் போராடி இருக் கின்றோம்" என்று கூறி, தென்னகம் பற்றிய பகுதியை அறிக்கையிலிருந்து அகற்ற வேண்டுமென வாதாடினார்.

பொதுச் செயலாளர் பண்டித நேருவும், தாம் செய்த தவற்றை உணர்ந்து அதற்காக வருத்தமும் தெரிவித்து அறிக்கையைத் திருத்திக் கொள்வதாக உறுதி கூறினார்.

நாவலர் சத்தியமூர்த்தி சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார். அரசியல் தலைவர்களிலே அவருக்கு இணையான கலாரசிகர் அவர் காலத்திலும் இல்லை; இக்காலத்திலும் இல்லை. எதிர் காலத்தில் எப்படியோ! அவருக்கு இசை ஞானம் இருந்தது. சிறந்த தெய்வ பக்தருமாவார். கடைந்தெடுத்த வைதீகருங் கூட. அதனாலேயே விபசாரத் தடைச்சட்டம், குழந்தை மணத் தடைச் சட்டம் போன்ற சீர்திருத்தங்களை நாவலர் சத்தியமூர்த்தி எதிர்த்தார். உள்ளத்தில் பட்டதை உதட்டிலே ஒலிக்கும் வெள்ளை மனம் படைத்தவர்.

ஆண்டு தோறும் சங்கீத வித்வத் சபை நடத்தும் சங்கீத விழாவிலே, ரசிகர்களின் அரங்கிலே நாவலர்

சத்தியமூர்த்தி முதலிடம் பெறுவார். இசையரங்கில் தெலுங்கு மொழி ஆதிக்கம் செலுத்துவதை முதன் முதலிலே கண்டித்தவர் மகாகவி பாரதியார். அவரைப் பின்பற்றி தமிழிசைக்கு வாழ்வு தேட வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் வாதாடி வந்தார் சத்தியமூர்த்தி. சங்கீத வித்வத் சபையிலேயே எதிர்குரல் கொடுப்பார்.

பிற்காலத்தில் யாரெல்லாமோ எதை எதையோ நினைவில் கொண்டு தமிழிசைக் கிளர்ச்சி நடத்தினார்கள். அவர்களுக்கெல்லாம் உண்மை உணர்ச்சியோடு அத்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தார் சத்தியமூர்த்தி.

தமிழ் நாட்டாரை வட நாட்டார் மதிப்பதில்லை என்ற குறை சத்தியமூர்த்தி காலத்திலும் இருந்தது. ஆனால், தேசீய உணர்ச்சி தன்னை மறக்கும் வெறியாக தமிழர் மனத்தில் வளர்ந்திருந்த காலம் அது. அதனால், வடவருடைய குறையை எடுத்துக் காட்டுவதென்பது சுலபமன்று. எனினும் அஞ்சா நெஞ்சினரான சத்தியமூர்த்தி அத்துறையிலும் விதி விலக்காகத் திகழ்ந்தார்.

ஒரு முறை வங்கப் பெருந்தலைவரான சென்குப்தா அவர்கள் சென்னை வந்திருந்தார். கடற்கரையிலுள்ள திலகர் கட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் சென் குப்தா பேசினார். அப்போதெல்லாம் வடநாட்டுத் தலைவர்கள் வந்தால், மக்கள் வெள்ளம்போல் திரண்டு வருவது வழக்கம். சென்குப்தா பேசிய கூட்டத்திற்கு சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார். தமது முன்னுரையில்,

> "அன்பார்ந்த சென்குப்தா அவர்களே! உங்களை வரவேற்க, உங்கள் வார்த்தைகளைக் கேட்க எங்கள் மக்கள் இங்கு வெள்ளம் போல் திரண்டிருப்பதைப் பாருங்கள். தென்னாட்டுத் தலைவர்கள் உங்கள் வடநாட்டுக்கு

வந்தால் உங்கள் மக்கள் இப்படித் திரண்டு வந்து மதிப்புத் தருகிறார்கள் இல்லை"

என்று வெளிப்படையாகக் கூறினார். அதற்குப் பதிலளித்த தலைவர் சென்குப்தா,

"மதிக்கப்பட வேண்டிய தலைவர்கள் வடக்கே வந்தால் அங்குள்ள மக்கள் மதிப்பளிக்கத் தவறுவதில்லை"

என்று கூறி நாவலர் சத்தியமூர்த்தியை மறைமுகமாகக் குறைத்துப் பேசினார். சத்தியமூர்த்தி பொறுத்துக்கொள்ளவில்லை.

"பெருந்தலைவரான ராஜாஜிக்குக் கூடத் தான் வடக்கே உள்ள மக்கள் தனி மதிப்புத் தருவதில்லை"

என்று கூறி, சென்குப்தாவுக்குச் சுடச்சுடக் கொடுத்தார்.

நாவலர் சத்தியமூர்த்தி சென்னை செனேட் சபையில் அங்கம் வகித்தபோது "விரும்புகின்ற கல்லூரியில் வட்டார மொழியைப் பயிற்சிமொழியாகச் செய்யலாம்" என்று தீர்மானம் நிறைவேறும்படி செய்தார். கல்லூரிகளில் பயிற்சிமொழி தாய்மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர் வாழ்நாள் முழுவதும் வற்புறுத்தி வந்தார். ஆங்கிலத்தில் 'உளறு' வதற்குக்கூட ஆற்றலற்றவர்கள் ஆங்கிலத்தின் அருமை பெருமைகள் பற்றி அளக்கிறார்கள்.

சத்தியமூர்த்தியின் ஆங்கில மொழிப் புலமை பாரதமேயன்றி, அகில உலகமும் அறிந்ததாகும். அப்படி இருந்தும், தாய்மொழிப் பற்று காரணமாக அவர் தமிழைப் பயிற்சி மொழியாக்கக் கோரினார்.

"மாணவர்களுக்கு அவர்களுடைய தாய்மொழியில் பாடங்களைக் கற்பித்தால்தான் நல்ல பலன் கிட்டுகிறது. இதர பாடங்களை

வட்டார மொழியில் கற்பித்தால் மாணவர்கள் ஆங்கில மொழிப் பாடத்தில் தனிக் கவனம் செலுத்துவது சாத்தியமாகும். இதனுல், ஆங்கில மொழியிலும், திறமை பெற முடிகிறது. எல்லாப் பாடங்களேயுமே ஆங்கிலத்தில் கற்பிப்பதென்பது தற்போதைய வழக்கமாக இருக்கிறது. ஆங்கில மொழிப் பாடம் கற்பிக்கும் பேராசிரியர்கள் அம் மொழியில் நிபுணத்துவம் பெற்றிருப்பார்கள். மற்ற பாடங்களேக் கற்பிப்பவர்களோ ஆங்கில மொழியில் திறமான ஞானமில்லாதவர்களாக இருப்பார்கள். ஆகவே, மாணவர்களுக்கு ஐந்து அல்லது ஆறு விதமான பாட போதனே நடைபெறுகிறது. இதனுல் எது ஆங்கிலம் என்று தெரியாமல் திகைக்கவேண்டி யிருக்கிறது. வட்டார மொழிகளில் மாணவர்களுக்குப் பாடங்களேச் சொல்லிக் கொடுக்கும்போது வகுப்பின் சூழ்நிலேயே மாறுதல் அடைகிறது. பாடங்கள் எல்லாம் சுவையாக அமைகின்றன.

“ வட்டார மொழியைக் கொண்டு பாடங்களேக் கற்பிப்பதால் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் புத்தி பூர்வமாக ஏற்படக்கூடிய பளு குறைந்துவிடுகிறது.”

இது 27-3-37-இல் ஹரித்துவார் குருகுலப் பல்கலேக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியபோது தலேவர் சத்தியமூர்த்தி பயிற்சிமொழி பற்றி வெளியிட்ட கருத்தாகும்.

தலேவர் சத்தியமூர்த்தி இன்றைய ஆங்கிலக் கல்வி முறையை அடியோடு வெறுத்தார். இதோ பேசுகிறுர் கேளுங்கள் :

“ ஒவ்வொரு பல்கலேக் கழகத்திலும் தற்காலத்தில் தரப்படும் கல்வி முறை காரண

மாக நமது சகோதர, சகோதரிகள் திக்கற்ற நிலைமையில் இருக்க நேர்ந்துள்ளது.

"தன்னலமின்றி, நாட்டுப் பற்றோடு தியாகங்கள் பல புரிந்து பணி செய்யும் பல சகோதர-சகோதரிகளைத் தற்காலப் பல்கலைக் கழகங்கள் உற்பத்தி செய்திருக்கின்றன என்றாலும், இக்கல்வியினால் நாட்டிற்கு நிரந்தரமான பலன்கள் கிடைக்கவில்லை. இதில் ஐயம் எதுவுமே கிடையாது.

"இந்தக் கல்விக்கு மெக்காலே பிரபு அஸ்திவாரம் போட்டார். சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டதைத் தவிர முதலில் எப்படியிருந்ததோ அப்படியேதான் அஸ்திவாரம் அமைந்திருக்கிறது. பழைய தவறுகளைத் திருத்தவேண்டுமானால் இந்தக் கல்வியின் அஸ்திவாரத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நியாய முறை காரணமாக முன் வந்து முயற்சி செய்யும் சிரத்தை, சுதந்திரம் முதலிய அம்சங்கள் இல்லாத ஒரே குமாஸ்தா பட்டாளங்கள் ஏற்பட்டு விட்டன. உண்மையான கல்வியின் பலன் ஏற்படவில்லை"

என்று, இப்படி வயிறெரிந்து, வாய் திறந்து ஆங்கிலக் கல்வி முறையைச் சபித்திருக்கிறார் சத்தியமூர்த்தி.

பயிற்சிமொழிச் சிக்கலில் மாபெரும் போராட்டத்தை எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் தமிழினத்தார் அந்தப் போராட்டம் வெற்றி பெற நாவலர் சத்தியமூர்த்தியின் பொன்மொழியை நினைவில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

★

# வீரன்  வாஞ்சுவின் வரலாறு



பாரத பயங்கரவாதிகளின் தலைவர், விநாயக தாமோதர சவர்க்கார் ஆவார். அவர் தொண்டுகிழவராக இன்றளவும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்.

பயங்கரவாதிகள், லண்டன்—பாரிஸ்—பாண்டிச்சேரி ஆகிய மூன்றிடங்களையே தங்கள் உறைவிடங்களாகவும் மறைவிடங்களாகவும் கொண்டிருந்தனர் என்று, மறைக்கப்பட்ட—மக்கள் மறந்துவிட்ட வரலாறு கூறுகின்றது.

"ரௌலட் கமிட்டி அறிக்கை" இந்தியா முழுவதிலுமாகப் பரவியிருந்த பயங்கர இயக்கத்தின் வரலாற்று நூலாகும்.

சவர்க்கார், மாடம் காமா, வ. வே. சு. ஐயர் ஆகிய மூவருடைய பெயர்களே பயங்கர இயக்கத்தின் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றன.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில், வ.வே.சு. ஐயர்தான் பயங்கரவாதிகளின் தலைவர். அவர் அப்போது பிரெஞ்சுப் பேரரசின் கீழிருந்த பாண்டிச்சேரியில் தங்கி இளைஞர்களுக்குப் பலாத்காரப் பயிற்சியில் ஈடுபடுவதற்காக—ஆயுதப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தார். ஐயரிடம் பயிற்சி பெற்றவர்களுள் இளைஞன் வாஞ்சுவும் ஒருவன்.

வாஞ்சு, அப்போது திருவனந்தபுரம் சமஸ்தானத்திலிருந்த செங்கோட்டை வாசி. தந்தையின் பெயர்

ரகுபதி ஐயர். அவர் காட்டிலாகா அதிகாரியாக இருந்தார். மைந்தன் வாஞ்சுவும் காட்டிலாகா சிப்பந்தியாக வேலை பார்த்தான்.

1906 முதல் 1908 வரை மூன்றாண்டு காலம் தென்பாண்டிப் பதியான திருநெல்வேலி மாவட்டம், ஏகாதிபத்திய எதிரிகளின் பாசறையாக விளங்கியது. பாசறையின் தலைவர் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. யாவார். அந்த மூன்றாண்டுகளில் தென்பாண்டியில் பயங்கர இயக்கத்தினர் இருந்தனர். என்றாலும், பலாத்கார சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

1908-ஆம் ஆண்டில்—

சிதம்பரனார் கைது செய்யப்பட்டார்.

அவருக்கு இரண்டு ஜென்ம தண்டனை விதித்தார் நீதிபதி பின்ஹே.

தங்கள் தலைவருக்குற்ற துன்பங் கண்டு கொதித்தெழுந்த தமிழர்களை, கொடுமையான அடக்கு முறைகளால் ஒடுக்க முயன்றார் கலெக்டர் ஆஷ்.

சிறையில் வீரர் சிதம்பரனாரைச் செக்கிழுக்கவும், கல்லுடைக்கவும் செய்து துன்புறுத்தினர் அதிகாரிகள்.

இந்தச் சம்பவங்களால் பயங்கரவாதிகளின் கை வலுப் பெற்றது. சாத்வீக முறைகளால் வெள்ளையரை வெளியேற்ற முடியாதென்ற தோல்வி மனப்பான்மை கொண்ட இளைஞர் சிலர் பயங்கர இயக்கத்தில் சேர்ந்தனர். அவர்களில் ஒருவன்தான், நமது வாஞ்சிநாதன்.

அப்போது வாஞ்சுவுக்கு வயது இருபத்தைந்து தான் இருக்கும். மணமானவன். மனைவியின் பெயர் பொன்னம்மாள். அவர், எழுபது வயதுக்கு மேற்பட்ட மூதாட்டியாக இன்னும் வாழ்ந்து வருகிறார்.

பயங்கர இயக்கத்தில் சேர்ந்ததும், 9-1-1911 இல் வேலையில் மூன்று மாத ஓய்வெடுத்துக் கொண்டு,

பாண்டிச்சேரி சேர்ந்து பலாத்காரச் செயல்களில் ஈடு படுவதற்கான பயிற்சி பெற்றுன் வாஞ்சு.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பல இளைஞர் கள் கூடி, 1908 ஆம் ஆண்டில் 'அபிநவ பாரத இளைஞர் சங்கம்' என்ற ஒன்றை அமைத்தனர். இச் சங்கம் பலாத்கார சதித் திட்டங்கள் வகுத்துச் செயல் பட்டதால், ரகசியமாகவே இயங்கி வந்தது. இச் சங்கத்தின் நிர்வாகத்தில் ரகசியமாக அச்சுக்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. பயங்கரவாதிகள் தங்கள் வேலைத் திட்டங்களை மக்களிடையே பரப்பவும், அபி நவ சங்கத்தின் அங்கத்தினர்களுக்குச் சுற்றறிக்கை விடவும் அச்சகத்தைப் பயன்படுத்தி வந்தனர். அதன் பெயர் பரங்கி ஒழிப்பு அச்சகமாகும். "பரங்கி" என்ற பெயர் "அங்கியர்" என்ற பொருளில் அந் நாளில் ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டதாகும்.

அந்தக் காலத்தில் வடக்கே மகாராஷ்டிரத்திலும், வங்காளத்திலும் பயங்கரவாத இயக்கத்தினர் பலாத் காரச் செயல் புரிந்து வந்தனர். அது காரணமாக மீரட் சதி வழக்கு, ஹௌரா சதி வழக்கு, அலிப்பூர் சதி வழக்கு, டாக்கா சதி வழக்கு என கூட்டம் கூட்டமாகப் பயங்கரவாதிகளைக் கைது செய்து அவர்கள் மீது சதி வழக்குகளைச் சிருஷ்டித்தது பரங்கி ஆட்சி. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் உயர்தர ஆங்கில அதி காரிகள், பயங்கர இயக்கத்தினரால் கொல்லப்பட்டும் வந்தனர். அந்த இயக்கத்தினரால் தயாரிக்கப்பட்ட பலாத்காரச் செயல்களில் ஈடுபடும்படி மக்களைத் தூண்டும் ஆட்சேபகரமான பிரசுரங்கள் பாரதம் முழு வதும் விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்தச் சந்தர்ப் பம் தென் பாண்டி பயங்கரவாதிகளுக்குப் பெரிதும் பயன்பட்டது.

வீரன் வாஞ்சு, அவனுடைய மைத்துனன் சங்கர கிருஷ்ணன், நீலகண்ட பிரம்மச்சாரி ஆகியோர்

பாண்டிச்சேரியிலுள்ள ஒரு தோட்டத்தில் ரகசியமாகக் கூடிச் செயல் திட்டம் வகுத்தனர். அப்போது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார் இந்தியாவின் தலைநகரான டில்லிக்கு வந்து முடி சூட்டும் வைபவம் நடத்திக் கொள்ள ஏற்பாடாகி யிருந்தது. அந்த ஏற்பாட்டைக் குலைத்து சக்கரவர்த்தியின் உயிருக்கும் தீங்கிழைத்து, இந்திய மக்களின் எதிர்ப்புணர்ச்சியை உலகறிய வெளிப்படுத்த வாஞ்சுக் குழுவினர் திட்டமிட்டதாக ரௌலட் அறிக்கை கூறுகிறது.

திட்டம் வீணுகி விடவில்லை. 1911 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதியன்று, திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரான ஆஷ் என்பவர் திருநெல் வேலியிலிருந்து மணியாச்சிக்கு ரயிலில் சென்று கொண்டிருந்தார். அவர் ஏறிச் சென்ற பெட்டி யிலேயே இளைஞன் வாஞ்சுவும் ஏறிக் கொண்டான். ரயில் மணியாச்சி சந்திப்பை அடைந்துகொண் டிருக்கும் தருணத்தில் மறைத்து வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றுவிட்டான் வாஞ்சு. மறுகணமே ரயில் பெட்டியிலுள்ள கக்கூஸ் அறைக்குள் நுழைந்து கைத் துப்பாக்கியைத் தன் வாய்க்குள் நுழைத்து விசையை அழுத்திச் சுட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டு மாண்டான்.

வாஞ்சு தன் வாய்வழியாகச் சுட்டுக் கொண்ட தற்குக் காரணம் போலீசார் தன்னை அடையாளம் கண்டு பிடித்து, அதன் மூலம் தன் அரசியல் சகாக் களைத் துன்புறுத்தச் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது என்பதற்காகத்தான். மரணம் மிகக் கொடியது. அதனினும் கொடியது அதனை விரும்பி வரவேற்பது. ஆனால், வீரன் வாஞ்சு தேச பக்த வெறியின் காரண மாக ஆங்கிலேயனைச் சுட்டதோடு, தன் ஆவியையும் தேச விடுதலைக்காக அர்ப்பணித்தான்.

அதே ரயிலில் வாஞ்சுவோடு பிரயாணம் செய்த அவன் மைத்துனன் சங்கர கிருஷ்ணன் என்பவரை போலீசார் கைது செய்தனர். அவர்மீது வழக்கு நடத்தி, அவருக்குக் கடுமையான தண்டனையும் விதித்தனர்.

இந்தப் பயங்கரப் படுகொலைக்குப் பிறகு திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் இருந்த தேச பக்த இளைஞர்களைத் தேடி நர வேட்டையாடினர் அரசாங்க அதிகாரிகள். பரங்கி ஒழிப்பு அச்சகத்தைக் கண்டு பிடித்து அங்கிருந்த ஆட்சேபகரமான பிரசுரங்கள் பலவற்றைக் கைப்பற்றினர். பல தேச பக்தர்களுடைய வீடுகளும் சோதனையிடப்பட்டன.

அதில் அவர்கள் கைப்பற்றிய பிரசுரம் ஒன்றில் "இந்தியர்களுக்கு ஒரு வார்த்தை"—என்ற தலைப்பின் கீழ் பின்வரும் வாக்கியங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

> "இந்த மண்ணிலிருந்து பரங்கியனை வெளியேற்றுவோம் என ஒவ்வொருவரும் தெய்வத்தின் முன்னர் சத்தியம் செய்து கொள்வோம். அதன் வழியாகச் சுதந்திரத்தை அடைவோம்."

மணியாச்சி சந்திப்பில் நிகழ்ந்த சம்பவத்தின் போது புரட்சி வீரன் வாஞ்சுவின் சட்டைப்பையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட கடிதம் ஒன்றில்,

> "சுதந்திரத்தை யடைய, வெள்ளையரை ஒழிக்க ஒவ்வொரு இந்தியனும் கங்கணம் பூண்டிருக்கிறன். 3000 சென்னைவாசிகள் ஐந்தாம் ஜார்ஜ் இந்தியா வந்ததும் அவருக்குத் தீங்கிழைக்கச் சபதம் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை எல்லோருக்கும் தெரிவிக்கவே, அவர்களின் கடைசித்

> தொண்டனுன நான் இந்தச் செயலேச் செய்திருக்கிறேன் ”

என்று எழுதப்பட்டிருந்ததாம்.

> மணியாச்சியில் ஆஷ் கொல்லப்பட்ட இரண்டொரு நாட்களுக்குப் பிறகு—அதாவது, 19-6-1911இல் வடக்கே மைமன் சிங் என்னும் ஊரில்—இந்திய சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவங்களேப் பாராட்டி மேடம் காமா என்பவரால் பாரிஸ் நகரிலிருந்து வெளியிடப்பட்டு வந்த “ வந்தே மாதரம் ” என்ற இதழில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.
>
> “ மணியாச்சியிலும் மைமன் சிங்கிலும் நடைபெற்ற சம்பவங்கள், இந்தியர்கள் தூங்கிக் கொண்டிருக்கவில்லே என்பதையே காட்டுகிறது.”

இந்தக் கொலேக்குப் பிறகு, திரு. நீலகண்ட பிரம்மச்சாரி என்பவரை முதல் எதிரியாக வைத்து, பல தேசபக்த இளேஞர்களே ஒரு கோஷ்டியாகச் சேர்த்து, அவர்கள் மீது சதி வழக்குத் தொடரப்பட்டது. ஆனுல், இந்தச் சதி வழக்கிற்கு கலெக்டர் ஆஷ் கொல்லப்பட்ட சம்பவம் காரணமாக்கப்படவில்லே. சதி வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் “ அரசாங்கத் துரோகிகள் ” என்றே குற்றம் சாட்டப்பட்டது. திருநெல்வேலி சதி வழக்கில் அரசாங்க சார்பில் சாட்சியம் கூறிய வாஞ்சுவின் நண்பர் ஒருவர்,

> “ இந்த நாட்டில் வெள்ளேயர் ஆட்சி ஒழிக்கப் படவேண்டுமானுல், ஆங்கிலேயர் அனேவரும் சுட்டுக் கொல்லப் படவேண்டும். அந்த வகையில் 1908 இல் திருநெல்வேலியில் நடைபெற்ற அடக்கு முறைக் கொடுமை

களுக்குக் காரணமான கலெக்டர் ஆஷ் என்பவரை முதலில் கொல்ல வேண்டும்''

என்று கூறியதாக ரௌலட் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இளைஞன் வாஞ்சு தற்கொலை செய்துகொண்டு மாண்டபோது அவனுடைய மனைவியார் நிறைந்த கர்ப்பவதியாக இருந்தார். அந்தப் பரிதாப நிலையில் அம் மாவீரனின் வாழ்க்கை முடிந்து விட்டது.

வீரன் வாஞ்சுவைப் போன்ற பயங்கரவாதி களின் திட்டங்களெல்லாம் விடுதலைப் போருக்கு வெற்றிதரச் சக்தியற்று விட்டன. அண்ணல் காந்தி யடிகளின் சாத்வீக சத்தியாக்கிரக நெறி ஒன்றே ஆகஸ்ட் பதினைந்தைத் தோற்றுவித்தது. ஆயினும் வீரன் வாஞ்சுவின் சுதந்திர தாகத்தை—அடிமை வாழ்க்கையில் அவன் கொண்டிருந்த வெறுப்பை நாம் மதிக்கத்தான் வேண்டும். அவ்வீரத் தமிழன், வாழ்க் கையின் பற்றைத் துறந்தான்; தான் மாலையிட்ட மங்கையை மீளாத் துயரத்தில் ஆழ்த்தினன்; அந்த மாவீரனுக்குத் தமிழ் மக்கள் தலைவணங்கி அஞ்சலி செய்வார்களாக!




சமயம்-
சமூகம்



# என் பிரார்த்தனை

திருவாசகம், தமிழ்மொழியின் இனிமைக்கும் தமிழ் இனத்தவரின் தெய்வப் பற்றுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் இலக்கியமாகும். தமிழிலுள்ள இலக்கியங்களில் நீதிநெறி போதிக்கும் இலக் கியங்களுக்குத் திருக்குறளும், வாழ்க்கை நெறி கூறும் காப்பியங்களுக்குக் கம்பராமாயணமும், பக்தி நெறியை வளர்க்கும் நூல்களுக்குத் திருவாசகமும் தலைமை பெற்று விளங்குகின்றன. தமிழ் இனத்தின் வரலாற்றுக்குச் சிலப்பதிகாரம் நிகரற்றதாக இருந்து வருகின்றது.

பக்தி மதம் தோன்றிய பிறகுதான் இசை வழிப்பட்ட இலக்கியங்கள் தமிழில் பெருகின. கல் மனத்தையும் கரைக்க வல்ல ஆற்றல் தமிழ் இசைக்கு உண்டு என்பதை பக்தி இலக்கியங்களே நமக்கு உணர்த்தி வைத்தன. அவற்றிலும் "திருவாசகத் துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற சிறப்பை மணிவாசகரின் இலக்கியமே பெற்றது. திருவாசகத்திற்கு மதிப்புரை வழங்கிய இராமலிங்கர் 'வருமொழி செய் மாணிக்கவாசக நின் வாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என் உடையனையும் ஒன்று விக்கும்' என்று பாடினார். அவர் குறிப்பிட்ட ஒரு மொழி திருவண்டப் பகுதி என்பதாகும். அறிவியல் பேசும் விஞ்ஞானிகளும், ஆராயத்தக்கதாகும் திரு வண்டப் பகுதி.

பக்தி இலக்கியங்கள் இயற்றமிழில் தோன்றுவ தில்லை. இசைத் தமிழிலேயே தோன்றியிருக்கின்றன.

அதைப் பாடுகின்ற முறைகூட தனியானது. ஊன் கலந்து, உயிர் கலந்து, உணர்வழியப் பாடுவதுதான் பக்தி என்கிருர் இராமலிங்கர்.

திருவாசகத்தில் உள்ள எல்லாப் பாடல்களும், வரிகளும், சொற்களும் நமக்குப் பொருத்தமானவை என்று கருதி விடக்கூடாது. 'யானே பொய், என் நெஞ்சம் பொய்' என்று பாடினுரே, அவை அனைத்தும் நமக்குப் பொருத்தமானவைதான். இறைவனைக் கண்ணுல் கண்டேன் என்று பாடினுர். அது நமது நிலைமைக்கு, அனுபவத்துக்குப் பொருத்தமான தென்று எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, மாணிக்கவாசகரின் அனுபவம் வேறு; நமது அனுபவம் வேறு என்பதை மறந்து விடாமல் திருவாசகத்தைப் படித்தால் மட்டுமே நமது வாழ்க்கையின் சீர் கேடு களிலிருந்து நாம் திருந்த முடியும்.

மதத்துறையில், குறிப்பாக பக்தி மார்க்கத்தில் தமிழ் மக்களாகிய நமக்கு நாம்தான் வழிகாட்டிகள். வடக்கத்தியரோ மேற்கத்தியரோ நமக்கு வழிகாட்டி களாக இருக்க முடியாது.

மேல் நாட்டவருக்கு—குறிப்பாக அமெரிக்க—ஆங்கிலேயருக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் 'மரபு' கிடையாது. வட இந்தியருக்கு 'மரபு' உண்டு. ஆனுல், அடிக்கடி ஏற்பட்ட மாற்ருன் படையெடுப்பால் அவர்களுடைய மரபு நிலை குலைந்து போயிற்று.

தமிழர்களாகிய நாம் வாழும் நிலப்பரப்பு பல லட்சக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்தும் வளர்ந்தும் வரும் மரபினை யுடையது. தமிழ் நிலம் உள் நாட்டுக் குழப்பத்தையோ, நமது பண்பாட்டைப் பாதிக்கத்தக்க படை எடுப்பையோ காணுதது. அதனுல், நிலை குலையாத, அதிக அளவு பிறருடைய நாகரிகத்தால் பாதிக்கப்படாத மரபினை-பண்பாட்டினைப்

பெற்றிருக்கிறது. இத்தகைய ஓர் சிறப்பையும் பெருமையையும் உடைய தமிழர்களாகிய நாம் மதத் துறையில்—தெய்வீக நெறியில் உலகமக்கள் அனை வருக்குமே வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்; பின்பற்றுவோராக மாறிவிடக் கூடாது. இத்தகைய தலைமையை நமக்குத் தேடித்தரும் தகுதி படைத்தது திருவாசகம்.

திருவாசகத்திலும் காலத்தால் தள்ளத்தக்கவை உண்டு. 'ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திரு நாமம் பாடுவோம்' என்கிறார் மாணிக்க வாசகர். அவரே அதே பாட்டில் "திருமாலும் பன்றி யாய்ச் சென்றுணராத் திருவடி" என்று தாம் பக்தி செலுத்திய சிவபிரானின் மலரடிக்கு மாண்பு கூறு கிறார். இது சைவ—வைணவப் போராட்ட காலத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. மதப் போராட்டங்களை மாய்த்து மக்கள்வழி அறப் போராட்டங்களைக் கண்டு வரும் இக் காலத்தவர்களாகிய நாம், 'ஒரு நாமம் ஓருருவம் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம்' என்றுரைத்த மாணிக்க வாசகரையே மனத்தில் கொள்வோமாக.

திருவாசகத்தில், பக்தி வழிப்பட்ட பலப்பல கதைகளைப் படித்திருக்கிறோம். அவை, அற்புதங்களை நம்பிய காலத்துக் கற்பனைகளாகும். அவற்றை எல்லாம் விஞ்ஞான காலத்தில் வாழும் நாமும் நம் பித்தான் ஆகவேண்டு மென்பது தெய்வ நெறியை வளர்ப்பதற்குப் பயன்படாது. எந்தக் காரணத்தைக் கொண்டு, எத்தகைய சூழ்நிலையில் அத்தகைய கதைகள் கற்பிக்கப்பட்டன என்பதை சாமான்ய மக்களாகிய நாம் அறிய மாட்டோம். மாணிக்க வாசகரைப் போன்ற எல்லாம் அறிந்த—இறைவனை யும் உணர்ந்த உள்ளத்தில் 'இருள்' போன்ற அறி யாமைக்கு இடமிருக்க முடியாது. ஆகவே, அவரு டைய திருவாசகத்தில் வரும் கற்பனையை நம்ப

வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதோ, அவை அனைத்தும் அறியாமையின்பாற் பட்டதென்று பேசுவதோ வழி தவறிச் செல்வதாகும்.

தெய்வ நம்பிக்கையை ஏற்பதும், அதை வழிபட்டு வாழ்க்கையை நடத்துவதும்மட்டுமே திருவாசகத்தி லிருந்து இக்காலத்து மக்களாகிய நாம் பெறக்கூடிய நன்மைகளாக இருக்கவேண்டும்.

திருநீறு இடுபவன்தான் சைவன் என்றோ— திருமண் இடுபவன்தான் வைணவன் என்றோ— வைதீகம் பேசுவது காலமாறுதலைக் கவனியாத கண் மூடித்தனமாகும்.

மாணிக்கவாசகரின் பாதையிலே அவருடைய சீடராகத் தோன்றி திருவாசகத்தை வேத வாக்காக நம்பிவாழ்ந்தவர் வள்ளலார். ஆகவே, வள்ளலாரின் சீர் திருத்தக் கருத்துக்களை திருவாசகத்துக்குக் காலத் தால் செய்யப்பட்ட உரையாகக் கொள்ளவேண்டும். அப்படிக்கின்றி திருவாசகத்தைத் திருத்தத்துக்கு இட மில்லாத சரித்திர ஏடாகக் கொள்ளுவது அறிவுக்கு முரண்பட்ட போக்காகும்.

அறிவுக்கு முற்றிலும் முரணாகச் செல்லும் மதத்திற்கு ஆயுள் மிகக் குறைவு. அத்தகைய வைதீக மதம் வேறு மக்களிடையே வாழலாம். அந்த மக்களுக்கு வாழ்வும் தரலாம். ஆனால், அது போன்ற முரட்டுப் போக்குடைய மதம் தமிழகத்தில் வாழவோ, தமிழ்மக்களுக்கு வாழ்வுதரவோ முடியாது.

ஏதேனும் ஒரு பெயரில், தெய்வத்தை ஏற்று, ஏதாகிலும் ஒருவழியில் அந்தத் தெய்வத்தை வழி படுவோர் அனைவரும் ஆத்திகரே. இந்தக் கொள் கைக்குத்தான் 'சமரச சன்மார்க்கம்' எனப் பெயர் கொடுத்தார் வள்ளலார். இந்தச் சமரச சன்மார்க்கமே ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இனத்தார் கடைப்பிடித்து வரும் மதக் கொள்கையாகும்.

இந்தச் சன்மார்க்கப் பாதையில் தமிழர் சென்ற கால் தான் தமிழ்நிலத்தில் நடைபெற்ற மதப் போராட்டங்கள் மற்போராகவோ, கற்போராகவோ நிகழாமல் அறிவுப் போராக நிகழ்ந்தன. ஆம்; இங்குச் சமயப் போருக்குப் பயன்பட்ட கருவிகள் கற்களும் கத்திகளும் அல்ல; கவிதைகளே. சண்டையிடும் இருவர் கற்களால் அடித்துக் கொண்டால் நாம் காத தூரத்துக்கு அப்பால் நின்றுதான் அஞ்சிய நெஞ்சோடு அதைக் காண்போம். ஆனால், சண்டையிடுவோர் ஒருவரை யொருவர் கனிகளால் அடித்துக் கொண்டால் அவர்களுடைய அண்டையிலே நெருங்கி அந்தக் கனிகளைப் பொறுக்கி எடுக்க முயல்வோம்.

அதுபோல, சைவத்துக் கெதிராக சமணர் சிந்தாமணிக் காப்பியம் இயற்றினர். சமணத்துக் கெதிராக சைவப்பெரியார் சேக்கிழார் பெரிய புராணம் எழுதினார். இரண்டு சமயங்களுக்கு எதிராக பௌத்தத்தை வளர்க்க மணிமேகலை காப்பியத்தை இயற்றினார் சாத்தனார். ஆனால், மதக் காழ்ப்புக்கும் கலகங்களுக்கும் அப்பாற்பட்ட இன்றைய தமிழர்களாகிய நாம் எல்லாச் சமயக் காப்பியங்களையும் விருப்பு வெறுப்பின்றி, நமது சொந்த இலக்கியங்களாகவே மதிக்கின்றோம். அப்படியே பக்தி இலக்கியங்களிலும், திருவாசகத்தைப் போற்றும் சைவர்கள், நாலாயிரப் பிரபந்தத்தையும் மதிக்கின்றனர். பிரபந்தங்களைப் பாடி மகிழும் வைணவர்கள், தேவாரப் பாடல்களையும் படிக்கின்றனர். திருப்பாவை - திருவெம்பாவை மாநாடே இதற்குச் சிறந்த சான்று. மதத்திற்கு மதம் வளர்க்கப்பட்ட வேற்றுமையும் விரோதமும் அகன்றதுபோல, மதத்துக்கும் அறிவுக்கும் இடையே இருந்துவரும் வேற்றுமையும் அகலவேண்டும். ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல அறிவும் மதமும் பொருந்தியிருக்க வேண்டும். நாணயத்தின் ஒருபக்கம் தேய்ந்திருந்தாலும், அந்த நாணயம் செல்லுவதில்லை. அதுபோல,

அறிவுக்குப் பொருந்தாத மதநம்பிக்கையோ மதஒழுக்கங்களுக்குப் பொருந்தாத அறிவோ பூரணத்துவம் பெற்ற அறிவு ஆகாது.

சங்க இலக்கிய கண்கொண்டு பார்த்தால் தமிழருடைய மதம் அறிவுக்குப் பொருந்துவதாக இருக்கக் காணலாம். 'அறிவான தெய்வமே' என்று பாடிய தாயுமானவர் அந்த ஆண்டவனையும் அறிவியக்கமாகவே கொண்டு வழிபட்டார். அடித்தளத்திலுள்ள பாமர மக்களுக்காக அவர்களுடைய வாழ்க்கையை ஆனந்தமாக்கப் படைக்கப்பட்ட கற்பனைகளையெல்லாம் அறிவுடையோர் தலையிலும் சுமத்த முயற்சிக்கக் கூடாது.

மாணிக்க வாசகர் தலயாத்திரை செய்தார். ஆலயங்களைச் சுற்றினார். கோவிலுக்கு வெளியே நின்று பக்திப்பாடல்களைப் பாடினார். ஆனால் இதையெல்லாம் செய்யாமல் இருந்த இடத்திலிருந்தே அவர் ஆண்டவனை வழிபட்டிருக்க முடியும். ஆனால், புறச் சமயங்களின் போட்டிகளிலிருந்து சைவசமயத்தை வளர்க்கும் பொறுப்பேற்ற நிலையில் அந்தச் சடங்குகளை எல்லாம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கேற்பட்டது.

நமது காலத்தில் நமது கண்ணெதிரே வாழ்ந்த காந்தியடிகள் தெய்வநம்பிக்கையிலும் சரி, ஆன்மஞானத்திலும் சரி மாணிக்கவாசகருக்குக் குறைந்தவரல்லர். ஆனால், திருவாசக ஆசிரியரைப்போல தலயாத்திரை செய்யாமல்- தீர்த்தங்களில் முழுகாமல்- பக்திப்பாடல்களைப் பாடாமல் தூய்மையான தெய்வ பக்தராக விளங்கினார். மாற்றான் விட்ட குண்டு மார்பில் பாய்ந்து மரணத்தைத் தழுவியபோதும் தமது இரு கரங்களையும் குவித்து 'அரேராம்' என்று சொல்லித் தமது இஷ்ட தெய்வத்தை வழிபட்டார்.

காந்தியடிகளிடம் நாம் கண்ட இந்தக் காட்சி தெய்வ பக்திக்கான புதிய வியாக்யானமாகும். உயிர்க் குலத்தின் தொண்டனுக—உலகமக்களின் தோழனுக வாழ்ந்ததன் மூலம், உத்தமமான தெய்வபக்தராகவும் விளங்கினுர் காந்தியடிகள். இருபதாம் நூற்றுண்டின் மாணிக்கவாசகராக விளங்கினுர் காந்தியடிகள். அவருடைய வாழ்க்கை வரலாறு திருவாசகப் பாட்டின் உரை எனலாம்.

இப்படித் திருவாசகத்தை, வள்ளலார் கூறிய வியாக்யானத்தை ஒட்டியும், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்ருேடு ஒட்டியும் பார்த்துப் பய னடைய வேண்டும்.

நமது பிள்ளைகளுக்கு விஞ்ஞானக் கல்வி பயில்விப் பதில் நாம் அளவு கடந்த ஆர்வம் காட்டுகிருேம். பழைமையில் ஊறிப்போன படு வைதீகர்கூட தனது பிள்ளைக்கு ஆங்கிலக் கல்வி அளிக்கத் தவறுவதில்லை. மேல் படிப்பில் விஞ்ஞானம் பயில்விப்பதை ஒரு பெருமை யாகவும் கருதுகின்ருர். இப்படி ஆங்கிலக் கல்வி பயின்று விஞ்ஞான அறிவைப் பெற்ற மாணவர்கள் சமயத்துறையில் நம்பிக்கை யுடையவர்களாக இல்லை- இருக்கமுடியவில்லை. அதற்காக மாணவர் உல கத்தையே குறை கூறுகிருேம். அவர்கள் எல்லாம் கெட்டுப் போய்விட்டதாகவும் குற்றம் சாட்டுகிருேம்.

உண்மையில் ஆங்கிலக் கல்வியும் விஞ்ஞான அறிவும் பல்வேறு துறைகளில் நமது பழைய நம்பிக்கை களைப் பொய்யாக்கி விட்டன. சூரியன் பூமியைச் சுற்றுவதாகத் திருமுருகாற்றுப் படையிலும் சிலப்பதி காரத்திலும் படிக்கிருேம். ஆனுல், இன்றை விஞ்ஞானி கள் பூமிதான் சூரியனைச் சுற்றுகிறதென்று தெரிவித்து விட்டனர். அதை நாமும் ஒப்புக் கொண்டு விட்டோம்.

இதுபோல, சமய இலக்கியங்களில் வரும் அற்புதங்களையெல்லாம் சரித்திர நிகழ்ச்சிகளாக

நெடுங்காலம் நம்பியிருந்தோம். ஆனால், புதிதாகக் கிடைத்த சரித்திர ஞானமும் ஆய்வுத் திறனும் அந்த அற்புதங்கள் வெறும் கற்பனைகளே என்பதை நமக்கு விளக்கி விட்டன.

சமூகத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வரக் காண்கின்றோம். சமயம்மட்டும் இதற்கு விதிவிலக்கன்று. சமய நம்பிக்கைகளும், நடைமுறைகளும்கூட அவ்வப்போது மாற்றப்பட்டு மறுமலர்ச்சி அடைந்துள்ளன. அத்தகைய மறுமலர்ச்சியைத் துவக்கி வைத்தவர்களுள் மாணிக்கவாசகர், சங்கரர், ராமானுஜர், வள்ளலார், காந்தியடிகள் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

இந்த உண்மையை மறந்துவிட்டு ஏதோ சமய நம்பிக்கைகள், நடைமுறைகள், சடங்குகள் ஆகிய அனைத்தும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மாறுதலின்றி நிலைத்திருப்பதாக நாம் நினைப்பது தவறு.

சமயத்துறையில் சிந்தைக்கு இன்பம் தரும் கொள்கைகளைவிட, சமய பேதங்களை நிலைநிறுத்தும் சின்னங்களுக்கே நாம் முக்கியத்துவம் தருகிறோம். இந்த நிலை மாற வேண்டும்.

தமிழினம் பல்வேறு சமயத்தினர் அடங்கிய கூட்டுக் குடும்பமாகும். எனவே, தமிழரிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமானால், சமய பேதங்களை வற்புறுத்தும் சின்னங்களுக்கும் பேதங்களை நினைப்பூட்டும் செய்திகளுக்கும் நாம் முக்கியத்துவம் தராமலிருக்கப் பழகவேண்டும். தமிழில் உள்ள பக்தி நூற்கள் வாழும்வரை, சமய உணர்வும் தெய்வ நம்பிக்கையும் வாழ்ந்தே தீரும். தமிழகம் தெய்வ நெறியின் பிறப்பிடம். அதனாற்றான் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று முதலில் கூறி அப்புறம் 'என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றார் மாணிக்கவாசகர். கடந்த ஞானியும் தாய்மொழிப் பற்றைத் துறந்ததில்லை—

துறக்கவும் முடியாது. தாய்நாட்டுப் பற்றும் அத்தகையதே! மாணிக்கவாசகரும் இதற்கு விதிவிலக்கல்லர். ‘பாண்டி நாடே பழம்பதி’ என்றும், ‘தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாடு’ என்றும், ‘தென் பாண்டி நாட்டானே’ என்றும், ‘தென்னாடுடையவனே’ என்றும் பாடித் தமிழையும் இறைவனையும் தாம் பிறந்த பாண்டி நாட்டோடுப் பிணைத்துப் பெருமைபடுத்தியிருக்கிறார் மாணிக்கவாசகர்!

நாம் அகண்டாகாரமான வானத்தில் பறக்க விரும்பலாம். அதற்கும் ஒரு விமானத்தின் துணை தேவைப்படுகிறது.

நாம் விரிந்து பரந்துகிடக்கும் பெரும் கடலிலே பிரயாணம் செய்ய விரும்பலாம். அதற்கும் ஒரு சிறு கப்பலேனும் தேவைப்பட்டு விடுகின்றது.

அதுபோல, நாம் மனித குலம் முழுவதற்கும் சேவை செய்ய விரும்பும் பரந்த நோக்கமுடையவர்களாக இருக்கலாம். ஆனால், ஏதேனும் ஒரு மதத்தின் நெறியைப் பின்பற்றிக் கொண்டுதான் மற்ற மதத்தினரோடு சகோதரப் பான்மையுடன் வாழமுடியும்.

நமது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை உலக மக்களுக்கு எல்லாம் எடுத்துச் சொல்ல நாம் எண்ணலாம். அதையும் ஏதேனும் ஒரு மொழியின் மூலம்தான் சொல்ல முடியும். அந்த மொழி நமது தாய்மொழியாகவன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்!

கடல் சூழ்ந்த நில உலகம் முழுவதையும் நமக்குச் சொந்தமாக எண்ணலாம். ஆனால், ஏதேனும் ஒரு நாட்டின் பிரஜையாக நம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் இந்த உலகில் வாழ்க்கை நடத்த முடியாது. ஆகவே, மாணிக்கவாசகர் வழியில் பற்றற்று, துறவு பூண்ட அடியாராயினும், தாய்மொழிப் பற்றை— நாட்டுப் பற்றைத் துறக்கமுடியாது — துறக்கவும் கூடாது.

ஏதோ மதத்தைப் பற்றி—தெய்வ நெறியைப்பற்றி என் மனத்தில் பட்டதை எல்லாம் வெளிப்படையாகச் சொன்னேன். அவற்றை முடிந்த முடிபுகளாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை.

நடுநிலைமையோடு ஆராய்ந்து நல்லவற்றைக் கொள்ளுங்கள். அல்லவற்றைத் தள்ளுங்கள். தமிழகம் வாழையடி வாழையாகக் கடைப் பிடித்துவந்த தெய்வ நெறியில், ஒழுக்க வாழ்வில் காலூன்றி நிற்கவேண்டும். இதுவே என் பிரார்த்தனை.



# சர்வ சமய உறவு

என் பெயரைக் கொண்டே நான் சைவன் என்பதை அறிவீர்கள். ஆனால் தோற்றத்தால், தொண்டால் என்னைச் சைவனாக ஏற்க மாட்டீர்கள். 'சைவம்' என்றால் என்ன? புறச் சின்னங்கள் மட்டுமே சைவம் என்று நான் கருதவில்லை. தெய்வம் ஒன்று உண்டு என்று நம்பி, அதனை வழிபடுவதும், உயிர்கள்பால் கருணை காட்டுவதும், 'எல்லா உயிர்களும் இறைவன் படைப்பு' என்று எண்ணுவதும், துன்பப்படுவோர்க்குத் துணையாக இருப்பதும் சைவ நெறிகளென்றால், நான் அசல் சைவனாவேன்.

இந்த நெறிகளை யெல்லாம் நம்பி, முடிந்தவரை அவற்றை நடைமுறையிலே கடைப்பிடிக்கும் சைவனாகவும் நான் வாழுகின்றேன்.

சைவ சமயப் பிரசாரத்திற்கென்றே பல நிலையங்கள் ஏற்பட்டிருப்பதை நாமறிவோம். சமயப் பிரசாரம், தெய்வ உணர்வு பிறந்த காலந்தொட்டே தோன்றி, வளர்ந்து வருகிறது. பத்துப் பாட்டில் ஒரு பாடலான 'திருமுருகாற்றுப்படை'யில் சைவ அடியார்களைப் பற்றிய செய்திகளைப் படிக்கிறோம்.

"சீரை தைஇய உடுக்கையர்; சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்;
மாசுஅற இமைக்கும் உருவினர்; மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்; நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர்; இகலொடு

செற்றம் நீக்கிய மனத்தினர் ; யாவதும்
கற்ருேர் அறியா அறிவினர் ; கற்ருேர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் ; காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் ; இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் ! மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் ''

என்ற வரிகளில், சங்ககாலச் சமயச் சான்ருேர்கள், "தவத்தால் உடல் இளைத்தவராய், பல வேளைகளில் உண்ணுவிரதம் இருந்து சில வேளைகளிலே உண்ணக் கூடியவராய், ஒளிபொருந்திய திருமேனியராய், சினமில்லா மனத்தினராய், கற்ருேர்கள் அறியா அறிவினராய், கற்ருேர்களெல்லாம் தம்மை அறிவின் வரம்பாகக் கொள்ளும் பேரறிவினராய், இன்னல் என்பதே இன்னதென அறியாதவராய் இருந்தனர்" என்கிருர் தமிழரின் தனித் தெய்வமான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளை ஒரு பாட்டில் வருணித்த நக்கீரப் பெருமான்.

ஆனுல், சங்க காலத் தமிழகத்தில் சைவப் பெரியார்கள் பிரசாரத்திற்காகத் 'தல யாத்திரை' நடத்தியதாகத் தெரியவில்லை. அப்போதும், தெய்வீகத் தலங்கள் இருந்தன ; கோயில்களும் இருந்தன. ஆனுல், அப்போது யாத்திரை தேவைப்படவில்லை. பிற சமயநெறிகள் தமிழகத்தில் புகாத காலத்தில், பிரசார யாத்திரை எதற்கு ? சமயப் பெரியார்களும், ஆசாரியர்களும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே அறநெறிகளைப் போதித்தார்கள்.

"புராணகாலம்" எனப்படும் ஒரு காலகட்டத்தில் தான் 'பிரசார யாத்திரை' செய்தனர், சமயாசாரியார்கள். அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்க வாசகர் ஆகிய பெரியோர்கள் எல்லாம் ஊர் ஊராகச் சென்றனர். பசிவந்தபோது இரந்து உண்டனர் ; உறக்கம் வந்தபோது வரப்பே தலையணையாக, வாய்க்காலே

பஞ்சு மெத்தையாகக் கொண்டு உறங்கினர். காடு, மலை, ஆறு ஆகியவற்றை எல்லாம் கடந்து கால்கடுக்க நடந்தனர். இன்றுள்ள நவீன வாகன வசதிகள் இல்லாத அந்த நாளில் எத்துணையோ தொல்லைகளுக்குத் துணிந்து பாத யாத்திரை செய்தனர். உண்டி தரவோ, உடை கொடுக்கவோ, வருந்தி அழைத்து விருந்து வைக்கவோ வழியில் இடை இடையே ஊர்கள் இல்லாத காலமது.

பிரசார யாத்திரை செய்தவர்கள் சாமானியப் பட்டவர்களல்லர். மெய்ஞ்ஞானப் பேராசிரியர்கள். அப்படிப்பட்ட பெரியோர்கள் நாடெல்லாம் அலைந்து திரிந்து ஆத்திக சமயத்தை வளர்க்க வேண்டிய அவசியமென்ன ஏற்பட்டது ? ஆம்; அவர்கள் காலத்தில் புறச் சமயங்கள் தமிழகத்தில் புகுந்தன. அவை அகச் சமயங்களோடு போட்டியிட்டதன்றி, கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினரான தமிழருடைய தனிப் பண்பாடுகளுக்கே அறைகூவல் விட்டன; தமிழகத்தின் அகச் சமயங்களின் நெறிகளுக்கேயன்றி, தமிழர்களுடைய பழக்கவழக்கங்களுக்கெல்லாம் மாறுபட்ட வாழ்க்கை முறையைப் போதித்தன. அந்தக் காலத்தில்தான் சைவ சமயாசாரியர்கள் பாத யாத்திரை நடத்தி மக்களோடு தொடர்பு கொண்டனர். புற சமயத் தலைவர்கள் மன்னர்களில் சிலரை மதம் மாற்றியதால், அகச் சமயத் தலைவர்கள், மக்களைத் தங்கள் வசம் இழுத்துக்கொண்டு—அவர்களுடைய பலத்தால்—மன்னர்களைத் திரும்பவும் சைவர்களாக்கினர்.

இதையெல்லாம் இங்கு நான் கூறுவது ஏன் ? சமயப் பிணக்கை வளர்க்கவா ?—இல்லை. சமயவாதிகள் பொது மக்களோடு தொடர்பு கொள்ளவேண்டும்; பொதுமக்கள் தங்களைத் தேடி வருவார்கள் என்று காத்திராமல், தாங்களே மக்களைத் தேடிச் செல்ல

வேண்டும். இதுதான் சைவ சமயத்தின் சரித்திரம் என்பதை உணர்த்துவதற்காகவே, பழைய செய்தி களை யெல்லாம் கூறினேன்.

ஏழை—எளியவர்களான பாமரமக்களை அணுகு கின்றபோது, அவர்களுடைய வாழ்க்கைத் தேவை களைப் பூர்த்தி செய்யும் சாதனங்களோடு செல்ல வேண்டும். வீட்டுக்குவரும் விருந்தாளி அவ்வீட்டி லுள்ள குழந்தைகளுக்காகப் பண்டங்கள் வாங்கி வருவதைப் பார்க்கிறோம். காரணம், வீட்டிலுள்ள பெரியவர்களின் உள்ளங்களைக் கவர-அவர்களுடைய அன்புக்குரிய குழந்தைகளுடன் உறவு கொள்ள வேண்டும் என்பதுதான். அதுபோலவே, சேரிகளிலே யும் பட்டி தொட்டிகளிலேயும் வாழுகின்ற பாமரர் களின் அன்றாடத் தேவைகளை அறியவேண்டும். உண்டி, உடை, குடியிருப்பு போன்ற சாதனங்கள் அவர்களுக்குக் கிடைக்கும் வகையில் நம்முடைய பிரசார முறை மாறவேண்டும்.

சைவ சமயத்தைப் பரப்புகிறபோது, அடிப்படைத் தருமங்களை மாற்றிக்கொள்ளக் கூடாதுதான். ஆம்; லட்சியத்திலே பழைமையை விடாப்பிடியாக நாம் பிடித்துக் கொள்ளவேண்டும். ஆனால், பிரசாரத் திற்குப் பயன்படக்கூடிய கருவிகளை—கருத்துக்களை இந்த நூற்றாண்டிற்கேற்ப மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்.

சைவத்திலோ, வைணவத்திலோ, லட்சிய ரீதி யான கட்டுக்கோப்பு இல்லை. சகோதர சமயமாகிய இசுலாத்திலே ஒரு நபர், குர்ஆன் ஓதல், நபிகள் நாயகத் தின் தலைமையை ஏற்றல், மெக்காவைப் புனிதத் தல மாகக் கருதல் ஆகிய மூன்றையும் ஏற்றுக்கொள்ளா விடில், அவர் இசுலாமியராகக் கருதப்படமாட்டார்.

கிறித்தவர்களில் 'பிராடஸ்டண்டுகள்' என்றும், 'கத்தோலிக்கர்' என்றும் இரண்டு பிரிவினர் உண்டு.

என்ருலும், ஏசுவின் தலைமையும், பைபிள் ஓதலும் இரண்டு சாரார்க்கும் உடன்பாடே. அந்த இரண்டை யும் ஒப்புக்கொள்ளாத எவரும் கிறித்தவராக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்.

இதுபோன்ற கட்டுக்கோப்பும் உறுதிப்பாடும் இந்து சமயத்தில் முன்பு இருந்திருக்கலாம். இப்போது இல்லை என்பது வெளிப்படை. தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பாடிய பெரியோர்கள் எல்லாம் சைவ சமயத்தை வளர்க்கவே பாடுபட்டார்கள். ஆனால், அவர்களிலே ஒவ்வொரு பெரியோர் பெயராலும் 'பக்தர் குழு' தோன்றி, அவை பல உபமதங்களாகி விட்டன.

அதோடன்றி, அந்தண நாயனுரை அந்தணர் களும், வேளாள நாயனுரை வேளாளரும் தனிச் சிறப்புக் கொடுத்துப் போற்றுவதும் நாட்டில் நடை முறையில் இருப்பதைக் காணலாம். ஆம்; சமயப் பற்றையும் ஊடுருவி விட்டது சாதிப்பற்று.

இத்துணைப் பிரிவுகளும், பிளவுகளும் இருந்தால், சைவநெறி மட்டுமல்லாமல், சமய உணர்வே அழிந்து போகும்.

வெடிப்புகள் விழுந்துவிட்ட பழைய கட்டிடம்போல் இருக்கிறது இன்றைய இந்துமதம். அந்த வெடிப்பு களில் சமயத் துவேஷம், சாதிவெறி, நாத்திக உணர்வு என்ற விஷ ஜந்துக்கள் புகுந்துவிட்டன. அவற்றை அழிக்க முயன்ருல்மட்டுமே போதாது. வெடிப்புகள் இருக்கும் வரை அவற்றில் அந்த ஜந்துக்கள் திரும்பத் திரும்பப் புகுந்துகொண்டுதானிருக்கும். ஆகவே, வெடிப்புகளைப் பழுது பார்க்கவேண்டும்.

ஞான சம்பந்தரை அந்தணர் என்றும், நாவுக்கர சரை வேளாளர் என்றும் பாடியுள்ளனர் பிற்கால அடியார்கள். ஆனல், அந்த சாதிப் பெயர்களுக்கு அவர்கள் காலத்தில் கொள்ளப்பட்ட பொருள்களே

வேறு; அந்தப் பொருள்களுக்குப் பொருந்தவா இன்றைய அந்தணர்களும், வேளாளர்களும் வாழ்கின் றனர்—இல்லையே!

விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் வேற் றுமை இருக்கலாம். ஆனால், நானறிந்தவரை ஒன்றுக் கொன்று விரோதமானதல்ல. விஞ்ஞானத்திலும் சிறந்தது மெய்ஞ்ஞானம். இன்றைய விஞ்ஞானி களுக்கு மெய்ஞ்ஞான உணர்வு இல்லை. அது தேவை யில்லை என்ற முடிவுக்கும் அவர்களில் பலர் வந்து விட்டனர், தங்கள் அஞ்ஞானத்தால்! ஆனால், சமயா சாரியார்களான மெய்ஞ்ஞானிகளுக்கு விஞ்ஞான அறிவும் இருந்தது.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"

என்று மாணிக்கவாசகர் பாடிய வரிகளிலே, 'பரிணும விதி'ப்படி விஞ்ஞானி வகுத்துள்ள முறையை ஒட்டி, உயிர்களின் தோற்றம், வளர்ச்சி, அவற்றினின்று கிளைத்த பல்வேறு வர்க்கங்கள், அவற்றின் தலைமை ஆகியவற்றை யெல்லாம் கூறுகின்றார். ஆனால், இந்த உயிர்த் தத்துவ ஆராய்ச்சியில் இன்றைய விஞ்ஞானி களுக்கும், மெய்ஞ்ஞானியான மாணிக்கவாசகருக்கும் அடிப்படையில் ஒரு வேற்றுமை இருக்கிறது. விஞ்ஞானி பிறப்பு—வளர்ப்பு—அழிவு என்பவற்றைக் காரண — காரியத்தொடர்புகொண்டுமட்டுமே நிச்ச யிக்கிறார். மணிவாசகரோ, நல்வினை—தீவினை என்ற இரண்டையும் உயிர் வர்க்கங்களின் தோற்றம்— வாழ்வு—ஒடுக்கம் ஆகியவற்றோடு பிணைக்கின்றார்.

இது எப்படியாயினும் சரி; இன்றைய விஞ்ஞானிகளுக்குள்ள பார்வைத் தெளிவு, காரண—காரியத் தொடர்புகொண்டு ஆராய்ச்சி செய்யும் அறிவு, முன்னர் வாழ்ந்த சமயாசாரியர்கட்கும் இருந்திருப்பதை மறப்பதற்கில்லை. ஆனல், அவர்கள் அதோடு நின்றுவிடாமல், அதற்கு மேலேயும் சென்று மெய்ஞ் ஞானம் பெறவும் விரும்பினர்கள்.

மனிதனுடைய மனத்திலே ஒழுக்க உணர்வைப் புகுத்தவும், சமுதாயத்தில் ஒழுங்கு முறையை நிலை நாட்டவுமே சமயங்கள் தோன்றின.

மண், பாலை நிலம் ஆகிவிட்டால் இன்றைய விஞ்ஞானியின் துணைகொண்டு அதனைச் சோலையாக்கிவிடலாம்; ஆக்குவதையும் பார்த்திருக்கிரும், ஐரோப்பாவில். ஆனல், மக்களுடைய மனம் ஒழுக்கமற்ற பாலையாகிவிட்டால், அதனைச் சோலையாக்க விஞ்ஞானியால் முடியாது; மெய்ஞ்ஞானியால்தான் முடியும்.

தனி நபர்களிடையே ஒழுக்கத்தை வளர்க்கவே சமயநெறிகளும், சாத்திர நூல்களும், தோத்திரப் பாடல்களும் தோன்றின.

சமயம் மனித குலத்தை ஒன்றுபடுத்தவே தோன்றியது. ஆதிகாலத்தில், மக்களை ஒன்றுபடுத்தும் சாதனமாக இருந்தது மொழி ஒன்று மட்டுமே. அதனல், மொழி வேறுபாடுடைய நாடுகளும், அவற்றில் வாழ்ந்த இனங்களும் ஒன்றோடொன்று தொடர்பற்றுத் தனித் தனி தீவுகள்போல் இருந்தன. அந்தத் தீவுகளிடையே தொடர்பு ஏற்படுத்தும் பாலமாக அமைந்தது சமயம்.

துரதிருஷ்டம் என்னவென்ருல் இப்படி மக்களை சமயம் என்னும் சாதனம் கொண்டு ஒன்றுபடுத்தச் செய்யும் முயற்சி பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில், பெரியோர்கள் பலரால் செய்யப்பட்டது.

அதனுல், சமயங்களும் பலவாகிவிட்டன. ஆனுல், அந்தச் சமயங்கள் எல்லாவற்றினுடைய பொது நெறி, ஆன்மகோடிகளுக்கு எல்லாம் மேலான பரமான்மா ஒருவன் உண்டு என்பதே.

இந்த உண்மையைச் சொல்லுவதிலே, ஒழுக்க நெறிகளைப் போதிப்பதிலே, இடைக்காலத்தில் சமயங் களிடையே போட்டி யேற்பட்டு, அது பிற்காலத்தில் போராட்டமாகவும் மாறிவிட்டது.

ஒரு வீட்டில் அண்ணன் தம்பிகளாக உள்ள நால்வர் ஒருவரையொருவர் 'முட்டாள்' என்று கூறிக் கொண்டால், 'அந்த வீட்டில் உள்ள அத்தனை பேருமே முட்டாள்கள்' என்று வீதியிலே செல்பவன் கூறுவது இயற்கை. அதுபோல, ஒவ்வொரு சமயவாதி யும் 'என் சமயம்தான் பெரியது; உயர்ந்தது. அந்தச் சமயம் இழிந்தது' என்று கூறிப் பரஸ்பரம் ஏசிப் பேசிச் சண்டையிட்டதால், ஒழுக்கத்தை நம்பாத ஒரு கூட்டம் 'எல்லாச் சமயங்களுமே மோசம்' என்று பிரசாரம் செய்யத் தொடங்கியது; அதற்குச் சமயவாதிகளின் பேச்சுக்களிலிருந்தும் பாடல்களிலிருந்தும் சான்றுகள் காட்டவும் முற்பட்டது.

இந்த இழி நிலை நீங்க, உலக சமயங்கள் எல்லாம் ஒன்றுபடவேண்டும். பெரிய மதம், சிறிய மதம் என்ற பேச்சு ஒழியவேண்டும்.

மதங்கள் பலவாயினும் தெய்வம் ஒன்றே என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறுதி பெற வேண்டும். மக்களிலே ஒவ்வொருவரும் சமயநெறி களை நன்கு உணர்ந்து, சைவத்தைக் கடைப்பிடிக்கும் அறிவை வளர்ப்பதற்குப் பிரசாரம் செய்யச் சமய நிலையங்கள் முற்படவேண்டும். மக்கள் புறச்சின்னங் களை அணிந்து, அடிக்கடி வந்து போகும் பண்டிகை களைக் கொண்டாடிஞல் மட்டுமே சைவ சமயம் வாழ முடியாது. சமயங்களின் பேரால் பண்டிகைகளைத்

தோற்றுவித்தார்களே நம் முன்னோர், எதற்காக? பண்டங்களைத் தின்று உடலைப் பெருக்கவா? இல்லை. பண்டை நாளில் ஒரு மொழியினர் இன்னொரு மொழியினரோடு மதம் காரணமாகத் தொடர்பு கொள்வதற்கே பண்டிகைகள் பயன்பட்டன. தீபாவளிப் பண்டிகை என்றால், இமயம் முதல் குமரி வரை உள்ள பல்வேறு மொழி வழி இனங்கள் எல்லாம் ஒன்றுபட்டு அதனைக் கொண்டாடுவதால், இந்திய மக்களிடையே ஆத்மார்த்தமான ஓர் உறவு ஏற்படுகிறதல்லவா! ஆனால், சைவ மதம், வெறும் பண்டிகை மதமாக இல்லாது, உண்மையான பக்தி நெறியைக் கடைப்பிடிக்கும் மக்களைக் கொண்ட மதமாகவேண்டும்.

முன்னாளைய சமயகுரவர்கள், ஞானசம்பந்தர், நாவுக்கரசர் போன்றவர்கள் 'திருநீறு அணியுங்கள்; தேவாலயம் செல்லுங்கள்; இறை வழிபாடு செய்யுங்கள்' என்று, இருந்த இடத்திலிருந்தே பாட்டெழுதி மக்களுக்கு உபதேசம் செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தால் சைவ சமயம் புறச்சமயங்களை வென்று வளர்ந்திருக்கவோ, இற்றை நாள்வரை அது வாழ்ந்திருக்கவோ முடியாது. மாறாக, அவர்களே கோயிலுள்ள தலங்களுக்கெலாம் 'பாதயாத்திரை' செய்தார்கள்; ஊர் மக்களை யெல்லாம் ஒருங்கே கூட்டி, பாடியும் ஆடியும் பரமனைப் பக்தியோடு வழிபட்டார்கள். அதனால் சமயாசாரியர்கள், என்னவெல்லாம் செய்தார்களோ-அவற்றை யெல்லாம் மக்களும் செய்தார்கள். அது தான் சமயப் பிரசார முறை.

சைவ சமயாசாரியார்கள், புறச்சமயங்களை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். அந்தப் போரிலே, அவர்களுக்கு வெற்றி தந்த கருவிகள் வளைந்த வில்லும் கூர் பொருந்திய அம்புகளுமல்ல; சின்னஞ்சிறு தாளமும் செந்தமிழ்ப் பாடல்களுமாகும்.

இப்படிப்பட்ட முயற்சிகளை யெல்லாம் நம் முன்னோர்கள் செய்திராவிடில், மனித குலத்தினிடையே

இன்று நாம் காணும் ஒற்றுமை தோன்றி யிருக்கவே முடியாது; நாகரிகமும் வளர்ந்திருக்காது.

இந்த மரபைப் பின்பற்றி, இந்த நூற்றுண்டின் ஞானசம்பந்தராக, நாவுக்கரசராக வாழ்ந்தார் காந்தி யடிகள். சமூகத்திற்கே யன்றி, சமயத்திற்கும் தொண்டு புரிந்தார். இந்து—கிறித்தவ—இசுலாமிய சமயங்களிடையே உறவை வளர்க்க முயன்றுர். மக்கள் வாழும் ஊர்தோறும் சென்று அவர்களோடு தொடர்புகொண்டார். லட்சாதிலட்சம் மக்கள் மத்தி யிலே, அவர்களோடு தாமும் கலந்து திறந்தவெளி யிலே தெய்வ வழிபாட்டை நடத்திஞர். அவரை வெறும் அரசியல் தலைவராக மட்டு மல்லாமல், இருபதாம் நூற்றுண்டின் சமயாசாரியாராகவும் நான் கருதுகிறேன். ஆம்; தோற்றத்திலும் தொண்டு முறையிலும் இந்த நூற்றுண்டில் ஒரு சமயாசாரியார் எப்படி இருக்கவேண்டும், எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்குக் காந்தியடிகள் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிஞர்.

சைவம், தமிழரிடையே தோன்றிய சமயம் என்றும், தமிழர் எல்லோரும் முன்னெரு காலத்தில் சைவர்களாகவே இருந்தனரென்றும் சொல்லப்படுகின் றன. ஆனல், இன்றைய நிலைமை வேறு. பிற்காலத் தில் தமிழரிலே பலர், வேறு சமயங்களைத் தழுவிச் சைவ சமயத்திற்கு அயலாராகி விட்டனர். ஆம்; தமி ழகத்திலே உள்ள சமண, பௌத்த, இசுலாமிய, கிறித் தவ மக்களிலே மிகப் பெரும்பாலோர் மதம் மாறியவர் களே. மதம் மாறிய பின்னரும், அவர்களெல்லாம் தமி ழினத்தவரே யாவர். 'சைவர்' என்ற சொல்லுக்குத் 'தமிழர்' என்று பொருள் சொல்வதற்கில்லை. தமிழ் மொழியும் தமிழ் நிலமும் சைவர் அல்லாதாருக்கும் சொந்தமாகும். இனம் வேறு; மதம் வேறு. இந்த உண் மையைச் சைவ சமயப் பிரசாரகர்கள் மறந்துவிடக் கூடாது.

சமய நெறிகளுக்கு அறைகூவல் வரும்போது, எதிர்ப்புகள் கிளம்பும்போது, சைவ பிரசாரகர்கள் பொறுமை யிழந்தோ, ஆத்திரப்பட்டோ பேசக்கூடாது. அறிவை அறிவால்தான் வெல்லவேண்டும். சைவத்திற்கு அந்தச் சக்தி உண்டு.

தெய்வம் ஒன்று இல்லை யென்று சொல்வது பேய்த்தனம் என்றார் வள்ளுவர். தெய்வம் ஒன்று உண்டு என்று உலகம் ஒப்புக்கொண்டு விட்டபிறகு அது இல்லை யென்று கூறுவோன் 'வையத்துள் அலகையாய் வைக்கப்படுவான்' என்பது குறள் வாக்கு.





# கலையும் கடவுளும்

தமிழர்கள் கலை வேறு; கடவுள் வேறு என்று எந்தக் காலத்திலுமே எண்ணியதில்லை. கலையையே கடவுள் வடிவில் கண்டு கைதொழுது வணங்கினர். கலையிலிருந்து அழகைப் பிரிக்க முடியாது. அது போலவே, கடவுள் வழிபாட்டிலிருந்தும் கலையைப் பிரிக்க முடியாது. இது தமிழ் நாட்டின் தனிச் சிறப்பு.

'கவலை' என்று எழுதி, அதன் இடுப்பை முறிப்பது போல 'வ'கரத்தை அழித்தால், மிஞ்சுவது 'கலை' தான். ஆம்; கவலையை ஒழித்துக் கலை உணர்வு பெறவேண்டும்.

கடவுளை உருவத்தின் மூலம் வழிபடுகின்றனர் பலர். உருவம் அல்லாத வகையில் வழிபடவேண்டுமென்கின்றனர் சிலர். இந்த இரண்டு தரப்பாருமே ஆத்திகர்கள்தாம்; கடவுள் நம்பிக்கை உடையவர்கள் தாம். ஆனால், கடவுள் உண்டு என்பதிலேயே நம்பிக்கை இல்லாதவர்கள்—கடவுள் வழிபாட்டு முறைகளையே நையாண்டி செய்பவர்கள்—உருவ வழிபாட்டை எதிர்ப்பதற்கு உரிமையற்றவர்கள்.

கடவுள் உண்மையை எதிர்க்கும் இங்கர்சால்கள் தமிழகத்தில் பிறந்ததில்லை. பிறந்தாலும் வெற்றியடைய மாட்டார்கள். தமிழகம் என்றென்றுமே தெய்வ நம்பிக்கையுடைய நாடு. தெய்வ நம்பிக்கை பிறந்ததே தமிழகத்தில்தான் என்பது மணிவாசகப் பெருமானின் நம்பிக்கை. அதனாற்றான்,

"தென்னாடுடைய சிவனே போற்றி"

என்று முதலில் சொல்லிவிட்டு, அதற்கப்புறம்தான்,

"என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்றார்.

தமிழ்நாட்டுக் கோயில்களிலுள்ள தெய்வச் சிலைகளிலெல்லாம் தமிழருக்கே உரிய கலைத்திறனைக் காண்கிறோம். கோயிலுக்குச் செல்லும் நாம் அங்கே கடவுளை மட்டும் வணங்குவதில்லை. கலை அழகையும் வணங்கி வழிபடுகின்றோம். நமது கடவுள் கலை வடிவாகத்தானே காட்சியளிக்கிறார்!

இராமனைச் சிலை வடிவில் வட இந்தியரும் வழிபடுகின்றனர். தென்னிந்தியராகிய நம்மிலும் பலர் வழிபடுகின்றார்கள். ஆனால், தமிழர் கண்ட இராமன், கம்பன் கூறுவதுபோல ஓவியத்து எழுதவொண்ணா உருவத்தோன். அருட்ஜோதி வள்ளலார் கூறியதைப்போல, பூவை நிறம் பழுக்க அழகொழுகும் வடிவக் குன்று போன்றவன். ஆனால், வள்ளலாரும், கம்பரும் கூறுகின்ற அழகை வடக்கே உள்ள இராமன் சிலைகளில் நான் கண்டதில்லை.

தில்லை நடராசர் உருவத்தின் கலையழகைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. பிறவியையே வெறுத்த திருநாவுக்கரசர், கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பைக் காட்டும் தில்லைக் கூத்தனின் கலையழகைக் காண்பதற்காகவேனும், "மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்று பாடினார்.

தில்லைக்கூத்தர் சிலையின் திருமுகத்தைக் கண்டதும் "எங்கு வந்தாய்?" என்று தன்னைக் கேட்பது போலிருப்பதாகக் கூறுகின்றார் நாவுக்கரசர். ஆம்; "எங்கு வந்தாய்?-என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே" என்று பாடுகின்றார்.

தமிழன், கடவுட் சிலையைக் கண்களை மூடிக் கொண்டு தொழுவதில்லை. இமைத்து இமைத்தும் காண்பதில்லை. விழித்த கண்ணை இமைக்காமல், செயலற்று, தானும் ஒரு சிலைபோன்று நின்று வழிபடு

வதே தமிழனுடைய வழக்கம். கடவுட் சிலையைக் காணுங்கால்,

"கண்ணிமைத்துக் காண்பார்தம்
கண்ணென்ன கண்ணே"

என்கின்றார் இளங்கோவடிகள்.

தமிழன் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அழகிய கலைவடிவில்தான் வழிபடுவான் என்பதற்காகவே இதை எல்லாம் கூறுகின்றேன். தமிழ்நாட்டில் உருவ வழிபாட்டை எதிர்ப்பவர்கள் கலையழகையும் சேர்த்தே எதிர்க்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஒழுக்கம் தமிழினத்தின் உயிர் போன்றது. சமயங்களும், சமய நூல்களும் ஒழுக்கத்தை வளர்க்கவே தோற்றுவிக்கப்பட்டன. ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூற்கள் தமிழில் கணக்கற்றிருக்கின்றன. இவ்வளவு ஒழுக்க நூற்கள் வேறு மொழிகளில் இல்லை. இதனால், ஒழுக்கத் துறையில் தமிழர்கள் மற்றவர்களை விடத் தாழ்ந்திருந்தார்கள் என்று அர்த்தமன்று. ஒழுக்கத்தில், மற்ற மொழியினருக்குத் தமிழர்கள் எந்தக் காலத்திலுமே குறைந்தவர்கள் அல்லர். என்றாலும், அவர்கள் தங்களுடைய ஒழுக்க வாழ்வில் திருப்தி அடைந்துவிட வில்லை. அதை மேலும் மேலும் பேணி வளர்க்க விரும்பியே நீதி நூற்களைப் பெருக்கினர். பண்டைக்காலத்தில் இருந்த தமிழர்களைப் போன்று இக் காலத்தில் வாழும் நம்மில் ஒவ்வொருவரும் ஒழுக்கத்தில் சிறந்திருக்கிறோம் என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும், ஒழுக்கக்கேடுகளை வெறுக்கும் நல்ல குணம் நம்மிடம் பரிபூரணமாக இருக்கின்றது. இது ஆறுதல் அளிக்கும் விஷயம். ஒவ்வொரு மனிதனும் தான் தவறு செய்யினும் அதே தவறை இன்னொருவன் செய்வதை விரும்புவதில்லை; வெறுக்கிறான். தனி மனிதர்களிடமுள்ள இந்த நல்ல சுபாவத்தினால்தான் தமிழ் நாட்டில் ஒழுக்கம் ஓரளவேனும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

சமயம் வேண்டாம்; கடவுள் வழிபாடு வேண்டாம். முக்கியமாக உருவ வழிபாடு வேண்டவே வேண்டாம் என்று கூறுபவர்கள், சமயத்தின் தேவை இல்லாமலேயே சன்மார்க்க நெறியை வளர்க்கட்டும்; கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இல்லாமலே மக்களிடையே ஒழுக்க நெறிகளைப் பரப்பட்டும். அப்படிச் செய்ய முடிந்தால் நல்லதுதான். ஆனால், அவர்களுக்கு ஒழுக்கத்திலும் நம்பிக்கை இல்லையே!

தமிழர்கள் கலையழகைக் கடவுட் சிலையில் மட்டுமின்றிக் காப்பியங்களிலும், கவிதைகளிலும் புகுத்தி வைத்திருக்கின்றனர். ஆகவே, கலையையும், கடவுளையும் எதிர்க்கப் புறப்பட்டிருக்கும் கூட்டத்தார் பழைய காப்பியங்களையும் கவிதைகளையும்கூட எரிக்கவேண்டுமென்கிறார்கள்.

கம்பன் கவிச் சக்கரவர்த்தி மட்டுமல்ல. கலை உணர்வும் கடவுள் உணர்வும் படைத்தவன். அதனாற்றான், அவன் இயற்றிய இராமாயணம் சமயபேதம் கடந்து தமிழர் எல்லோருடைய மதிப்புக்கும் உரியதாகி விட்டது.

வால்மீகி ராமாயணத்தின் பாத்திரங்களுடைய பண்பை—செயலை பல்வேறு இடங்களில் மாற்றியமைத்துவிட்டான் கம்பன். இந்தச் செயல் குற்றமென்று கூறிக் கம்பனை ஏசுகிறார்கள் ஒரு சிலர். உண்மையில் கம்பன் குற்றவாளி அல்ல. வால்மீகி ராமாயணத்தை அப்படியே வரிக்கு வரி—வார்த்தைக்கு வார்த்தை—கம்பன் மொழி பெயர்த்திருந்தால் அதுதான் அவன் செய்த குற்றமாக இருந்திருக்கும். கம்பனுக்குப் பகுத்தறிவு நிறைய இருந்தது. அதனால்தான் அப்படிச் செய்யவில்லை.

வால்மீகியும் கம்பனும் வெவ்வேறு காலத்தில் பிறந்து வாழ்ந்தவர்கள். இருவருக்கும் இடைப்பட்ட காலம் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். ஆம்; எட்டிப்பிடிக்க முடியாத இடைவெளி.

அதனாற்றான் கால மாறுதலுக்கேற்ப, தமிழர் பண் பாட்டிற்கேற்ப வால்மீகி ராமாயணத்தில் திருத்தங் கண்டான் கம்பன். இதைத் தவறென்று கூறுவது பகுத்தறிவு விவாதமல்ல.

வால்மீகியிலும் சரி, கம்பனிலும் சரி கற்பனைகள் நிறையக் கலந்திருக்கின்றன. அது தவறல்ல. நிகழ்ந்த சம்பவங்களோடு நிகழாத கற்பனைகளைக் கலந்து எழுதப்படும் நூலுக்குத்தான் காப்பிய மென்று பெயர். கற்பனையே இல்லாமல் உண்மைச் சம்பவங்களை மட்டுமே எழுதினால் அதன் பெயர் சரித்திரமாகும். எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் கவிஞன் வெறும் சரித்திர ஆசிரியனாகவோ—மொழி பெயர்ப் பாளனாகவோ இருந்ததில்லை—இருக்க முடியாது. கம்ப னும் அப்படித்தான். காலமெலாம் பகுத்தறிவு பேசி வருகின்றவர்கள் காப்பியத்திலுள்ள கற்பனைகளை உண்மைச் சம்பவங்களாக எண்ணுவதைப் பார்க்க வியப்பாக இருக்கிறது.

இராமாயணத்தை எதிர்ப்பவர்கள் பெண்ணுரிமை யைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுகின்றனர். இராமாயண மும் பெண்ணுரிமை பேசும் காப்பியம்தான். பெண் ணுக்குக் கற்பு அவசியமென்றால், ஆண் கற்பும் அவசிய மென்று வற்புறுத்திய முதல் காப்பியம் இராமாயணம் தான். ஆனால், பல மனைவியர்களை மணந்து வாழ்ந்த தற்காகத் தயரதனைக் குறைகூறுகிறவர்கள் ஒரு மனைவியோடு வாழ்ந்து உள்ளத்தாலும் இன்னொருத்தி யைத் தீண்டாத ஒழுக்கத்தைக் கடைப் பிடித்ததற்காக வேனும் இராமனைப் புகழலாமே! அதைவிட்டு இராமனை யும் ஏசுகிறார்களே எதற்காக? கடவுளை உருவத்தின் மூலம் வழிபடுவதை எதிர்க்கும் பெரிய மனிதர்கள் தங்களுடைய உருவப் படங்களுக்குத் தங்கள் கண் ணெதிரிலேயே வழிபாடு நடத்தப்படுவதைக் கண்டு களிக்கிறார்கள். இதுதான் பகுத்தறிவோ!

கடவுள் பிறப்பு இறப்பு இல்லாதவர். உருவ பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். இந்த உண்மைகள்

உருவ வழிபாட்டை வற்புறுத்திய சான்றோர்களுக்கும் தெரியும். கடவுள் சின்னஞ்சிறிய சிலைக்குள்ளேயே சிக்கிவிடமாட்டார். அவரை மதில்கள் சூழ்ந்த கோயிலுக்குள்ளும் சிறைப்படுத்திவிட முடியாது. இந்த உண்மைகளை உணர்ந்திருந்ததால்தான் 'கல்லிலும் செம்பிலுமோ உள்ளான் என் கண்ணுதலே' என்று பாடினார் ஒரு பெரியார். ஆனால், மக்களின் ஒழுக்கம் வளர, கலைகள் செழிக்க உருவ வழிபாடும் அவசியம் என்று எண்ணினர் முன்னோர்.

கடவுள் " ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலாதான் " என்றார் மாணிக்கவாசகர். ஆனால், அவர்கூட கடவுளுக்கு ஆயிரம் திருநாமங்கள் சொல்லி அவரைப் பல திரு உருவங்களில் கண்டு, கைகூப்பித் தொழுது வணங்கி வழிபட்டார். கலை உணர்ச்சிக்காக கடவுளுக்குச் சிலை வடிவங்கள் கண்ட முன்னோர்கள், ஆக்க வழிக்குரிய சக்திகளை எல்லாம் அம்மை வடிவில் அமைத்தனர். ஆம்; செல்வத்தைத் திருமகளாகவும், கல்வியைக் கலைமகளாகவும் கண்டனர்.

உண்மை நாத்திகன், கடவுள் இல்லை என்று உறுதியாக நம்புவான். அதில் அவனுக்குள்ள உறுதிக்காகவேனும் அவனைப் பாராட்டலாம். ஆனால் தமிழகத்திலுள்ள கடவுள் எதிர்ப்பாளர்கள், ஒரு சமயத்தில் கடவுள் உண்டு—கடவுளர்கள் இல்லை என்கிறார்கள். மற்றொரு சமயத்தில் கடவுளரும் உண்டு என்பதை ஒப்புக் கொள்பவர்கள்போல நடிக்கிறார்கள். இவர்கள் கொள்கைப் பிடிப்புடையவர்கள் அல்லர்—குழப்ப வாதிகள் !

நான் கடவுள் நம்பிக்கை யுடையவன்; எனக்கு சமயக் கொள்கை யுண்டு. ஆனால், நான் சமயப் பிரசாரகனாக இல்லை. காரணம், எனது எண்ணமெலாம் அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதுதான்.

★



# வாழ்க வள்ளலார் புகழ்

இராமலிங்க வள்ளலார் தமிழகத்தில் தோன்றிய சமய-சமூக சீர்திருத்தப் புரட்சியாளர்களுள் ஒருவர். சங்கரர், இராமானுஜர் போன்ற சமயாசாரியார்களும் பெரிய சீர்திருத்தப் புரட்சிக்காரர்களாகவே மக்களால் கருதப்பட்டார்கள். ஆம்; அவர்கள் காலத்திலே அந்தச் சீர்திருத்தவாதிகளின் வரிசையிலே தோன்றியவர்தான் இராமலிங்க வள்ளலார்.

உரைநடைத் தமிழில் எழுதும் வழக்கம் பண்டைக் காலத்திலேயே இருந்திருக்கிறது என்றாலும், மூலப் பாடல்களுக்கு எழுதிய உரையாகவன்றி, தனியாக ஒரு நூலை நாம் கண்டதில்லை. மனுநீதி கண்ட சோழன் என்ற பெயரில் உரைநடையில் தனியாக ஒரு சிறு நூலெழுதிய முதற் கவிஞர் நமது வள்ளலாரே யாவார்.

மிகப் பிற்காலத்தில் எளிய நடையில் பாடல்கள் எழுதி, பாமரர்களுக்கும் கவிதா உணர்ச்சி கொடுத்தார் கவியரசர் பாரதியார். ஆனால், அவருக்கும் முன்பாக எளிய தமிழில் தெளிவான முறையில் பாமர மக்களும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் பாட்டியற்றிய பெருமை இராமலிங்கருக்கே உரிமை.

கவியரசர் கம்பர், பன்னீராயிரம் பாடல்களால் 'இராம கதை'யை உருவாக்கினர். அவரைப்போல கவிதை மழை பொழிந்தவர் அவருக்கு முன்பு வேறெவரும் தோன்றியதில்லை. ஆனால், கம்பருக்குப் பின்பு—அவருக்கு அடுத்தபடியாக அதிகப் பாடல்களை எழுதியவர் வடலூர் இராமலிங்கனார்தான்.

இப்படி உரைநடையிலும், கவிதை நடையிலும் இராமலிங்க அடிகளார் தமிழுக்குச் செய்துள்ள தொண்டு மகத்தானதாகும்.

வள்ளலார் சைவ சமயத்தில் தோன்றியவர். ஆனல், தமது இறுதிக்காலத்தில் சமய பேதமெல்லாம் கடந்த சமரச சன்மார்க்கவாதியாகத் திகழ்ந்தார். அத்தனை மதங்களும் போதிக்கும் தருமங்களை எல்லாம் தன்னகத்தே கொண்ட ஒரு பொது மதத்தை—புது மதத்தைத் தோற்றுவித்தார் வள்ளலார். அதன் பெயர் சமரச சன்மார்க்கம் ஆகும்.

ஆனல், அவர் தோற்றுவித்த பொது மதத்தைப் பிற மதவாதிகள் அவர் காலத்திலேயே மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். இந்நாள்வரையும் சமரச சன்மார்க்க மதத்தைப் பிற மதத்தார் ஏற்ருர்களில்லை. ஆனல், எதிர்ப்பு ஒடுங்கிவிட்டது மட்டும் உண்மை.

பிற்காலத்தில் தோன்றிய காந்தியடிகள் என்னவெல்லாம் கூறினரோ அவற்றையே அவருக்கு முன் தோன்றிய இராமலிங்க வள்ளலாரும் வற்புறுத்தினர். ஆனல், காந்தியடிகள் காலத்தில், சாதாரண அறிவுரைகளாகக் கருதப்பட்ட கொள்கைகள் இராமலிங்கர் காலத்தில் அபாயகரமானவையாகப் பட்டன. இது, காலத்தின் விளைவாகும்.

இராமலிங்கர் உயிர்க் கொலையை—பிறர்க்குத் துன்பம் தரும் பலாத்காரச் செயல்களை—அடியோடு வெறுத்தார். 'உயிர்க் கொலையும், புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர்—புறவினத்தார்' எனக் கூறினர் வள்ளலார். அதையே 'அகிம்சா தர்மம்' என்ற பெயரில் காந்தியடிகளும் போதித்து வந்தார்.

இராமலிங்க அடிகளார் புதிதாக எதையும் கூறிவிடவில்லை. அறத்துப்பாலில் வள்ளுவர் கூறி

யுள்ளதையே அவரும் வற்புறுத்தினர். ஆனால், வள்ளுவரின் கொள்கைகளுக்குத் தம்மைப் பிரசாரகராக்கிக் கொண்டு மக்களை அணுகினர் வடலூரார். எந்தவொன்றும் சித்தாந்தமாக மட்டுமே இருக்கும்போது மக்கள் அதைச் செயல்படுத்த முனையும்போது, அதனால் பாதிக்கப்படும் ஆதிக்கவாதக் கூட்டம் போர்க் கோலம் கொண்டு விடுகிறது.

அதுபோல, வள்ளுவர் கூறிய சித்தாந்தங்களைத் தமிழரிடையே செயல்படுத்த முனைந்தார் வள்ளலார். அதனால், வள்ளுவருக்கு ஏற்படாத எதிர்ப்பு, வள்ளலாருக்கு ஏற்பட்டது !

ஆலயங்களில் அருச்சனை வழிபாடு தமிழிலேயே நடைபெற வேண்டும் என்கின்றனர் அறிஞர் பலர். வள்ளலார் அருச்சனையே தேவையில்லை என்று தெரிவித்தார். வடமொழிமீது காழ்ப்புகொண்டோ அல்லது வழிபாட்டு முறை கூடாதென்றெண்ணியோ வள்ளலார் அப்படிக் கூறவில்லை. வாய்மொழியாலன்றி, கருத்தால் நினைந்து, கண்களால் கண்டு, கைகளால் தழுவி கடவுட் சிலையை வழிபடவேண்டும் என்பது இராமலிங்கர் கொள்கை. கருத்தில் தூய்மையின்றி, வாய்மொழியால் மட்டுமே செய்யப்படும் வழிபாடு எந்தமொழியில் இருந்தால் என்ன என்று எண்ணினர் இராமலிங்கனர். இந்தத் துறையிலும் இராமலிங்கர் புதிதாக—புரட்சிகரமான கருத்து எதையும் கூறிவிடவில்லை. வடக்கே உள்ள கோயில்களிலெல்லாம் கடவுட் சிலைக்கும் பக்தருக்கும் இடையே குருக்கள் கிடையாது. அருச்சனை வழிபாடும், காணிக்கை முறையும்கூடக் கிடையாது. ஆம்; பக்தருக்கும் பகவானுக்குமிடையே தொடர்பு உண்டாக்க மூன்றாவது ஒரு ஆள் தேவையில்லை என்பது இராமலிங்கர் கொள்கை. அவருக்கு ஏற்பட்ட கடுமையான எதிர்ப்புக்கு இதுவே முதற் காரணமாகும்.

கலையைப் பற்றியும், காப்பியங்களைப் பற்றியும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மாற்றியமைக்க முயன்றார் வள்ளலார். பழைமை எனப்படுபவை அனைத்தும் உண்மையைக் கூறுவன என்றோ, உலகத்தாருக்குத் தேவைப்படுவன என்றோ அவர் கருதவில்லை. பழைமையில் தள்ளத்தக்கனவும் உண்டு என்பது இராமலிங்கரின் உள்ளக்கிடக்கை. அதனால், 'கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும், கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக' என்றார் இராமலிங்கர்.

நாத்திக நெஞ்சுடைய சிலர் "கலைகளெலாம் மண்மூடிப் போக" என இராமலிங்கர் கூறியதாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். வள்ளலாரின் கொள்கை அதுவன்று. "நாத்திகம் பேசுபவர் நாக்கு முடை நாக்கு, அவர் நவின்று ருசி கொள்வது நாரிய பிண்ணுக்கு" என்றுரைத்த இராமலிங்கரா கலைகள் ஒழிக எனக் கோஷிப்பார்?—இல்லை.

கலை வேறு, கலையை அழகுபடுத்தும் கற்பனை வேறு—என்ற கொள்கையுடையவர் இராமலிங்கர். உண்மையும் அதுதானே. இராமலிங்கர் கூறியதெல்லாம் "கலையை நம்புங்கள்—வழிபடுங்கள்; கலையோடு கலந்துள்ள கற்பனைகளை யெல்லாம் இந்தக் காலத்திற்கும் தேவைப்படும் உண்மை என எண்ணி மயங்காதீர்கள்" என்று எச்சரித்தார்.

கலையை மறந்துவிட்டு, கற்பனைகளை மட்டுமே கட்டியழுவதுதான் இன்றைய சமுதாயத்தின் வழக்கமாகிவிட்டது. அதைக் கண்டு உள்ளங் குமுறிய வள்ளலார் "அந்தக் கண்மூடி வழக்கமெலாம் மண் மூடிப் போகட்டும்" என்று சபித்தார்.

கலை, நிலையான தன்மையுடையது. அதை அழகுபடுத்தும் கற்பனைகள் கால வேறுபாட்டுக்கேற்ப மாறுபடும் தன்மை உடையவை. மனிதனுடைய உடலும் உடையும் போல கலையும் கற்பனையும். ஒரே

உடல் எத்துணையோ உடைகளைக் காலத்துக்கும் இடத்துக்கும் பருவத்துக்கும் ஏற்ப மாறி மாறி உடுத்துக்கொள்கிறது. அதுபோலத்தான் கலையை ஒட்டி எழுந்த கற்பனைகள் எல்லாம்.

வள்ளலார் பழுத்த வைதீக நெஞ்சினர்தான்; அஞ்ஞானம் ஒழித்த மெய்ஞ்ஞானிதான்; ஆனால் விஞ்ஞானத்தின் விரோதியல்லர். திருவாசகத்தில் வரும் திருவண்டப் பகுதி, மாணிக்கவாசகர் காலத்திற் கேற்ற விஞ்ஞான நூல் எனலாம். பிரபஞ்சத்தின் தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் ஆகியவற்றைத் திருவண்டப் பகுதியில் நாம் உணர்வதுபோல வேறு எந்தச் சமயப் பாடலும் உணர்த்தியதில்லை.

வள்ளலார் மாணிக்கவாசகரைக் குருவாகக் கொண்டவர். ஆயினும், மாணிக்கவாசகர் இயற்றிய பாடல்களுள்ளே திருவண்டப் பகுதி ஒன்றையே தனக்கு வழிகாட்டியாகக் கொண்டவர் வள்ளலார். "வருமொழிசெய் மாணிக்கவாசக, நின் வாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என் உடையனையும் ஒன்று விக்கும்" என்று பாடினார். அந்த ஒருமொழி, குரு மொழி திருவண்டப் பகுதியேயாகும்.

இராமலிங்கர் அரசியல்வாதி யல்லர். அவர் காலத்தில் அரசியல் கிளர்ச்சிகளோ கட்சிகளோ கிடையா. என்றாலும், வள்ளலாருடைய உள்ளம் நல்லவர்கள் நாடாள வேண்டும் என்று எண்ணியது. அல்லவற்றையெல்லாம் அழித்து முடித்து, நல்ல வற்றை யெல்லாம் வளர்த்துக் காக்கும் ஒன்றைத்தான் ஆட்சி என்று கருதினார் இராமலிங்கர்.

"கருணையிலா ஆட்சி கடுகி யொழிக அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க" என்று கோஷித்தார். இங்கு 'ஒழிக' என்பதை முதலில் கூறி 'ஆள்க' என்பதைப் பின்னர் உரைத்தது ஏன்? தீயவற்றை அழித்து முடிக்காமல், அதனோடு உறவுகொள்ளும்

ஒன்று ஆட்சியோ, அறமோ அல்லது அதிகாரமோ ஆகாது என்பது அவர் கொள்கை.

சங்ககாலப் புலவனொருவன் தமிழ் மன்னன் ஒருவனைப் பார்த்து "நல்லதன் நலனும் தீயதன் தீதும் இல்லை என்பார்க்கு இனம் ஆகாதே" என்று கூறினான். அதே கருத்தை எதிர்மறையிலே, "தெருள் நயந்த நல்லோர் நினைத்த நலம் பெறுக" என்ற வரியில் வலியுறுத்தினார் வள்ளலார்.

ஆட்சியாளர் நல்லோரைத் தங்கள் இனமாக்கிக் கொண்டு, அவர்கள் நினைத்த நலன்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்பது இராமலிங்கனாரின் அரசியல் கொள்கை. அல்லவற்றை ஒழித்து, நல்லோர் விரும்பும் நல்லவற்றை யெல்லாம் வளர்க்க வேண்டும் என்று ஆட்சியாளருக்கு அறிவுரை கூறியதோடு வள்ளலார் அமையவில்லை. குடிமக்களையும் பார்த்துக் கூறுவார்போல் "நன்று நினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து" எனக் குறிப்பிட்டார்.

குடிமக்களும் நல்லதையே நினைக்கும் ஒழுக்கமுள்ளவர்களாக—ஒருவரோடொருவர் பகையின்றி ஒற்றுமை உடையவர்களாக—இருக்க வேண்டும் என்று போதித்தார். இனி முழுப் பாடலையும் பார்ப்போம்.

> "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
> அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
> நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து
> எல்லோரும் வாழ்க இசைந்து."

இராமலிங்கர் தமக்குமுன் தோன்றிய சமயாசாரியர்களோடு பல்வேறு துறைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். ஆனால், அவர்கள்மீது காழ்ப்பு கொண்டாரில்லை. முற்கால சமயாசாரியர்களுக்கும்

தமக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளுக்குக் காரணம், கால வேறுபாடே என்பதை உணர்ந்திருந்தார். அதனுல் 'முன்னேர்கள் எல்லாம் முட்டாள்கள்; தாம் ஒருவர் மட்டுமே பகுத்தறிவுப் புரட்சியாளர்' என்ற ஆணவம் அவருக்கு ஏற்படவில்லை.

தேவாரம் பாடிய அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் ஆகியோரையும், திருவாசகம் பாடிய மாணிக்கவாசக ரையும் வாயாரப் புகழ்ந்து பாடினர் இராமலிங்கனர். இந்தப் பண்பு இக்கால சீர்திருத்தவாதிகளுக்குத் தேவைப்படுவதாகும்.

சமய—சமூக சீர்திருத்தத்தை விரும்பும் தமிழர் களுள் சிலர், இராமலிங்கரை மறந்துவிட்டு இங்கர் சாலைப் பின்பற்றுகின்றனர். வள்ளலார் தோன்றிய நாட்டில் பிறந்து வால்டேரைக் குருவாகக் கொள்கின் றனர். வள்ளலாரின் சீர்திருத்தக் கொள்கைகள் நமது இனத்தின்—இந்திய சமுதாயத்தின் பண்பாடுகளுக்கு ஏற்ப அமைந்தவை.

நமக்கும் சமூகத்திலும், சமயத்திலும் மாறுதல் களை விரும்பும் மனமுண்டு. ஆனுல், நமது வழிகாட்டி கள் வால்டேரும், இங்கர்சாலும் அல்லர். வள்ளலாரும், காந்தியடிகளுமாவர். அவர்களுக்கும் முன்னே வள்ளு வரும் இளங்கோவும் நமக்கு வழிகாட்டிச் சென்ற துண்டு.

இராமலிங்கரை நினைக்கும்போது, தமிழ் இனத் தின் குறைபாட்டை நினைத்து எனது நெஞ்சம் குமுறு கின்றது. தங்கள் இனத்தவரான இராமகிருஷ்ண பரமஹம்சரை உலகம் போற்றும் பெரியாராக்கிவிட்ட னர் வங்காளியர். மராத்தி நாட்டில் பிறந்த மீராவும், துளசிதாசரும் தேசம் முழுவதும் வணங்கும் தேவர் கள் ஆக்கப்பட்டு விட்டனர்.

ஆனுல், வள்ளலாரை வேங்கடத்துக்கு வடக்கே யாரறிவார்? அறியும்படிச் செய்ய நாம் என்ன முயற்சி

எடுத்தோம் ? நம்மிடையே தோன்றிய மாணிக்கவாசகர், தாயுமானவர், வள்ளலார் போன்ற சமயப் பெரியார்கள் உலகம் எங்கணுமே தோன்றியதில்லை என்று பெருமை பேசிக்கொள்கிறோம். உண்மைதான். ஆனால், அதை உலகம் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தால் தானே நமக்குப் பெருமை.

ஆனால், நம் இனத்தில் தோன்றிய கம்பரை—வள்ளலாரை—மாணிக்கவாசகரை—இழித்தும் பழித்தும் பேச ஒரு கூட்டத்தார் இந்த நாட்டிலேயே இருக்கின்றனர். இந்த இழிநிலை அகன்று, வள்ளலாரைப் போன்று கிடைத்தற்கரிய மாணிக்கங்களை—மனித குலத்தின் போதகர்களை—தெய்வத்தூதர்களை—நாமே முதலில் போற்றவேண்டும். அப்புறம் உலகமும் அவர்களைப் போற்றும்.





# சமரச நெறி புகன்ற ஞானபண்டிதர்

வாழையடி வாழையாக ஞானியர்கள் பலர் தோன்றி வளர்த்த அற நெறிகளையெல்லாம் மறந்து விட்டனர் மக்கள். நமக்கே உரிய சுதர்மத்தை மறந்து அதர்மத்தைத் தழுவினர். அந்த இழிநிலை உச்ச கட்டத்தை அடைந்திருந்த காலத்தில், நம்மிடையே ஞானியர் பலர் தோன்றினர். அவர்களுள் தலையானவர் இராமகிருஷ்ணர்.

அருட்ஜோதி இராமலிங்க வள்ளலார், இராம கிருஷ்ண பரமஹம்சர் காலத்தவர். அந்தப் பெருமகனார் ஜீவன் முக்தராக வாழ்ந்த மகாஞானி. அப்படியிருந்தும், அவர் தன்னினும் சிறந்த ஞானியருக்குப் பணிபுரிய விழைந்தார். ஞானியருக்கு நம் வள்ளலார் இலக்கணம் கூறியிருக்கின்றார்.

“எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளம்தான் சுத்த
சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்
இடம் எனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட வென்
சிந்தைமிக விழைந்த தாலோ!”

எனப் பாடுகின்றார் வள்ளலார்.

மனிதரிலே பேதா பேதம் கூடாது என்பதோடு உயிர்களிலேயும் பேதா பேதம் காணாமல், எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுபவரே ஞானியர் என்கின்றார்

வள்ளலார். 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்று உதட்டளவில் பேசுபவர் போலி ஞானியர். வள்ளலாரோ உள்ளத்தால் ஒத்துரிமை உடையவரே உண்மை ஞானியர் என்கிறார். அவர்தம் உள்ளம் எந்த நேரத்திலும் உவகையோடு இருக்குமாம். அதனால், "அவர் உளம்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம் என நான் தெரிந்தேன்" என்று கூறி, 'இறைவன் எங்கோ இல்லை; ஞானியர்தம் இதயத்தைக் கோயிலாகக் கொண்டு வாழ்கிறான்' என உரைத்தார். அத்தகைய ஞானியருக்குப் பணிபுரிய தமக்குள்ள விருப்பத்தை, "அந்த வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தைமிக விழைந்ததாலோ" என்ற வாசகத்தில் வெளிப்படுத்துகின்றார்.

வள்ளலார் கூறிய இலக்கணங்களெல்லாம் பொருந்திய பரம ஞானியாக விளங்கினார் நமது பரமஹம்சர்.

திருமுருகாற்றுப் படையிலே ஞானியருக்கு இலக்கணம் கூறும் நக்கீரர்,

"யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்"

என்று கூறுகின்றார். "எல்லாம் கற்றுவிட்டோம்" என்று இறுமாந்திருக்கும் மேதையரும் அறிந்துகொள்ள முடியாத பேரறிவினர் என்றும், கற்றோர்கள் எல்லாம் தம் கருத்தைச் சான்றாகக் காட்டி வழக்காடும் தலைமையர் என்றும் பெரும்புலவர் நக்கீரர் பேசுகின்றார். அத்தகைய கற்றோர் எல்லாம் அறியாத அறிவினராக, கற்றோர்களெல்லாம் சான்று காட்டும் தலைமையினராக விளங்குகின்றார் பரம ஹம்சர்.

இராம கிருஷ்ணர் தோன்றிய காலத்தில், நமது பாரதம் எந்த நிலையில் இருந்தது? அந்நாளில், நம் நாட்டுமக்கள் கும்பியின் பசி தீர்க்கக் கூழுக்கு அலைந்து

பரதேசி ஆட்சியில் பாழுக்கு உழைத்தனர். ஏழையர் நிலை இது வென்றால், கற்றறிந்த மேதையர் நிலை இதைவிட மோசம். அன்னார் உத்தியோகக் கல்வி கற்றனர். வயிற்றுக்குச் சோறு தேடி, வாழ்க்கை ஒன்றே சதமென்றெண்ணி மற்றவற்றை எல்லாம் மறந்தனர். சமயாசாரியர் நிலை இதைவிட விநோதம். மக்களுடைய வணக்கத்திற்குரியவர்களாக விளங்கிய அவர்கள் எல்லாம் தத்துவ வாதங்களில் சிக்கி, கருத்துப்போர் நிகழ்த்துவதிலேயே காலங் கழித்தனர். துவைதம்தான் ஆண்டவனுடைய திருவடியில் ஆன்மாவைக் கொண்டு சேர்க்கும் என்றனர் சிலர். அது பிழை; அத்வைதமே ஆண்டவனோடு ஆன்மா இரண்டறக் கலப்பதற்குத் துணைபுரியும் என்றனர் வேறு சிலர்.

இன்னும் சிலர், துவைதத்தினும், அத்வைதத்தினும் விசிஷ்டாத்வைதமே மிகமிகச் சிறந்த நெறி என்று பேசினர். இதனை வேதனையோடு எடுத்துக் காட்டும் தாயுமானவர், "சமய வாதிகளெல்லாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்குந்தொடர்ந்து எதிர் வழக்குத் தொடுத்தனர்" என்கிறார். இப்படி சாஸ்திரிமார்கள் தத்துவச் சண்டையிட, புரோகிதர்கள் சடங்குகள் வழி பேதங்காட்ட, எங்கும் பிணக்கு—எதிலும் பிணக்கு என்று இந்து சமயத்தவர் இருந்த காலத்தில் வட கிழக்கே இராமகிருஷ்ணர் தோன்றினார்.

அறியாமை, தன்னலம், ஆணவம் ஆகிய தீமைகளெல்லாம் திரண்டு உருண்டு ஒருருவாகி, மக்கள் சமூகத்தின்மீது ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இராமகிருஷ்ணர் தோன்றினார்.

அன்னியர் ஆதிக்கமென்னும் காரிருள் பாரதம் முழுவதையும் கவ்வியிருந்த காலத்தில் அந்த இருளைக் கிழித்து ஒளி பரப்பும் ஞான சூரியனாகக் கிழக்கே உதித்தார் இராமகிருஷ்ணர்.

இராமகிருஷ்ணர் சமயத் துறையில் படிந்த அறியாமையை—அன்னியக் கிரகணம் என்னும் ஆதிக்கத்தைப் புறச்சமயங்களின் ஊடுருவலை அன்பு வழியில் எதிர்த்துப் போராடவே அவதரித்தார். அவதார புருஷர்கள் அடிக்கடி தோன்றுகிறார்கள் இல்லை. அவசியமானபோது மட்டுமே அவதரிக்கிறார்கள். அத்தகைய அவதார புருஷர்களுள் இராம கிருஷ்ண பரம ஹம்சர் ஒருவராவார்.

அவர் சமயத்துறையில் மட்டுமே தொண்டு புரிந்திருப்பினும், சமூக அரசியல் துறைகளிலும் மக்களிடையே உரிமை உணர்வு எழுவதற்கு இராம கிருஷ்ணருடைய சமயத் தொண்டு பெரிதும் பயன்பட்டது. இராமகிருஷ்ணர் அத்வைத நெறியையே சிறந்ததாகக் கருதினார் ஆயினும், துவைதம்—அத்வைதம்—விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றிடையே சமரசம் காணவும் பாடுபட்டார். இந்த மூன்றும் வேறு வேறானதாயினும் ஒன்றுக்கொன்று விரோதமானவையன்று என்பதனை தத்துவப் போர்புரிந்த வித்தகர்களுக்கு விளக்கினார். துவைதம்—அத்வைதம்—விசிஷ்டாத்வைதம் ஆகிய மூன்றும் ஆண்டவனை அடைவதற்குச் செல்லும் நெறியில் அடுத்தடுத்து உள்ள நிலைகளே என்பதனையும் நினைப்பூட்டினார்.

தத்துவங்களிடையே சமரசம் காணவும் இந்தத் தொண்டு வடகிழக்கில் இராமகிருஷ்ணர் பிறப்பதற்கு முன்பே தெற்கே தாயுமானவரால் துவக்கி வைக்கப் பெற்றது. அவர் பாடலில் வரும் "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே" என்ற வரியே இதனை உணர்த்தும். ஆம்; வேறுபட்ட சமய தத்துவவாதிகளிடையே வளர்ந்த மாறுபட்ட கருத்தினை மாய்த்து ஒற்றுமையை உருவாக்கவே உபதேசித்தார் தாயுமானவர்.

இராமகிருஷ்ண பரம ஹம்சர் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால் வருணப் பாகுபாட்டில்,

அவற்றிடையே நிலவிய ஏற்றத்தாழ்வில் நம்பிக்கையுடைய மேல் வருணத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். ஆனால் அவருடைய நெஞ்சிலே நால் வருண பேதமோ, அவற்றின் வழிப்பட்ட ஏற்றத்தாழ்வோ இடம்பெறவில்லை. நால் வருணத்தவரால் புறக்கணிக்கப்பட்ட இழி தன்மையுடைய ஐந்தாம் வருணத்தவன் இல்லத்திலே மலங்கழிக்கும் இடத்திலே தம்முடைய சிகையால் மலம்போக்கிச் சுத்தப்படுத்தினார் என்றால், இராம கிருஷ்ணருடைய தூய உள்ளத்தை என்னென்பது! அவர் நால் வருணங்களில் மேல் வருணத்தில் பிறந்தவர் என்றால், அவருடைய உடலைப் பொறுத்த மட்டில்தான் அது உண்மை.

ஆனால், உள்ளத்தால், உளங்கனிந்த தொண்டால், உயிர்கள்பால் வைத்த கருணையால் தாழ் வருணத்தவரையும் உளமார நேசித்தார் பரம ஹம்சர். கீழ்க்குலத்துப் பஞ்சமனும், பக்தி நெறிப்பட்டுப் பரமனை அணுகினால், அவனும் மேல் குலத்தவன் ஆக முடியும் என்றார் பரம ஹம்சர்.

நமது பரம ஹம்சர் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர் அல்லர். தாய்மொழியில்கூட எழுதப் படிக்கப் பயிலாத பாமரர்! ஆனால், ஆன்ம ஞான அறிவிலே அவர் மகா பண்டிதர்! ஏன்—ஞான பண்டிதர் என்று கூடச் சொல்லலாம். அவர் கல்லாத கல்வி இல்லை—கலை இல்லை. பரமனால் படைக்கப்பட்ட பொருள்களின் இயக்கங்களை, அவற்றின் விளைவுகளை ஆராய்ந்து அறிகிறான் விஞ்ஞானி, அவனிடமிருந்து வேறுபட்ட மெய்ஞ்ஞானி, விஞ்ஞானியின் பணியை வெறுப்பவனல்ல; ஆயினும், அதற்கு அப்பாலும் சென்று இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருளையே அறிந்து, அதனோடு இரண்டறக் கலக்கமுடியும் என்கிறான் மெய்ஞ்ஞானி.

உண்மையான விஞ்ஞானிக்கும் பூரணத்துவம் பெற்ற மெய்ஞ்ஞானிக்கும் கருத்துப்போர் எழக்

காரணமே இல்லை. விஞ்ஞானி பிரபஞ்சத்துக்கு உள்ளே இருக்கிருன்; மெய்ஞ்ஞானி அதற்கு அப்பாலும் செல்லத் துடிக்கிருன். பிரபஞ்சத்துக்கு வெளியே ஏதோ ஓர் பேரின்பம்—சொல்லித் தெரிவிக்க முடியாத சுகானந்தம் கொள்ளை கொள்ளையாய்க் குவிந்திருப்பதாக நம்புகிருன் மெய்ஞ்ஞானி. இராமலிங்க வள்ளலார் மலமும், மாயையும் அற்றுவிட்ட நிலையிலே இருவினைத் தொடர்பிலிருந்து ஆன்மா விடுதலை பெற்றுவிட்ட நேரத்திலே "வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகம்" கிடைக்கும் என்கிருர். அந்தச் சுகம் இன்று வருமோ, நாளைக்கே வருமோ, மற்று என்று வருமோ எனக்கூறி ஏங்குகின்ருர்.

வள்ளலார் கூறிய வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகத்தை அனுபவித்தவர் இராமகிருஷ்ணர். அவர் தம் வாழ்நாளிலேயே ஜீவன் முக்தருக்குரிய தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தார்.

இராமகிருஷ்ணர், அம்மை வடிவிலே ஆண்டவனை வழிபட்டார். தமிழகத்துச் சைவர்கள் அம்மையப்பன் வடிவிலே ஆண்டவனை வழிபடுகின்றனர். அந்த வடிவத்தின் பெயர் அர்த்தனரி என்றும் சொல்லுகின்றனர். இது, பரமஹம்சர் கொள்கைக்கு உடன்பாடேயன்றி மாறுபாடன்று. இறைக்கு பால் வேறுபாடு இல்லை. பால் வேறுபாடு கற்பிப்பதாயின், ஆண் பால்—பெண் பால் ஆக இரு பாலையும் இணைப்பதே முறை. அதனுற்ருன், அம்மையப்பன் வடிவிலே ஆண்டவனை வழிபடுகின்ருேம்.

இராமகிருஷ்ணர் உருவ வழிபாட்டை வெறுக்காததுபோல், அம்மையப்பன் வடிவ வழிபாட்டையும் வெறுத்தாரில்லை. "மரத்தில் மறைந்தது மாமதயானை; மரத்தை மறைத்தது மாமதயானை" என்பது வேதாந்தப் பாடல். மரத்தினுல் செய்யப்பட்ட யானைப் பொம்மையைக் கையில் வைத்துக்கொண்டு, அதனை யானையாக

நினைக்கும்போது, மரம் நம் பார்வையிலிருந்து மறைந்து விடுகிறது. மரமாக நினைக்கும்போது யானை வடிவம் மறைந்துவிடுகின்றது.

இந்தத் தத்துவப்படி, நாம் வழிபடும் அம்மையப்பனையே அன்னை வடிவத்திலே வழிபட்டார் பரமஹம்சர். பரமஹம்சர் வழிபட்ட தட்சிணேஸ்வரக்காளி, ஒரு கையில் கொடுவாளும், மற்ெருரு கையில் நெடுவாளும் தாங்கி, தலைகளாலான மாலையைப் பூண்டு, நீண்டு தொங்கிய நாக்குடன் கோர வடிவத்தில் காட்சியளிக்கிருள். இத்தகைய கோர வடிவம் கொண்ட கொற்றவையை பாலைவனத்துத் தெய்வமாக்கினர் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். பாலை நிலம் போர் செய்யும் களமாதலால், வீரர்களின் நெஞ்சுக்கு வெறியூட்ட, கோழைத்தனத்தை அவர்கள் இதயத்திலிருந்து எடுத்தெறிய கோர வடிவம் கொண்ட கொற்றவையைக் கற்பித்தனர் போலும்!

இராமகிருஷ்ணர் மனப்போக்கு இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அந்தப் பெரியார் பயங்கர வடிவங்கொண்ட காளியை வழிபட்டு உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்தும் பண்புள்ளத்தைப் பெற்றுர். இரக்கம், கருணை, எளிமை, தொண்டு, அன்பு ஆகிய சத்வ குணங்களைப்பெற காளியம்மை வழிபாடு அவருக்குக் கை கொடுத்தது. ஆம்; அவர் காளிதேவியின் புற வடிவங்களிலே கவனம் செலுத்தவில்லை. தேவியின் தாய்மையையே தம் நெஞ்சில் நிலை நிறுத்தினுர். இது, உருவ வழிபாடு நிகழ்த்தும் பக்தர்களுக்கு ஒரு நல்ல வழி காட்டியாகும்.

சிவபெருமானுக்கு இடையிலொரு மங்கை, சடையிலொரு கங்கை இருக்கக் காண்கின்ருேம். இந்தப் புறவடிவத்தில் மட்டுமே புத்தி செலுத்தும் சிலர், "ஓகோ, கடவுளும் நம்மைப் போலத்தானு?" என்று கேலி பேசுகின்றனர். இவர்களை நினைத்துத்தான்

'கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போக' என்றார் இராமலிங்க வள்ளலார். இராமகிருஷ்ணரும் கலை வடிவான காளிதேவியின் புறத் தோற்றங்களை மறந்து கருணை வடிவான தேவியின் தாய்மை உணர்விடம் சரணடைந்தார்.

கடவுள் எந்த வடிவத்தில் வந்தாலும் சரி; கடவுளைக் கவிஞனோ, கலைஞனோ, சிற்பியோ எந்த வடிவத்தில் காட்டினாலும் சரி அதற்கேற்ற பெயரிட்டழைக்கும் அருமையும் ஆற்றலும் நம் அன்னை மொழியான கன்னித் தமிழுக்கு உண்டு. அர்த்தநாரீசுவரர் வடிவத்தில் காட்சி அளிக்கும் ஆண்டவனைப் பார்த்து, "இறைவா! உன்னை 'ஒருத்தன்' என்று உரைப்பதா? 'ஒருத்தி' என்று புகல்வதா? ஒருத்தன் என்றால், உன்னில் பாதியான ஒருத்தியின் வடிவம் மறுக்கும். ஒருத்தி என்றாலோ, மற்றொரு பாதியான ஒருத்தனின் வடிவம் மறுக்கும். என் இன்பத் தமிழிலே 'ஒருவர்' என்ற இயற்சொல் இருந்ததால் பிழைத்தேன்" என்று கூறி, தமிழின் திறம் பேசுகின்றார் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். ஆம்; ஆண்டவனே, பால் மயக்கம் தோன்ற காட்சி அளித்தாலும் அந்த நிலையிலும் அவனைப் பெயரிட்டழைக்க நம் அருமைத் தமிழிலே சொல் உண்டு. இறைவன் அருள் உருவத்தையே புறங்காணும் ஆற்றல் நம் இன்பத் தமிழுக்கு உண்டானால், அவனால் படைக்கப்பட்ட பொருள்களின் நுட்பங்களைக் கூறும் கலைச் சொற்களுக்குத்தானா கன்னித் தமிழிலே பஞ்சம்!

இராமகிருஷ்ண பரம ஹம்சர், காளிதேவியைக் 'காளிமாதா' எனக் கூறினார். ஆம்; அன்னை என்று கருதிய அளவிலேயே நெடுவாளும் கொடுவாளும் கொண்ட காளி தேவியின் கோர வடிவம் மறைந்து தாய் வடிவம் காட்சியளித்தது போலும்!

மக்களிலே சிலர், 'மதம் தேவையா?' என்று கேட்கின்றனர். அவர்களிலும் துணிவுடைய சிலர் "தெய்வம் உண்டா?" என்று விஞ எழுப்புகின்றனர், ஆம்! 'இல்லே' என்ற முடிவுடனேயே "உண்டா?" என்று கேள்வி எழுப்புகின்றனர். 'உண்டு' என்று நம்புவோரிலும் சிலர் உருவ வழிபாட்டினே வெறுத்து, அருவ வழிபாட்டினேயே ஆதரிக்கின்றனர்.

இராமகிருஷ்ண பரம ஹம்சர் ஆண்டவனே அரூபி யாகவும் வழிபடும் ஆற்றலுடையவர். ஆயினும், உருவ வழிபாட்டினேயும் அவர் ஆதரித்தார்.

கடவுள் என்ற மகா சக்தி கல்லாகி விடுவதில்லே. கல்லேக் கடவுளாக்கிவிடவும் முடியாது. ஆனல், கல்லேயும் கடவுளாகப் பாவித்து, அதனே வழிபடும் பக்தன் கடவுள் தன்மையை அடையமுடியும். உருவ வழிபாட்டில் தொடங்கித்தான் அருவமாகவும் ஆண்ட வனே வழிபடும் ஆற்றல் பெற்ருர் இராமகிருஷ்ணர்.

மதம் வேறு; மதவாதி வேறு. இதனே மறத்தல் கூடாது. மதவாதி பொய்யனுக இருக்கலாம். மதத் தைக் காட்டி, கடவுளேக் காட்டி, மக்களே ஏய்த்துப் பிழைப்பவனுகவும் இருக்கலாம். அதனுலேயே கடவுள் இல்லே என்ருே, மதம் தேவையற்றதென்ருே முடிவு கட்டி விடக்கூடாது.

மனிதன் கையில்பட்ட எல்லாப் பொருளுமே தீமை யோடு உறவு கொண்டு விடுகிறது. மதம் மட்டும் இதற்கு விலக்காக இருக்க முடியுமா?

அரசியலின் பெயரால் நடைபெறும் அநீதிகளுக்கு அளவே இல்லே. அதனுல், அரசாங்கம் என்ற ஒன்றே வேண்டாம் என்று சொல்லி விடுவதா? சொன்னுல், அப்புறம் எஞ்சியிருப்பது அராஜகம்தான்.

ஆண்டுதோறும் மழைக் காலத்தின்போது வெள்ளம் மிகுந்து, புயலடித்து விபத்தை விளேவிக் கிறது. அதனுல், மழையே வேண்டாம் என்று பிரார்த்

திக்க முடியுமா? ஒருத்தி எட்டு பிள்ளைகளைப் பெற்றும் ஒரு பிள்ளையும் அவளைக் காப்பாற்றவில்லை யென்றால், அதனால் உலகத்துப் பெண்களைப் பார்த்து 'நீங்கள் பிள்ளைகளையே பெறவேண்டாம்' என்று அவள் கூறுவாளா? கூறினால், பெண்மை நலமும் தாய்மை உணர்வும் என்னாவது?

விஞ்ஞானத்தின் பெயரால் தோன்றிய அணு குண்டும் ஹைட்ரஜன் குண்டும் மனித குலத்தை அழிக்கவும் பயன்படுத்தப் பெறுகின்றன. அதனால், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களை யெல்லாம் மூடிவிட முடியுமா?

மதத்தை வெறுக்காதீர்! கடவுள் நம்பிக்கையி லிருந்து பிறழ்ந்து செல்லாதீர்! மதத்தின் பெயராலும், தெய்வத்தின் பேராலும் அநீதி இழைக்கக் கண்ட போது, அதே மதத்தின் பெயராலும், தெய்வத்தின் பெயராலும் அந்த அநீதியை எதிர்த்துப் போரா டுங்கள்!

இராமலிங்கரை - தாயுமானவரை - இராமகிருஷ்ண பரமஹம்சரைத் தந்தது மதமும் தெய்வ நம்பிக்கையும் தான். ஆயிரமாண்டுகளுக்கு ஒருமுறை அத்தகைய பெரியார் ஒருவர் தோன்றுவதாயினும் சரியே; அதற் காகவே மத உணர்வும், தெய்வ நம்பிக்கையும் தேவை என்று சொல்லலாம்.

விஞ்ஞான அறிவு வளர்ந்துவருவது குறித்து நாம் பெருமையடையலாம். அதற்குக் கேடில்லாதவகை யில் மெய்ஞ்ஞான அறிவும் வளரவேண்டும்—வாழ வேண்டும். பிறவி எடுத்தவன் வாழ்வாங்கு வாழ விஞ்ஞானம் வேண்டும். பிறவிப் பிணியகற்ற மெய்ஞ் ஞானம் தேவை.

இராமகிருஷ்ண பரமஹம்சர் தோற்றத்தாலும் தொண்டாலும் பழைமையின் பிரதிநிதியாக விளங்

கினர். ஆயினும், அடிப்படை அறங்களுக்குக் கேடின்றி மதத்திலும் புதுமை புகவேண்டும் என்று கருதினர். பழைமையும் புதுமையும் கலந்து சனதன தருமத்தில் மறுமலர்ச்சி காணச் சுவாமி விவேகானந்தரைத் தந்து போனர். புதுமையை வரவேற்காத எதுவும் நீடித்து வாழமுடியாது. மதம் மட்டும் இதற்கு விதிவிலக்கன்று. இதனை நினைவில்கொண்டு பாரதத்தின் கிழக்கே உதித்த ஞானபானுவான இராமகிருஷ்ண பரமஹம்ச ருக்கு நாம் அஞ்சலி செலுத்துவோம்.



# புனிதர் ஏசுபெருமான்



வழக்கம்போல் ஆண்டுதோறும் புனிதர் ஏசு பிறந்த வாரம் உலகெங்கும் கொண்டாடப் படுகிறது. கிறித்தவரை பொறுத்தவரை தங்கள் மதத்தலைவர், கர்த்தரால் அனுப்பப்பட்ட தூதர் என்ற நினைவுடன் ஏசு பிறந்த விழாக் கொண்டாடப்படலாம். அது தவறன்று, தருமமே! அதே நேரத்தில் கிறித்தவ சமயத்தைச் சாராத மக்களும் ஏசு பிறந்த வாரத்தைக் கொண்டாடலாம்; கொண்டாடவும் வேண்டும். ஏசுவைப் போன்ற ஞானியர்கள் உயிர்க்குலம் அனைத்திடமும் அன்பு செலுத்துவோராவர். வாழ்ந்த காலத்தில், தாம் வாழ்ந்திருந்த நாட்டில் தம்மைச் சூழ்ந்திருந்த மக்களால் அவர்கள் ஒரு மதச் சார்புடையவராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அவர்களுடைய உபதேச மொழிகள் மனித குலம் அனைத்துக்கும் பொதுவானவையாகும். ஏசு பெருமானின் மலைச் சொற்பொழிவு ஒன்றே இதற்கு எடுத்துக்காட்டு. ஆகவே, மனித குலத்தின்—உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டினை விரும்புவோரனைவரும் ஏசு பெருமானின் பிறந்த நாளைக் கொண்டாடுவர் என்பது திண்ணம்.

பாரதியார், 'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்' என்று பாடினார். இது அப்பட்ட உண்மையாகும். ஏசுவின் உயிர்த் தியாகம், தெய்வீகத் தன்மை பொருந்திய மகா புருஷர்களால் அன்றி, வேறெவராலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகும்.

தியாகத்தைப் போதிக்கவே புனிதர் ஏசு புவனியில் பிறந்து, பொய்யர்களை எதிர்த்துப் போராடி, புனிதச் சிலுவையில் ஆவி நீத்தார். ஏசு தாம் மாண்ட பின்னர், மீண்டும் மூன்று நாட்களில் உயிர் பெற்றெழுந்தார் என்பது நம்பிக்கை. ஆன்மீகத் துறையில் ஞான முடையோர் இதனை ஏற்பர். வள்ளற் பெருமான், "மனிதன் சாகாமலிருக்க முடியும்" என்று போதித்த தோடு செத்தவர்களும் திரும்பத் திரும்பப் புத்துயிர் பெற்று எழ முடியும் எனவும் போதித்தார். இந்த உபதேசத்திற்கு உதாரணமாக விளங்குகின்றது ஏசு பெருமானின் வாழ்க்கை வரலாறு.

வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைக் கொள்கைக்கு முன்னோடியாக விளங்குகின்றார், சிலுவையில் அறையப்பட்ட நேரத்திலும் "கடவுளே, இவர்களை மன்னித்து விடு" என்ற ஏசுபெருமான்.

வருந்தத்தக்க ஒரு விஷய மென்னவென்றால், ஏசு பெருமானை நெஞ்சாரத் துதித்து, அஞ்சலி செலுத்து வோரெல்லாம் அவருடைய உபதேச மொழிகளைப் புறக்கணிப்பதாகும். கண்ணனை வழிபடுவோர் அவ ருடைய கீதோபதேசத்தைக் கருத்தில் கொள்வதில்லை. இராமாயணம் படித்து, இராமரைத் தெய்வமாகக் கருதி வழிபடுவோர், இராமன் வாழ்ந்து காட்டிய ஒழுக்க நெறிகளைத் தம் உள்ளத்தில் கொள்வதில்லை. காந்தியடிகளைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் கூட்டத்தார், அவர் போதித்த தியாக நெறியைத் தம் நெஞ்சத்தாலும் நினைப்பதில்லை. ஆம்; ஞானியர்களைத் தெய்வங்களாக்கி வழிபடுகின்றோம்; அவர்கள் பிறந்த நாளையும் மறைந்த நாளையும் கொண்டாடி மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், அவர்களுடைய உபதேச நெறிகளில் ஒன்றையேனும் நம் வாழ்க்கையில் கடைப் பிடிக்கிறோமில்லை.

எந்தக் கண்டத்தில் ஏசுநாதரின் புகழ் பரவியிருக் கிறதோ, அவர் மதத் தலைவராகக் கருதப்படுகின்றாரோ

அந்த ஐரோப்பாக் கண்டம்தான் போர் வெறிக்கு இரையாகி யிருக்கின்றது. பிற கண்டங்களையும் கெடுபிடிப் போரில் இருந்து வரும் கேட்டினைச் செய்து வருகின்றது. அரசியல் ரீதியான ஆதிக்க வெறியும் வாணிக ரீதியான சுரண்டல் கொடுமையும் ஐரோப் பாவில் இருந்து பிற கண்டங்களுக்கு இறக்குமதி யாகின்றன. இந்தக் கொடுமைகளெல்லாம் தொலைய ஏசுவின் புனித மொழிகள் போற்றப்பட வேண்டும்.



# பாவை இலக்கியம்



மார்கழித் திங்களில் தமிழ்நாடு எங்கணும் இசை முழங்கக் கேட்கின்றோம். பண்டைநாளில் மார்கழித் திங்கள் "இசைத்திங்கள்" ஆக விளங்கியது. அந் நாளில், வீதிதோறும், வீடுதோறும் இசை முழங்கியது. இசையில் ஆரம்பப் பயிற்சியுடைய ஆண்களும், பெண்களும் விடியற்காலையில் பாடிக்கொண்டே படுக்கை விட்டெழுந்தனர். பாடும் பயிற்சி யில்லாதவர் களுக்காக, அவர்களுடைய காதுகளும் பரமன் புகழைக் கேட்க வேண்டுமென்பதற்காக வீதிகளிலே பண்டாரங்கள் பாடிவந்தனர்.

கொஞ்சம் வயது ஆனவர்கள் விடியற்காலையில் துயிலெழுந்து, ஆற்றிலோ குளத்திலோ குளித்து, அணியணியாக வீதிகளிலே இசை பாடிக்கொண்டு சென்றனர்.

இப்படி ஒரு திங்கள் முழுவதும் நாடெங்கும் இசை ஒலிக்கும் நாடு உலகில் இன்னொன்று இல்லை எனலாம்.

மார்கழித் திங்களில் பாடுவதற்கென்றே வைணவ அடியாரான ஆண்டாள் திருப்பாவை பாடினார். சைவ சமயாசாரியார் மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடினார்.

மனித சக்தியானது ஆண்—பெண் ஆகிய இரு பாலாரிடமும் எதிரொலிக்கின்றது. ஆண்டவன்கூட அர்த்தநாரீசுவரர் வடிவத்திலன்றோ காட்சியளிக் கின்றான்! அதனால் பெண்சக்தியின் பிரதிநிதியாக ஆண்டாளும் ஆண் சக்தியின் பிரதிநிதியாக மாணிக்க வாசகரும் பாவை பாடல் பாடினர் போலும்!

பாவை பாடல்களுக்கு அவை எழுதப்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலையை வைத்துப் பொருள் காண வேண்டும். அப்பொழுதுதான் பாவை பாடல்களில் வெளிப்படும் கருத்துக்களுக்கும் இன்றைய தமிழரின் வாழ்க்கைக்குமுள்ள வேற்றுமைகளை விளங்கிக் கொள்ள முடியும்.

பாவை பாடல்கள், பருவமடைந்தும் திருமண மாகாத கன்னிப்பெண்கள் பாடுவதுபோல அமைந்துள்ளன. விடியற்காலை நேரம்; இன்னும் இருள் அகன்று ஒளி தோன்றவில்லை. பருவம் அடைந்த கன்னிப்பெண்கள் பலர் ஒன்று சேர்ந்து வீதிகளிலே நடமாடுகின்றனர். வீடு வீடாகச் சென்று தம் தோழிகளைத் துயிலெழுப்பி நீராடுவதற்கு அழைப்பு விடுக்கின்றனர். ஆம்; உரக்கக் குரலெடுத்து, உற்சாகத்தை வெளிப்படுத்தி, தெய்வத்தின் புகழைத் தெருவில் நின்று பாடுகின்றனர். இது, பாவை பாடல்களில் நமது பார்வைக்குப்படும் காட்சியாகும்.

அதாவது, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு—பருவமடைந்து திருமணமாகாத கன்னிப்பெண்கள் விடியற்காலை இருளிலே கூட்டம் கூட்டமாகத் தெருவிலே செல்ல முடிந்தது. ஆண்களின் காவலின்றி ஆடியும் பாடியும் செல்ல முடிந்தது. ஆம்; காமுகர்களைப் பற்றிய அச்சமின்றிச் செல்ல முடிந்தது.

பாவை பாடல்கள் இயற்றப்பட்ட காலத்தில் தமிழ் மக்கள்—குறிப்பாக ஆண்மக்கள்—உயர்ந்த ஒழுக்கத்தோடு வாழ்ந்தனர் என்பதற்கு அப் பாடல்களே அத்தாட்சியாகும்.

இன்றைய தமிழகத்தில் மார்கழித் திங்களில் இளமங்கையர்கள் அணி அணியாகக்கூடி வீதிகளிலே ஆடியும் பாடியும் செல்ல முடியுமா? விடியற்காலை இருளிலே ஆண்களின் பயமின்றிச் செல்ல இயலுமா? பாவை பாடல்கள் யார் பாடுவதற்கென்று இயற்றப்

பட்டனவோ அந்த இளம் பெண்கள் அவற்றைப் பாடிச் செல்கின்றார்களா ?

'இல்லை' என்பதை நான் சொல்லத் தேவை யில்லை.

மூன்று கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஒரு சிலர் மட்டுமே மார்கழித் திங்களில் பாவை பாடல் களைப் பாடுகின்றனர். அவர்களிலே பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. அந்தப் பெண்களும் வயதானவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களும் வீட்டிலிருந்து கொண்டுதான் பாட முடிகின்றது. இந்த இழிநிலை அகன்று, தமிழரிடையே ஒழுக்கம் செழிக்க வேண்டும். ஆண்களின் பயமின்றி இளம் பெண்கள் வீதிகளிலே நடமாட உரிமை பெறவேண்டும். அப் போதுதான் பாவை பாடல்கள் பாடிய பெரியார்களின் ஆன்மாக்கள் நமக்கு அருள் புரியும்.

பாவை பாடல்கள் வானுலக வாழ்வு கருதிப் பாடக் கூடியவை அல்ல. கன்னிப் பெண்கள் பாடும் பாடல் கள் ஆதலால், வாழ்க்கையின் தேவைகளே அவற்றில் கூறப்படுகின்றன.

தெய்வ பக்திக்கும் தேச பக்திக்கும் அதிக வேற்றுமை இல்லை என்பதை உணரவேண்டும். இரண்டில் ஒன்றை ஏற்பதும், மற்றொன்றை எதிர்ப்ப தும் சாத்தியமில்லை. இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்போல. தெய்வத் திருப்பணிக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஆண்டாள், திருப் பாவை பாடல்களில் தன்னுடைய தேச பக்தியை வெளிப்படுத்துகின்றார்.

"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகளப்
பூங் குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''

என்ற பாடலில், ஆண்டாள் வேண்டுவன யாவை? வானம் பொய்யாது மாதம் மும்மாரி பெய்யவேண்டும். அதுவும், நாடெல்லாம் பெய்யவேண்டும். வயல் களில் நீர் நிறைந்து செந்நெல் வளம் சிறக்க வேண்டும். பசுக்கள் குடங்குடமாகப் பால் சுரக்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நாடெங்கும் செல்வம் அனைத்தும் நீங்காது நிலைபெற்றிருக்க வேண்டும்! இதுவே, 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி' ஆண்டாள் அம்மையார் திருமாலிடம் கேட்கின்ற வரம்!

இதிலே தன்னலமில்லை. தேச நலமே பிரதி பலிக்கக் காண்கின்றோம். ஆகவே, பாவை பாடல்கள் சமூக வாழ்வில் தேசபக்தி முதலிடம் பெற்றுவிட்ட இந்நாளிலும் பாடவேண்டியவைதான். ஆனால், தெய்வ பக்தியோடன்றி தேசபக்தியோடும் பாடவேண்டும்.

இந்த மார்கழித் திங்களிலேனும் தீயன செய் யாமல்—பொய்யுரை புகலாமல்—புறஞ்சொற் போற்றா மல், இல்லை என்று வருவார்க்கு 'இல்லை' என்று சொல்லாமல் விரதங்கள் காத்து பாவை பாடல்களைப் பாடவேண்டும்.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யாதன செய்யோம்; தீக்குறளைச் சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!"

இந்தப் பாடலிலும், பால் வேற்றுமையின்றி, நில— மொழி வேற்றுமையை மறந்து வையத்து வாழ்வோர்

அனைவரையும் கூவி அழைக்கின்றார் ஆண்டாள். ஆம்; 'பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடி பரவ' அழைக்கின்றார்.

இந்தப் பாடலிலே ஆண்டாள் கூறும் விரதங்கள் மனிதகுலம் முழுவதற்கும் தேவைப்படும் ஒழுக்கங்கள் தானே!

தெய்வ பக்தியாலும், தேச பக்தியாலும் அன்றி வேறு வழிகளால் அத்தகைய ஒழுக்கங்களைப் பெற முடியாது.

இன்று நம்மில் பலர் பாவை பாடல்களைப் பாராயணம் செய்கின்றனர். மார்கழித் திங்களில், கேட்போர் மனமகிழவும் பாடுகின்றனர். ஆனால்,

"தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க"

முயலுமாறு ஆண்டாள் கூறினாரே அந்த நிலையில் நின்று பாடுகிறோமா?

கோவிந்தனைப் பாடிய ஆண்டாளம்மையார் அதற்குச் சன்மானமும் வேண்டுகின்றார். ஆனால், தனக்காகக் கேட்கவில்லை.

"கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்!"

என்ற பாடலில், தன்னோடு சேர்த்து நாட்டு மக்கள் அனைவருக்குமே நல்வாழ்வு வேண்டுகின்றார். சூடகம், தோள்வளை, தோடு, பாடகம் போன்ற அணிகள் பலவும் வேண்டுமாம்! அழகிய ஆடை வேண்டுமாம்!

அதன் பின்னே பாற்சோறும், நெய்ச்சோறும் வேண்டுமாம். நெய்சோற்றைப் பிழிந்தால், முழங்கை தொடுமளவுக்கு நெய் ஒழுகவேண்டுமாம்!

இப்படியெல்லாம் மண்ணுலகில் வாழ்வாங்கு வாழத்தான் ஆண்டாள் ஆண்டவனை வரம் வேண்டுகின்றார். நாட்டோர் எல்லோரும் வாழவேண்டுகிறார்.

இதன் பெயர்தானே தேச பக்தி!

திருவெம்பாவை மக்கள் எல்லோரும் பாடத் தக்கதுதான். ஆனால், சிறப்பாக இளநங்கையர் பாடுவதற்கென்றே இயற்றப்பட்டதாகும். திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் எல்லாவற்றிலும் ஒற்றுமை இருக்கக் காண்கின்றோம். மாணிக்கவாசகரும், தேச பக்தி—தெய்வ பக்தி ஆகிய இரண்டையும் பிணைத்தே பாடியிருக்கின்றார்.

திருவெம்பாவை நங்கையர் சிவபெருமானிடம் ஓர் வரம் வேண்டுகின்றனர்:

**"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே**
**பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவர் ஆவார்; அவருகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்!"**

இந்தப் பாடலில் தெய்வ பக்தியுடைய ஒருவனே தனக்குக் கணவனாக வாய்க்கவேண்டும் என்று வேண்டுகின்றாள், ஒரு நங்கை. அடியார் பணி செய்வதே தெய்வ பக்தியின் லட்சணம். கணவனே தெய்வத்தின் அடியானாக இருந்தால் காதல் வாழ்வு கூட கடவுள் பணியாக இருந்துவிடுமல்லவா? அதனால் தான் 'உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கு அவர்க்கே பாங்காவோம்; அன்னவரே எம் கணவர்

ஆவார்!' என்று பாடுகின்ருள் திருவெம்பாவை நங்கை. பின்னும் ஓர் இடத்திலும்,

எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை யுனக்கல் லாது எப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்ருென்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

என்று பாடுகின்ருள் திருவெம்பாவை நங்கை. ஆம்; தெய்வ நம்பிக்கையின் எதிரி—நாத்திகன்—தனக்குக் கணவனுக வாய்த்துவிடக்கூடாது என்பது அவருடைய கொள்கை. "எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க" என்ற வரி இதையே வற்புறுத்துகின்றது.

இன்றைத் தமிழகத்தில், இன்னெரு ஆண்டாளேயோ மற்ருெரு மணிவாசகரையோ நாம் காண முடியாது. காரணம், நம் நெஞ்சில் தெய்வ பக்தியும் தேச பக்தியும் நிறைவு பெறவில்லை. பிற நாடுகளோடு நமக்குள்ள தொடர்பும், நமக்குக் கற்பிக்கப்படும் கல்வியும், நாம் நடத்துகின்ற வாழ்க்கை முறையும் ஆண்டாளும், மாணிக்கவாசகரும் தோன்ற முடியாத சூழ்நிலையை உருவாக்கிவிட்டன.

தனி மனிதரிடையே ஒழுக்கக் குறைவு அதிகரிக்க அதிகரிக்க சமூகத்தின் கட்டுக்கோப்பு முழுவதுமே ஆட்டங் கண்டுவிட்டது. கடந்த இரண்டு மகாயுத்தங்களில் இறந்துபோனவர்களை எல்லாம் திரும்பவும் பெற்றெடுத்துவிட்டோம். தகர்க்கப்பட்ட கட்டிடங்களை எல்லாம் புதுப்பித்துவிட்டோம். ஆனல், மகாயுத்தங்களின்போது நாம் இழந்துவிட்ட ஒழுக்க நெறிகளை இன்னமும் அடைந்துவிடவில்லை. இனி அடையவே முடியாதோ எனவும் ஐயுறுகின்றேன். தொழில் முதலாளிகளிடையேயும், வர்த்தகர்களிடையேயும்

மகாயுத்தகாலத்தில் கொள்ளை லாபபுத்தி வளர்ந்தது. அந்தக் கொடும்புத்தி யுத்தத்திற்குப் பிறகும் வாழ்கின்றது; நாளொரு மேனியாக வளர்கின்றது.

தமிழ் இனத்தவர் உலகம் முழுவதற்கும் தலைமை தாங்கவேண்டும் என்பது என் அவா. அரசியல் துறையில் அல்ல—அருள்துறையில்! ஆம்; ஒழுக்க வாழ்வில் உலக மக்களுக்கு நாம் வழிகாட்ட வேண்டும். பக்தி ஒன்று மட்டுமே ஒழுக்கத்தின் முதலும் முடிவுமாக இருந்துவிடாது. வாழ்க்கையில், தொழிலில் இன்ன பிறதுறைகளில் மக்கள் ஒழுக்கமுடையவர்களாக வாழவேண்டும்.

அந்த ஒழுக்கத்தை அழிக்கும் மகாயுத்தங்களை நாம் மனமார வெறுக்கவேண்டும். இந்த ஆண்டு மார்கழித் திங்களில் பழக்க வழக்கத்தை யொட்டி யேனும் தெய்வத்தை வழிபடுவீர்கள் அல்லவா? அந்த வழிபாட்டில் உலக சமாதானத்தைக் கோரியும் பிரார்த்தனை செய்யுங்கள். உயிர்க்குலத்தை அழிக்கும் 'யுத்தம்' ஒழியட்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். நிச்சயமாக திருப்பாவை—திருவெம்பாவைப் பாடல்களைப் பாடும் பெண்மணிகள் உலக சமாதானத்திற்காகப் பிரார்த்தனை செய்யவேண்டும். தாயுள்ளங்களின் வேண்டுகோள் வெல்லும்!





# மணிவாசகத் தேன்

திருவாசகத்துக்குத் 'தேன்' என்று ஒரு பெயருண்டு. திருவாசகத்தின் சிறப்பையோ, அதை இயற்றிய மணிவாசகரின் பெருமையையோ புகழ்ந்து பேசும் அருகதை எனக்கில்லை. எனக்கு முன்னும், மாணிக்கவாசகருக்குப் பின்னும் தோன்றிய பெரியார்கள் சிலர் திருவாசகத்துக்கு மதிப்புரை தந்திருக்கின்றனர். அவர்களுடைய வாக்குகளைப் பின்பற்றியே திருவாசகத்தைப் பற்றி எனது கருத்தை வெளியிட விரும்புகின்றேன்.

"திருவா சகம் இங்கு ஒருகால் ஓதில்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி மன்பதை யுலகில்
மற்றையர் இலரே"

என்று, தாம் இயற்றிய 'நால்வர் மணிமாலை' யில் கூறுகின்றார், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். "கல்மனத்தையும் உருக்கவல்லது" என்று கூறாமல், "கருங்கல் மனத்தையும் கரைக்கவல்லது" என்கிறார் அப் பெரியார்.

வெறுங்கல் மனம், கருங்கல் மனம் எனப் பல மனங்களைப் பார்க்கிறார் சிவப்பிரகாசர். அவற்றில், மிக்க கடினமான—உடைப்பதற்கு அரிதான கருங்கல் மனத்தையே கரைத்துவிடத் தக்கதாம் திருவாசகம்!

'இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாசகத்தைப் படித்தவரிலும் சிலர் கருங்கல் மனம் படைத்திருக்

கிறார்களே?' என்று நீங்கள் கேட்கலாம். அவர்கள் திருவாசகத்தை ஊனுருக—உயிருருகப் படித்து உணராதவர்கள் என்கின்றார் வள்ளலார்.

"தேன் படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான் படிக்கும் போது எனை
நானறியேன்; நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம் படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங் காண்
தனிக்கருணைப் பெருந்தகையே!"

இஃது, திருவாசகம் படிப்பதற்கு வள்ளலார் வகுத்த முறை. இதுவே, தமது அனுபவமும் என்று அறிவிக்கிறார் அப்பெரியார்.

ஆம்; அறிவால் உணர்ந்து, நாவால் படிப்பது மட்டும் போதாது. நா, ஊன், உளம், உயிர், உயிருக்கு உயிர் ஆகிய அனைத்தும் ஒன்றி உருகுமாறு படிக்க வேண்டுமாம்!

இப்படிப் படித்து அவர் அடைந்த அனுபவத்தை—ஆனந்தப்பெருக்கை அவரே கூறக் கேளுங்கள்:

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை
[கலந்தென்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."

நல்ல கரும்புச் சாற்றிலே, தேனையும் பாலையும், மா—பலா—வாழை என்ற கனிவகைகளையும் கலந்து உண்டதுபோல, திருவாசகப்பாட்டை ஊன் கலந்து, உயிர்கலந்து, உயிர்க்குள்ளிருக்கும் உயிரிலும் கலந்து பாடவேண்டும் என்கிறார் வள்ளலார்.

இப்படி, துறைமங்கலம் சிவப்பிரகாசரும், அருட் சோதி இராமலிங்க வள்ளலாரும் திருவாசகத்திற்கு மதிப்புரை வழங்கியிருக்கின்றனர்.

திருவாசகத்தில், 'சிவபுராணம்' தனிச் சிறப்புடை யது. 'நமச்சிவாய வாஅழ்க' என்ற முதல் வரியில் **வாஅழ்க** என்னும் சொல்லில் கொடுத்துள்ள அளபெடை பயனுடையது. அளபெடையின்றி 'வாழ்க' என்னும்போது ஒலி, கண்டத்திலிருந்து எழு கின்றது. ஆனல் அளபெடை கொடுத்து 'வாஅழ்க' என்னும்போது ஒலி உந்தியில் இருந்து எழுகின்றது. இந்த இடபேதம் வாழ்த்தை வலுவுடையதாகச் செய் கின்றது.

உற்சவ காலங்களில் பவனிவரும் சுவாமியின் பின்னே பத்துப் பதினைந்துபேர் சேர்ந்துகொண்டு வேத பாராயணம் செய்தவண்ணம் செல்வதைப் பார்க் கிறோம். அதுபோல பலர் ஒன்ருகச் சேர்ந்துகொண்டு, எல்லோரும் ஒரே குரலாக சிவபுராணத்தைப் பாடிச் சென்ருல் வேத பாராயணம் போன்றே நாதம் எழும். ஆம்; வேத பாராயணத்தோடு போட்டியிடும் வகையில் சிவபுராணத்தை இயற்றியிருக்கிருர் மணிவாசகர்.

இறைவன் தன்னை நினைப்பார் நெஞ்சில் மட்டுமில் லாமல், நினையாதார் நெஞ்சிலும் நிலைத்திருக்கிருன் என்பது மணிவாசகர் கொள்கை.

> "ஓராதார் உள்ளத்து
> ஒளிக்கும் ஒளியானே"

என்பது அப்பெரியாரின் வாக்கு. ஓராதார் உள்ளத் திலும் அவன் ஒளிந்திருப்பதால் அங்கும் இருளின்றி ஒளியே நிறைந்திருக்கிறது என்பதை நினைப்பூட்டவே 'ஒளியானே' என்கின்ருர்.

சிவபுராணத்தில் மற்ருெரு சிறப்பையும் பார்க்கி ருேம். உயிரானது புல்லில் துவங்கி, தெய்வப் பிறப்பு

வரை பல்வேறு பிறவிகளை எடுக்கும் பெருமை பேசப் படுகிறது.

"புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என்ற வரிகளில், மாணிக்கவாசகர் தாம் எடுத்த பிறவிகளைக் கணக்கெடுத்துக் காட்டுவார்போல், உயிர்க் குலத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நமக்கு உணர்த்திவைக்கிறார்.

மாணிக்கவாசகர் கூறும் பிறவிப் பட்டியலில் செய்யுளைநோக்கி வைத்த முறையை மாற்றிப் படிப் போமானால், பரிணமவாதிகளின் கருத்துக்கும் மாணிக்க வாசகர் தரும் பட்டியலுக்கும் பொருத்தமிருப்பதைப் பார்க்கலாம்.

என்னதான் அறிவும் ஆராய்ச்சித் திறனுமிருப்பி னும் மெய்ஞ்ஞானியின் நிலையை அடைய விஞ்ஞானி யால் முடியாது. ஆனால் விஞ்ஞானியை அடைய மெய்ஞ்ஞானியால் முடியும். இந்த உண்மையை மாணிக்கவாசகர் மூலம் உலகம் அறிந்துகொள்ள முடிகின்றது.

உயிரானது, தாவர வர்க்கம்தோன்றி—தொடங்கி தேவ குலம் வரை பல பிறவிகளை எடுத்த பிறகு, இறுதி யாக அது அடைக்கலம் புகவேண்டிய இடம் இறைவன் திருவடியே என்பது மாணிக்கவாசகர் கொள்கை. இதையே 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன்; இறுதியில், உன்பொன்னடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்" என்று கூறுகின்றார் வாதவூரார்.

'பண்டாரம்' என்ற சொல், இந்நாளில் காவி உடையையே குறிக்கின்றது. முன்னாளில் அச்சொல், செல்வத்தையே குறித்தது. பொருட் செல்வத்தை யன்று, அருட் செல்வத்தையே! அந்த அருட் செல்வத்தையே வழங்க இறைவன் கருணையோடு முன் வந்திருக்கின்றான். அதைப்பெற்றுப் பிறவி யறுக்க "வம்மின் உலகியலீர்" எனக்கூவி அழைக் கின்றார் மாணிக்கவாசகர்.

"மூல பண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்து மினோ!"

என்ற ஒரு வாக்கே இந்த உண்மையை உணர்த்தி வைக்கும். இந்த அருட் செல்வத்தைப் பாடி வழங்கும் தொண்டர்களுக்கே "பண்டாரம்" என்று பெயர். அந்தப் பண்டாரங்களின் தலைவருக்கே 'பண்டார சன்னிதி' என்று பட்டம்!

திருவாசகத்துள் "திருவண்டப்பகுதி"யில், பிரபஞ் சம் அமைக்கப் பெற்ற விதத்தை வருணிக்கிறார் மாணிக்க வாசகர் :

"..............................நாள்தொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்; மேதகு
காலில் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்; என்று என்று
எனைப் பலகோடி, எனைப்பல பிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன்"

இதில் "நாள்தொறும்" என்ற சொல், இறைவன் ஒவ்வொரு நாளும் இன்னின்னவற்றைப் படைத்தார் என்ற பொருளையே உணர்த்தி நிற்கின்றது என்பர் பிறர்.

கிறித்தவ வேதமான பைபிள் 'பழைய ஏற்பாட்' டில் கர்த்தர் ஒவ்வொரு நாளும் பிரபஞ்ச சக்திகளைப் படைத்ததாகக் கூறப்படுகிறது. இந்த இடத்தில் திருவாசகத்திற்கும் பைபிளுக்குமுள்ள ஒற்றுமை உய்த்துணரத் தக்கதாகும்.

லௌகிக வாழ்வு நடத்தும் நாம், நம்மிடமுள்ள பெருமைகளையே வெளிப்படப் பேசுவோம்; சிறுமை களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. சிந்திக்க நேரினும், அவற்றைப் பிறரறியப் பேசுவதில்லை.

ஆனல், ஒழுக்க வாழ்வு நடத்திய மாணிக்க வாசகரோ தம்மிடமுள்ள சிறுமைகளைப் பற்றியே பெருமளவுக்குப் பேசினர். "யானே பொய்; என் நெஞ்சும் பொய்" என்கின்றார். 'இப்படிப்பட்ட கொடிய வஞ்கிய யானும் அழுதால் உனைப் பெறலாமே' எனப் பாடுகின்றார்.

மாண்பு மிக்க மாணிக்கவாசகரே, தாமும் பொய்; தம் நெஞ்சமும் பொய் என்று கூறிக் கொள்வாராஞல் நமது வாழ்க்கையிலுள்ள பொய்களைப்பற்றி நாம் பாடி யழுவதற்கு இந்த ஒரு ஆயுள் போதாதே!

நம்மைப்பற்றிச் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் தம்மைப்பற்றியவையாகவே சொல்லிக் கொண்டார் மாணிக்கவாசகர். ஆயினும், அவர் பாடியதை நாம் பாடுங்கால், அவை நமக்கும் பொருந்தி விடுகிறதல்லவா?

மாணிக்க வாசகர், பல்வேறு சந்தங்களில் பாடல் கள் இயற்றினர். திருவாசகத்திலுள்ள பல பாடல் களின் சந்தங்கள் அவருக்கே சொந்தமானவை. பிற்காலப் புலவர்கள் மாணிக்கவாசகரைப் பின்பற்றி அவர் தந்த சந்தங்களைப் பயன்படுத்திக் கொண்டனர்.

பெண்களுக் கென்றே, அவர்களுடைய இனிய குரலுக்கேற்ப, பல பாடல்களை எழுதி யருளினர்,

மாணிக்கவாசகர். சுண்ணம் இடித்தல் போன்ற தொழில்களைச் செய்து கொண்டே பரமனை நினைத்துப் பாடுவதற் கேற்பப் பல பாடல்களை எழுதியிருக்கின்றூர். பெண்கள் இருவர் வினு—விடை பாணியில் மாறிமாறிப் பாடிக்கொள்ளும் வகையிலும் பாடல்கள் செய்தருளினூர்.

இருவருக்கு மேற்பட்ட பெண்கள் கை கொட்டியும் தோள் தட்டியும் பாடும் வகையிலும் பாடல்கள் இயற்றியிருக்கிறூர்.

பைபிள் கூறும் புறநெறிகளைத் தமிழருக்குப் போதிக்க வந்தார் போப் என்னும் பெரியார். அவருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டு விட்டது சைவர்களுக்குரிய திருவாசகம். பைபிளைக் கொடுக்க வந்த போப் துரை, திருவாசகத்தைத் தமது நாட்டுக்குக் கொண்டு சென்றூர். ஆன்மீகத் துறையில், தமிழர் பிறரிடமிருந்து கொள்வதோடு நில்லாமல், கொடுப்பதையும் கொள்கையாகக் கொண்டவர்கள். கொடுக்காமல் கொள்ளுமளவுக்குத் தமிழகம் தரித்திர நாடன்று.

தமிழகம், நாத்திகத்திற்கு இரையாகி விடுமோ என அஞ்சுகின்றனர் சிலர். திருவாசகம் உள்ளவரை தமிழகத்தில் நாத்திகர்கள் ஆரம்ப வெற்றியைக்கூட அடைய முடியாது.




பல்சுவை

# தமிழர் கலாச்சாரம்

சாதி வாரியும், சமய வாரியும் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழர்களை ஐக்கியப் படுத்தும் சக்தி தமிழ்மொழி ஒன்றுக்குத்தான் உண்டு.

சரித்திரத்தை ஆராய்ந்தால், தமிழகம் அரச பரம்பரை வழி மூன்று நாடுகளாகப் பிரிந்து கிடந்ததை அறிகின்றோம். அந்த வேற்றுமையிலேயும் தமிழ் மக்களிடையே ஒற்றுமையைக் காத்த பெருமை தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும்தான் உண்டு.

தமிழ் நாட்டில் ஆரியம்—சமணம்—பௌத்தம் எனப் புறச் சமயங்கள் பல புகுந்ததுண்டு. ஆனால், அந்தச் சமயங்கள் எல்லாம், தமிழைப் புறக்கணித்துத் தத்தம் மொழிவழி தமிழகத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. ஆகவே, புறச் சமயம் ஒவ்வொன்றும் தமிழைப் போற்றி வளர்த்து அதன் மூலமே தமிழகத்தில் வாழ்வு பெற்றன.

ஆரிய மதம் வேங்கடத்துக்குத் தெற்கே தனது தனித்தன்மையை இழந்து, தமிழ்ப் பண்பு வழியும், தமிழருடைய பழக்க வழக்கப்படியும் திரிந்து விட்டதை எவரும் தெரிந்து கொள்ள முடியும்.

அப்படித் தமிழ்ப் பண்பு வழி திருந்த மறுத்ததால் தான் சமணமும் பௌத்தமும் ஆரிய மதத்துக்கு எதிராக தமிழகத்தில் வாழ்வு பெற முடியவில்லை. வேங்கடத்துக்குத் தெற்கே புகுந்த புறச் சமயக் கருத்துக்கள், கதைகள் எதையும் ஏற்க மறுத்து தமிழர் எதிர்த்துப் போராடியதில்லை. அவற்றைத் தமிழ்வழிப் படுத்தித் தங்களுக்கே உரியதாக்கிக் கொண்டனர்.

குறிப்பாக, ஆரிய மதப் பண்புகளைக் கூறும் இராமாயணம், பாரதம் போன்ற மாபெரும் காப்பியங்களைத் தமிழர்கள் விரும்பி ஏற்றனர். வெறுத்து ஒதுக்கவில்லை. ஆனால், அவற்றை மூலமொழியில் ஏற்க மறுத்து, மொழி பெயர்ப்பின் வடிவில் வரவேற்று வாழ்வளித்தனர். தமிழில் பெயர்த்ததோடு நில்லாமல், அக் காப்பியங்கள் கூறும் பண்பாட்டினைத் தமிழ் வழியிலும் திருத்திக் கொண்டனர்.

சமய வேற்றுமைகளை எல்லாம் விரோதங்களாக வளர்த்துக் கொள்ளாமல், சர்வ சமயங்களையும் சமரசமாகப் பாவிக்கும் பெருமை தமிழருக்கே உரியது. ஆம்; பண்பட்ட தமிழ் அதற்குப் பயன்பட்டது.

சமண சமயம் தமிழரிடையே 'சிந்தாமணி' என்ற செந்தமிழ்க் காப்பியத்தின் மூலம்தான் அறிமுகமானது; வடமொழி மூலம் அல்ல.

பௌத்த சமயம் 'மணிமேகலை' என்ற தமிழ்க் காப்பியத்தின் மூலம்தான் தமிழகத்தில் நுழைந்தது. பாலி மொழி மூலம் அல்ல.

அது போன்றே, கம்பனுடைய இராமாயணமும், வில்லியினுடைய பாரதமும் இல்லையானால், புராதன ஆரிய மதத்தின் அடிச்சுவடுகள்கூட இன்றைய தமிழகத்தில் நாம் கண்டிருக்க முடியாது.

தமிழகத்தில், பின்னாளில் பௌத்த சமயம் பரவா தொழிந்தது. ஆயினும், அந்தச் சமயத்தின் காப்பியமான 'மணிமேகலை' பௌத்தரல்லாத தமிழர்களாலும் இன்னாள்வரை பாராட்டப்படுகிறது.

சமண மதம் தமிழகத்தில் தழைத்து வளரவில்லை என்றாலும், சமண காப்பியமான சீவக சிந்தாமணி சைவ—வைணவ சமயங்களைச் சேர்ந்தவர்களாலும் சிறப்பு செய்யப்படுகின்றது.

தமிழருடைய கலாச்சாரத்தை சங்க இலக்கியங் களில்தான் காணமுடியும். சமய இலக்கியங்களில் காண முடியாது என்று சிலர் பேசுகின்றனர். இது தவறு. சங்க காலத் தமிழர் பிறப்பு வழி சாதிகளாகப் பிளவுபடவில்லை; பிணங்கி நிற்கும் சமயங்களாகப் பிரிந்து நிற்கவில்லை. அவர்கள் உருவங்களால் ஒரு கோடியரராயினும் உள்ளத்தால் ஒருவராகவே வாழ்ந் தனர். எனவே, சங்க காலத் தமிழருடைய கலாச் சாரத்தை ஒரே எண்ணத்தில் காணமுடிகிறது.

பிற்காலத் தமிழர்கள் பிறப்பு வழி சாதிகளாக—பேதப்பட்ட சமயங்களாகப் பிளவு பட்டனர். ஆகவே, தமிழருடைய கலாச்சாரமும் பல வண்ணங்களிலும்—பல வடிவங்களிலும் காட்சி அளிக்கின்றது.

'கலாச்சாரம்' என்பதற்குச் சரியான தமிழ்ச் சொல் 'பண்பாடு' என்பதாம். பண்பாடு வேறு; பழக்க வழக்கங்கள் வேறு. ஆகவே, தமிழர் பின்பற்றும் மதங்களிடையே பழக்க வழக்கங்களில் வேறுபாடு இருக்கலாம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, எல்லா மதங்களையும் சேர்ந்த தமிழரிடையே பண்பாடு ஒன்று போலத்தான் இருக்கிறது. அதனால்தான், சமய வேற்றுமைகள் எல்லாம் கொலைக்கும், கொள்ளைக்கும் தூண்டுகிற விரோதங்களாக இருக்கவில்லை.

கடவுளை நம்பாத, மதத்தை விரும்பாத மக்களுக் குக் 'கலாச்சாரத்'திலும் நம்பிக்கை இருக்க முடியாது. இருப்பதாகச் சொன்னால், அது வெறும் பாசாங்கு. அவர்கள் விரும்பும் கலாச்சாரம் பழைமையிலிருந்து பிறந்ததாகவோ, அல்லது பழைமையிலிருந்து திருந்திய தாகவோ இருக்க முடியாது. தங்களுடைய நவீன கோணங்கித் தனங்களுக்குக் 'கலாச்சாரம்' என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நந்தவனத்தில் புகுந்து பார்த்தால் மலர்கள் எல்லாம் ஒரே வண்ணமாகக் காட்சியளிப்பதில்லை. வண்ணத்திலும் வடிவத்திலும் வேறுபட்டிருக்கக் காண்கின்றோம். ஆயினும், அவை எல்லாமே நம்மால் விரும்பப்படும் மலர்கள்தாம்.

வேற்றுமை வேறு; விரோதம் வேறு. வேற்றுமைப் பட்ட பொருள்களிடையே விரோதம் ஏற்படாமலிருந்தால், அவ் வேற்றுமையால் தீங்கு விளையாது.

அதுபோலவே, தமிழர்—ஆந்திரர்—மராத்தியர்—வங்காளியர் ஆகிய இன வேறுபாடுகளை ஒட்டி கலாச்சார வேறுபாடு இருப்பது இயற்கை.

ஆனால், ஒரு இனத்தவரின் கலாச்சாரம் இன்னொரு இனத்தவரின் கலாச்சாரத்திற்கு விரோதமானதென்று நம்புவது விவேகமற்ற செய்கை. அவற்றிடையே விரோதத்தைக் கற்பிக்க முயல்வதும் விபரீதமற்ற போக்காகும்.

# இளமையும்  கடமையும்

இளமை என்றால் என்ன? வயதில் குறைந்திருப்பது; அல்லது வலுவில் மிகுந்திருப்பது இளமையா? உடலில் மட்டுமின்றி, உள்ளத்திலும் எழுச்சியைக் காட்டுவது இளமையா? ஆம்; உடலிலும், உள்ளத்திலும் இளமை வேண்டும்.

வயதில் குறைந்தவர்களும் முதியவர்போல இருப்பதுண்டு. வயதில் முதிர்ந்தவரும் இளைஞரைப்போல உழைப்பதுண்டு.

இளம் பருவத்திலேயே நல்ல நல்ல எண்ணங்களை, குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இளமையில் நம் மனத்தே குவியும் இலட்சியங்கள்தாம் முதுமையிலேயே புகழ் தேடித் தருகின்றன. முப்பது ஆண்டுகளுக்குள் ஒருவன் தன்னை இலட்சியவாதியாகச் செய்துகொள்ளவில்லையானால், அப்புறம் அவன் வாழ்ந்தும் வாழாதது போலத்தான்.

சமயத்துறையில் ஆசாரியப் பெருமானாக விளங்கிய ஆதி சங்கரர், முப்பது வயதுக்குள்ளேயே ஒப்பற்ற கீர்த்திக்கு உரியவரானார்.

உத்தமர் காந்தியடிகள், இளமையிலேயே இலட்சியவாதியாக மாறினார். "சத்தியாக்கிரகம்" என்ற நெறியைக் கண்டுபிடித்து உலகம் உய்ய வழி காட்டினார்.

இளமையிலே நான் எத்தனையோ முறை அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்திருக்கிறேன். ஆனால், அதில் நான் கண்ட காட்சிகள் எனக்கு எந்த இலட்சியத்தையும் போதிக்கவில்லை. அது நாடகக் கதையின்

குறையல்ல. என் குறைதான். காந்தியடிகளும் சின்னஞ் சிறு பருவத்தில் அரிச்சந்திரன் நாடகம் பார்த்தார்! 'நாடகத்தில் வரும் அரிச்சந்திரனைப் போன்று நாமும் ஏன் பொய் சொல்லாமல் வாழமுடி யாது' என்று எண்ணியது அவர் உள்ளம். 'முயன்ருல் முடியும்' என்ற முடிவையும் கண்டது!

அதன் விளைவு என்ன?

இன்று நாம்—பாரதத்தின் நாற்பது கோடி மக்கள்—காந்தி பிறந்த நாட்டின் குடிமக்கள் என்ற பெருமைக்குரியவர்களாக வாழ்கின்ருேம். அயல்நாடு சென்ருல், "நீங்கள் காந்தி நாட்டவரா?" என்று மதிப் போடு கேட்கின்ருர்கள் அந்நாட்டு மக்கள். அது மட்டுமா? வாய்மை விரதம் மேற்கொண்ட காந்தி தான், அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை அஸ்தமிக்கச் செய்து நமக்கு அரசியல் விடுதலை தேடித் தந்தார்!

தேசபக்தர் சிதம்பரனுர், முப்பது வயதாகத் தாம் இருந்தபோதுதான், ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டினுர்!

நமது புராணங்களில், ஐந்து வயதில் ஞானசம்பந் தர், இசைப் பாடல்கள் பாடியதாகக் கூறப்பட்டிருக் கின்றன. அந்த அற்புதத்தைச் செய்ய ஐந்து வயது போதுமா?—அந்த ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டாம். காளைப் பருவத்திற்குரிய கடமையை நீங்கள் செய் தாலே போதும்.

உடலை மறந்து, உள்ளத்தைமட்டும் கருத்தில் கொண்டு பார்த்தால் இளமை உள்ளம் எது?

அநீதியைக் கண்டு அஞ்சுவதோ, அதற்கு அடிமைப்பட்டு வாழ்வதோ இளமையல்ல; முதுமையே. அநீதியைக் கண்டவிடத்து, அதனோடு போராடி அதனை அழிக்க முயல்வதே இளமை. தீமையோடு சமரசம் செய்துகொள்வது இளமைக்கு இழுக்கு.

இளைஞர்களாகிய நீங்கள்—இல்லை, நாம்—ஆற்ற வேண்டிய கடமைகள் பல உண்டு. அவற்றில் உடலோம்பல் முதற் கடமையாகும். இல்லை—உடலை யும் உள்ளத்தையும் ஒரே காலத்தில் ஓம்பிவரவேண் டும். உள்ளம் பலமாக—பலப்பல இலட்சியங்களின் இருப்பிடமாக இருந்து—உடல் வலுவுடையதாக இல்லையானல், வாழ்க்கை சுமையாகிவிடும். உள்ளத் தில் வலிமைபெற்று, உடலிலே வலுவற்றிருந்த பாரதி,

"நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?
சொல்லடி சிவசக்தி—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ !—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே !"

என்று பாடுகின்ருர்.

சிந்திக்கும் சக்திபடைத்த நெஞ்சினர்க்குச் செய லாற்ற உடல் வலிவு தேவை! அறிவுடையவன், உடலில் ஆற்றல் பெற்றில்லையானல், அவனுக்கு வாழ்க்கை கசந்துவிடும். அந்தக் கசந்தநிலையில்தான் "சுடர்மிகும் அறிவுதந்த நீ, என்னுடலிலும் வலிமை தாராயோ !" எனப் பராசக்தியை வேண்டுகிருர், பாரதியார்.

மற்ெருரு இடத்திலும், "சிந்தனை மாய்த்துவிடு—அல்லால் இதை செத்த உடலாக்கு" என்று நொந்த மனத்தோடு பாடுகிருர், நோயுற்ற பாரதி.

அவர், இளைஞனுடைய உடல் எப்படி இருக்க வேண்டும் என்பதனை, "அரிவாளைக்கொண்டு பிளந் தாலும், கட்டுமாரு உடலுறுதி வேண்டும்" என்ற வரியில் கூறுகிருர். இளம் மாணவர்களே ! பிணிக்கும் பணிக்குமிடையே போராடும் நானும் உங்களை வேண்டுகிறேன் ; உடலை நன்கு பேணி வளர்க்கப் பயிலுங்கள்.

பள்ளியில் படிக்கும் பிள்ளைகளாகிய நீங்கள் எதை வேண்டுமானாலும் படியுங்கள்; யாருடைய பேச்சை வேண்டுமானாலும் கேளுங்கள். ஆனால், படித்ததை-கேட்டதை அப்படியே நம்பிவிடாதீர்கள்! இளமைப் பருவம் எதையும் நம்பி ஏமாந்துவிடக்கூடியது. இந்தப் பலவீனம் உங்கள் பருவத்திற்கிருப்பதை உணருங்கள். உணர்வீர்களானால், அதுவே நீங்கள் படித்த பெரிய படிப்பாகும்!

மனிதன் அறிவு பெறுவதற்கான கருவிகள் இரண்டாகும். அவை 'கல்வி—கேள்வி'யாம். கல்வி உங்கள் கல்லூரி வகுப்பிலே கிடைக்கிறது. கேள்வியைப் பேச்சுமேடையிலே பெறுகிறீர்கள். கல்வியில் கற்பதையெல்லாம் அப்படியே கடைப்பிடிக்க முடிகிறதா? கடைப்பிடிக்கத்தான் முடியுமா? இல்லை. அது போலவே, கேட்பதை எல்லாம் உண்மை என்று, அவற்றைச் சொல்பவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்று நம்பிச் செயல்பட முயலாதீர்கள்!

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, வாழ்க்கையிலே பற்று—இந்தப் பண்புகளை நன்கு பயிலுங்கள். அவற்றைப் பயின்றபிறகு, இல்லற வாழ்க்கையில் ஈடுபடுங்கள். அப்படி ஈடுபடுங்கால் உங்களுக்கு விருப்பமான பாதைகளில் நீங்கள் செல்லலாம். இதுவே இளம் மாணவர்களாகிய உங்கட்கு யான் கூறும் அறிவுரை.

இலக்கிய நூற்களில் எவ்வளவோ நல்ல நெறிகளைப் படிக்கிறீர்கள்! அவற்றைப்பற்றியெல்லாம் பெருமையோடும் பேசுகிறீர்கள்! "இமயத்தில் விற்கொடி பொறித்த வீரர் பரம்பரை, புலிக்கொடி ஒற்றிய வீரர் மரபினர், மீனக்கொடி பொறித்த வீரத் தோளினர்—தமிழர்" என்றெல்லாம் பெருமையோடு பேசுகிறீர்கள். ஏன்—நானும் அப்படியே பேசுகின்றேன். ஆனால், இதெல்லாம் ஏடுகளில் மட்டுமே

இருப்பவையா? அல்லது நாட்டிலே இன்று நாம் காண்பவையா? என்பதுபற்றி ஒருகண நேரம் சிந்தித்துப் பாருங்கள்!

அடித்தவனை அதட்டி மிரட்டுவதற்குக்கூட ஆண்மை இல்லாதவர்களாக இருக்கின்றோம். ஒறுத்தவனையும் பொறுத்தாள்வது பண்புதான். ஆனால், நாம், நம்மை அடித்தவனிடம் பொறுமை காட்டுவது பண்பால் அல்ல; மேலும் அடிப்பானோ என்ற பயத்தால்! இந்த நிலையில் "நாம் பழைய சேரர் பரம்பரை; சூரர் பரம்பரை" என்று சொல்லிக்கொள்வதால் என்ன பயன்?

வீரன், பழைய ஏடுகளிலே, இலக்கியப் பாடல்களிலே வந்தால், அவனைத் தெய்வமாக எண்ணி வழிபடுகிறோம். அதன் பெயர் "வீரவழிபாடு" என்றும் சொல்லுகிறோம். ஆனால், நெஞ்சுரம் படைத்த வீரனைக் கண்ணெதிரே கண்டால் அஞ்சி ஓடுகின்றோம். அவனுக்குப் 'போக்கிரி' என்றும். 'ரௌடி' என்றும் 'பட்டங்கள்' தந்து பழிக்கிறோம்.

ஏன் இந்த இழிநிலை? வீரக்கண்ணகி கணவனை இழந்தபிறகு, மதுரை வீதிகளிலே அழுது சென்றாள். விரித்த கூந்தல், துடித்த உதடு, இடையருது ஒழுகும் கண்ணீர், வீதியிலே புரண்டழுத காரணத்தால் மேனியிலெல்லாம் புழுதி; இந்தக் கோலத்திலே கூடற்பதியின் வீதிகளிலே கூக்குரலிட்டுச் சென்றாள் கோவலன் மனைவி. அவளைப் பாராட்டுகின்றீர்கள், இலக்கியத்தைப் படிக்கும்போது! ஆனால், இன்று நம் கண்ணெதிரே வாழும் கன்னியம்மாள் ஒருத்தி, கண்ணகியின் நிலையில் வீதியில் அரற்றிச் சென்றால், அதிலே இலக்கியச் சுவை காண்பீர்களா? அந்தக் கன்னியம்மாளைப் போற்றிப் புகழ்வீர்களா? இல்லை—'நீலி' என்று நிந்திப்பீர்கள்; 'அடக்கமற்றவள்' என அவமதிப்பீர்கள்.

ஆம்; ஏடு வேறு—இன்றுள்ள நாடுவேறு என்ருகி விட்டது. இந்த இழிநிலையில் பண்பாடுபற்றிப் பெருமை பேசுகிருேம். இதில் 'தமிழர் பண்பாடு இது; ஆரியர் பண்பாடு அது' என்றெல்லாம் ஆராய்ச்சி நடத்து கிருேம். ஏடுகள்கூறும் பண்பாட்டிற்கும், நாம் நடத்தும் வாழ்க்கைக்கும் துளிக்கூடத் தொடர்பில்லை. இதை உணராமல் பண்பாட்டுச் சண்டை போட்டுப் பயன் என்ன? பாரத மக்கள்—பழந்தமிழர்களின் வாரிசு களான நாம்—இந்த இழிநிலை எய்தக் காரணம் என்ன? ஏட்டிலே சீரும் சிறப்பும், நாட்டிலே இழிவும் அழிவும் என்ற நிலை ஏற்பட யார் காரணம்? அல்லது எது காரணம்?—எண்ணிப் பார்த்தீர்களா?

நான் எண்ணிப் பார்த்தேன்.

இத்துணை கேடுகளுக்கும் மூலகாரணம்—முதற் காரணம் "மெக்காலே கல்வித்திட்டம்" தான் என்ற முடிபுக்கு வந்தேன். நான் என்ன? காந்தியடிகள் போன்ற ஞானியர் பலர் இதனையே வற்புறுத்து கின்ருர்கள்.

நாம் எவ்வளவுக் கெவ்வளவு கல்வியில் உயர் நிலைக்குச் செல்கிருேமோ, அவ்வளவுக் கவ்வளவு நம்மிடமிருந்து வீரம் விடைபெற்றுக் கொள்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சியாலும், ஆங்கிலமொழிக் கல்வியாலும் நாமடைந்த கேடுகள் கொஞ்சமல்ல. எனது வலது கன்னத்தை அடித்தவனை, அவனது இடது கன்னத்தில் அடிக்க என்னுல் முடியுமானுல், அதன் பெயர் வீரம். அடித்தவனிடமும் அன்புகாட்டி, வலது கன்னத்தில் அடித்தவனுக்கு, இடது கன்னத் தைக் காட்டுவேனுனல் அதன் பெயர் சாந்தம். ஆனுல், ஆங்கிலக் கல்விமுறைக்கு இரையான மக்க ளிடம் வீரமும் இல்லை; சாந்தமும் இல்லை.

என்னை ஒருவன் அடித்தால் நான் அவனைத் திருப்பி அடிக்கக்கூடாது; அடிபட்ட நான் போலீசில்

புகார் செய்யவேண்டும். அடித்தவனைப்போலவே, அடிபட்டவனும் பணம் செலவழித்து, நீதிமன்றத்திலே நிற்கவேண்டும். இது ஆரியர் பண்பாடுமல்ல; தமிழர் பண்பாடுமல்ல. நம்மை அடிமைகொண்ட ஆங்கிலேயர் திணித்த பண்பாடு. மெக்காலே கல்வித்திட்டம் நமக்குத் தந்த பரிசு. அறிவு முதிர்ச்சிபெற்றவரிடம் வீர உணர்ச்சி இருப்பதில்லை. அதனால், அறிவு சூழ்ச்சிப் பாதையிலே யாத்திரை நடத்துகிறது. அடுத்தவனைக் கெடுப்பதற்கே அந்த அறிவு பயன்படுகிறது, வீரமிலாக் காரணத்தால்! அதனாற்றான், 'படித்தவன் சூதும் வாதும் பண்ணினால் ஐயோன்னு போவான்' என்றார் பாரதியார்.

வீர உணர்ச்சிபெற்ற மக்களுக்கு அறிவு நுட்பமில்லை, படிப்பில்லாக் காரணத்தால்! அதனால் கல்வியறிவில்லாத வீரமும், பிறரைத் துன்புறுத்துவதிலே இன்பம் காண்கின்றது!

மூவேந்தர் ஆட்சிக்காலத்தில், அறிவும் வீரமும் பின்னிப் பிணைந்து கிடந்தன தமிழரிடத்திலே. மெக்காலே கல்வித்திட்டமானது அறிவிலிருந்து வீரத்தையும், வீரத்திலிருந்து அறிவையும் பிரித்தெடுத்துவிட்டது! அன்றே நாம், நமக்கே உரிய பண்பாட்டுப் பாதையிலிருந்து விலகிவிட்டோம்.

தமிழ்மக்கள் அறிவில் சிறந்தவர்கள்; இன்றுங்கூடத்தான். நம்மிடையே கல்விகற்ற மேதைகள் எண்ணற்றோர் வாழ்கின்றனர். ஆனால், அந்தக் கல்வி ஒரே தரமானதல்ல. அதனால், கற்றவர்களிடையே வீரமில்லாததோடு, ஒற்றுமையுமில்லை. அவர்களிடமும் புதிய புதிய "சாதிகள்" உருவாகிவிட்டன! அந்தச் சாதிகளிடையிலும் ஏற்றத்தாழ்வுகள்!

'வித்துவான்' பட்டம்பெற்றவரின் வெறும் தமிழ்ப் புலமையை "பி. ஓ. எல்" பட்டம்பெற்றவர் மதிப்பதில்லை. காரணம், பி. ஓ. எல் பேர்வழி, தமிழோடு

ஆங்கில மொழியிலும் சிறிதளவு பயிற்சி பெற்றுவிட்டதுதான்.

தமிழறிவுக்காக பி. ஓ. எல். பட்டம் பெற்றவரின் ஆங்கிலமொழிப் பயிற்சியை, ஆங்கில பி. ஏ; எம். ஏ. பட்டதாரிகள் மதிக்கிறார்கள் இல்லை. ஏனெனில், ஆங்கிலப் பட்டதாரிகள் பரங்கி மொழியைப் பயின்றதோடு அதனையே கருவிமொழியாகவும் கொண்டு கல்லூரிப் பாடங்கள் அனைத்தையும் கற்றார்களாம்.

கல்வித்துறையில் ஏற்றமும் இறக்கமும் இதோடு நிற்கவில்லை.

1936 க்கு முன்பு 'மெட்ரிக்' படித்துத் தேறியவர் இந்தக்கால பி. ஏ; எம். ஏ. க்களைவிடத் தன்னுடைய ஆங்கில ஞானமே உயர்தரமானது எனக் கருதிப் பெருமிதமடைகிறார். காரணம், அவர் படித்த காலத்தில் மூன்றாம் வகுப்பிலேயே ஆங்கிலமொழிப் போதனை ஆரம்பமானதோடு, உயர்நிலைப் பள்ளியிலேயும் ஆங்கிலமே பயிற்சிமொழியானதுதான்!

இப்படி ஆங்கிலக் கல்வியின் தரம் உயர, உயர ஆணவமும் சேர்ந்து, உயர்ந்து வருகிறது! இதுவா, தமிழர் பண்பாடு! தமிழர் தன்மானம்!

எவ்வளவுக் கெவ்வளவு தாய்மொழியைப் புறக்கணிக்கிறார்களோ, எவ்வளவுக் கெவ்வளவு பரங்கி மொழியைக் கூடுதலாகப் பயில்கிறார்களோ—அவ்வளவுக்கவ்வளவு தாங்கள் உயர்ந்தவர்களாகவும், சிறந்தவர்களாகவும் கருதிக்கொள்ளும் மனப்பான்மை படித்துப் பட்டம் பெற்றவர்களிடத்திலே இருந்து வருகிறது. இதுவா அறிவு?—இல்லை; இது நவீன மூட நம்பிக்கை.

அந்நிய—ஆங்கிலமொழி மோகத்தால் தாய்மொழியைப் புறக்கணித்ததற்கு, அதிலே புலமை பெறத் தவறியதற்கு வெட்கப்பட வேண்டாமா?

வெட்கப்படாதவரை 'தமிழர்' என்று சொல்ல முடியுமா?

ஆங்கிலமொழியில் அறிவுபெற்ற மேதைகள், என்போன்ற தமிழ்மொழி மட்டுமே படித்தவர்களை, 'படித்தவர்கள்' பட்டியலிலே சேர்த்துக்கொள்வதில்லை!

தமிழ்நாட்டில்—தமிழராக உள்ள ஒருவரைப் பார்த்து, "இவர் படித்தவர்" என்று சொல்வதானால் அவர் தமிழில்—தாய்மொழியில் புலமை பெற்றவராக இருக்கவேண்டும். அதுதானே நெறி; கல்விமுறை! தமிழை மறந்து, வெறுத்து பிறமொழிகளைப் பயின்று பட்டம் பெற்றவரை "படித்தவர்" என்று சொல்லுவது, தமிழ்மொழியை அவமதிப்பதாகும்.

தாய்மொழியில் கல்வி பயிலாதவர், அன்னிய மொழிகள் பல படித்திருப்பினும், படித்தவரல்லர்; இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பாமரர் அவர்தான்.

ஒரு தமிழர் ஆங்கில மொழியிற் புலமைபெற்று, உலகப் பேரறிவாளராக விளங்கலாம். ஆனால் வீட்டு மொழியில் புலமைபெறாத அவர், தமது தாயகமான 'தமிழக'த்தைப் பற்றிய சரித்திரச் சிறப்புகளைச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியாது.

இப்படிப்பட்டவர்களைப்பற்றி பாரதியார் கூறுகிறார்:

"சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
 தெய்வ வள்ளுவன் வான்மறை தந்ததும்
பாரில் நல்லிசைச் சோழர்கள் பாண்டியர்
 பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்"

"கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்.
.......... .......... ..........
.......... .......... ..........
அன்ன யாவும் அறிந்திலர்"

என்று அனுதாபத்தோடு கூறுகின்றார். அந்த அறியாமைக்குக் காரணம், "ஆங்கிலம் பயில பள்ளியுட் புகுந்ததுதான்" என்கிறார் பாரதியார்.

பாரதியார், தாம் வாழ்ந்த காலத்து மாணவர் ஒருவரைப் பார்த்து, "தம்பி! சிறந்த புலவர் மூவர் பெயரைச் சொல்லு!" என்று கேட்டிருப்பார். மாணவரும், "யாமறிந்த புலவரிலே ஷேக்ஸ்பியர்போல், ஷெல்லியைப்போல், மில்டனைப்போல்" என்று முழங்கத் தொடங்கியிருப்பார். அந்த மூட மாணவரிடம் ஆத்திரம்கொண்ட பாரதி, "நிறுத்து, தம்பி, நிறுத்து!" எனக்கூறி, மாணவருடைய 'முழக்கத்'திற்கு முற்றுப் புள்ளி வைத்திருப்பார். வைத்தவர் வயிறெரிந்து பாடுகின்றார், "என்ன கூறி, மற்றெங்ஙன் உணர்த்துவேன், இங்கிவர்க்கு என் உள்ளம் எரிவதே" என்று.

பாரதி கண்ட அந்த மாணவர் சமுதாயம் இன்றில்லை; இன்றுள்ள மாணவர்கள் நல்ல தமிழ்ப் பற்றுடையவர்கள். பாரதி கற்றுத்தந்த, "யாமறிந்த புலவரிலே, கம்பரைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்பதைச் சொல்லிச் சுவைப்பவர்கள்!

தமிழ் மொழியிற் பாடமில்லாத பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவற்றில்கூட "தமிழ்ப் பேரவை" தோன்றியுள்ள காலமிது! இவைகளை எல்லாம் கண்டு என் இதயம் பூரிக்கின்றது! என்றாலும் "தமிழிலும் ஆங்கிலமே சிறந்தது, உயர்ந்தது" என்று சொல்லுவோர் இன்றும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இது, நாம் செய்த பாவம்!

தமிழராகப் பிறந்தோர் தம் தாய்மொழியான தமிழின்பால் பற்றுக்கொள்வது குற்றமல்ல; அதனை 'மொழி வெறி' என்போர் நமது அனுதாபத்துக்கு உரியவர்களே!

ஆழ்கடல் அகன்றதாக இருப்பினும், அதிலே பயணம் செய்வோர் மிகச் சிறிய கப்பலைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. அப்படியே, பரந்த ஆகாய வெளியிலே யாத்திரை செய்வோருக்கு மிகச் சிறிய விமானம் தேவைப்படுகிறது! அப்படியே, உலகம் மிகப் பெரியதாயினும், நாமும் அகில உலக நோக்குடையோராயினும், தாய் மொழியின் மூலம்தான் நமது எண்ணத்தை வெளியிட்டு வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. கடல் பிரயாணி, கப்பல் அழகானதாக இருக்க வேண்டும் என்று விரும்புவதுபோல— வானவழிப் பயணம் செய்வோர் விமானம் மிகச் சிறந்ததாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவதுபோல நாமும் நமது தாய் மொழியைச் சிறப்புடையதாகச் செய்ய விரும்புகிறோம். இதனை "மொழி வெறி" என்பது அறியாமை. அல்லது அறிந்தே சொல்லும் பொய்!

"ஆங்கில மொழியில் உள்ளதுபோல சொல் வளம் தமிழ் மொழியில் இல்லை" என்று தமிழரில் சிலர் சொல்லக் கேட்கிறேன். அவர்கள் தமிழ் மொழியின் வளத்தை, வரலாற்றை, தொல்காப்பிய நூலின் சிறப்பை அறிந்திருந்தால் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

சொல் வளத்தில் ஆங்கிலத்தினும் தமிழ் மொழியே சிறந்ததென்பதை விளக்க ஒரு சான்று சொல்லுகிறேன்.

அறுவடைக்குப் பிறகு கிடைக்கும் தானியத்தைத் தமிழில் "நெல்" என்கிறோம். ஆங்கிலத்தில் 'Paddy' (பாடி) என்கின்றனர். நெல்லில் உமி போக்கிய பிறகு 'அரிசி' என்கிறோம். அதனை உலையில் இட்டுச் சமைத்த பிறகு "சோறு" என்கிறோம். ஆனால் வ-ள-மா-ர் ஆங்கிலத்தில் 'அரிசி—சோறு' ஆகிய இரண்டிற்கும் 'ரைஸ்' (Rice) என்றே பெயர். இதில்

உள்ள கோமாளித்தனத்தை ஒரு சம்பவத்தின் மூலம் விளக்குகிறேன் :

உணவுச் சாலையில் பணிபுரியும் பரிசாரகருக்கு அநேகமாக ஆங்கிலம் தெரியாமலிருக்கும். உணவு கொள்ள வந்த பட்டதாரி ஒருவர் 'ரைஸ் கொண்டுவா' என்று ஆங்கிலத்தில் சொன்னால் அந்தப் பரிசாரகர் "ரைஸ்" என்பதற்கு "அரிசி" என்று பொருள் கொண்டு, அதனை எடுத்துவந்து இலையில் கொட்டினால் அவர் செய்கையில் தவறிருக்க முடியுமா? ஆனால், ஆத்திரம் கொண்ட பட்டதாரி, பரிசாரகருக்கு முட்டாள் பட்டம் கட்டுவார். 'முட்டாள் தனம்' சோறு என்ற பொருள் தரும் சொல்லைப் படைக்காத ஆங்கில மொழியினுடையதா? பரிசாரகருடையதா?

ஏன்—நம் தாய்மொழியான தமிழ், ஆங்கிலத்தில் 'டமில்' ஆகிவிட்டது! இந்தப் பரங்கி மொழி தான் சொல்வளமுடையதாம்; தொல்காப்பியத்தைப் படைத்த தமிழினும் சிறந்ததாம்!

மாணவ மணிகளே—இளைஞர் திலகங்களே! உங்களுக்குச் சொல்லுகிறேன் :

இளமைப் பருவத்திலேயே, வருங்காலத்தில் கடமைகளைச் செய்வதற்கான இலட்சியங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். அந்த இலட்சியம் இதுவாகத் தானிருக்க வேண்டும்—இப்படித்தானிருக்க வேண்டும் என்று நான் வரம்புகட்ட விரும்பவில்லை. அதனை உங்களுக்கு உள்ள சூழ்நிலைக்கேற்ப உங்கள் மனப்பாங்கிற்கேற்ப நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

உங்களில் சிலர், தமிழ் மொழிக்கு நேர்ந்துள்ள இடுக்கண்களை அகற்றச் சூளுரைத்துப் புறப்படலாம். வேறு சிலர், அரசியல் துறையில் தமிழகத்திற்குள்ள குறைகளை அகற்ற ஆதிக்க சக்திகளை முறியடிக்கப் பணி புரியலாம். இன்னும் சிலர், சமுதாயத்தில்

நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற விரும்பி புரட்சிப் பாதையை நாடலாம். மற்றும் சிலர் சமூகத்தில் படிந்துள்ள சாபக்கேடுகளை — மூட நம்பிக்கைகளை—அகற்றும் சீர்திருத்தப் பணியில் சிந்தை செலுத்தலாம். தொண்டு செய்ய விரும்பும் இளம் உள்ளங்களுக்குத் துறைகள் எத்துணை எத்துணையோ உண்டு. அந்தத் துறைகளில் எதை யேனும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

ஆனால், பயனுடைய மக்களாக—பாரதத்திற்குப் பணிபுரியும் மக்களாக—இன்பத் தமிழகத்திற்குற்ற இடுக்கண் களையும் வீரர்களாகப் பணிபுரியுங்கள்!

இன்றைய தமிழகத்தில் உள்ள தலைவர்களிலே நீங்கள் யாரையேனும் பின்பற்றுங்கள். ஆனால், ஒருவரைப் போற்றுவதற்காக மற்றவரைத் தூற்றா தீர்கள். அது, இளமைக்கு இழுக்கு தேடுவதாகும். வயது கடந்துவிட்ட தலைவர்களிடையே கருத்து வேற்றுமை இருக்கலாம். அவர்களுடைய பருவ வளர்ச்சியும், அனுபவ முதிர்ச்சியும் அவைகளுக்குக் காரணங்களாகும். மாணவர்களாகிய நீங்கள் அந்த வேற்றுமைக்கு இடையில் நுழையாதீர்கள். தலைவர்கள் எல்லோரிடத்தும் அன்பு செலுத்த, அவர்கள் நல்லுரை களைக் கேட்கப் பயிலுங்கள்.

நம் தலைமுறையில் காந்தியடிகளினும் சிறந்த ஒரு தலைவரை நாம் கண்டதில்லை. ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன்; காந்தியடிகளைப்போல புகழ்பெற விரும்புவது மகிழ்ச்சிக்குரியதுதான் என்றாலும், அவரைவிடச் சிறந்து விளங்குவதென விரதங்கொள் ளுங்கள். அதில் வெற்றி கிடைக்கிறதா என்பதுபற்றிக் கவலை இல்லை. எண்ணுவதெல்லாம் உயர்வாக இருக்கட்டும்!

இளைஞர்களெல்லாம், குறிப்பாக மாணவர்களெல் லாம் கெட்டுவிட்டார்கள் என்று சிலர் சொல்வதை

நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதற்கு மாருக, வளர்ந்து விட்டவரைப் பார்த்து, அவர்கள் "இளைஞர்களையெல்லாம் கெடுக்கிருர்கள்" என்று சொல்வதிலே உண்மை இருக்கலாம்.

இளம் உள்ளங்களிலே வெறுப்பு இடம் பெறக் கூடாது. இலக்கியங்களிலே சங்க காலத்தவையோ—புராண காலத்தவையோ—எவையாயினும் சரி—இயன்றவரை எல்லாவற்றையும் படியுங்கள்; அந்தத் தலைவர் சொன்னுர்—இந்தத் தலைவர் சொன்னுர் என்பதற்காக ஒரு இலக்கியத்தைப் படிக்காமலே பழிக்காதீர்கள்! அவர் சொன்னது சரிதாஞ என்பதை ஆராய்ந்து பார்த்துத் தெளிவதற்காகவேனும் புராண—இதிகாசங்களைப் படியுங்கள்.

இளமை, எதைப்பற்றியும் ஒரு முடிவுக்கு வரும் பருவமல்ல. இளமையிலே பயிலுங்கள். நாள் ஏற ஏற எது நன்மை, எது தீமை என்ற தெளிவு தானே உங்களுக்கு வரும்!






அறம் வேறு, அரசியல் வேறுதான். ஆனால், ஒன்றுக்கொன்று விரோதமான பண்புகள் அல்ல. அறத்தோடு இயைந்த அரசியலையே வள்ளுவர் ‘பொருட்பாலில்’ வற்புறுத்துகின்றார். அறத்தோடு பொருந்தாதது அரசியலன்று, ஆதிக்கமே! அறம் அரசியலைக் காக்கும் வேலியாகக் கருதப்படவேண்டும். அதனாற்றான் அநீதியாகத் தன்மீது அம்புவிட்ட இராமனைப் பார்த்து, “வாலியைப் படுத்தாய் அலை; மன்அற வேலியைப் பிரித்தாய்” என்கிறான் வாலி.

முற்காலத்தில் அரசியல் அறத்தோடு பிணைந்திருந்ததாகவும், தற்காலத்தில்தான் அறத்திலிருந்து அரசியல் பிரிந்து விட்டதாகவும் சான்றோர் சிலர் பேசக் கேட்கிறோம். நான் அப்படி நினைக்கவில்லை. அறமும் அரசியலும் பூரணமாகப் பொருந்தியிருந்த யுகம் ஒன்று இலக்கியத்தில் காணவில்லை. அசுரத்தனத்திலிருந்து அரசியலைப் பிரித்து அதனை அறத்தோடு பிணைக்கவே திருமால் பல அவதாரங்கள் எடுத்தார். ஆனால், அவதாரங்களின் எண்ணிக்கை பெருகியதன்றி திருமாலின் எண்ணம் நிறைவேறவில்லை.

அரசியல் இன்று சீர்கெட்டிருக்கும் நிலைமையைப் பார்த்தால், இறைவன் இன்னும் எத்தனை எத்தனை அவதாரங்கள் எடுக்கவேண்டுமோ என்று அஞ்சுகின்றது என் நெஞ்சம். இராம—ராவண யுத்தம் அறத்திற்கும், அதர்ம வழிப்பட்ட அரசியலுக்கும் நேர்ந்த

போராட்டம்தான். அந்தப் போரில் அறம் வென்று அதர்மம் அழிந்ததாக இராமாயணம் கூறுகின்றது. அந்தக் காப்பியத்தின் இறுதியில் அறம் அரியாசனத் தில் அமர்த்தப்படுகிறது இராம பட்டாபிஷேகம் என்ற பெயரால்!

அடுத்த யுகத்திலேயே அதர்மம் திரும்பவும் அவதாரமெடுத்துவிட்டது துரியோதனனுதியர் வடிவிலே. உடன் பிறந்தாருக்குரிய மண்ணையும் தன்னுடைய தாக்க முயன்றான் அஸ்தினபுரத்து அரசன். அந்தக் கொடுங்கோலனை அழிக்கக் கண்ணன் வடிவிலே வந்தார் தெய்வத் திருமால். அப்போதும் அறம் வென்றது; மறவழிப்பட்ட அரசியல் வீழ்ந்தது.

இந்தக் கலியுகத்திலும் அறத்திற்கும் அரசியலுக் கும் போராட்டம்தான். ஒழுக்கவழிப்பட்ட அரசியல், அறவழி நிற்கும் ஆட்சிமுறை உலகில் எங்குமே நிலை பெறவில்லை. இரண்டு நாடுகளிடையே போர் நிகழ்ந் தால் எந்த ஒரு நாடும் அறத்தை நம்பிப் போராடுவ தில்லை; ஆயுதத்தையே நம்புகின்றன. நான் அறிந்தவரை, என் அறிவிற்கு எட்டியவரை காந்தியடி கள் ஒருவர்தான் முற்றிலும் அறத்தையே நம்பி அரசியல்போர் நடத்தினர்.

'ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு, மறுகன்னத் தையும் காட்டு' என்கிறார் ஏசுநாதர். மனிதன் தன்னை அடித்தவனைத் திருப்பி அடிக்கும் உரிமையும், நெஞ்சில் உரமும் பெற்றிருந்த காலத்தில் ஏசு அப்படிச் சொன் னார். காந்தியடிகள் காலத்தில் பாரதமக்கள் அனை வரும் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்தனர். ஆங்கிலேயர் வகுத்த சட்டம் அடித்தவனைத் திருப்பி அடிப்பதையும் கிரிமினல் குற்றமாக்கியது. ஆம்; ஒருவன் என்னை அடித்தால் நான் அவன்மீது போலீசில் புகார் செய்யலாம். என்னை அடித்தவனை தன்மானத்திற்காகக்கூட நான் திருப்பி அடிக்கக்

கூடாது. அறத்தில் தங்களுக்கிருந்த நம்பிக்கையால், அகிம்சை வளரவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் ஆங்கிலேயர் அத்தகைய சட்டங்களை செய்யவில்லை. தற்காப்பிற்காகக்கூட திருப்பி அடிக்கக் கூடாதென் பது மக்களுடைய ஆண்மையை அழித்துவிட வேண்டு மென்ற எண்ணத்தினுல்தான். உண்மையில் ஆண் மையை அழித்தும் விட்டார்கள்.

காந்தியடிகள் காலத்தில் அடித்தவனைத் திருப்பி அடிக்க உரிமை இல்லை என்பது மட்டுமல்ல; அடிபட்ட வனுக்கு அழுவதற்குக்கூட நெஞ்சுரமில்லை. காரணம், அழுதால் முன்னர் அடித்தவன் இன்னும் அடிப்பானே என்ற பயந்தான்!

பரங்கியர் ஆண்ட காலத்தில் பாரத மக்களின் வீரம் அழிக்கப்பட்ட வரலாறு இது. இந்த நிலையை வர்ணிக்கப் புகுந்த பாரதி 'செம்மை எலாம் பாழாகி கொடுமையே அறமாகித் தீர்ந்துவிட்டது' என்ருர். ஆம்; 'செம்மை எல்லாம் பாழானுலும் பாதகமில்லை; கொடுமை கோலோச்சுகிறதே' என்று மக்கள் உள்ளம் குமுறினுல் போதும். அந்தக் குமுறலே ஒரு நாளைக்குக் கொடுமையை அழித்து முடிக்கும். செம்மை பாழானதோடு, கொடுமை அறமாகிவிட்ட தாம் நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்தில்!

இந்தியாவில் இரணியன்போல் அரசாண்டனர் அன்னியர்கள். நம்மிலே படித்தவர்கள், பதவிமோகம் பிடித்தவர்கள் 'சமய முளபடிக்கெல்லாம் பொய்கூறி' அறங் கொன்ருர்கள்.

அந்தப் பயங்கரமான சூழ்நிலையில்தான் காந்தி யடிகள் தோன்றினுர் காங்கிரசில். அரசியலிலே அறத்தைப் பிணைத்து அருளாட்சி தோற்றுவிக்கப் பாடுபட்டார். அதன் பெயர் 'இராம ராஜ்யம்' என்றும் கூறினுர்.

காந்தியடிகளின் அறவழிப்பட்ட அரசியலைப் போற்றிப் புகழ்ந்தார் பாரதியார்.

"தன்னுயிர் போலத் தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்;
இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்"

என்று பாடினர், காந்தீயக் கதிரவன் தோன்றிய காலத்திலேயே அதன் கிரணங்கள் அனைத்தையும் கண்டு களிக்கும் சக்தியைப் பெற்றிருந்த பாரதியார்.

தன்னுயிர்போல பிறனுயிரையும் கருதவேண்டும் என்றனர் பெரியோர். காந்தீய அரசியல், தனக்கு அழிவென்னும் பிறனுயிரையும் தன்னுயிர்போல மதிக்க வேண்டும் என்கின்றது. எவ்வளவு துணிச்சல்!

தெய்வ நம்பிக்கையற்ற அரசியல், அறத்தோடு பொருந்தாத ஆதிக்கமாகும். 'மன்னுயிரெல்லாம் கடவுளின் வடிவம்; கடவுளின் மக்கள்' என்ற நினைப்பே அறவழிப்பட்ட அரசியலாகும்.

தமிழ் மன்னர்கள் சோழ மண்டிலத்தையோ அல்லது பாண்டிய மண்டிலத்தை மட்டுமோ ஆண்டவர்களாக இருப்பர். ஆனல், அவர்களுக்குப் புகழுரை கூறிய புலவர்கள் "உலகாண்ட வேந்தர்" என்றே கூறினர். "உயிர்களுக்கெல்லாம் காவலன்" என்றே போற்றினர். தெய்வப் பற்றுடைய அரசன், இறைவனல் படைக்கப்பட்ட எல்லா உயிர்களுக்கும் அருள் சுரக்க வேண்டிய கடமை தனக்கிருப்பதாகவே கருதுவான்.

"தமிழர் என்போர் யார்?" என்று ஆராயப்படுகிறது. என்னுடைய கருத்தில், தனக்காக உலகம் இருக்கிறது என்று எண்ணுமல், உலகத்திலே தான் ஒரு அங்கம் என்று எவன் எண்ணுகின்ருனே அவன் தான் தமிழன். வேங்கடத்திற்கு வேலி கட்டி வாழும் புத்தி அறமும் அல்ல. அரசியலும் அல்ல.

அரசியல்வாதிகள் அற உணர்வுக்கு அப்பாற்பட்டவர்களாகி வருகின்றனர். நீதி நெறிகளை அறிந்த அறவோர் அரசியலைத் தீண்ட அஞ்சுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். தனி ஒரு மனிதன், 'மன்னன்' என்ற பெயரில் மன்னராண்ட காலத்தில் அரசியலுக்குப் புறம்பாக அறவோர் இருந்திருக்கலாம். இன்று வயது வந்த ஒவ்வொருவரும் வாக்குரிமை பெற்றிருக்கின்றனர்.

அருளாளரையும் ஆளும் பொறுப்பு அறத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் கையில் இருக்கிறது. 'மதம் வேண்டுமா—வேண்டாமா' என்பதைப் பற்றித் தீர்ப்பளிக்கும் உரிமை ஆட்சி கையிலிருக்கிறது. கோயில்களும், குளங்களும் அரசினர் விரும்பினுல் இருக்கும். விரும்பாவிட்டால் மறையும். கோல் பிடிப்போர் மாறினுல், மதத்தைப் பற்றியும், தெய்வத்தைப் பற்றியும் அரசினரின் கொள்கையும் மாறக்கூடும்.

அரசியல் நமக்கெதற்கு என்று ஒதுங்கியிருந்து பண் பாடிக்கொண்டிருந்தால் வெகு விரைவில் சந்தர்ப்ப முள்படிக்கெல்லாம் அறங்கொல்லும் நெஞ்சினரால் நாம் ஆளப்படுவோம். அந்த நிலை நேராமலிருக்க அறம் வளர்க்கும் நிலையங்கள் அரசியல் துறையிலும் கவனம் செலுத்தவேண்டும்.

'தமிழன்' என்ற இன உணர்ச்சி சூட்டில் நாத்திகர்கள் குளிர் காய முயல்கின்றனர். இனமும் மதமும்

வேறு வேறு துறைகள்தான். என்றாலும், ஒன்றுக் கொன்று விரோதமானவை யன்று. நான் 'தமிழன்' என்ற காரணத்தால் வேங்கடத்திற்குத் தெற்கேயுள்ள அப்துல்காதரும், அந்தோணியும் எனக்கு அண்ணன் தம்பிகளாகி விடுகின்றனர்.

அப்படியே நான் இந்துவாக இருக்கும் காரணத்தால் வேங்கடத்திற்கு வடக்கேயுள்ள ஷெட்டியும், ஷேட்டும் எனக்கு உறவினராகின்றனர்.

அப்படியே, மதம் காரணமாக ஆமதாபாத்தில் இருக்கும் அப்துல்காதருக்கு அரபு நாட்டில் இருக்கும் அப்துல் மஜீத் உறவினராகிறார்.

கிறித்தவர்கள் நிலையும் அதுபோலத்தான். இனமாகட்டும், மதமாகட்டும் மக்கள் சேர்ந்து வாழத் தோன்றியதன்றி, மக்களைப் பிரித்துவைக்கத் தோன்றவில்லை. மதம் வேண்டாம், தெய்வ நெறி வேண்டாம் என்று யாரேனும் கருதினால், அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால், தமிழன் என்ற இன உணர்ச்சியைப் பயன்படுத்தி நாத்திகப் பிரச்சாரம் செய்யவேண்டாம். உண்மை நாத்திகனுக்கு இனப் பற்றுதான் எதற்கு?

அறமும், அரசியலும் கலந்த அருளாட்சியை இனித் தமிழகத்தில் தோற்றுவிக்க நாம் முயல வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஆட்சி தோன்றுமா என்று கேட்கவேண்டாம். தோன்றினால்தான் உலகம் உய்யும்.

★

# கலையும்  வாழ்வும்

‘கலை கலைக்காகவே இருக்க வேண்டும்’ என்று சிலர் வாதிக்கிறார்கள். ‘கூடாது; கலை கலைக்காகவே இருக்கக் கூடாது. அது மக்களுக்காகத்தான் இருக்க வேண்டும்’ என்று சிலர் பேசுகிறார்கள். இந்த இரண்டு தரப்பினர் கூற்றிலும் உண்மை இருக்கிறது.

கலை யாருக்குச் சொந்தம் என்பது ஒருபுறம் இருக்கட்டும். கலை என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேடையில் ஏறிப் பேசுகிறார்களே, அது ஒரு கலை. அது பேச்சுக் கலை. அவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோமே, அதுவும் ஒரு கலை. அது ரசிப்புக் கலை. ஆக, ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு அமைப்பும், செயலும் கலையின் அடிப்படையில்தான் இருக்கின்றன. கலை என்றால் என்ன என்பதற்கு இதுவரை நம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல—மேல் நாட்டு அறிஞர்களும் இனம் கண்டு சொல்ல முடியவில்லை. காற்றின் தன்மையை உணர்கிறோம்! ஆனால் காற்றைக் காண முடியாது. கலையின் அடையாளத்தை உணரலாம். ஆனால், கலையின் முழுமையான—தெளிந்த உண்மையான உருவத்தை—தோற்றத்தைக் காண முடியாது.

கலை ஓர் உயர்ந்த இலட்சியம். அதற்கு ஒரு சான்று கூற முடியும். நான் தோற்றத்தில் சிறிது குள்ளமானவன். தரையில் கிடக்கும் எல்லாப் பொருள்களையும் தொட்டுப் பார்க்க—அநுபவிக்க எனது கைகள்

நீளும்—என்ருல் முடியும். ஆனல், அதேபோல் தரையைத் தொட்டுக் கொண்டு இருக்கிற தொடு வானத்தையும் எட்டிவிட ஆவல் அடைகிறேன். முயற்சி செய்கிறேன். முடிவது இல்லை. ஏமாற்ற மடைகிறேன். எனது ஆவல் இலட்சியத்தைப் பூர்த்தி செய்யப் பலவித எண்ணங்கள் தோன்றுகின்றன. அவற்றை எழுத்தால் - பேச்சால் - உருவத்தால் - சிலையால்-வடிக்கிறேன். அப்போது அங்கே கலை பிறக்கிறது.

நான் ஒரு காந்திய வாதி. என்னுடைய பையனை அழைத்துக் கொண்டு தெருவில் நடந்து கொண்டு இருக்கிறேன். வழியிலே காந்தி சிலையைக் காண்கிறேன். அந்தச் சிலையைக் கண்டதும் எனது கால்கள் நகர மறுக்கின்றன. கைகள் தாளுகவே கூப்பி வணங்குகின்றன. நான் செயலற்று நிற்கின்றேன். என்முன் காந்தி தோன்றுகிருர். என்னிடம் பேசுகிருர். ஆம்; சிலை பேசுகிறது. "மகனே! உன்போன்ரேரிடம் நான் என்னென்ன எதிர்பார்த்தேன். நாடு இப்போது இழிநிலைக்கு மாறி விட்டதே! நான் சொன்னதையெல்லாம் மறந்து விட்டீர்களே ?" என்று காந்தி என்னிடம் கேட்கிருர். என்னுடைய கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வருகிறது!

அப்போது அந்த வழியாக ஒரு சீர்திருத்தவாதி வருகிருர். நான் சிலையைக் கண்டு கண்ணீர் வடிப்பதை அவர் பார்க்கிருர். "இது என்ன பைத்தியக்காரத்தனம்! காந்தி சிலை அழகாகத்தான் இருக்கிறது. ஆனல், அதற்காக யாரும் கண்ணீர் வடிப்பார்களோ!" என்று அவர் முணுமுணுக்கிருர்.

சீர்திருத்தவாதி, சிலையில் வெறும் கலையழகை மட்டும் பார்க்கிருர். ஆனல், காந்தியின் பண்புகளோடு தொடர்பு கொண்ட நானே, அந்தச் சிலையின் மூலம் காந்தி உள்ளத்தோடு தொடர்பு கொள்கிறேன்.

காந்தி கூறிய கொள்கைகளேயும், போதனைகளேயும் மனத்தில் நினைத்துக் கொண்டு பார்க்கிறேன்.

அதனுல்தான் அச் சிலே என்னேடு பேசுகிறது. கலே அங்கேதான் உயிர் பெறுகிறது.

கலே இன்பம் கொடுக்கக் கூடியதா? துன்பம் கொடுக்கக் கூடியதா? இன்பமும் கொடுக்கும்; துன்பமும் கொடுக்கும்! சென்னே சாலே ஓரங்களில் நடைபாதையில் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக வசிக்க வீடு இல்லாமல்—வானத்தைக் கூரையாக வைத்து வாழ்கிருர்கள். அந்தக் காட்சியை ஓர் ஓவியன் பார்க்கிருன். அந்த 'நாதி'யற்ற தமிழர்களின் அவலம் நிறைந்த இழிவான வாழ்க்கையை வண்ண ஓவியமாகத் தீட்டுகிருன். வீட்டு வாசலில் கொண்டு வந்து மாட்டுகிருன். ரசிக்கிருன். பூரிப்பு அடைகிருன்.

ஆனல், அதே காட்சியை ஒரு சீர்திருத்தவாதி பார்க்கிருன். "ஐயோ அவதியுறும் மக்களுக்கு வாழ் வளிக்காமல் ஓவியம் தீட்டி உள்ளம் மகிழ்கிருனே பாவி! இது நீதியா? நேர்மையா?" என்று அந்தச் சீர்திருத்தவாதி கேட்கிருன். இரண்டுமே நியாயமான செயல்கள்தாம் என்பதில் ஐயமில்லே. ஒரே காட்சியில் பிறந்த கலே, ஓவியனுக்கு மகிழ்ச்சியையும் சீர்திருத்தவாதிக்கு வேதனையையும் தருகிறது.

மற்றும் ஒரு காட்சி:

ஆற்றில் கோபியர் குளிக்கிருர்கள். மரத்தின் மேலிருந்து கண்ணன் குழல் ஊதியபடி ரசிக்கிருன். இதை ஒரு பக்தன் பார்க்கிருன். புற உலகத்தின் கவர்ச்சிகள்—ஆசாபாசங்கள்—அத்துணேயும் அவன் கண்களே விட்டு மறைந்து விடுகின்றன. குழல் ஊதும் கண்ணன் தெய்வக் குழந்தையாகி விடுகிருன், அந்தப் பக்தன் கண்ணிற்கு! "ஆகா! இறைவனின் திருவிளேயாடல் எத்தகைய இன்ப மயமாக இருக்கிறது!" என்று வாய்விட்டுச் சொல்லி மகிழ்கிருன்.

அங்கே தோன்றுகிருன், ஒரு சமூக வாதி. "அடே முட்டாளே பெண்களை நிர்வாணமாக்கி அதைக் கடவுள் ரசிப்பதுதான் கலையா? அதையும் ரசிக்கும் நீ ஒரு மனிதனு?" என்று கேட்கிருன். பக்தனும் சமூகவாதியும் வேறு வேறு கோணத்தில் ஒரே காட்சியைப் பார்க்கிருர்கள். இருவர் செயலிலும் உண்மையைக் காணமுடிகிறது. இந்த இரண்டு நிலைகளிலும் கலை சிரித்துக் கொண்டு இருக்கிறது.

கலை யாருக்குச் சொந்தம்? மக்களுக்குச் சொந்தமா? அல்லது கலை கலைக்காகவே இருக்க வேண்டுமா? சிறந்த கேள்விதான்.

அன்று முடி மன்னர்கள் காலத்தில் மன்னர்கள் கலையை ரசித்தார்கள். அவர்களின் அந்தப்புர சொத்தாகக் கலை இருந்தது. கலைக்கும் மக்களுக்கும் அன்று அதிகத் தொடர்பு இல்லை. கலையின் வளர்ச்சிக்காகப் பொன்னும் மணியும் வாரி வாரி இறைத்தார்கள் மன்னர்கள். ஆனுல், இன்று முடிமன்னர்கள் இல்லை. குடிமன்னர்கள்தான் இருக்கிருர்கள். இன்றைய கலை மக்களின் தயவில்தான் வளர வேண்டியிருக்கிறது. பலநாள் பட்டினி; கண் பஞ்சடைந்து, காது அடைத்து, மற்ற புலன்களும் ஒடுங்கி, சோற்றுக்கு நாதியில்லாமல் மயங்கிய நிலையில் தரையில் விழுந்து கிடக்கிருன் ஒரு பிச்சைக்காரன். பக்கத்தில் உள்ள பங்களாவிலிருந்து இனிமையான இசை எழுந்து வருகிறது. அந்தப் பணக்காரன் அங்கு இசையை ரசித்துக் கொண்டிருக்கிருன்.

ஆனுல், அதே இசை காற்றிலே கலந்து வந்து, பிச்சைக்காரன் காதில் பாய்ந்தால், அவனுக்கு இருந்த மயக்கத்தைப் போக்கலாம். அவனுடைய மனத்தில் மகிழ்ச்சியைப் பாய்ச்சுமா?

சிறுபான்மையினரான பணக்காரர்கள் கையில் தான் இந்தப் பரந்த சமுதாயம் சிக்கி இருக்கின்றது.

அவர்களைப் பொறுத்தவரை கலை கலைக்காகவே இருக்கட்டும். ஆனால், குப்பனும் சுப்பனும் வறுமையால் வாடி, விழி பிதுங்கி கிடக்கும்போது அந்தக் கலை வாழ்க்கைக்குப் பயன்படாமல் இருக்குமானால், கலைகள் இருந்துதான் என்ன பயன்? ஏழைகள் இருக்கும்வரை கலை கலைக்காகவே என்று சொல்லுவதை என்போன்ற ஏழை நெஞ்சங்கள் ஒத்திப்போடும்படிதான் கட்டளையிடும்.

இது வரை சாதாரண கண்கொண்டு பார்த்தோம். இப்போது கலையையும், நமது நிலையையும் சற்று உயர்த்திக் கொள்ளவேண்டும். படிப்படியாக எழ வேண்டும். கலை என்பது தெய்வீகச் செயல் கொண்ட வடிவம். கடவுளின் அருளைப்பெற ஒரு கலைஞன் செய்யும் அரும்பெரும் வேள்விதான் கலை.

கலையின்மூலம் எவன் ஆண்டவன் திருவடியைப் பெற முயல்கிறானோ அவனே உண்மையான கலைஞன். கடவுளின் படைப்பு இந்த மாநிலத்தின் உயிர்கள். கலைஞன் படைக்கும் கலை தெய்வீகத்தோடு கலந்து சிறப்படையுமானால் கடவுளால் படைக்கப்பட்ட உயிர்களும் அந்தக் கலையினால் மேன்மை பெறும் வழி தானாகவே பிறக்கும். அதனால்தான் கலையிலே தெய்வீகத்தைக் கண்ட தமிழன் ஆடும் கூத்தனாகத் தனது தெய்வத்தைப் படைத்து வணங்குகிறான்.

உண்மையான கலைகளும் கலைஞர்களும் நீடித்து நிலைபெற்று வளம்பெற எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக!

★



# தொழிலாளர் சிந்தனைக்கு

மே திங்கள் முதல் நாளில், மல்லன்மா ஞாலம் முழுவதிலுமுள்ள தொழிலாளர்கள் ‘மே திருநாள்’ கொண்டாடுகின்றனர். அன்று முதலாளித்துவ—சோஷலிச நாடுகள் எல்லாவற்றிலுமுள்ள தொழிலாளர்கள் அணிவகுத்து ஊர்வலம் சென்று ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என்று வான் இடியக் குரல் கொடுக்கின்றனர். பொதுக்கூட்டங்கள் நடத்தி, தங்கள் தேவைகளைத் தீர்மானங்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

இப்படி ஆண்டுதோறும் மே திருநாள் பார்புகழும் பாரதம் குறிப்பாக—தமிழ் கூறும் நல்லுலகம் உட்பட, மேதினி முழுதும் நடைபெறுகின்றது. மே திருநாள், போர்க்களத்தில்தான் பிறந்தது; ‘போராட்டத்’தின் நடுவிலேதான் நடைபெறுகின்றது. வாழ்க்கையே ஒரு போராட்டம்! இது, மதவாதமன்று; மனித வாழ்க்கையின் நியதி. இந்த நியதிக்கு உட்பட்டதுதான், தொழிலாளி—முதலாளி வர்க்கப் போராட்டம்! இதனை, ‘வர்க்கப் போர்’ என்பதைவிட ‘வாழ்க்கைப் போர்’ என்பதே பொருத்தம்.

இந்த ‘வாழ்க்கைப் போர்’ 1886 மே திங்கள் முதல் நாளன்று அமெரிக்காவில் தோன்றியது. பயங்கர விளைவுகளுக்குப் பிறகு, எண்ணற்றோர் விண்ணேற, வீதிகளிலெல்லாம் செந்நீர் பெருகிய பின்னர், வெற்றிக்கொடி உயர்த்தினர், உரிமைக்குப் போராடிய உழைப்பாளர்கள். அந்த வெற்றியை

முதலாக்கி, கடந்த அறுபத்துஎட்டு ஆண்டுகளில் மேலும் பல வெற்றிகளை அடைந்து, தம் வாழ்க்கையை வளப்படுத்தி வந்திருக்கின்றனர்.

எந்த ஒரு நாடாயினும் சரி; இறைவன் தந்த வளம், குடிமக்கள் அனைவருக்கும் பொது. இது, தெய்வம் வகுத்த நீதி. இதனை மதித்து நடப்பதே தெய்வ பக்தி—தேச பக்தி எல்லாம். மதிக்க மறுப்போர், இயற்கை தந்த வளங்களை ஆக்கிரமிக்க முயல்வோர், தெய்வத் துரோகிகள்; தேசத்தின் விரோதிகள்! இதில் ஐயமில்லை.

இத்தகைய தெய்வத் துரோகிகளையும், தேச விரோதிகளையும் எதிர்த்துப் போராடுவது அநீதியன்று; அறமே. இப்போர் கொலை வழியில் அல்லாமல், காந்தியடிகள் சொன்ன கலைவழியில் நடக்குமாயின் 'பொன் மலர் நாற்றமுடைத்து' என்பது போலாகும்.

அமெரிக்காவில், 1886-இல் நடந்த வாழ்க்கைப் போர், கொள்கை யளவில் அறத்தோடியைந்ததாயினும், செயல் முறையில் மறத்தோடு உறவு உடையது. இதனை மறத்தல் கூடாது. இற்றைத் தலைமுறையினராகிய நாம் காந்தி யுகத்தில் வாழ்கிறோம்; ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்திருக்கும் வல்லரசுகளே, ஆயுதப்பரிஹரணம் பற்றி பேசுகின்ற காலத்தில், சோஷலிச—முதலாளித்துவ நாடுகளின் தலைவர்கள் சந்தித்துப் பேசி, சமாதானத்திற்கு வழி காண முயலும் சகாப்தத்தில் வாழ்கிறோம். சோஷலிசமும் முதலாளித்துவமும் சந்திக்க முடியாத இரு துருவங்கள் என்று நம்பிய காலம் போய், இந்த இரு தத்துவங்களைப் பின்பற்றும் நாடுகள், பரஸ்பரம் நட்பு கொண்டு 'சகவாழ்வு' நடத்த முடியும் என்று, சோஷலிச நாட்டின் தலைவர்களே வெளிப்படையாகப் பேசுகின்ற—அதனை நடைமுறையில் காட்ட முயல்கின்ற ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

ஆகவே, 1886-இல் அமெரிக்காவில் நடந்தது போலத்தான் இனியும்—இங்கும் 'வாழ்க்கைப் போர்' நடத்த வேண்டுமென்ற அவசியமில்லை. உலகத்தின் சூழ்நிலை பெரிதும் மாறிவிட்டதுடன், உழைப்பாளர் அரசியல் ரீதியாக விழிப்பு பெற்றுவிட்டனர். ஜன நாயக சக்திகள் பலம்பெற்று வருகின்றன. ஆகவே, ஏகாதிபத்திய—முதலாளித்துவ சக்திகளை வளர்த்து வரும் ஜனநாயக சோஷலிசம் சுலபமாக ஜீரணித்துக் கொள்ள முடியும். இதனை நினைவூட்டி 'மே திருநாள்' கொண்டாடும் தொழிலாளர் வர்க்கத்திற்கு வாழ்த்து கூறுகிறோம்.

ஒவ்வொரு துறையிலும் சுரண்டல் தொலைந்து சோஷலிசம் மணக்க, உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு உழைப்பார்களாக!



# மேகலை பதிப்பகம்

தமிழ்ப் பெருமக்களே,

வணக்கம். எமது பதிப்பகத்தின் வாயிலாக நல்ல தமிழ் நூல்களை அழகுற வெளியிடுவதென முடிவு செய்து அதன்படி பணியாற்றி வருகிறோம். பதிப்பகத்தின் இலட்சிய வரிசையில் மூன்றாவது வெளியீடாகச் சிலம்புச்செல்வரின் கருத்து அலைகள் 'சிந்தனை அலை'களாக வடிவெடுத்திருக்கின்றது. முதல் வெளியீடாக சின்ன அண்ணாமலை அவர்களின் கதைக்களஞ்சியம் 'சிரிப்புக் கதை'களாக உலா வந்தது. இரண்டாவது வெளியீடாக மகாகவி பாரதியாரின் எண்பத்தோராவது பிறந்த நாள் விழா காணிக்கையாக 'தமிழகம் தந்த மகாகவி' மலர்ந்தது.

முதல் இருபெரு வெளியீடுகளும் தமிழகத்தின் அமோக வரவேற்பைப் பெற்றன. அறிஞர் பெருமக்களும், நாளிதழ் ஆசிரியர்களும் நூலின் பெருமை பேசி வாழ்த்தினர்; உற்சாக மொழிகள் புகன்று எங்கள் பணியைப் பாராட்டி ஊக்கம் அளித்தனர்.

எங்கள் வெளியீடுகள் உங்களுக்குப் பிடித்திருந்தால் உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் வெளியீடுகளைச் சிபாரிசு செய்யுங்கள். மேலும் சிறந்த வகையில் அமையவேண்டும் என்று கருதினால் எங்களுக்கு உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.

உங்கள் மேலான கருத்தை—அரிய ஆலோசனையை என்றும் வரவேற்கிறோம். உங்கள் திருப்தியே எங்கள் பணியின் குறிக்கோள்.

உங்கள் நல்லாதரவைத் தொடர்ந்து அளித்து எங்களை உற்சாகப்படுத்துங்கள். நன்றி.

என்றுமுங்கள்,

**சீனி. விசுவநாதன்**

பத்திரிகைகள் பாராட்டுகின்றன !

படித்தவர்கள் புகழுரை சூட்டுகின்றனர் !

# தமிழகம் தந்த மகாகவி

## இது ஒரு மேகலை வெளியீடு

### மதிப்புரைகளில் ஒரு சில....

உங்கள் பிரசுரம் 'தமிழகம் தந்த மகாகவி' மக்கள் பாராட்டுதலை அடைவதில் வியப்பில்லை. நல்ல விஷயம், அதைப்பற்றி எழுதப்பட்ட நல்ல கட்டுரைகள் எல்லாம் சேர்ந்து வெற்றி தந்து வருவது இயற்கை.

—ராஜாஜி

பாரதியாருடன் இருந்தவர்களும், பாரதியாரைப் பற்றி நன்கு தெரிந்தவர்களும்—பாரதியாரைப்பற்றி இந்நூலில் எழுதியுள்ளார்கள். இதுவரைக்கும் வெளிவராத கருத்துக் களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எல்லாவற்றையும்விட இந்நூல் பற்றி எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்குக் காரணம், இது வரைக்கும் கண்டறியாத அழகிய நூல் அமைப்பு முறைதான். மிக நல்ல தாள்; கண்ணுக்கு இனிமைதரும் அச்சு! நூலை அச்சிட்டவர் செலவைப் பெரிதென எண்ணவில்லை. அவர் வாழ்க !

—பாவேந்தர் பாரதிதாசன்

நூல் பயனுடையது ; நன்றாக அமைந்திருக்கிறது.

—டாக்டர் மு. வ.

'தமிழகம் தந்த மகாகவி' என்ற நூலைப் படித்துப் பெரு மகிழ்ச்சி யடைந்தேன்.

நூல் மிக்கத் திறமையுடன் தொகுக்கப்பட்டிருக்கிறது. அச்சும் மிக்க அழகாக அமைந்திருக்கிறது.

—நாமக்கல் கவிஞர்

அறுபதுக்கு மேற்பட்ட அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அடங்கிய இந்த நூல் மல்லிகை, முல்லை, ரோஜா, இருவாட்சி, ஷெண்பகம் முதலிய மணமிக்க மலர்களால் அமைந்த மணமலர்க் கதம்பமாய் விளங்குகிறது. கனகாம்பரம், நீலாம்பரம், மோகாம்பரங்களில் மோகம்கொண்டு ஓடும் தமிழ் மக்கள் இதனையும் போற்றிப் பயன் அடைய வேண்டும். தங்கள் தமிழ்த் தொண்டை பாரதி பக்தர் நிச்சயமாகப் போற்றுவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

—பரலி. சு. நெல்லையப்பர்

அரிய படைப்பான 'தமிழகம் தந்த மகாகவி' நூலைப் பார்த்தேன். படித்தேன். மகிழ்ந்தேன்.

மிக்க சிரத்தையோடு நல்ல அழகிய பதிப்பாக—பாரதியின் கவியைப் போல உயர்வாக வெளியிட்டிருக்கும் இந்நூல், நூல் வெளியீட்டாளர்களுக்கு ஒரு இலக்கணமாகும்.

—சின்ன அண்ணாமலை

மகாகவி பாரதியாரை, எல்லாவிதமான இலக்கிய அழகுகளோடும் அறிமுகம் செய்து வைக்கிற முழுமையான தமிழ்நூல் ஒன்றை நீங்கள் தேடிக் கொண்டிருக்கிறீர்களா?

இனிமேல் அப்படித் தேடவேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை. மேகலை பதிப்பகம் திரு. சீனி. விசுவநாதன் தொகுத்து வெளியிட்டுள்ள 'தமிழகம் தந்த மகாகவி'—புத்தகத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்து விடுங்கள். அப்புறம் பாரதியாரைப் பற்றிய தெளிவான இலக்கிய அபிப்ராயம் உங்கள் மனதில் நிச்சயமாக உருவாகிவிடும்.

—'கல்கி' நா. பார்த்தசாரதி

'தமிழகம் தந்த மகாகவி' நல்ல முயற்சி! அ
கட்டுரைகளைச் சேகரிக்க வெகுவாக முயன்றி
தொகுப்பு முறை நன்று யிருக்கிறது. என்னுடைய
பாராட்டுதல்.

—வெ. சா

மிகமிக அருமையான தொகுப்பு நூல். கு
தில், பெருகிய உழைப்பில் வெளியிட்ட நல்ல
நூல் நிலையங்களை அலங்கரிக்கத்தக்க அழகான வெ

—எஸ்.

நூலுக்கு மதிப்பு தருகின்றார் பாரதி. பாரதி
தேடுகின்றது நூல். கட்டுரைகள் அறுபத்து
தனித்தனி வண்ண மலர்கள். 'நேற்று' உதிர்ந்த
சேகரித்து 'இன்று' தொடுத்த மாலை போன்றது
மணமிருக்கிறது; அழகிருக்கிறது. தொகுப்
உழைப்பும் திறமையும் பாராட்டத்தக்கன. த
தோறும் ஏற்ற வேண்டிய திருவிளக்கு; வாங்கி
பத்திரப்படுத்த வேண்டிய தஸ்தாவேஜு இந்நூல்

—

புரட்சிக் கருத்துக்களைத் துணிவுடனும்
திறமையுடனும் வலிமையுடனும் எடுத்துக் கூறி
எண்பத்தோராவது பிறந்தநாள் வெளியீடாக வெ
கிறது இந்நூல்.

பாரதியைப் பற்றி பல்வேறு கோணங்க
விரும்புபவர்களும் பாரதியைப் பற்றி நிறைய
கொள்ள வேண்டும் என்ற துடிப்புள்ளவர்களு
வேண்டிய நூல். இதைத் தொகுத்த அன்பர்
நாதனும் வெளியிட்ட மேகலை பதிப்பகத்தாரும்
குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

இன்று பாரதியாரின் தெய்வப்புலமையைத் தமிழ் நாட்டார் நன்ருய் உணர்ந்திருப்பதால் அவரைப் புகழ்வ தென்று ஒரு தனிக் கட்சியோ, இயக்கமோ, விழாக்களோ, வெறும் புகழ்மாலைகளோ தேவையில்லை. சரித்திர உணர்ச்சி யுடன் எழுதப்பெற்ற அவருடைய வாழ்க்கைச் சரித்திரமும் அவருடைய அற்புதமான இலக்கிய சிருஷ்டிக்கும் கவிதைக்கும் இலக்கிய உணர்ச்சியுடன் ஆக்கப்பெற்ற விரிந்த விமர்சன நூல்களும் வரவேண்டும். அதற்கு இந்தக் கட்டுரைத் தொகுதி மிகவும் பயனுள்ளதாயிருக்கும், பாரதியாரைப் பற்றி பல அரிய விஷயங்கள் இதில் காணப் பெறுவதால்.

—சுதேசமித்திரன்

மகாகவி பாரதியைப்பற்றி எத்தனை எத்தனையோ புத்த கங்கள் வெளிவந்துள்ளன; வந்து கொண்டிருக்கின்றன. நம் முன்பு கிடக்கும் மேகலை பதிப்பகத்தாரின் இந்தப் புத்தகமும், அந்த மாபெரும் கவிஞனின் பாதார விந்தங்களில் சூட்டப் பட்டதோர் கட்டுரையாரம் என்று சொன்னல் மிகை யாகாது.

சுமார் அறுபதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையாசிரி யரும் ஒவ்வொரு கோணத்திினின்றும் பாரதியின் கவிதைகளை, பாரதியை ஆராய்கின்றனர். வரவேற்கத்தக்கதோர் அம்சம் என்னவெனில், ஒருதலைப்பட்சமாக இல்லாமல் எல்லாப் பகுதி எழுத்தாளர்களின் கட்டுரைகளும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

—தாமரை

பல்வேறு பூங்காக்களில் மலர்ந்த நல்ல பறித்து ஆரமாகத் தொடுத்திருக்கிறார் சீனி. வி பாரதியின் படைப்புக்களைப் பற்றி எண்ணற்ற நூற்கள் வெளிவருவது அவசியம். அந்தத் துறைய விமர்சனக் கட்டுரைகளையும் தாங்கி, " கன்னலொடு தேன் கலந்தாற்போல்" இந்நு வந்திருக்கிறது. வரவேற்கவேண்டிய முயற்சி.

—ஜனசக்தி

The Book under review is a Collection of opinions expresses about Bharati by over sixty persons at different times, under different contexts. Some are brief, some long; some are mere opinions, some estimates of value. The Book serves a useful purpose, in that it brings to our attention the estimates of Bharati held by such bygone Personalities as V. V. S. Aiyar, S. Srinivasa Iyengar, V. Chakkarai and S. Satyamoorthi as well as by such present day Scholars as K. V. Jagannathan, M. P. Sivagnanam, Suddhanandha Bharati and others.

—The Hindu

இப்படியாக தமிழக அறிஞர்களும், நாளித களும் பாராட்டுரை நல்கியுள்ளனர்.

நீங்கள் படித்துவிட்டீர்களா? இல்லையானா பயனடைவீர்களாக!


இடைக்குமிடம்

**மெர்க்குரி புத்தகக் கம்பெனி**

313, ராஜவீதி : : கோயமுத்தூர்—